# ஒற்றை நட்சத்திரம்

லக்ஷ்மி

திருமகள் நிலையம்
55, வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை-600017.

முதற் பதிப்பு : அக்டோபர், 1982
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 1990
மூன்றாம் பதிப்பு : அக்டோபர், 1992
நான்காம் பதிப்பு : ஜனவரி, 1998

உரிமை : ஆசிரியருக்கு

26614
4345347

OTRAI NATCHATHIRAM
By : Lakshmi
Fourth Edition : Jan. 1998

விலை ரு. 36-00

THIRUMAGAL NILAYAM
No. 55, Venkatnarayana Road,
T. Nagar, Chennai - 600017.
Phone: 4342899
Fax: 91—44—4341559

அச்சிட்டோர் :
சித்ரா பிரிண்டோ கிராபி,
24, பொன்னுசாமி தெரு, இராயப்பேட்டை,
சென்னை-14.

# ஒற்றை நட்சத்திரம்

26614
4345347

## 1

[illegible]ளுக்கு நடுவே அவள் அந்த வீட்டில் வந்து [illegible]மாகக் குடியேறி இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டிருந்தது. ஓரளவு அந்தத் தெருவில் வசித்த சில பங்களாக்காரர்களைப் பார்வையில் அறிந்து கொண்டிருந்தாள் அவள். மாலை வேளை தினசரி ஐந்து வயதுப் பேரனைக் கையில் பிடித்துக்கொண்டு உலாவப் புறப்படும் வழுக்கைத் தலைக் கிழவர் மூன்றாவது பங்களாவில் தங்கியிருப்பவர். அவர்கள் வீட்டுப் பெண்மணிகள் காரில்தான் வெளியே போய் வந்தனர். எதேச்சையாக அவளைப் பாதையோரத்தில் பார்த்தாலும் பாராததுபோல போய்க் கொண்டிருந்தனர். காதுகளில் வைரங்கள மின்ன, கழுத்தில் பொன் நகைகள் அணிந்த அவாகள் முகத்தில் புன்னகைக்குப் பஞ்சமாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு தனித் தன்மையை விரும்பும் பங்களாவாசிகள்.

எதிர்சாரியிலிருந்து ஓய்வு பெற்ற கல்லூரிப் பேராசிரியர் அபூர்வமாக லேசான குரலில், ''ஹலோ!'' என்பார். அத்துடன் அவர் தமது சம்பாஷணையைச் சுருக்கிக் கொண்டு விடுவார். சியாமளாவுக்கு வயது அறுபதைத் தாண்டியிருந்தது பட்டையாக முன்புறமும் பின் மண்டையிலும் முடி வெளுத்து விட்டிருந்தது. பேரனுக்குச் சமமான நான்காவது பங்களாவாசி, ஸ்பானிஷ் ஸ்டைல் வீட்டிற்குச் சொந்தக்காரன் இடுப்பளவு வளர்ந்து நின்ற கொழு கொழு

அல்சேஷியனை சங்கிலியால் இணைத்துப் பிடித்துக் கொண்டு தெரு ஓரமாக அதற்குத் தேகப் பயிற்சி கொடுக்க மாலை வேளைகளில் நடக்கிறவன். தனியே எதிர்ப்பட்டால் லேசாக முறுவலிப்பான். ஆனால் மனைவியுடன் காற்றாட நடந்து கொண்டிருந்தால் அந்த முறுவலும் பறந்துவிடும். முகம் கடுமையாகக் காணப்படும். நாயைப் பிடித்துக் கொண்டு அவன் நடக்க அவன் மனைவி அவனது நேச உணர்வுகளை லகான் போட்டு இழுத்துக்கொண்டு நடப்பது போன்றதொரு பிரமிப்பு சியாமளாவுக்கு ஏற்படும்!

பாவம்! மாமனார் கொடுத்த மதிப்பிலும் பணத்திலும் பங்களாவும் காருமாக வாழ்கிறான் போலும். அதனால் தான் மனைவியைக் கண்டால் அத்தனை நடுக்கம்!.... சியாமளா தன்னுள் கணிப்புச் செய்தபடி சிரித்துக் கொள்வாள்.

தெருக் கோடியில் நெடுஞ்சாலையோரத்திலே மூன்று வீதிகளின் சந்திப்பிலிருந்த சுவரில் பிள்ளையார் பதித்த அந்தப பங்களாவின் சொந்தக்காரி தும்பைப்பூ தலைக்காரி. அந்தக் கிழவிதான் அன்று வந்த அடுத்த நாளே புரிந்து கொண்டிருந்தாள். பளபளவென்று நீல ஒளியை வாரி இறைத்த வைரக்கம்மல் தோள்வரை இறங்கி ஆடிக்கொண்டிருக்க...பட்டுப் புடைவை சரசரக்க, தோட்டத்திலே அடிக்கடி அட்டகாசம் செய்து கொண்டிருந்த அந்தம்மாள் தான் வீட்டின் ராணி என்று அவளது கடுமை தெறித்த முகமும் பார்வையும் தம்பட்டம் அடித்தன.

எத்தனையோ தடவை சியாமளா கடைத் தெருவிலிருந்து சிறு பிளாஸ்டிக் கூடையில் சாமான்களைச் சுமந்து கொண்டு அவர்கள் வீட்டிற்குப் பக்கமிருந்த நடை பாதை வழியே நடந்து வந்திருக்கிறாள் சந்தேகம் ததும்பும் கண்களால் கிழவி முறைத்திருக்கிறாளேயன்றி, ஒரு தடவைகூட 'இந்தத் தெருவில் புதிதாகக் குடி வந்திருக்கிறீர்களா?... ரொம்ப சந்தோஷம்!' என்று அறிமுகம் ஏதும் ஆரம்பித்ததே



யில்லை... அப்படிப்பட்ட சுயநல வாசிகள் நிரம்பிய ஒரு சூழ்நிலையில் சியாமளா வந்து சிக்கிக்கொண்டு விட்டாள்.

தனி வீடு வேண்டும் என்று அவள் விரும்பியது எத்தனை தவறு? தெரு வீடுகளில் ஒன்றை வாங்கிக் கொண்டிருந்தால் அக்கம் பக்கத்தவர்களின் ஆதரவு இருந்திருக்கும் என்று அடிக்கடி எண்ணி மனம் துவண்டு போனாள்.

சியாமளாவுககு வீட்டை விற்றவனுக்கு தலை வரை கடன் இருந்தது. கொஞ்சம் அவன் பொறுத்துக் கொண்டிருந்தால் குபீரென்று அந்த இடத்தின் விலை ஆகாயத்தைத் தொட்டு விட்டிருக்கும். ஆனால் அவனுக்கு எத்தனையோ அவசரங்கள். வெளிநாட்டு வாசத்திலே அலுத்துச் சலித்துப்போய் தாய் நாட்டில் அடைக்கலம் புக வந்த சியாமளாவுக்கு எங்கேயாவது ஓர் எலி வளையாயினும் தனி வளையாகக் கிட்டினால் போதும் என்ற துடிப்பு...

புரோக்கர்கள் அவளை தினம் ஒரு டாக்சியில் ஏற்றி நகரத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் விடாது சுற்ற வைத்தனர். பல அபார்ட்மெண்ட் ஹவுசுகளைக் காட்டினர். அழகான பிளாட்டுகளை அவள் பார்வையிடச் செய்தனர். காளான்கள்போல் திடீர் என்று நகரெங்கிலும் முளைத்திருந்த ஃபிளாட்டுகளை அவள் வெறுத்தாள். கீழே இறங்கி வந்தால் ஷாப்பிங் சென்டர், எதிர்ப்பக்கம் தனியார் மருத்துவமனை, மூலையில் தபால் ஆபீஸ் என்று அவர்கள் வர்ணம் தீட்டிப் பார்த்தார்கள்.

ஊகூ...ம்! அவள் அசையவில்லை! ஃபிளாட்டு வாழ்க்கையை அவள் அனுபவித்து அறிந்தவள். இதில் உள்ள நன்மை தீமைகளை நேர்முகமாக ஆய்வு செய்தறிந்தவள்தான். சந்தடி இல்லாது சௌகரியமாக அமைதியாக ஆனந்தமாக ஒரு பெரும் தோட்டத்திற்குள் அழகானதொரு சிறு வீட்டுக்குள்ளே பல ஆண்டுகள் வசித்த அனுபவமும் கொண்டவள்தான்.

அதனால் அவள் தோட்டம் சூழ்ந்த தனியானதொரு வீட்டை சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்தாள். தியாகராய நகர் நாகேஸ்வரன் தெருவில் அவள் தேடிய வீடு .. ஆறு கிரவுண்ட் பூமிக்குள்ளே அடக்கமாக ஒளிந்து கொண்டிருந்தது. பழைய காலத்து வீடுகளைப் பணம் படைத்தவர்கள் அனைவரும் இடித்துக்கட்டி புதிய மாடல் வீடுகளாகப் புதிய வண்ணப் பூச்சுகளுடன்... புதிதாக உருவான தோட்டங்களில் வாழ்ந்து கொண்டிருந்த சூழ்நிலையில் அவள வாங்கிய கட்டிடம் மட்டும் திருஷ்டி பரிகாரமாக பழைய பாணியில் கட்டப்பட்ட இடிபாடுகள் கொண்ட மிகப் பழையதொரு ங்களாவாக இருந்தது

'இந்தப் பக்கமெல்லாம் பூமியின் விலையே விஷம்போல ஏறிக்கிட்டு போகுது. கண்ணை மூடிக்கிட்டு இதை வாங்கிப் போடுங்கள்! பிறகு சாவகாசமாகக் கட்டிக் கொள்ளலாம்' புரோக்கர் பலமாக வேப்பிலை அடித்தார்.

கணவனை இழந்த பின்னர்... வயதும் அதிகரித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்த சமயம். வியாதிகள் ஒவ்வொன்றாகத் தொடங்கத் தொடங்கியதும் அவள் வெளி நாட்டு வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டுவிட்டுக் கிளம்ப விரும்பினாள்

மூச்சு இருக்கு முன்னரே எப்படியாவது முப்பத்து எட்டு வருஷம் வேரூன்றிப் போன அந்நிய மண்ணிலிருந்து தன்னை கிளப்பிக்கொண்டு தாய் நாட்டிற்கு வந்துவிட வேண்டுமென்ற வேகம் வந்து விட்டது

அவள் தந்தை எதற்கெடுத்தாலும் ஓர் உவமை சொல்வது வழக்கம். 'இந்தக் காரியத்தைச் செய்வதைவிட ஓர் அஸ்வமேத யாகமே செய்து விடலாம் போலிருக்கே?'

புராணங்களில்தான் அதைப் பற்றிப் படித்திருக்கிறாள். இப்பொழுது நடைமுறையும் அவள் அதில் ஈடுபட்டிருப்பது போன்றதொரு மதிப்பும், திகைப்பும் ஏற்பட்டன



பல ஆண்டுகள் வேறு ஒரு நாட்டில் வேற்று மனிதர்களுடன் கூடி வாழ்ந்து வேறுவிதமான கலாச்சாரப் பண்பாட்டுடன் இணைந்து கலந்து ஒன்றிவிட்ட பின்னர் திடீரென்று எல்லாவற்றையும் உதறிவிட்டு அங்கிருந்து பிய்த்துக் கொண்டு சேமித்திருந்த பணத்தையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு பறந்து வந்து விடுவது என்பது சுலபமான செய்கையா? பல தடவை அவள் வெளிநாட்டிலிருந்து கொஞ்சம் பணத்துடன் பறந்து சென்றாள். மறுபடியும் அடுத்த முறை பணத்துடன் பறந்து வந்து பறந்து போனாள். ஒரு குருவி வந்து ஒரு நெல்லைக் கொத்திக் கொண்டு போனதாம். பிறகு மறுபடி அது வந்து இன்னொரு நெல்லைக் கொண்டு போய்ச் சேர்த்ததாம் என்ற கதைப்படி... அவள் மீண்டும் மீண்டும் பணத்துடன் பல தடவை பறந்து வந்தாள். இப்படி சேமித்த மொத்தத் தொகையைக் கொண்டுதான்... ஒரு வழியாக வீட்டை வாங்கி முடித்தாள். ஆரம்பத்தில் உறவினர்கள் உதவி செய்ய வெளியூரிலிருந்து புறப்பட்டு ஓடி வந்தனர்.

''அத்தை! என்ன செய்யணும் சொல்லுங்கோ...'' கோரஸ் பாடினார்கள், ''பெரியம்மா... ஏதோ என்னால் ஆனதைச் செய்ய எப்போதும் தயார்!'' ''மாமி! ... நான் இருக்கும்போது நீங்க என் கவலைப்படறேள்?'' என்று தாளமிட்டனர்.

அவசரம், வர்ணம் பூச பத்தாயிரம் தேவைப்படுகிறது. ஊருக்குப் போய் டிராப்ட் அனுப்பி வைக்கிறேன் என்று அவள் கடனாகக் கேட்டபோது அத்தனை பேரும் மாயமாகி விட்டனர். கிழவி... நோயாளி என்று சொல்லிக் கொள்கிறாள், வெளிநாட்டுக்குப் போய் மண்டையைப் போட்டு விட்டால்... பணத்தை யாரிடம் கேட்டுத் திரும்ப வாங்க முடியும்? என்ற பயம். ஆனால் அவள் வயதையும் நோய்களையும் பொருட்படுத்தவில்லை. காண்டிராக்டர் ஒருத்தரையே பூரணமாக நம்பி...கையிலிருந்த

கொஞ்சம் பணத்தைக் கொடுத்து வீட்டைச் செப்பனிடும்படி கட்டளையிட்டு விட்டு...வெளிநாட்டுக்கு மறுபடியும் திரும்பிவிட்டாள். மூன்று வருஷ காலத்துககுப் பின்னர்தான் திரும்பினாள். தேவைப்பட்ட சாமான்களைக கப்பலில் ஏற்றிக்கொண்டு தாய்நாட்டுக்குத் திரும்பும்போது சுங்க இலாகா தரும் சலுகைகள் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டு...லாரிகள் நிறைய சாமான்களுடன் வந்து இறங்கினாள்.

வேலையாட்கள் பெரிய பெட்டிகளை லாரிகளினின்று இறக்கி உள்ளே கொண்டு செல்வதை அண்டை அயலார் வீட்டு வாசலில் இருந்தபடியே வேடிக்கை பார்த்தனர்... அதற்குப் பின் அந்த அயல் நாட்டுக்காரியின் விஜயம் உப்புச் சப்பின்றி அவர்கள் வரை...அடங்கிப் போன விஷயமாகி விட்டிருந்தது ஆனால் மறந்து போன உறவினர்கள் மீண்டும் ஒவ்வொருவராக ஓடி வந்தனர்.

-'இதென்ன ஃபாரின் ஃபிரிஜ்ஜா?... ரொம்ப நன்னா இருக்கே. இது ஃபாரினிலிருந்து வந்த ப்ளாஸ்டிக் டப்பாவா? ரொம்ப உறுதியா பண்ணியிருப்பான்.'' புகழ்ந்த வண்ணம் ஆளுக்கு ஒன்றைத் தட்டிக் கொண்டு போகப் பார்த்தனர்.

ஆனால் சியாமளா நன்றாகவே விழித்துக்கொண்டு விட்டிருந்தாள். பத்தாயிரத்துக்கு நம்பாத பந்துக்களை பத்தடி தூரத்திலேயே வைத்திருப்பது நல்லது என்று எண்ணியபடி அதிகமாக வரவேற்று உபசரிக்காது கொஞ்சம் அசட்டையாகவே இருக்கத் தொடங்கினாள்.

''வெள்ளைக்காரர்கள் இருக்கும் ஊரிலே சேர்ந்து வாழ்ந்து விட்டதால் இவளுக்கும் தான் ஒரு வெள்ளைக்காரி என்ற நினைப்பு. ரொம்ப பணத் திமிர், குழந்தை குட்டி ஒண்ணும் கிடையாது. வயதும் ஆகிவிட்டது. ஒரு வீட்டில் தனியா கோட்டானைப் போல என்ன வாழ்க்கை...?'' அவளது தனிமையை எண்ணி நகையாடினர். ஒதுக்கப்பட்ட உறவினர் மனம் போனவாறு பேசினர்.



அவள் எதையுமே காதில் போட்டுக் கொள்ளாது பிடிவாதமாக இருந்தாள், என்ன பயன் 'மெடிக்கல் ஸீட் கிடைச்சிருக்கு. ஹாஸ்டலில் விட மனமில்லை. உங்களுக்குத் துணையா இருப்பான், உங்க வீட்டில் தங்கிக் கொள்ள அனுப்பட்டுமா...?' ஒன்று விட்ட மாமா மகன்... விட்டுப் போன உறவை திடீரென்று புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுப் பார்த்தான்.

''இந்த வயதில் எனக்கே பொங்கிக்கொள்ள சிரமப்படறேன். இளம் வயது பையன்களை வச்சு என்னாலே பாதுகாக்கிறது சிரமம்... ஜெனரேஷன் காப் ஒத்து வராது'' ஒரேயடியாக மறுத்துவிட்டாள்.

அண்டை அயலாரின் சுயநலப் போக்கு பாதி காரணம் என்றால் அவளது தனிமையான வாழ்க்கைக்கு பாதி அவளே காரணமாக இருந்தாள்,

புல்லுருவிகள் போன்ற யாரையும் உறவு என்ற போர்வையின் அருகில் நெருங்கவிடக்கூடாது. ஏமாந்து போகக்கூடாது. அவளும் அவள் கணவரும் அந்நிய மண்ணில் சிந்திய வியர்வையில் சேகரித்த காசு கடைசி மூச்சு வரை அவளுக்குத் தேவைப்படும். அதைக் கண்டபடி வாரி இறைக்க முடியாதே?

காண்டிராக்டர் மிகவும் நல்லவராகத் திகழ்ந்தார். மூன்று வருஷ காலத்தில் அவள் விட்டுப்போன பணத்தை சாப்பிட்டுவிட்டு மாயமாகியிருக்கலாம். ஆனால் பொறுப்புடன் சிறுகச் சிறுக அவள் அனுப்பி வைத்த டிராப்ட்டுகளை வங்கியில் மாற்றி... வீட்டைப் பழுது பார்த்து சில திருத்தங்களைச் செய்து வர்ணம் பூசி... ஒழுங்கு செய்து... வந்ததும் கணக்கையும் சாவிகளையும் கையில் கொடுத்துவிட்டிருந்தார். அத்துடன் அவளுக்கு ஆலோசனைகள் வழங்க தமக்குத் தெரிந்த ஒரு வழக்கறிஞரையும் உதவி தேவையென்றாலும் பெற்றுக்கொள்ள ஓய்வடைந்த தமது உறவினரான ஒரு காவல்துறை அதிகாரியையும் அறிமுகப்

படுத்தி விட்டிருந்தார். அவள் வசித்த குடியிருப்புப் பகுதியிலிருந்து சற்று தொலைவில் வெவ்வேறு இடத்தில் வசித்த போதிலும் அவர்கள் இருவரும் தங்கள் குடும்பத்தினருடன் அப்போதைக்கப்போது வந்து விசாரித்துப் போய் வந்தனர். சில சமயங்களில் தங்கள் வீட்டுக்கு விருந்து சாப்பிடவும் அவளை அழைத்தனர். அதைத் தவிர அவளுக்கு சுற்று வட்டாரத்தில் யாரிடமும் நெருக்கமான தொடர்பு எதும் ஏற்படவேயில்லை. நண்பர்கள் என்று கொள்ள யாரும் அருகிலேயே கிடையாது...

வந்து குடியேறிய இரண்டாவது மாத முடிவில் அவளுக்கு ஓரளவு அந்தத் தனிமையும் பழகி விட்டிருந்தது. காலை வேளையில் பால் வாங்கிக்கொண்டு வந்து உதவிய வேலைக்காரி சின்னம்மாள் பரபரப்புடன் வீட்டைப் பெருக்கித் தள்ளியபடி பாத்திரங்களைத் தேய்த்துகவிழ்த்து விட்டு துணிகளைத் துவைத்து உலர்த்திவிட்டு வெளியேறி விட்டால்; அதற்குப் பின்னர் அவளுக்கு வெளியுலகத் தொடர்பு மறுநாள் காலை வரை துளியளவும் கிடையாது. தனிமை தனிமை—தனிமை...

நல்ல வேளை, வீட்டை வாங்கிய நேரத்திலேயே காஸ், டெலிபோன் இத்யாதிகளுக்கு அவள் ஏற்பாடு செய்திருந்தாள். அவை கிடைத்துவிட்டதும் வாழ்க்கையில் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டிருந்தது.

காண்டிராக்டர் வீட்டை மட்டும்தான் சீர்திருத்திவிட்டிருந்தார். தோட்டம் ஒரு பெரிய காடுபோல பயங்கரமாக புல்லும் புதருமாக மண்டிக் கிடந்தது

அன்று காலை அவள் வேலைக்காரியை அனுப்பிவிட்டு வராந்தாவிலேயே சற்று நின்றபடி தோட்டத்தில் கண்களை ஓட்டினாள்.

பார்க்கப் பார்க்கத் தலை சுற்றுவது போன்றதோர் அவலக் காட்சி. கட்டிடம் சீராக்கப்பட்டபோது உபயோ



கித்தது போக மிஞ்சிய மண், சரளைக் கற்கள்...என்ற சிறு குவியல்கள் அங்கங்கே கிடந்தன. காலில் குத்தி விடும்போல் கண்ணாடித் துண்டுகளும் கம்பித்துண்டுகளும் சிதறிக் கிடந்தன. சாயம் பூசியதும்.. பெயிண்ட் சாயம் விட்டெறிந்த காலி தகர டப்பாக்கள் துருப்பிடித்து இங்குமங்கும் உருண்டு கிடந்தன. இதன் நடுவே கள்ளியும் எருக்கம் செடிகளும் ஏராளமான செழிப்புடன் தலைநிமிர்ந்து நின்றன. கால் புதையுமளவு.. மரங்களிலிருந்து உதிர்ந்த சருகுகள்... அப்படியே வாரப்படாது, அங்கங்கே ஜமக்காளம் விரித்தது போல் கிடத்தன. மேலும் பார்க்கப் பிடிக்காது வெறுப்புடன் கதவை மூடிக்கொண்டு உள்ளே வந்தாள்.

பரபரவென்று சருகுகளை வாரி குழியொன்றில் கொட்டி எரித்து புல்புதர்களை வெட்டி அப்புறப்படுத்தி.. ஒழுங்கு செய்ய... முன் போல் உடலில் இளமையும் தெம்பும் இல்லையே வயதாகி விட்டதே.. வருத்தத்துடன் சமையல் அறைக்குள் புகுந்தாள். சாமான்களை இறக்கி வைத்து விட்டு ஆட்கள் ஓட்டம் பிடித்து விட்டனர். அவற்றை வகை பிரித்து ..அந்தந்த இடத்திலே ஒரு வேலையாளைத் தற்காலிகமாக அமர்த்திக்கொண்டு ஒழுங்கு செய்வதற்குள் அவளுக்கு உயிரே போய்விட்ட அலுப்பு.

இப்படியெல்லாம் சோபா...மேஜை-நாற்காலி-ஃபிரிஜ்-கம்பள விரிப்புகள் என்று அனாவசிய வசதியுடன் அவள் வாழத் தேவைதானா? பேசாது அறைக்குள் ஒரு பாயில் சுருண்டு படுத்துக்கொண்டால் அவளை யார் அடிக்கப் போகிறார்கள்? அடிக்கடி தன் டாம்பீக உணர்வைக் கடிந்து கொண்டாள். என்ன செய்வது, வெளிநாட்டு வாழ்க்கையில் வசதியாக இருந்து விட்டு திடீரென்று இப்போது தரையில் இறங்கிவிட முடியவில்லை

முதல் நாள் சமையலறையைச் சீர் செய்த அலுப்பு. அன்று காலை வேலைக்காரி சொன்ன செய்தியை நினைத்து தூங்காது ஓர் இரவை ஓட்டியதின் விபரீதம், அவ

ளுக்கு லேசாகத் தலையை வலித்தது. காஸ் அடுப்பை மூட்டி பாலைக் காய்ச்சி திடீர் காபி பொடியுடன் போட்டுக் கலந்து எடுத்துக்கொண்டு தலைவலி மாத்திரையுடன் சாப்பாட்டறை மேசை அருகே உட்கார்ந்தாள்.

காப்பியையும் மருந்தையும் விழுங்கிவிட்டு தன் கைகளால் தலையைப் பிடித்துக்கொண்டு சிறிது நேரம் அயர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள். புயல் போல வந்து அதே வேகத்தில் கிளம்பும் சின்னம்மாவுக்கு அன்று காலை ஏனோ பேசக் கொஞ்சம் பொழுது இருந்தது.

''அம்மா! நான் ஒண்ணு சொல்வேன். தப்பா நினைக்கக் கூடாது. நீங்க தனியா இருக்கிறது நல்லதில்லே. யாராச்சும் ஓர் ஆம்பிள்ளைப் புள்ளையைத் துணைக்கு வச்சிக்கிறது நல்லது'' என்று ஆரம்பித்தாள்.

''ஏன் இந்தப் பக்கம் திருட்டு அதிகமோ?'' வினவினாள் சியாமளா.

''அதுக்கில்லை. இந்த வீட்டிலே...பல வருஷங்களுக்கு முன்னாடி ஒரு சின்னப்பொண்ணு தூக்குப்போட்டுக்கிச்சாம் காதல் சங்கதியாம். அதனால்தான்... வீடு சட்டுனு விலை போகலை...''

புரோக்கர் இந்தச் சங்கதியை அவளிடம் ஏன் தெரிவிக்கவில்லை. சியாமளாவுக்கு எரிச்சலாக இருந்தது.

லட்சத்திற்கு மேல் கொட்டி வீட்டை வாங்கி லட்சத்திற்குமேல் கொட்டி சீர் செய்தாகி விட்டது. இனி அவள் அந்தக் கதையை பற்றிக் கேள்விப்பட்டுதான் என்ன பயன்? மேலும் அவளுக்கு ஆவி-பிசாசு இவற்றைப் பற்றி அப்படி ஒன்றும் பயம் கிடையாதே...

'சில நாள் பட்டப்பாலில்கூட அந்த செத்துப்போன பெண் வந்து வாசல் கதவைத் தட்டுதாம்...முன்னே இங்கே குடியிருந்த அம்மா பார்த்துப் பயந்து விட்டு வீட்டைக் காலி பண்ணிக்கிட்டு போயிட்டாங்க'' கதையைத் திரித்துவிட்டுப் போய்விட்டாள் சின்னம்மாள்.



இரண்டு மாத காலமாக தனிமையைப் பற்றிப் பயப்படாது நிம்மதியாக உறங்கின சியாமளாவுக்கு அன்று ஏனோ தூக்கமே வரவில்லை. பேய், பிசாசுகளைப் பற்றி எண்ணி அஞ்சவில்லை. தனிமையாக அவள் வசிப்பதை அறிந்து திருடர்கள் எவரேனும் உள்ளே புகுந்துவிட்டால்...?

நீண்ட நேரம் பயத்தை மறக்க அவள் படித்துக்கொண்டிருந்தாள். பின்னர் உறங்கிப்போனாள். நடு இரவின் போது திடுக்கிட்டு மிரண்டு எழுந்து உட்கார்ந்தாள், மார்பு படபடத்தது மூச்சு முட்டியது. நன்றாக உற்றுக் கேட்டாள். வேப்பமரத்து ஒரு கிளையிலிருந்து கிரீச்சிட்டு அலறிக்கொண்டு மறு கிளைக்குத் தாவிய ஒரு பறவை எழுப்பிய ஒலி. இரவின் நிசப்தத்தில் அப்படிப் பயங்கரமாகக் கேட்டது.

எச்சிலை விழுங்கி விட்டு தலையில் போர்வையை வழிய விட்டுக்கொண்டு...அவள் கண்களை இறுக்கமாக மூடியபடி தூங்க முயன்றாள். வெகுநேரம் உறக்கமில்லாது தவித்ததின் பயன் அந்தத் தலைவலி. மற்ற வேலைகளைக் கவனிக்க எழுந்தபோது அவள் பார்வை எதிர் சுவரில் பெரிதாக மாட்டியிருந்த புகைப்படத்தில் வீழ்ந்தது. கணவர் சதாசிவம் அவளைப் பார்த்து அதிலிருந்தபடி... மெல்லச் சிரித்தார்.

கண் கலங்கிப் போனாள் சியாமளா.

அவர் மட்டும் மாரடைப்பால் மரணமடைந்து போகாதிருந்தால் அவள் அந்த வெளிநாட்டை விட்டு வந்திருப்பாளா? அழகான வசதியான அந்த வீட்டையும் சுகபோகமிக்க வாழ்வையும் உதறி விட்டு... இங்கே வந்து ஒண்டிக் கட்டையாகத் திண்டாடிக் கொண்டிருப்பாளா?...

சின்னஞ்சிறு சத்தத்தைக் கேட்டாலும் நடுங்கிப்போகும் கோழைத்தனம்தான் ஏற்பட்டிருக்குமா? சிங்கத்தைப் போலத் துணையாகக் கூட இருந்த கணவனை விட்டு விட்டு...இப்போது வயதுக் காலத்தில்...மேலே சிந்திக்க முடியாது துயரத்தை விழுங்கியபடி கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு திரும்பினாள்.

வாயிலில் அழைப்புமணி கிணுகிணுத்தது.

இந்தக் காலை வேளையில்... அவளைத் தேடிக் கொண்டு யார் வந்திருப்பது?

சபரிமலை பக்தர்களானாலும் சரி... ஷாம்பு விற்கும் பெண்களானாலும் சரி அவள் சட்டென்று கதவை யாருக்கும் திறந்து விடுவதில்லை.

வாயில் பக்கம் மெல்ல வந்து கதவில் பொருத்தப்பட்ட கண்ணாடிக் கண் வழியே வெளியே பார்த்தாள்.

வராந்தாவிலே ஓர் இருபது வயது இளம் பெண்... வேலைக்காரி சின்னம்மா விவரித்தபடி பளிச்சென்று அழகாக நின்று கொண்டிருந்தாள். நெஞ்சு ஏன் இப்படி திக் திக்கென்று அடித்துக் கொள்கிறது?...சே! என்ன பைத்தியக்காரப் பயம்?...யாரது? அதட்டி விட்டு மீண்டும் கண்ணாடி வழியே பார்த்தாள். பட்டுப் போன்ற பாதங்கள் இரண்டையும் வாயில் வராந்தா மொஸைக்கின் மீது பரவிய படி நின்ற அந்தப் பெண் பாவம், ஏதோ சோப்பு அல்லது பிஸ்கெட் விற்க வந்திருக்கலாம்...தன்னுள் சிரித்தபடி கதவைத் திறந்தாள் சியாமளா

"மாமி! நாங்கள் இந்தத் தெரு கடைசி பங்களாவின் அவுட் ஹவுசில் குடியிருக்கோம். பி. எஸ்சி.படிச்சவ. ஷார்ட்ஹாண்ட், டைப்பிங் எல்லாம் பாஸாயிருக்கேன். ஆனால் வேலைதான் கிடைக்கல்லே. எங்கப்பா கிளார்க்கா ஒரு கம்பெனியில் டவுனில் வேலை பண்றார். அம்மா... இந்த பங்களாக்காரர் வீட்டில் சமையல் வேலை செய்யறா.. மூணு குழந்தைகள்! தம்பி ரெண்டு பேரும் பள்ளிக்கூடம் படிக்கிறவா... நீங்க தனியா இந்த வீட்டில் குடியிருக்கேள்! ஒரு சமயம் உங்களுக்கு வேலைக்கு என்னைப் போல யாராவது தேவைப்படுமனு கேள்விப்பட்டேன்... ஒரு வேலை கொடுத்து... படபடவென்று பேசியவள் முடிக்காது வெட்கத்துடன் நிறுத்தினாள்.



செம்மை படிந்த அந்த அழகு முகத்தையும்... அந்தப் பெண்ணின் தோற்றத்தையும் மேலும் கீழும் பார்த்தாள் சியாமளா. தேய்த்துத் துடைத்து வைத்த குத்துவிளக்கு போல நகை ஏதுமின்றி ஆனால் பளிச்சென்று அழகும் இளமையும் தகதகக்க நின்று கொண்டிருந்தாள்.

"பேர் என்ன சொன்னே?..." கேட்டபடி அந்தப் பெண்ணின் மேனியில் துவண்டுகிடந்த ஓரம் கிழிந்த வாயில் சேலையை இரக்கமாகப் பார்த்தாள்.

"இன்னும் சொல்லலையே... சுஜரிதான்னு பேர்... சுருக்கி சுஜீன்னு கூப்பிடுவா எங்க வீட்டிலே" கன்னங் குழிய மெல்லச் சிரித்தாள் அவள். "உள்ளே வா சுஜி!" கதவை சியாமளா அகலமாகத் திறந்தாள்.

## 2

நடையைத்தாண்டி விஸ்தாரமாக இருந்த முன்னறைக்கு வந்து நின்று சுஜரிதா பிரமிப்புடன் கண்களை நாலாபுறமும் ஓடவிட்டாள். சுவரில் பூசப்பட்ட லேசான பச்சை வண்ணத்துக்குத் தக்கபடி ஆழ்ந்த பச்சை நிற நிரைச் சீலைகள் ஜன்னல்களின் ஓரங்களில் ஒதுங்கித் தொங்கிக் கொண்டிருந்தன. காலை மெத்தென்று தழுவும் பழுப்பு வண்ணக் கம்பள விரிப்பு தரையை அலங்கரித்தது. கருகிய ஆரஞ்சு வண்ணத்திலே, திண்டுகளுடன் சோபாக்கள்—

சற்று தூரத்தில் ஒரு பக்கம் நகரும் சிறு மேஜைமீது டெலிவிஷன் பெட்டி! காப்பி மேஜை மேல் அழகானதொரு பெரிய கிரிஸ்டல் கண்ணாடி ஜாடி—அதில் அன்று மலர்ந்த சிவப்பு ரோஜா மலர்கள். சாப்பாட்டறையைப் பிரித்த மரத்தடுப்பு போன்ற அலமாரியில் மேல் தட்டில் வரிசையாக பொன் எழுத்துக்களை முதுகில் காட்டிய வண்ணம் சீராக அடுக்கப்பட்டிருந்த புத்தகங்கள். ஒரு தட்டில் பளபளத்த வெண்கல நடராசர்—அவருக்கு இருபக்கமும் பொன்னாக மின்னிய திருச்சூர் குத்து விளக்குகள்...இன்னொரு தடுப்பில்...டேப் ரிக்கார்டர்—பக்கத்துத் தடுப்பில் ரேடியோ.

''என்ன அப்படி மலைச்சு நிக்கறே?...உள்ள வந்து உட்காரு...நான் இன்னும் காலை டிபன் சாப்பிடலை'' சொல்லிக்கொண்டே வாயில் கதவைச் சாத்திவிட்டு சியாமளா, தடுப்பைத் தாண்டி சாப்பாட்டறை போன்ற பகுதிக்கு அழைத்துச் சென்றாள்.

வைத்த கண் வாங்காது அந்த இடத்தை சுஜாிதா அதிசயமாகப் பார்த்தாள். கறுப்பு வண்ண சன் மைகாவில் ரோஜாப் பூக்கள் நிழலாகத் தெரிந்த வழுவழுப்பான சாப்பாட்டு மேஜை. சுற்றிலும் நாற்காலிகள்! சுவரில் பெரியதொரு கடிகாரம்! நீர்க்குடத்தைச் சுமந்து கொண்டிருந்த ராஜஸ்தானிப் பெண்ணின் படம்.

சாப்பாட்டறைப் பக்கமிருந்த தடுப்பு அமைப்பில் தட்டுகளில் பீங்கான் டின்னர் ஸெட், டீ ஸெட், கண்ணாடி டம்ளர்கள் முதலியன கொலு பொம்மைகளைப் போல வகை பிரித்து அழகாக அடுக்கப்பட்டிருந்ததைக் கவனித்தாள்... தோட்டத்திற்கும் வீட்டின் உட்புறத்திற்கும் தான் எத்தனை வித்தியாசம்? ஒரு துளி தூசிகூடக் காணப்படாது வீடு பளிச்சென்று அழகாக, ஆடம்பரமாக வசதியாகக் காணப்படுவதை வியப்புடன் விழிகள் அகலப் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றாள்.



''என்ன பேசமாட்டியா? உட்கார் இப்படி'' ஒரு நாற்காலியை சியாமளா காட்டி உபசரித்தபோதுதான் விழிப்படைந்தாள். 'உங்க வீடு ரொம்ப அழகா இருக்கு. எங்கம்மா சமைக்கப்போற அந்த பங்களாக்காரர்கள் வீட்டின் உட்புறம்கூட இத்தனை அலங்காரமாக இல்லை. ரொம்பப் பணம் செலவழிச்சு இதைச் சரிபடுத்தியிருக்கீங்கன்னு நினைக்கிறேன்.''

''பணம் செலவழிச்சால் மட்டும் போறாதம்மா. ரசனை உணர்வோட வீட்டை நிர்வகிக்கத் தெரிஞ்சுக்கணும். கொஞ்சம் பாடுபட்டிருக்கேன். அவ்வளவுதான்'' சிரித்தாள் சியாமளா.

நாற்காலி மீது பட்டும் படாமலும், உட்கார்ந்த சுஜாிதா மறுபடியும் தன் கண்களை நாலாபுறமும் ஓட விட்டாள்.

''நான் இன்னும் டிபன் சாப்பிடலை, சமைக்கலை! முதல்ல உனக்கு கொஞ்சம் காப்பி போட்டுத் தரேன். பிறகு என்னோடு டிபன் சாப்பிட்டுவிட்டு நீ போகலாம்'' உபசரித்தாள் சியாமளா.

'மாமி மன்னிச்சுக்கோங்க... கார்த்தாலே ஒரே வேளை தான் நாங்க காப்பி சாப்பிடற பழக்கம்.''

''ஏன் ஏதாவது பத்தியத்திலே இருக்கிறாயா? உடம்பிலே ஏதாவது கோளாறா?'?

''இல்லை. இல்லாமைங்கிற கோளாறுதான். ஒரு தடவைக்கு மேலே சாப்பிடக் கட்டுப்படியாகாதுன்னு அம்மா எங்களை அப்படி கட்டுப்பாட்டோட வளர்த்திருக்கா. இன்னிக்கு ஒருநாள் காப்பி டிபன் சாப்பிட்டா, நாளைப் பொழுதுக்கு எனக்கு யார் தருவா? அதைத் தேடிக் கொண்டு இங்கே நாளைக்கு வரத்தோணும். பசி வெட்கமறியாது இல்லையா?''

ணயப்புடன் சியாமளா அந்தப் பெண்ணைப் பார்த்தாள்.

''உழைச்சு சம்பாதிக்கத் தொடங்கினா, தாராளமா வயிற்றுக்கு சாப்பிடலாம்னு அப்பா அடிக்கடி சொல்வார். நான் அவர் விருப்பப்படி முதல்லே ஒரு வேலை தேடிக் கொண்டு...சம்பாதிக்க ஆரம்பிச்ச பிறகு... ஒரு தடவைக்கு மேல் இரண்டு தடவையா காப்பி டிபன்னு நன்னா சாப்பிட ஆரம்பிப்பேன்.. அதுவரை பல்லைக் கடிச்சுண்டு...குடலைச் சுருட்டி மடக்கி வயத்துக்குள்ளேயே அமுக்கி, வச்சுக்குற துன்னு முடிவு'' லேசாக கன்னங் குழியச் சிரித்த அந்தப் பெண்ணை வாரி நெஞ்சோடு அணைத்துக்கொள்ள வேண்டும் போன்றதொரு பரிவு உணர்வில் கரைந்து போனாள் சியாமளா.

''உன் கொள்கை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. உனக்கு வேலை கொடுக்க ஆசைப்படறேன். ஆனால் ஒரு சின்ன தயக்கம்.'.

''சொல்லுங்க மாமி. தாராளமா என்ன வேணாலும் கேளுங்க பதில் சொல்றேன்.''

''படிச்சிருக்கிற பொண்ணு நீ. இது வீடு...இங்கே உனக்கு நான் ஆபீஸ் வேலை ஏதும் தர முடியாது. உனக்கு ஆட்சேபணை இல்லைன்னா எனக்கு உதவியா கொஞ்சம் துணையா கூடமாட வீட்டு வேலை செய்ய ஒப்புக்குவியா?... படிப்பு கௌரவம் குறுக்கிடாதே!''

''செய்யும் தொழிலே தெய்வம்னு— செய்கின்ற வேலையை முதலில் மதிக்கணும்னு அப்பா சொல்லுவா— படிச்சிட்டு வேலை கிடைக்கலைன்னு சோம்பேறியாத் திரியறதைவிட உங்களைப் போல ஒரு நல்ல மனுஷி வீட்டிலே வேலை செஞ்சா என் கௌரவம் எப்படி குறைஞ்ச போகும்?...நான் ஒத்துக்கறேன். மாமி...எந்தவிதமான வேலை கொடுத்தாலும் செய்யத் தயார்''



''வீட்டைப் பெருக்கவும். பாத்திரங்களைத் துலக்கவும் ஒரு ஆள் ஏற்கெனவே அமர்த்தியிருக்கேன். மற்றபடி இங்குள்ள சாமான்களை தூசி தட்டி பத்திரமா எடுத்து வைக்க, கடைக்குக் கூடப் போக, பாங்குக்குப் போய்வர கடிதங்கள் எழுத; ஒரு செக்ரட்டரிபோல துணையாக ஒரு பெண் தேவைன்னு மனதிலே நினைச்சேன். நீ வந்தே..''

''எனக்கு ஆயிசு நூறுன்னு சொல்லப் போறேளா! சொல்லுங்க...மாமி. உங்களைப்போல பெரியவாளுடைய ஆசீர்வாதம் எனக்கு ரொம்ப தேவை. எங்க குடும்பம் ரொம்ப வறுமையிலே கஷ்டப்படறது. எனக்கு நன்னா சமைக்கத் தெரியும். நான் உங்களுக்கு ஒரு நல்ல துணையா உதவியாளாக இருக்கச் சம்மதிக்கிறேன்...''

''அப்போ இன்னிக்கே அந்த வேலையை இப்பவே ஏத்துக்கோ...இந்த வேலைக்கு மாசம் இருநூறு ரூபா சம்பளம்—காலை காப்பி, டிபன்' மத்தியானம் சாப்பாடு. சாயங்காலம் காப்பி, டிபன் இத்தனையும் உண்டு... ஆனால் ஒண்ணு...''

''ரொம்ப சந்தோஷம்.. வேறு என்ன கண்டிஷன் அதையும் சொல்லிடுங்கோ..''

'பொய் பேசக்கூடாது. திருடக்கூடாது..குளிச்சிட்டு சுத்தமா இருக்கணும். இது முக்கியம்.'

''எனக்கும் இவைகள் ரொம்ப முக்கியம் மாமி. நானே உழைச்சு நாணயமா சம்பாதிக்க விரும்பறேன்... அதனால் தான் சட்டுனு ஒரு நல்ல வேலை கிடைக்கலை..''

''இந்த வேலை உனக்குப் பிடிச்சிருக்கா?''

'ரொம்பப் பிடிச்சிருக்கு மாமி...உங்களைப் பிடிச்சிருக்கு. உங்க கிட்டேயிருந்து பல விஷயம் கத்துக்கலாம்னு உள் மனம் சொல்றது...''

''நீ ரொம்பப் புத்திசாலிப் பொண்ணு இப்போ நீ காப்பி சாப்பிடலாம் இல்லையா?''

''இருங்கோ மாமி... அம்மாகிட்ட சொல்லிட்டு உத்திரவு வாங்கிண்டு ஓடி வரேன்'' மகிழ்ச்சியும் நன்றியும் கலந்த குரலில் ஆர்ப்பரித்துவிட்டு சிட்டாக வெளியில் பறந்தோடினாள்

கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே திரும்பிய சியாமளாவுக்கு மனம் நிம்மதியாக இருந்தது.

நாள் முழுதும்... தனிமையில் துவண்ட அவளுக்கு இப்ப ஒரு துணை திடீர் என்று எங்கிருந்தோ வந்தது வியப்பான சங்கதி தான். ஆனால் மிகவும் வரவேற்கத் தக்கதுதான்.

சிறிது பொழுதில் மீண்டும் வாயில் அழைப்பு மணி ஒலித்தது.

சுஜியைப் போன்ற சாயலில், நடுத்தர வயதுடைய ஒரு அம்மாள் இப்பொழுது அந்தப் பெண்ணுடன்கூட வந்திருந்தாள். 'இவங்கதான் என் அம்மா'' அறிமுகப்படுத்தினாள் சுஜி. வந்தவளும் வியப்புடன் முன்னறையைக் கண்களால் அளந்தாள்.

சுஜி வந்து சொன்னா! எனக்குச் சந்தோஷம் தாங்க முடியலை. நான்தான் முதலில் சுஜிகிட்டே சொன்னேன். அந்தப் பழைய பங்களாவிலே யாரோ வெளிதேசத்திலிருந்து வந்து குடியேறி இருக்காங்களாம். தனியா ஒரு அம்மா மட்டும் இருக்காங்களாம். அவங்களுக்கு ஏதாவது வேலை தேவைப்படும். கேட்டுப்பார்னு சொன்னேன். நீங்க உடனடியா சுஜிக்கு வேலை தந்துட்டேள். அவ அப்பா ரொம்ப சந்தோஷப்பட்டுப்பார் வயசுப் பெண்களை வேலைக்காக தனியா வெகு தூரம அனுப்ப இப்ப எல்லாம் ரொம்ப பயமா இருக்கு. காலம் கெட்டிருக்கு. வீட்டு வேலைன்னா என்ன? அதுவும் ஒரு கௌரவமான தொழில்தானேன்னு



நான்தான் சொன்னேன்...'' பெருமையும் மகிழ்ச்சியுமாக பேசினாள்.

சிறிது பொழுதில் தாய்... சூழ்நிலையைப் பார்த்து திருப்தியடைந்தவளாக தன் மகளை அங்கே வேலைக்கு விட்டு விட்டுப் போய்விட்டாள்.

''நீ உன் அம்மாவை ஏன் அழைச்சிண்டு வந்தேன்னு காரணத்தைக் கண்டுபிடிச்சுட்டேன்'' மெலிதாகச் சிரித்தாள் சியாமளா.

''பொய் சொல்லக்கூடாதுன்னு நீங்க நிபந்தனை போட்டிருக்கிறதாலே நான் ஆரம்பத்திலிருந்து மனம்விட்டு உங்களோட வெளிப்படையாகவே பேசிடறேன். தனி பங்களாவிலே வெளியூரிலிருந்து ஒரு அம்மா வந்து தங்கியிருந்தான்னா... மனதிலே பலவிதமான கற்பனைகள் ஏற்படலாம் இல்லையா?... கௌரவமான இடத்திலே வசிக்கிறாப்பல வேஷம் போட்டுண்டு... இப்போதெல்லாம் சில படிச்ச பெண்கள்கூட தப்புக் காரியங்கள் செய்யறா இல்லையா...? அதனாலே.''

''நான் தப்பு தண்டாக்களில் இறங்கறவள்னு இப்பகூட உன் மனம் நினைக்கிறதா...''

''ஐயோ மாமி... இப்போ உங்களை நான் என் தெய்வமா-குருவா என் யஜமானியா... இன்னும் சொல்லப் போனா ஒரு நல்ல தோழியா நினைச்சுக்கிறேன், உங்களைப் பார்த்ததுமே பிடிச்சுட்டதனாலத்தானே வேலையே ஒப்புக்கொண்டேன்.''

''உனக்கும் எனக்கும் எத்தனை வயசு வித்தியாசம்... தலைமுறை இடைவெளி இருக்கே எப்படி நாம் தோழிகளாக இருக்க முடியும்?'' சிரித்தாள் சியாமளா.

''ஒருவரையொருவர் புரிஞ்சுண்டு... இடைவெளியை நெருக்கமாக்கிக் கொண்டால்... தோழிகளாக இருக்க முடியும் மாமி எங்கப்பா சொல்வார்... கண்ணன் என் தோழன்

என்று பாரதி எப்படிச் சொல்ல முடியும்? பகவான் எங்க...

'சாதாரண மனிதன் எங்கே பக்திப் பரவசத்தில் ஆன்மநேய உணர்விலே ஒரு மனிதன் தேவனாக உயர்ந்து விடும்போது பகவான் நெருங்கிவிடறான். தோழனாகிவிடுகிறான். அதற்கு அடுத்த நிலையில்...அவன் அவரோட ஐக்யமாகி விடறான்.''

பரவாயில்லை ஒழிந்த வேளைக்கு கதாகாலட்சேபம் பண்ணி என்னை ரொம்பவே எண்டெர்ட்டெய்ன் பண்ணுவே போல இருக்கு...வா இப்போ ரெண்டு பேரும் தோழிகள் போல காப்பி டிபன் சாப்பிடலாம்.'' அன்போடு கூறி அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

வயது, தோற்றப், எண்ணங்கள், கொள்கைகள்—என இடையே அகலமான தலைமுறை இடைவெளி அவர்களுக்குள் இருந்தது உண்மைதான்...ஆனாலும் சிலநாள் பழக்கத்திலேயே சியாமளாவுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது'

சுஜரிதாவுக்கு...தன் எஜமாளிமேல் தீவிரமான ஈர்ப்பு. தாயைப் போன்றதொரு பாசத்துடன் நேசிக்கத் தொடங்கினாள்.

அவள் வந்த பிறகு வீட்டைச் சுற்றி மண்டிக் கிடந்த காடு விரைவில் மறைந்து போயிற்று.

தாங்கள் குடியிருக்கும் பங்களாவின் தோட்டக்காரன் சிபாரிசின் மூலம் இரண்டு ஆட்களை அழைத்து வந்த சுஜி அந்த வீட்டுத் தோட்டத்தை முதலில் துப்புரவு செய்ய உதவினாள். பின்னர் தோட்டக்காரன் ஆலோசனையின் பேரில் அருகிலிருந்த நர்சரிக்கு சியாமளாவை அழைத்து சென்று தேவையான செடி, கொடி வகைகளை வாங்கி வைத்தாள்.

உற்சாகத்துடன் ஆட்கள் உதவியால் அவைகளை நட்டு, உரம் போட்டு, நீர் பாய்ச்சி பத்திரமாகப் பாதுகாக்கும்



பணியில் முழு மனதுடன் சியாமளாவுடன் ஈடுபட்டாள். அதன் விளைவு, சில மாதங்களுக்குப் பின்னர் அந்த வீட்டின் முன்புறம் மிகப் பொலிவுடன் புதுமுகத்துடன் காணப்பட்டது. அக்கம் பக்கத்து பங்களாவின் தோட்டங்களுக்கு இணையாக அந்த வீட்டைச் சுற்றிலும் ஒரு அழகிய தோட்டம் உருவாகி விட்டது.

வரிசையாக நட்டு இருந்த ரோஜாப் பூக்கள் மொட்ட விழ்த்துக் கொண்டு மலர்கள் காற்றில் அசைந்து ஆடும காட்சியைக் கண்டு களித்தபடி சியாமளா தோட்டம் முழுவதும் சுஜியுடன் மாலைப் பொழுதில் பெருமையாகச் சுற்றி வந்தாள். சுவரின் மேல் தாவி ஏறி செழிப்பாகப் படர்ந்திருந்த நித்யமல்லி மொக்குகளைத் தினமும் பறித்துக் கொண்டு போக சுஜிக்கு மகிழ்ச்சியுடன் அனுமதி தந்திருந்தாள். சுவர் ஓரமாக வைக்கப்பட்டிருந்த போகன் வில்லாக்கள் வண்ண வண்ண மலர்களுடன் சுவரைத் தாவி வெளியே எட்டிப் பார்க்கும் உயரம் வளர்ந்து விட்டதைப் பூரிப்புடன் பார்த்துக் களித்தாள். மகிழ மரமும் பவள மல்லியும் தரையில் விரித்துவிட்டிருந்த பூப் பாவாடைகளைப் பார்த்துப் பரவசமடைந்தாள்.

சுஜி...பூவாளியில் குரோட்டன்ஸ்களுக்கு தினசரி நீர் வார்ப்பாள். சியாமளா...ஹோஸ் பைப்பை வைத்துக் கொண்டு பல கற்பனைகளில் மூழ்கியபடி வெகு நேரம் புல் வெளிக்கும், விருட்சிப் பூச்செடிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சி மகிழ்வாள்.

காலம் இனிதே மனநிறைவுடன் விரைவாக ஓடிக் கொண்டிருந்தது. ஒரே ஒரு சிறு குறைதான்.

சுஜரிதா மாலை நான்கு மணியானதும் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிவிட்டு...இரவு சமையலுக்கு கொஞ்சம் உதவியதும் வீட்டுக்குப் போய்விடுவாள.

பிறர் வீட்டில் இரவு தங்குவதை அவள் தந்தை அனுமதிக்கவில்லை என்பதுதான் காரணம்.

இரவும்...அவள் கூட இருந்தால் நாள் முழுவதும் துடிதுடிப்பான ஒரு இளம் பெண்ணின் துணையில் இழந்து போன வாலிபம் திரும்ப வந்து...காயகல்பம் பெற்றுக் கொண்டதொரு பூரணமான நிறை இருக்குமே என்றதொரு சிறு மனக்குறை இருந்தது, அவனுக்கு...

அன்று மாலை சுஜரிதா...அரை மணி முன்னதாக காய்ச்சலாக இருக்கும் தம்பியை கவனிக்க உத்தரவு வாங்கிக் கொண்டு போய்விட்டிருந்தாள்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்த சியாமளாவுக்கு திடீரென்று தனிமை...பெரும் பாரமாக சுமையாக அழுத்தியது. டி.வி.யைப் பார்க்கப் பிடிக்காது, ரேடியோவையும் கேட்காது... புத்தகம் பிரித்து வைத்து படுக்கையில் சாய்ந்தபடி தலைமாட்டிலிருந்து எரிந்த மின் விளக்கு வெளிச்சத்தில் வெகு நேரம் படித்துக் கொண்டிருந்தாள்.

சுஜரிதா வீட்டுக்குப் போனபின் அவளது தனிமையின் துணை நல்ல புத்தகங்கள்தான்.

படுக்கையருகே இருந்த ஜன்னல் கதவுகளை இறுக்கமாக மூடி விட்டிருந்தாள். காற்றோட்டத்திற்காக எதிர்ப்புற ஜன்னல்களை சிறிதளவு திறந்து வைத்திருந்தாள். ஆனாலும் உட்புறம் தொங்கிய கனமான திரைச்சீலைகளை இழுத்து நன்றாக மூடி விட்டிருந்தாள். மாடி முகப்பில் எரிந்த மின்விளக்கின் வெளிச்சம், தோட்டத்து வராந்தாவில் பரவிக் கொண்டிருந்தது. வானத்திலே ஊர்ந்த வளர்பிறையின் மெல்லிய ஒளியில்...தோட்டம் ஒரு கனவு உலகில் மூழ்கிக் கிடந்தது. எதிர்ப்புற ஜன்னல் ஓரம் வளர்ந்து பூத்துக் குலுங்கிய நைட் குவீனின் மணம் மெல்ல காற்றோடு கலந்து இதமாக முகத்திலே மோதிக் கொண்டிருந்தது.

முன்னறைக் கடிகாரம் மணி பன்னிரண்டு என்பதை உணர்த்தியபடி அடித்து ஓய்ந்ததும்.. புத்தகத்தை மூடி



விட்டு...போர்வையை இழுத்து தலைமேல் வழிய விட்டுக் கொண்டு படுத்தாள் அவள்.

சில நிமிடங்களில் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். யாரோ தோட்டத்திலே நடக்கும் காலடி ஓசை துல்லியமாகக் கேட்டது.

நெஞ்சு திடும் திடும் என்று அடித்துக்கொள்ள அவள் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு... இருட்டில்... பரக்க பரக்க விழித்தபடி உட்கார்ந்திருந்தபோது பின் பக்கத்து ஜன்னல் கதவின் கண்ணாடி அருகில் நெருங்கி வரும் சத்தம் நன்றாக பளிச்சென்று கேட்கவே.. பதறிப்போய் மார்பின் மீது கைகளை சேர்த்துப் பிடித்துக் கொண்டு கிலியுடன் நிமிர்ந்து உட்கார்ந்தாள். நெஞ்சு படபடத்தது...உடல் முழுவதும் வியர்வை கொப்பளித்து ஆறாக ஓடியது...

## 3

அடுத்ததாக அவள் என்ன செய்ய வேண்டும்! மூச்சைப் பிடித்துக்கொண்டு சப்தமிடாது மேலே என்ன நடக்கிறது என்று கவனிக்க வேண்டும். அல்லது தலைமாட்டில் தயாராக வைத்துக்கொண்டிருக்கும் டார்ச்சை எடுத்துக் கொண்டு படுக்கை அறைக் கதவைத் திறந்து கொண்டு நடையின் வழியாகப் பின்பக்கம் சென்று உண்மையில் ஜன்னல் கண்ணாடிதான் உடைந்ததா அல்லது வீண் பிரமையா என்று பார்க்க வேண்டும்.

ஒரு வேளை வெகுநேரம் ஒரு துப்பறியும் கதையைப் படித்துக் கொண்டிருந்ததின் பாதிப்பாக இருக்கலாம்.

கனமான இரும்புத் தடுப்புகள் கொண்ட ஜன்னல். அதைத் தாண்டிக் கொண்டு அவன் எத்தனை வேகத்தில் உள்ளே வந்துவிட முடியும்! ஜன்னல்களுக்கு கம்பித் தடுப்புகள் வைத்துக் கட்டும் பழக்கம் இல்லாத ஆப்பிரிக்க ...ட்டில் அத்தனை காலம் வாழ்ந்திருக்கிறாள். வெறும்

கண்ணாடிக் கதவை மட்டுமே காவலாக நினைத்து சாத்தி விட்டுத் தூங்கிப் பழக்கப்பட்டவள்.

அந்த நாட்டில் மட்டும் திருடர்கள் இல்லையா?

உடைக்கும் சத்தம் கேட்காது லாவகமாக கண்ணாடியைக் கழற்றிக் கொண்டு கூரையையும் தரையையும் தொட்டுக்கொண்டு நிற்கும் பிரஞ்சு விண்டோக்கள் வழியே நிம்மதியாக வலது காலை எடுத்து உள்ளே வைத்துக் கொண்டு வீட்டு மாப்பிள்ளைபோல' முகமுடியும் துப்பாக்கியுமாக வந்து நிற்கும் திருடர்களைப் பற்றிய சம்பவங்கள் எத்தனை கேள்விப்பட்டிருக்கிறாள். பத்திரிகைகளில் படித்திருக்கிறாள். ஆனால் அந்த அனுபவம் அவளுககு ஏற்பட்டதில்லை.

ஒரு வேளை அவள் வீட்டில் அன்று குட்டியாக இருந்த நாய் ஜிம்மி சதா தோட்டத்தை சுற்றி வந்தது ஒரு காரணமோ?

வீட்டுக்கும் அவளுக்கும் தன் உயிர் போகும் வரை காவல் தெய்வமாக இருந்த ஜிம்மியை இப்போது நினைத்துக் கொண்டாள். தொண்டையை என்னவோ இருக்கிக் கொள்ளும் ஒரு உணர்வு. ஜிம்மி வெறும் நாய் அல்ல. ஒரு தோழன். உயிரையும் கொடுக்கத் தயங்காத மௌனமானதொரு நண்பன். ஜிம்மி இறந்துபோன பின்னர் அவளுக்கு நாய் வளர்க்கும் ஆசையே போய்விட்டது.

வக்கீல் நண்பர் வற்புறுத்தினார். ஒரு நல்ல நாய்க் குட்டி வாங்கித் தர ஏற்பாடு செய்கிறேன். தனியா இருக்கீங்க ரொம்ப உதவியாக இருக்கும். அல்சேஷியன், ராஜபாளையம் போல உயர்ந்த ஜாதி நாயா பார்த்து வளர்த்தால்...

அவள் மறுத்துவிட்டாள். நாய்கள் என்றால் அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும். வளர்த்தால் சொந்த குழந்தையைப் போல பத்திரமாக, அன்பாக, கண்டிப்பாக, சீராக வளர்க்க வேண்டும் எங்கள் வீட்டிலும் நாய் வைத்திருக்கிறோம் என்கிற பெருமைக்கு அவைகளை சதா சங்கிலியால் கட்டிப்



போட்டு ஓட்டைப் பீங்கானில் பற்றியும் பற்றாமலும் சோறு போட்டு நேரத்துக்கு குடிக்க நீர் கொடுக்காது-சே...சே! மகாபாவம்.

தன்னைக் காத்துக் கொள்ளவே முடியாத தள்ளாமை அதிகமாகிக கொண்டுவரும் இந்த வயதில் ஒரு நாய் வளர்ப்பது சுலபமா?

தலைமாட்டிலேயே டெலிபோனை வைத்துககொள்ளும் பிளக்கிங் ஸிஸ்டம் அமைத்துக் கொடுங்கள் போதும் என்றாள். கைக்கெட்டிய தூரத்தில் சிறு மேஜை மீது தொலைபேசி படுக்கைத் தலைமாட்டில் பத்திரமாக இருந்தது. அதைத் துணையாக நம்பினாள்.

மெல்லத் துழாவி டார்ச்சை எடுக்க முயன்றபோது பின் பக்கமிருந்து 'தடும்' என்றதொரு சத்தம் கேட்கவே திகைத்து போனாள்; அது என்ன சத்தம்? திக்திகென்று நெஞ்சு அடித்துக் கொள்ள மேஜை மீதிருந்த தொலை பேசியை மெல்லத் தன் அருகே இழுத்துக் கொண்டு ரிசீவரை எடுத்தாள்.

முன்னால் ஓய்வு பெற்ற அந்த காவல் துறை அதிகாரி திரு. ஷண்முகத்தைக் கூப்பிட்டாள்!

"இரவோ பகலோ எந்த நேரமானாலும் சரி டெலிபோன் பண்ணுங்க; இன்னமும் மோட்டார் சைக்கிளை நான் விற்கவில்லை. இரவானால் கண் பார்வை அத்தனை சுகமில்லை. என் சின்ன மகனை எழுப்பி அவனை வண்டியை விடச் சொல்லி நான் தொத்திக்கொண்டு பத்து நிமிஷத்தில் வந்து விடுந்துடுவேன். பயப்படாதீங்க" என்று சொல்லியிருந்தார்.

'.ராத்திரியாச்சே - தூக்கத்தைக் கெடுப்பதான்னு யோசிச்சிட்டு. குழப்பாதீங்க. டெலிபோனில் கூப்பிட்ட அஞ்சு நிமிஷத்திலே எங்க வீட்டு சமையல் ஆளோட புறப்பட்டு வந்துடுவேன் எங்க சமையற்காரர் வரதனுக்கு சமையல் மட்டும் தெரியும்னு நினைக்காதீங்க...நல்லாவே

சினிமா' கதாநாயகன் போல.. சண்டையும் போடத் தெரியும்'' சொல்லிவிட்டுச் சிரித்தார் வக்கீல்,

முதலில் காவல்துறை அதிகாரி ஷண்முகத்தைக் கூப்பிட்டு விட்டு... பிறகு வக்கீல் தேவநாதனை அழைக்க வேண்டும். ஒருத்தருக்கு இரண்டு பேரா வரட்டுமே? வீண் குழப்பம் என்று பிறகு அவர்கள் சிரிக்கட்டும் பரவாயில்லை. இப்படி நடுங்கிக் கொண்டு இருப்பதைவிட... நினைத்தபடி மின்விளக்கை ஏற்றிவிட்டு எண்களைச் சுழற்றலாம் என்று ரிசீவரைக் காதருகில் கொண்டு போனவளுக்கு மெத்த அதிர்ச்சி...

தொலைபேசி தொடர்பு அற்று செத்துக் கிடந்தது.

இருபக்கமும் பட்டன்களை அழுத்திப் பார்த்தாள்; ஊகும் டிங் டிங் என்ற மணிச் சத்தமே இல்லாது ஒரே அமைதி... மயானத்தின் அமைதி.

எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டாள்.

பயந்து கொண்டு படுக்கையறையிலேயே ஒண்டிக் கொண்டிருந்தால்? பின் பக்கம் என்ன நடக்கிறது—அந்தக் கடும் சபதம் எதனால் ஏற்பட்டது என்று கவனிக்காவிடில்?

ஒரு பங்களாவுக்கும் இன்னொரு பங்களாவுக்கும் இடைவெளி அதிகம்தான்.

இன்று முழு ம் அவள் அலறிக் கூச்சலிட்டாலும் ஏன் என்று கேட்கத் தோணாது. அண்டை அயலார் சூழ்ந்த இடத்தில் தன் கையே தனக்குதவி என்றுதான் அவள் செயல்பட வேண்டும்.

இப்போ மணி என்ன?

நடு இரவு. மணி ஒன்று.

வேலைக்காரி சின்னம்மா விடியற்காலை ஐந்து அல்லது ஆறு மணிக்குத்தான் வருவாள். அதுவரை?



அடுத்த பங்களாவின் நாய் ஒன்று ஆவேசமாக மதில் சுவர் ஓரமாக ஓடி வந்து குரைப்பது கேட்டது.

'டியூக்! ஷட் அப்! இங்கே வா...?' அந்தப் பங்களாவின் இரவு காவல்காரன் அதை அதட்டி... அழைப்பதும கேட்டது.

அடுத்த பங்களாவில் ஆள் படையும்-நாயின் துணையும இருந்து அவளுக்கு ஆகப் போவதென்ன? ஓடி வந்து உதவவா போகிறார்கள்.

எதை இழந்தாலும் ஒரு ஆணோ பெண்ணோ தன் துணிவை மட்டும் இழக்கவே கூடாது. கடைசி வரை ஒரு கை பார்த்துவிட வேண்டும். கோழைகள் பலமுறை சாகிறார்கள், துணிந்தவன் ஒரே ஒருமுறைதான் சாகிறான். அவள் கணவன் அடிக்கடி சொல்லும் அறிவுரை அது. அதைக கெட்டியாக கைப்பறறிக கொணடுதான் அவள் தனிமையில எதிர்நீச்சல போட்டுக்கொண்டு எத்தனையோ இன்னல்களை சமாளித்திருக்கிறாள். அந்த துணிச்சலை அவள் இப்போது ஏன் கைவிட வேண்டும். வெடவெடவென்று நடுங்கிக்கொண்டு படுக்கைமீது வியர்தது விறுவிறுததுப் போய் உட்கார்ந்திருப்பதின பயன்?

இத்தனை கம்பித் தடுப்புகளையும பலமான கதவுகளையும் தாணடிக் கொணடு எந்த சூரன்... வீட்டுக்குள் வநது விடப் போகிறான்? நாறகாலி கைமீது போட்டிருந்த துண்டை எடுதது முகத்தில வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டாள். மின விளக்கைப் போட்டாள். அவிழ்ந்து தொங்கிய கூந்தலை அள்ளி முடித்துக்கொண்டு புடைவையைச் சீராக்கிக் கொண்டாள். எதற்கும் இருக்கட்டும் என்று கையில் டார்ச்சை எடுத்துக கொண்டு மெல்ல கதவைத் திறந்தாள்.

மறுபடியும் நெஞ்சு பயத்தில் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. ஒரு சமயம் வீட்டுக்குள் நுழைய முயது

கிறவன் பெரிய கூட்டத்தோடு வந்திருக்கிறானோ... அப்படியிருந்தால...?

தலைக்கு மேல் வெள்ளம் ஓடுகிறது. சாண் என்றால் என்ன? முழம் என்றால் என்ன? இப்படி பயந்து நடுங்கினால்? கடிந்து கொண்டு நடை விளக்கைப் போட்டாள். சுற்றிலும் தன்னையே கண்களை ஓட விட்டாள். யாரையும் காணவில்லை.

சாப்பாட்டறை முன் அறை விளக்குகளை ஏற்றினாள். வீடு முழுவதும் பளிச்சென்று விளக்கு எரியத் தொடங்கினால்...தோட்டத்தில் மறைந்து கொண்டு உள்ளே புக முயலும் அவன் பயந்து கொண்டு ஓட்டம் பிடிக்கலாம் அல்லவா?

வீட்டுக்குள் யாரோ இருப்பதின் அறிகுறி...விளக்கு வெளிச்சம்... நடை குளியலறை சமையலறை எல்லா விளக்குகளையும் ஏற்றியாகி விட்டது .. நடையைத் தாண்டி பின் வராந்தாவுக்கு மெல்ல வந்தாள். அவற்றிலிருந்து ஸ்விச்சைத் தொடுவதற்குள் மீண்டும் ஒரு பெரிய அதிர்ச்சி.

யாரோ கனமாக மூச்சுவிடும் சப்தம். வெகு அருகில் யாரோ நிற்பது போன்றதொரு மக்கல் வாசனை மூக்கில் மோதுவதை உணர்ந்து வெலவெலத்துப் போனாள்.

எங்கேயோ சுவரில் ஆணி அடித்தால்கூட தலைமேல் அடிப்பதுபோல் இரவில் சப்தங்கள்... பிரமையை யூட்டுவது வழக்கம். எங்கேயோ ஒரு பூனை தோட்டத்தில் நகரும் சப்தமாக இருக்கலாப். 'சே' ஆனாலும் இப்படியா பயந்து தொலைப்பது?...துணிவைத் திரட்டிக் கொண்டு விளக்கைப் போட்டாள்.

மின்விசை தாக்கியதைப் போன்றதொரு அதிர்ச்சி.

மாதக்கணக்கில் தண்ணீரையே பார்த்திராத அழுக்குப் பிடித்த ஜீன்ஸில்... நிறம் தெரியாது. உருமாறிப் போயிருந்த ஸ்போட்ஸ் ஷர்ட்டில் முகம் முழுவதும் தாடியும் மீசையும் காடாக வளர்ந்து நிற்க, தலைமுடி சிங்கப்பிடரியாக கழுத்தில் புரள ஒரு வாலிபன் வாட்டசாட்டமாக ..பின் பக்கத்துக் குளியலறை வாயிலில் நின்றுகொண்டிருந்தான்.



இது என்ன அவன் கையில் பளபளவென்றதொரு கத்தி . கண்களில் கொலை வெறி?

எப்படி வந்தான் உள்ளே?...கணப்பொழுதில் கண்டு கொண்டு விட்டாள், வீட்டைச் சீர் செய்த காண்டிராக்டர் கரடியாக கத்தியபோது கேட்கவில்லை... பின் பக்கத்து குளியலறையில் உள்ள வெண்டிலெட்டர்..., அதற்கு என்னத்துக்கு கம்பித் தடுப்பு...கண்ணாடி மட்டும் போதும் அத்தனை உயரத்திலிருந்து எவன் உள்ளே குதித்து வீட்டுக்குள் வருவான்?

எங்கே பார்த்தாலும் கம்பியைப் போட்டு அடைச்சுக் கொண்டு வீட்டை ஏன் சிறைச்சாலையாக மாத்திக்கணும்?

வீடு_ நீட்டாக அழகாக இருக்க வேண்டாமா? அவள் தடுத்துக் கூறியதின் பதில?

அந்த தாடி மீசைத் திருடன்...வெண்டிலேட்டர் உயரத்துக்கு வெளிக் குழாய் மூலம் ஏறி...கண்ணாடியை உடைத்துவிட்டு தாராளமாக ஒரு ஆள் புகக்கூடிய அகலத்தில் இருந்த அதன் வழியே உள்ளே குதித்து...சும்மா சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டு கத்தியுடன் தயாராக நிற்கிறானே பாவி! ..

'யார் நீ?...' கேட்க நினைத்த வார்த்தைகள் தொண்டைக் குழியில் அடங்கிப் போயின.

''கிழவி! சத்தம் போட்டியோ . ஒரே சதக்... லேலையை முடிச்சுடுவேன் .. வாயைத் திறக்காதே. உம், திரும்பு .. உள்ளே போ... நான் சொன்னபடி செய். இல்லே... இப்பவே ஒரே குத்தில் காரியத்தை முடிச்சுட்டு மத்ததை நான் கவனிச்சுப்பேன்'' அடிக்குரலில் அவன் அதட்டிய போது...

வாழ்க்கையில் முதன் முதலாக கத்தியும் கொலை வெறியுமானதொரு திருடனை பாதி ராத்திரி வேளையில்... தன்னந் தனியே சந்திக்க நேர்ந்த அனுபவம் தந்த அதிர்ச்சியில்...ஆடிப்போனாள் அவள்.

## 4

மூச்சு முட்டிவிடும் ஒரு பயங்கர உணர்வில் சிலையாக சில நிமிடங்கள் அசைவற்று நின்றுகொண்டிருந்தாள் 'ம்! பின்னாலே நகரு!...கூச்சல் போட்டியோ ஒரே சதக்... பீரோ சாவி எங்கே..? எடுத்துத் திற...நகை—பணம் எல்லாத்தையும் கிடுகிடுன்னு எடுத்துக் கொடு... டெலி போனில் யாரையாவது கூப்பிடலாம்னு தப்புக் கணக்குப் போட்டியோ?'...எரிச்சலோடு அடிக்குரலில் அதட்டினான் வந்தவன்,

திடீரென்று துணிச்சல் ஆவேசமாக அவளுள் எழுந்தது. 'தெரியும் நீ டெலிபோனை துண்டிச்சுட்டு உள்ளே வந்திருக்கே. ரொம்பக் கெட்டிக்காரன்தான் ஆனால் ஏமாந்துட்டே.''

''என்ன ஏமாந்துட்டேன்? பேசிப் பொழுதைக் கழிக்கலாம்னு என்னை இப்போ நீ ஏமாத்தப் பார்க்கிறே கிழவி!'' சீறினான் அவன்.

யாரையும் எப்பவும் எதுக்கும் நான் ஏமாத்தினதில்லே. நீ எதிர்பார்த்துண்டு வந்த காசு—பணம்.. நகை எதுவும் இந்த வீட்லே கிடையாது . அதனாலே,

''எல்லாம் பொய் ஆப்பிரிக்காவிலிருந்து குடியேறி யிருக்கேன்னு கடைத்தெருவு வரை சங்கதி தெரிஞ்சிருக்கு' வைரம், தங்கம் எல்லாத்துக்கும் பிரசித்தமான நாடு அது.



வெறுங்கையோட வந்து இத்தனை பெரிய பங்களாவிலே நீ தனியே உட்கார்ந்திருக்கிறதை நம்பச் சொல்றயா உம்... நகரு... உன் பின்னாலேயே நான் கத்தியோட வருவேன்... பேசாம சாவியை எடுத்து பீரோவைத் திற...

''தங்கம், வைரம் எல்லாம் நிறைஞ்ச நாடுதான் நான் இருந்தது. ஆனால் அதுகளை நாம்போய் கூடையிலே அள்ளிக்கொண்டு வந்துவிட முடியாது. பாடுபட்டு நெற்றி வியர்வை விழ உழைச்சாத்தான் அந்த பொருள்களை வாங்க முடியும்?''

''கதைவுட்டுண்டு பொழுதைக் கழிக்காதே. எனக்குக் கோபம் வந்தா என்ன ஆகும் தெரியுமா?''

''உனக்குத்தான் தீமை. வீட்டையும் என் தனிமையை யும் கணக்குப் போட்டுக் கொண்டு உள்ளே வந்திருக்கே. இதுக்கு மேலே தப்பு செஞ்சா நீதான் கஷ்டப்படுவே ''

''தன்னந்தனியா இருந்துண்டு கிழவி! உனக்கு ரொம்ப துணிச்சல்தான்.

''நீ கேட்கிற வைரம், தங்கம், காசு இதுகள் எல்லாம் எங்கிட்ட இப்போ கிடையாது. இருக்கறதில் மிச்சம் இந்த துணிச்சல்தான். என்னைக் கொன்னுட்டதாலே உன் பிரச்னை தீர்ந்திடாது. பெரிசா பூதாகாரமாகத் தொடரும்'' பேசிக்கொண்டே பின்னால் நகர்ந்தாள். கத்தியைப் பிடித்த படி கூடவே நகர்ந்த அந்த வாலிபனின் முகத்தை நடையில் பிரகாசமாக இருந்த விளக்கொளியில் பார்த்தபோது அவள் மூளையில் ஒரு நினைவு மின்னலடித்தது.

காடாக வளர்ந்து விட்டிருக்கும் மீசை தாடியை மழித்து விட்டு அந்தக் கண், மூக்கு, வாய் இவைகளை மட்டுமே அந்த முகத்திலே வைத்துப் பார்த்தால்... ஆமாம் இவனை எங்கேயோ பார்த்து இருக்கிறோமே...எங்கே.

விடுவிடு என்று மூளை செயல்பட்டது. நினைவுகள் அடித்தளத்தினின்று புரண்டு கிணற்றுக்குள்ளேயிருந்து...

மிதந்து மேலே வருவது போல்...நினைவு பளிச்சிட அவள் மனதில் ஒரு படபடப்பு அதிகமாகியது.

அவள் கணக்கு ஆசிரியையாக பல ஆண்டுகள் வேலை பார்த்தவள். நன்றாக விவரங்களைப் பத்திரமாக இருத்திக் கொள்ளும் கூர்மையான ஞாபக சக்தி ஏராளம். இந்த வயதிலும் அதற்கு குறைவிருக்கவில்லை.

தொடர்ந்து...இரண்டு நாட்களுக்குமேல் நாளேடு ஒன்றில் அந்த முகத்தை அவள் பார்த்திருக்கிறாள். ஆமாம் நன்றாக ஞாபகம் வருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னர். மாத முதல் ஞாயிறு வெளி வந்த நாளேடு ஒன்றில்—'சித்தார்த் என்ற பி.ஏ, பட்டதாரி இருபத்து மூன்று வயது இளைஞன் இந்த மாதம் இரண்டாம் தேதியிலிருந்து காணவில்லை, வீட்டைவிட்டு வெளியேறும் போது ''நீல ஜீன்ஸ்-வெள்ளை ஸ்போர்ட்ஸ் ஷர்ட்டுடன் வெளியேறினவன். மேலே காணும் புகைப்படத்தில் உள்ள வாலிபனைக் கண்டவர்கள் தயுவு செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே தகவல் கொடுக்கவும். தொலைபேசி எண்...''

அடுத்த நாள், அந்த பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்திருந்தது.

''சித்தார்த்! மன்னி, சதா உன்னை நினைத்துப் பார்க்கிறாள். இந்த அதிர்ச்சி உன் வயதான தாத்தாவின் உடல் நிலைக்கு ஆகாது என்பது தெரியும் நடந்ததையெல்லாம் மறந்து விடுவோம். விரைவில் வீடு வந்து சேர்-அண்ணா.''

படித்த வாலிபன் இப்படித் திருடனாக—கொலை செய்யவும் துணிந்தவனாக மாறியதன் காரணம்?

''கிழவி! என்ன முழிக்கிறே? நட சீக்கிரம். சாவியை எடு: பீரோவைத் திற... மீனம் மேஷம் பார்த்துண்டு நிக்காதே போ.''



அவள் மௌனமாக முன்னேறி நடந்தாள். படுக்கையறைக்குள் புகுந்து தலையணை அடியிலிருந்த சாவிக் கொத்தை எடுத்து பீரோவைத் திறந்தாள்.

பேராசையில் கண்கள் பளபளக்க அவளது பின்னால், கழுத்தின் மீது மூச்சு விட்டுக் கொண்டு நின்றான் அவன். சாவியைச் சுழற்றித் திறந்து பீரோவின் கதவுகளை அகலமாக்கினாள். உள்ளே ஒரு தட்டில் சில பட்டுச் சேலைகள், சில நூல் சேலைகள், இனனொரு தட்டில் சில பத்து ரூபாய் நோட்டுகளும், கொஞ்சம் சில்லரையும் காணப்பட்டன.

''லாக்கரைத் திற...'' என்றான் ஏமாற்றத்தைத் தாளாத கோபத்துடன். லாக்கரில் ஒரு சிறு நகைப்பெட்டி இருந்தது. அதை வேகமாக இழுத்து அவனுடன் திறந்தவனுக்கு ஏமாற்றம். அதற்குள் மிகவும் பழுதடைந்ததொரு கைக்கடிகாரம் தோல் பட்டை மீது லேசாகப் பச்சை வண்ணத்திலே பூஞ்சக்காளான படர்ந்திருந்தது. ''நகைகள் எல்லாம் எங்கே? எடு! குப்பைத் தொட்டியில் போட வேண்டிய இந்த ஹைதர் காலத்து ஓடாத ஓட்டைக் கடிகாரத்தை லாக்கரில் வச்சுப் பூட்டணுமா?...எங்கே நகைகள்!'' மிரட்டினான்.

''இந்தக் கடிகாரம்தான் எனக்கு வைரம்—தங்கம் எல்லாத்துக்கும் மேலான பெரிய சொத்து. இது என் கணவர் முதன் முதல் வேலைக்குப் போய் சம்பளம் வாங்கின போது—அதில் வாங்கிப் போட்டுக் கொண்ட கடிகாரம். உழைப்பால் உயர்ந்தார் என் கணவர். அந்த நினைவுக்காக இதை நான் பொக்கிஷமாகப் பாதுகாக்கிறேன். அதில் என்ன தப்பு?''

''தொலை...அது உன் இஷ்டம்...நகைகள் ஏதாவது இருந்தா சீக்கிரம் மரியாதையா கொடுத்துடு.''

''உண்மையா என்கிட்டே நகைகள் அதிகம் கிடையாது கழுத்திலே நான் போட்டுண்டு இருக்கற இந்த லேசான

செயின், கையில போட்டிருக்கிற இரண்டு வளையல்கள். காதிலிருக்கிற முத்துத் தோடு...இதுகளைத் தவிர என் கிட்டே வேற நகைகள் கிடையாது.''

''என்ன கதை இது? தங்கம் வைரம் கொழிக்கிற நாட்டிலிருந்து வந்துவிட்டு, பஞ்சப் பாட்டு பாடறியா?''

''எனக்கு நகைகள் மேல் மோகம் கிடையாது. நான் எப்பவும் எளிமையாக இருக்க ஆசைப்பட்டவள். என்மேலே இப்ப உள்ள நகைகளைக் கழற்றி வைக்கிறேன். இந்தப் பீரோவில் இருக்கிற கொஞ்ச பணத்தையும், துணிமணிகளையும் எடுத்து வைக்கிறேன். டிஸ்பிளே காபினெட்டில் இருக்கற கண்ணாடி டம்ளர்கள், பீங்கான் சாமான்கள், ரேடியோ, டேப்ரிக்கார்டர் எல்லாத்தையும் வேணுமானாலும் எடுத்துக்கோ. நகைகளுக்கு அவசரமா அதிக விலையில் வித்தால் ஒரு நாலாயிரம் ருபா கிடைக்கலாம். மத்த சாமான்கள் உபயோகிக்கப்பட்டவை. அதனால் அதிகம் விலை போகாது. ஒரு நாலாயிரம் ருபாய்க்கு ஒரு கிழவியைக் கொலை செய்தால் உனக்குத்தான் தீமை.''

'' அலப்பையில் அந்த வயசான தம்பதிகளைக் கொன்ன அந்த மூணு வெளி நாட்டுப் பசங்களுக்கு நேர்ந்த கதிதான் உனக்கும் நேரும் ''

''மூணு பேருக்கும் ஆயுள் தண்டனை கிடைச்சிருக்கு.

படிக்க வந்த பசங்களுக்கு பாதை தவறியதால் என்ன கிடைச்சிருக்கு பார்த்தியா? உன்னைப் பார்த்தா படிச்சவனாட்டம் இருக்கு. நீயும் அந்த மாதிரி தப்பு செய்யப் போகிறாயா?'.

''பசி வந்தாப் பத்தும் போகும் என்று கேள்விப் பட்டிருப்பியே கிழவி!'' சொல்லிக் கொண்டே கையை நீட்டி அந்தப் பத்து ருபாய் நோட்டுகளை எடுத்துப் பாண்ட் பைக்குள் திணித்துக் கொண்டான்.



''பசி நமக்கு மட்டும் வரதில்லை. மிருகங்களுக்குக்கூட வரும்.'' புலி பசித்தும் புல் தின்னாதுன்னு'' என ஒரு பழமொழி இருக்கு. அதை நீ கேட்டிருக்கியோ? கேவலம். ஒரு மிருகத்துக்குக்கூட பசி வந்த போதிலும் என்ன ஆகாரம் சாப்பிடணும்னு ஒரு தாரதரம் இருக்கு. படித்த பட்டம் பெற்ற வாலிபப் பசங்க வேலை கிடைக்காம திரியும்போது பசி வந்ததும். சாக்கடையிலே கிடைக்கற ஆப்பிளை எடுத்து சாப்பிடறதையும், கத்தியைக் காட்டி என்னைப் போல வயசானவங்களைக் கொலை செய்ய விரும்பறதையும் என்னால் ஏற்கவே முடியலை.''

''போதும் உன் லெக்ச்சர். வாயை மூடு கிழவி... எனக்கு கோபம் வந்தால்...'' சீறினான் அவன். பீரோவை எரிச்சலுடன் இடது காலால் உதைத்து மூடினான்.

''உன்னைப் போல வாலிபப் பசங்களுக்கு வாத்யாராக வேலைப் பார்த்திருக்கேன். அந்தப் பழக்கத்திலே என்னையறியாம அறிவுரை தானே வர்றது... ஒண்ணு சொல்ல விரும்பறேன் '—

''நகைகளை பாங்க் லாக்கரில் வச்சிருக்கேன்னு தானே சொல்லப் போறே?''

''உனக்கு ரொம்பப் பசியா இருக்குன்னு தெரியறது முதல்லே கொஞ்சம சாப்பிடேன்.''

''மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து ஏமாத்தலாம்னு பார்க்கிறியா?''

''உனக்கு ஏன் இப்படி புத்தி கோணலா போறதே தெரியலை. நீ வேண்டியதை தாரளமா எடுத்துண்டு போ—முதல்லே சாப்பிடு. என்னை நம்பாட்டா நான் தூ நிக்கறேன். நீயே ஒரு தட்டை எடுத்து வச்சிண்டு பிரிஜ்ஜிலே இருக்கிற கொஞ்ச சாதத்தையும் தயிரையும் போட்டுண்டு...சாப்பிடு தொட்டுக்க...அதிலே ஒரு கரண் வத்தக் குழம்பு வச்சிருக்கேன். அதையும் எடுத்து போட்டுக்கோ!...''

உதடுகளை நாவால் தடவிக் கொண்டான் அவன். ''அந்த மூலையிலே அசையாம அப்படியே நில்லு.' உத்தரவிட்டான்.

அலமாரி தடுப்பிலிருந்த ஒரு பீங்கான் தட்டை எடுத்து மேஜை மேல் வைத்தான். பிரிட்ஜைத் திறந்து முன்னால் தெரிந்த ஸ்டீல் பாத்திரங்களில் இருந்த சாதம்—தயிர் இரண்டையும் எடுத்தான்—கிண்ணத்திலிருந்த குழம்பையும் எடுத்து எல்லாவற்றையும் தட்டிலே கொட்டிக் கொண்டான். பிரிட்ஜை மூடிவிட்டு சாப்பிட நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

'வாஷ் பேசின் மூலையிலே இருக்கு—சோப்பும் துவாலையும் இருக்கு முதல்லே கையை அலம்பிக்கோ ஒரே அழுக்கு''

'நீ பெரிய தொண தொணப்புக் கிழவி...சனியன்...'' சொல்லிக் கொண்டே அவன் கோபத்துடன் கத்தியை மடக்கிப் பாண்ட் பையில் போட்டுக் கொண்டு...மூலையிலிருந்த வாஷ் பேசினில் அவசரமாகத் தன் கைகளை சோப்பு தடவிக் கழுவிக் கொண்டான்.

கரேலென்று சோப்பு நுரையுடன் வெள்ளை பேசினில் விழுந்த அழுக்கு நீரைப் பார்த்து சிரித்தாள் சியாமளா. ''கைகழுவி பல நாள் ஆச்சு போல இருக்கு.'' கேட்டாள்.

''குளிச்சுக்கூட ரொம்ப நாளாச்சு. அதுக்கு இப்போ என்ன செய்யப்போறே? உன் கிளாசிலே படிக்கிற மாணவனா நான் உங்கிட்ட பயந்துண்டு குளிக்கப் போகணுமா...'' நீதான் இப்ப சத்தியா என்னைப் பார்த்துப் பயந்துண்டு சும்மா இருக்கணும்: பேசாதே-என் கோபத்தைத் தூண்டாதே...''

தயிரையும் சோற்றையும் பிசைந்து வாயில் ஒரு பிடி அள்ளிப் போட்டுக் கொண்டான் காரசாரமாக இருந்த வத்தல் குழம்பை ருசித்து சாதத்துடன் விழுங்குமுன் புரை ஏறிக்கொண்டு விட்டது.



''இந்த மூலையில் உன் உத்தரவுபேரில் அசையலாமா ஜலம் வச்சுண்டு சாப்பிட நீ மறந்துட்டே'' சொல்லிக் கொண்டே அவள் விர்ரென நடந்து பிரிஜ்ஜைத் திறந்தாள். தண்ணீர் பாட்டிலை எடுத்து மூடியை நகர்த்தி மேஜை மேல் அவன் முன வைத்தாள்.

சட்டென்று பாட்டிலை எடுத்து தண்ணீரைக் கடகட வென்று குடித்தான்...தன் தலையை அவள் தட்டுவதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினான். இதெல்லாம் என்ன, நாடகம்? என்கிட்ட இருக்கிற கத்தியைப் பிடுங்கிக்க செய்யற சூழ்ச்சி?...'' அதட்டியவன் கண்கள் அந்த இரு படங்களை வியப்புடன் பார்த்தன.

ஆமாம்...இவர்கள் யார்?

முதல் நாள் அவள் ஆணி அடித்து அருகருகே... சீராக மாட்டியிருந்த புகைப்படங்களை அவன் மீண்டும் வியப்புடன் பார்த்தான்.

'இது என் காலஞ்சென்ற கணவரது படம். அடுத்ததாக இருக்கிறது என் ஒரே மகனின் படம். பத்து வயது பையனா இருந்தபோது வந்த காய்ச்சலில் போயிட்டான். அவன் இப்போது இருந்தா ஏறக்குறைய உன் வயசிருக்கும். ஏன்னா, அவன் எனக்கு பிறக்கமாட்டானான்னு நான் ஏங்கி தவமிருந்து...நாள் கழிச்சுப் பிறந்த அருமைப் பிள்ளை ஒரே ஒரு மகன். அதனாலேயோ என்னவோ உன்னைப் பார்த்ததும் என் தூய மனம் வேதனைப்பட்டது. இப்படி கத்தியும் கையுமா...கொலை வெறியோட ஊரான் வீட்டுக்குள்ளே திருடனா நுழைஞ்சு நிக்கறதை உன் அம்மா பார்த்தால் மனம் எவ்வளவு வேதனைப்படும்?''

''இந்த செண்டிமெண்டல் நான்சென்ஸுகளைச் சொல்லி என்னைக் குட்டைக் குழப்பறியா? கிழவி...நீ பலே கெட்டிக்காரி'' வேகமாகத் தட்டைக் காலி செய்தான்.

"வேலையைத் தேடிண்டு, பசியைப் பொறுக்காது ஓ இப்படி எத்தனை நாள் அலைஞ்சிருக்கியோ? எனக்குத் தெரியாது. என்னை இப்ப சத்தியமா உன் அம்மாவா பாவிச்சுக்கோ...சொல்றதைக் கேளு, நீ அந்தப் படுக்கையிலே படுத்துண்டு நிம்மதியா கொஞ்ச நேரம் தூங்கு."

"பேஷ்! நல்ல யோசனை. நான் தூங்கறச்சே ஓசைப் படாம நீ வெளியில் ஓடிப் போலீசைக் கூப்பிட்டு என்னைப் பிடிச்சுக் கொடுக்கவா?"

"உனக்கு சந்தேகம் இருந்தா...என்னைக் கட்டிப் போட்டுட்டு... நீ தூங்கு. இதோ பார் அப்பா! என்னைப் பொறுத்தவரையில வாழ்க்கையில் எனக்கு பயமில்லே. உன் கையால அதை அடையணும்னு விதியிருந்தால் ஆகட்டும். ஆனால்...யார் பெத்த பிள்ளையோ, நீ படிச்சிருக்க. பார்த்தா புத்திசாலியாத் தெரியறே. நீ என்னை கொன்னுட்டு கொலை குற்றத்துக்குத் தண்டிக்க படறதை நான் விரும்பல்லே... நீ எவ்வளவோ காலம வாழ வேண்டியவன்."

"பிரசங்கம் பண்றே... போதும்" "உண்மையைச் சொல்றேன்... யோசிச்சுப் பார். விடிஞ்சா வியாழக்கிழமை. விடியற்காலை வேலைக்காரி பால் பையனோடு வந்துடுவா. கொஞ்ச நேரத்திலே எனக்கு உதவி செய்கிற பெண் வருவா. எட்டு மணி அளவுக்கு மாதத்தின் முதல் வியாழன் தோறும் தப்பாம என்னைப் பார்க்க ஒரு ரிடையர்டு போலீஸ் அதிகாரி வருவார். இது என் வீட்டில் நடக்கும் நித்தியப்படி காரியங்கள். இங்கே நான் செத்துக் கிடக்கிறதப் பார்த்து வேலைக்காரி கூக்குரல் போட்டால் வேடிக்கை பார்க்கவாவது ஒரு கூட்டம் சேர்ந்திடும். பின்னால், போலீஸ் குற்றவாளியை பிடிக்க நாய்கள் எல்லாம் திமுதிமுன்னு வந்திடும்... நீ எந்தனை தூரம் ஓடுவே?"

"நீ சொல்றபடி நான் கொஞ்ச நேரம் தூங்கினால்?"

"மேற்கொண்டு என்ன செய்யலாம்னு நாம் பேசித் தீர்மானிப்போம்."



"போலீசிலே புடிச்சுக் கொடுக்க மாட்டியே?... உன்னை நம்பலாமா கிழவி?"

"சத்தியமா செய்யமாட்டேன்...நீ இந்தத் திருட்டுத் தொழிலை விட்டுப்புட்டு நல்லவனாக ஆகணும்னு உன் அம்மாவைப்போல நினைக்கிறேன்!"

"சரி" சொல்லிக் கொண்டே கை கழுவி விட்டு படுக்கையறை பக்கம் நகர்ந்தான்.

"என்ன நொண்டறயே? காலில் என்ன?" கேட்டாள் அவள்.

"உயரத்திலிருந்து உள்ள குதிச்சதில் லேசா வலது கால் சுளுக்கிக் கொண்டிருக்கு... இப்பத்தான் வலி அதிகமா தெரிகிறது;"

"கணுக்கால் மேலே பூசிக்க ஒரு மருந்து தரேன் பூசிக்கோ வலி குறைய ஒரு மாத்திரை தரேன். சாப்பிட்டுட்டு கொஞ்சம் தூங்கு!"

"நீ ஒரு தாயார்னு சொன்னே...இப்போ டாக்டரா கிட்டியா?" ஏளனமாகக் கேட்டபடி அவன் அலமாரியிலிருந்து எடுத்து வந்த மருந்து புட்டியை வாங்கி கையில் மருந்தை ஊற்றி அடிபட்ட கணுக்காலின் மீது பூசிக் கொண்டான் அவள் கொடுத்த மாத்திரையைத் தண்ணீருடன் விழுங்கி விட்டு படுக்கை மீது விழுந்தான்.

"சத்தியம் செஞ்சிருக்கே ஞாபகம் இருக்கட்டும்?," என்று முனகி விட்டு உண்ட மயக்கம், ஓடி ஒளிந்ததின் அயர்ச்சி, மருந்தினால் ஏற்பட்ட இதம், எல்லாம் ஒருங்கு சேர அரை மணிப்பொழுதில்... ஒரு குழந்தையைப் போல உறங்கிப் போனான்.

# 5

அறைக்கு வெளியே வாயிற்படி அருகே தரைமீது ஒரு ஜமுக்காளத்தை விரித்து அதன் மேல் ஒரு தலையணையைப் போட்டாள் நடு இரவைத் தாண்டிவிட்ட நேரம் ஆனாலும் அந்த பயங்கர அனுபவத்திற்குப் பின்னர் அவளது உறக்கம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது

என்ன வேடிக்கை?..அப்படியும் ஒரு படித்த பையன் தன்னைத்தானே பாழாக்கிக் கொள்வானா? இளமையும் துடிப்பும் இருக்கையில் எதிர்நீச்சல் போட்டு வெற்றிகாண பின்வாங்கும் கோழைத்தனம் ஏன்? அவள் அப்படி ஒன்றும் பரம்பரை பணக்காரர் வீட்டில் பிறந்தவள் இல்லையே?

அடிமட்டத்துவாசியாக அவளது தந்தை, ஸிந்திக்காரர் ஒருவரின் ஜவுளிக் கடையில் கணக்கெழுதிக் கொண்டிருந்தார். நானாவட்டத்தில் கண்களுக்கு அணிந்திருந்த மூக்குக் கண்ணாடிகளின் கூர்மை அதிகரிக்கவில்லை. ஆபத்துக்கென்று வைத்திருந்த ஐநூறு ரூபாயைத் தாண்டாத வறுமை நிலை .. அத்துடன் இரண்டு பெண்களுக்குத் தந்தை.

குடும்பநலத் திட்டம் தீவிரமாக செயல்படாத காலம். மூத்த மகள் துர்காவுக்குப் பின் பிள்ளை பிறக்கும் என்ற நம்பிக்கையில்தான் சியாமளாவை அடுத்த குழந்தையாக அவள் அன்னை சுமந்தாள். அந்த ஆசையில் மண் விழுந்ததும் மனம் ஒடிந்து விடவில்லை: ஐந்து பெண் பெற்ற அரசன் ஆண்டியாகி விடுவான் என்று பெண் குழந்தைகளைக் கண்டு கலங்கிப் போகும் சமுதாயத்தில் இரண்டு பெண்ணுக்கு தந்தையாகி ஏற்கனவே ஆண்டி நிலையிலிருக்கும் அவருக்கு அதிர்ஷ்டம் திடீரென்று பொங்கிவிடப் போவதில்லை ஆனால் பெண்களை எப்படியாவது முன்



னணிக்குக் கொண்டு வந்து விடவேண்டும்... தீவிரமாக எழுந்த இந்த ஆசையால் அவர் தமது இரு மகளையும் தம் பட்டினி பசியைப் பாராட்டாது பட்டதாரிகளாக்கிவிட்டார்.

இருவரும் ஆசிரியர் பயிற்சி மேற்கொண்டு... வேலைக்கமர்ந்தனர். வீட்டின் பொருளாதார நிலை சற்று நிமிர்ந்தது.

பார்க்க நன்றாக இருந்திருக்கிறார்கள். வேலை செய்யும் பெண்கள் என்ற தகுதியில் அவர்களுக்கு விரைவில் திருமணம் நடந்தேறியது.

பெண்களைப் பெற்றாலும் கோபிநாதன் கொடுத்து வச்சவன். வரன்கள் வந்து லபக்கென்று கொத்திக் கொண்டு போய்விட்டான்களே?..அக்கம் பக்கத்தவர் அதிசயித்தனர். திருஷ்டி பட்டுவிட்டது போலும்.

அக்கா துர்கா தலைப் பிரசவத்திற்கு வந்தவள்... வயிற்றில் குழந்தையுடன் வலிப்பு வந்து போய்விட்டாள்.

அந்த அதிர்ச்சி கோபிநாதனுக்கு எமனாக வந்து முடிய, அவர் சில மாதங்களில் தன் மகளைத் தொடர்ந்தார். அம்மா அதற்குப்பின் அதிக காலம் வாழவில்லை, துர்காவின் கணவர் மறு விவாகம் செய்து கொண்டு அமெரிக்காவில் வேலை தேடிக்கொண்டு போய்விட்டார். உறவுச் சங்கிலி அறுந்து போனது. மீதி நின்றவர்கள் தூரத்து உறவினர் மட்டும்தான். இந்த நிலையில்தான் அவள் கணவன் சதாசிவத்திற்கு ஆப்பிரிக்காவில் ஆசிரியர் வேலைக்கு அழைப்பு கிடைக்கப் புறப்பட்டார். கூடச்சென்ற மனைவிக்கும் வேலை கிடைத்தது முப்பது ஆண்டுகளுக்கு மேல் மும்முரமாக வேறு நாட்டிலே வேரூன்றிக்கொண்டு விட்டிருந்தனர். கணவனும் மனைவியும் கைநிறைய சம்பாதித்தனர். சிக்கனமாக சேமித்தனர். பின்னர் பல வசதிகளைப் பணத்தின் மூலம் தேடிக் கொண்டனர்...பிறந்த ஒரே மகனும் சிறு வயதிலேயே மாண்டுவிட்டான் என்ற மாபெரும் துயம்தான் அவர்கள் வாழ்க்கையைச் சிறிது சூன்யமாக்கியது. மற்றபடி

அவர்கள் இருவரும் அன்புடன் மிகவும் நெருக்கமான தம்பதியராக சுகமாகத்தான் வாழ்ந்தனர். சில ஆண்டுகளுக்கொருமுறை தாயகம் வந்து சுற்றுலா செய்து மகிழ்ந்தனர்.

வாழ்க்கையில் முன்னேற அவர்கள் இருவரும் எப்படி கடுமையாக உழைத்தனர் என்பது அவர்களுக்கல்லவா தெரியும்?

அநியாயமான முறையில் பொருள் சம்பாதித்து அவர்கள் திடீர் பணக்காரர் ஆகிவிடவில்லை. ஏணிப்படிகள் மீது மெல்ல ஏறி உச்சியை அடைவதுபோல ..கடும் உழைப்பினால் படிப்படியாக மேல் நிலைக்கு வந்தவர்கள்... அவனிடமிருந்த ஒவ்வொரு பொருளும் பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்ததின் பயனால் அடைந்தவை.

ஆனால் படுக்கை மூது நிம்மதியாக உறங்கும் அந்த சித்தார்த் பணத்தைக் குறுக்கு வழியில் சம்பாதிக்க முயலுகிறானே?...

இளைஞனான அவனுக்கு ஏன் இந்த அவசரம். பரபரப்பு. ஆத்திரம்? நியாயமான முறையில் கிடைத்த பொருளைச் செலவிடும்போது ஏற்படும் நிம்மதியும் சுகமும் அவனுக்குத் தெரியுமா?

இந்த ஆத்திரம் பிடித்த ஆசை பரம்பரைக் குணமா...? வளர்ந்த சூழ்நிலையின் கோளாறா?...

விடியும் தறுவாயில் அலுப்புத் தாள முடியாது அவள் உறங்கிப்போனாள். வாயில் அழைப்பு மணி அழுத்தமாக ஒலித்தது. விழிப்பு ஏற்பட்டு திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். அதற்குள் விடிந்து விட்டதே? என்ற வியப்பில் சமுக்காளத்தைத் தலையணையுடன் சுருட்டி உள்ளே வைத்துவிட்டு எழுந்தாள்.

வேலைக்காரி சின்னம்மாவின் அவசரம்—அழைப்பு மணி மீண்டும் ஒலித்தது.



அவனும் விழித்துக் கொண்டு விட்டான். விருக்கென்று படுக்கை மீது எழுந்து உட்கார்ந்தான்.

''ஏ கிழவி! எங்கே போறே?!' பையிலிருந்த கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டான்.

உதட்டின் மீது ஆள்காட்டி விரலை வைத்து சியாமளா ஜாடை செய்தாள். ''இனிமேல்தான் நீ ஜாக்கிரதையாக இருக்கணும். இப்போ வேலைக்காரி சின்னம்மா வந்திருக்கா. ஏதாவது நீ தகராறு செய்தால் உனக்குத்தான் ஆபத்து. நான் சொல்கிறபடி சத்தமிடாமல் போர்வையை இழுத்துப் போர்த்திண்டு படுத்துக்கோ. சின்னம்மாளுக்குப் பாம்புக்கண். அவ பார்த்துட்டா. நான் எப்படியாவது சமாளிக்கணும். கேட்டா என் ஒன்று விட்ட தங்கை பிள்ளை ஊரிலிருந்து வந்திருக்கான்னு சொல்லப் போறேன். என்னைக் கிழவின்னு கூப்பிடறதை விட்டுட்டுப் பெரியம்மான்னு கூப்பிட பழகிக்க. உனக்கு நல்லது.'' படபடவென மெல்லிய குரலில் சொல்லி முடித்தாள்.

மூன்றாவது முறையாக அழைப்பு மணி ஆத்திரத்துடன் ஒலிக்கவே அவள் துரிதப்பட்டாள்.

''வரேன்! சமையலறையிலிருந்து வரத்துக்குள்ளே என்ன அவசரம்... அப்பப்பா!'' இரைந்து கொண்டே கதவைத் திறந்தாள்.

''என்னம்மா அப்படி தூங்கிட்டீங்க? ஒரு வீடு மட்டுமா எனக்கு இருக்கு'' சிணுங்கிய சின்னம்மா...பால் பொட்டலங்களை மேஜைமீது வைத்துவிட்டுத் திரும்பினாள்.

''சரி! நீ வாசல்லே போய் முதல்ல வேலையைக் கவனி. நான் காப்பி போட்டு வைக்கிறேன்...'' சியாமளா அவளை வாளி, துடைப்பத்துடன் வாசலுக்குத் துரத்தினாள்.

சின்னம்மாளுக்கு எரிச்சல். அவள் செய்ய வேண்டிய வேலையைப் பற்றி அவளுக்குத் தெரியாதா? தனக்குள்ளே

முணுமுணுத்தபடி...விரைவில் வாயிலைப் பெருக்கி நீர் தெளித்துக் கோலம் போட்டுவிட்டு சூறாவளியாக உள்ளே திரும்பி விட்டாள்.

சியாமளா தண்ணீரைக் கொதிக்க வைத்து காப்பித் தூளின்மீது கொட்டி பாலைக் காய்ச்சி காப்பி கலந்து முதல் நிவேதனமாக சின்னம்மாவைத் திருப்தி செய்ய தம்ளரில் ஊற்றி எடுத்து வருமுன் உள் பெருக்கும் துடைப்பத்தை தூக்கிக்கொண்டு கோபாவேசமாக நகர்ந்த வேலைக்காரி... மூடியிருந்த படுக்கையறைக் கதவைத் தொட்டாள். திடுக்கிட்டுப் போனாள். சரக்கு மூட்டைபோல யார் இது படுக்கையில்...?

"அம்மா! உங்க படுக்கையிலே யார் இது?" உரக்கவே கூவிவிட்டாள்.

படுக்கையில் போர்வைக்குள் சித்தார்த் திகிலுடன் நெளிந்தான். சியாமளா விநாடியில் நிலைமையைச் சமாளித்தாள்.

"வரும்போதே நீ வேப்பிலை கட்டிக்கொண்டு வந்தே. சொல்ல முடியலை. அதுக்குள்ளே வாசலுக்குப் போயிட்டே, கொஞ்ச நாளைக்கு முன்னாடி நீ சொன்ன புத்தியைக் கேட்டு என் ஒண்ணுவிட்ட தங்கைக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டிருந்தேன். துணையா என்னோட கொஞ்ச நாள் தங்கியிருக்க தன் மகனை அனுப்பியிருக்கா. பாவம். குழந்தை பஸ்ஸில் நடு ராத்திரி வந்து இறங்கி ரொம்ப களைத்துப்போய் தூங்கறான், அவனுக்கு என் படுக்கையை குடுத்துட்டு நான் நடையிலே ஜமுக்காளத்திலே படுத்திருந்தேன். படுக்கையறையை நான் பிறகு பெருக்கிக்கிறேன். மற்றக் காரியத்தைக் கவனி."

"ரொம்ப நல்ல வேலை செஞ்சீங்கம்மா..." மகிழ்ச்சியுடன் முன்னறையை சுத்தப்படுத்த விரைந்தாள் சின்னம்மா. அடுத்த அரை மணி நேரம் வீடு கிடுகிடுத்தது.



பாத்திரங்கள் தேய்க்கப்படும் சப்தம்...குழாய் நீர் கொட்டும் ஓசை... பின்னாலிருந்த தோய்க்கும் கல்லில் துணிகள் படீர் படீர் என அடிபடும் ஒலி...ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. ஆனாலும் வெளியே தலையைக் காட்ட முடியாத் அவஸ்தையில் போர்வைக்குள்ளே வியர்வையில் புழுங்கிக் கொண்டிருந்தான் அவன்.

சிறிது பொழுதில் சின்னம்மாள் ஓங்கிக் குரல் கொடுத்தாள். "வேலை முடிச்சுட்டேன். நான் வரட்டா?... இன்னிக்கு தங்கச்சி மகனைக் கண்டதும் காப்பி ரொம்ப ஸ்ட்ராங்காவே போட்டுத் தந்தீட்டீங்க" சிரித்தாள்.

"உனக்கு எடுத்து வச்ச சாப்பாட்டை என் தங்கை பிள்ளை சாப்பிட்டதாலே...உனக்கு கொஞ்சம் இட்டிலி எடுத்து வந்து தரவா—சித்த நிக்கிறியா?' சியாமளா தயக்கத்துடன் கேட்டாள்.

"இட்லி துன்ண உட்கார்ந்தா மத்தவூட்டு வேலைகளை என் மருமவளா வந்து செய்வா? போவட்டும் ராத்திரி வேளையிலே பசியோட வந்த புள்ளே தானே சாப்பிட்டுச்சு...என் சோற அது தின்னா பரவாயில்லை... தூங்குதா? இல்லாட்டா புள்ளே எப்படியிருக்குன்னு எட்டிப் பார்ப்பேன். உங்க ஜாடை இருக்கும் எங்கே போவும் அந்த ரத்தம்? உடாதீங்க. அதைக் கெட்டியா பிடிச்சு இங்கேயே உங்களோட வச்சிகிட்டு இருங்க.

சாண் பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளைனாலே தனி மவுசு ஆச்சே... தைரியமா இருக்கலாமே?..." தனது ஆலோசனைகளை அள்ளி வீசிவிட்டு ..அழுத்தமான காலடி ஓசையைக் கிளப்பிக்கொண்டு அவள் கிளம்பினாள்.

வாயிற் கதவு இழுத்து சாத்தப்படும் ஓசை கேட்டதும் போர்வையை உதறிவிட்டு அவன் எழுந்தான்.

கத்தியை பிரித்து கையில் பிடித்துக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

மறுபடியும் ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்து ஜாடை செய்தாள் சியாமளா.

''பல் தேய்ச்சுட்டு முகத்தை அலம்பிண்டு வா...முதல்லே கொஞ்சம் காப்பி தரேன். கொஞ்ச நேரத்திலே ஒரு ஈடு இட்லிக்கு எத்திட்டு மிக விரைவில் சட்னியும் அரைச்சுட றேன். நீ முதல்லே வயத்துக்கு ஏதாவது சாப்பிட்டுட்டு பிறகு மேற்கொண்டு என்ன செய்யலாம்னு சிந்திக்கலாம்.''

''உன் தங்கை பிள்ளைன்னு என்னை இங்கே காம்ப் போடச் சொல்றியா...அதுவும் எனக்கு ஒரு விதத்தில் உதவி தான்.' சிரித்தான் அவன். கையில் கத்தியுடன் குளிய லறைக்குள் நுழைந்தான். அவசரமாக பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு அவன் வருவதற்குள் அவள் தன் பீரோவைத் திறந்து கீழ் தட்டில் இருந்த துணி அடுக்கு களிடையே தேடினாள்

ஞாபகத்திற்கு அவள் தன் கணவரின் இரவு உடையான பைஜாமா ஒரு ஜோடியும் அவர் கோவிலுக்குப் போக உடுத்தும் பட்டுக் கரை வேஷ்டி துண்டு பனியன்...ஷர்ட் இத்தியாதிகளையும் பத்திரமாக வைத்திருந்தாள். அவரு டைய மற்ற உடைகளை அவர் இறந்த பின்னர் அந்நாட்டு முதியோர் இல்லத்துக்கு வழங்கி விட்டாள். பல ஆண்டு களாகி விட்டபோதிலும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்ட அந்த வேஷ்டி சட்டையெல்லாம் பளிச்சென்று இருந்தன.

தன் அன்புக் கணவரின் ஞாபகத்தை உணர்த்த வைத்துக் கொண்டிருந்த அந்தத் துணிகளை அவனுக்குப் பின்னர் யார் மதிக்கப் போகிறார்கள். ஒரு இளைஞனுக்கு அவசரத்திற்கு உதவட்டுமே,புண்ணியமுண்டு' என எண்ணிய படி அவைகளை எடுத்துக்கொண்டு பீரோவை பூட்டினாள்

பல் துலக்கிவிட்டு வெளியே வந்தவனிடம் காப்பி டம்ளரை நீட்டினாள்.



' முதலில் காப்பி சாப்பிடு—புதுசா ஒரு சோப்புக் கட்டி யும் ஒரு துண்டும் தரேன். போய் முதல்லே குளி.''

'குளிச்சிட்டு இதே அழுக்குச் சட்டையைப் போட்டுக்கச் சொல்றியா. கிழவி இதெல்லாம் என்ன ஏற்பாடு...''

''உன்னை சீராக்க நல்ல ஏற்பாடு...தயவு செய்து என்னைக் கிழவின்னு கூப்பிடாதே...''

''பதினாறு வயசுன்னு கூப்பிடட்டுமா...'' கோபமாக அவன் சிரித்தான். காப்பியை வேகமாக விழுங்கினான்.

''நானும் ஒரு காலத்தில் பதினாறு வயசுப் பெண்ணாக இருந்தவள் தான்—பிறக்கும்போதே கிழவியாப் பிறந் துடலை. நீயும் ஒரு நாள் என் வயசை அடைவே. மார்க் கண்டனாக என்றும் இளைஞனாக இருக்கமாட்டே. இப்போ தர்க்கம் பண்ணாதே. சொன்னதைச் செய். பெரியம்மான்னு கூப்பிடு. தேஞ்சுபோயிடமாட்டே. சீக்கிரம் குளிச்சிட்டு சுத்தமா வர வழி பாரு... ஒரு சமயம் என்னைப் பார்க்க அந்த போலீஸ் அதிகாரி திரு. சண்முகம் வந்தாலும் வரலாம்...''

''விடிஞ்சு போச்சன்னு தைரியம். அதனாலே உன் இஷ்டத்துக்கு என்னை ஆட்டிப்படைக்கலாம்னு எண்ணமா?''

''ரொம்ப பேசாதே...போய் குளி...இந்தா சோப்- டவல் வேஷ்டி பனியன் ஒரு ஷர்ட் எல்லாம் எடுத்து மேலே வச்சிருக்கேன்...அதுகளையும் எடுத்துண்டு ஓடு...''

''இதென்ன பெரிய ஷர்ட்...இரண்டு ஆள் பூந்துக்க லாம் போல இருக்கே.''

''ஏதோ கிடைச்சதை போட்டுண்டு இன்னிப்போதைக் கழி...ஷர்ட்டை நாற்காலி மேலே போட்டுட்டு பனியன் வேஷ்டியோட படுக்கையிலே இரு. ரயில் பயணத்துலே ரொம்பக் களைச்சுப் போயிட்டேன்னு வரவாகிட்டே

சொல்விடறேன். நீ போட்டுண்டு இருக்கிற பாண்ட் சட்டை இதுகளை நான் சோப்பு போட்டு தோச்சு காய வைச்சுத்தாரேன்...''

''அதுவரை உன் வீட்டிலே என்னை சிறைப்படுத்தி வைக்கப் போறியா? யோசிச்சு செயல்பட கொஞ்சம்கூட நேரம் தரமாட்டேங்கிறியே?''

''அவசரப்படறியே? இதே அழுக்குத் துணியு!, தாடியும் மீசையுமா வெளியிலே அலைஞ்சா உனக்குத்தானே ஆபத்து; போலீஸ் உன்னைப் பிடித்துக்கொண்டா?''

''என்னை எதுக்கு போலீஸ் பிடிக்கணுமாம்?...''

''எனக்கென்ன தெரியும்!...என் வீட்டுக் குளியலறை வெண்டிலேட்டர் வழியா குதிச்சு கத்தியை காட்டி என்னை மிரட்டினாப்லே... வெளியில நீ என்ன துஷ்ட காரியம் செஞ்சிருக்கியோ...? மழிக்கப்படாத உன் மீசை தாடி சொல்றதே... நீ யாருக்கோ பயந்துண்டு அலையறேன்னு தெரியறதே?''

''வாயை மூடு கிழவி, ரொம்ப பேசறே... உன்னை ராத்திரியே முடிச்சிருக்கணும். இப்போ நிலைமை தலைகீழா போயிட்டது இல்லையா?''

''மறுபடியும் உளறாதே. என்னை முடிச்சிருந்தா இத்தனை நாழி...போலீஸ் உன்னைத் தேடிண்டு ..ஓடி வந்துண்டு இருக்கும். நீ இங்கேயும் அங்கேயும் ஒளிஞ்சு ஒடுங்கியிருப்பே. கத்திரிக்கா, வாழைக்காயை வெட்றாப்பல நினைச்சியா? கொலை செய்யறது அத்தனை சுலபமில்லை.''

''சனியன் இதுகிட்டே வந்து மாட்டிக் கொண்டேன் நான்—'' முணுமுணுத்தபடி அவன் குளியலறைக்குள் சென்றான்.

அவனுக்காக எடுத்து வைத்த ஆடைகளை அவனிடம் கொடுத்துவிட்டு.... பின் கதவைத் திறந்து கொண்டு சென்றாள் அவள். குளியலறை வெண்டிலேட்டர் கண்ணாடி



நொறுங்கி மண்மீது விழுந்து கிடந்தது. அந்த இடத்தில் செருப்புக் காலடிகள் பளிச்சென்று தெரிந்தன. உள்ளே வந்து ஒரு நாளேட்டின் ஒரு பகுதியை எடுத்துச் சென்று உடைந்த கண்ணாடித் தூள்களைப் பொறுக்கி கவனமாக வைத்துச் சுற்றினாள். மண்ணில் தெரிந்த செருப்பு அடையாளத்தைக் கலைத்து...அந்த இடத்தைச் சுத்தம் செய்தாள்—பின்னர், கண்ணாடித் துண்டுகள் அகற்றப்பட்ட காகிதத்தை எடுத்துக்கொண்டு கேட்டைத் தாண்டி வெளியே வந்து...அருகிலிருந்த குப்பைத் தொட்டியில் வீசினாள்.

குளித்துவிட்டு... வெளியே வந்த அவன்— அந்த ஷர்ட்டிலே...மூழ்கி விட்டிருந்ததைக் காண அவளுக்குச் சிரிப்பு வந்தது.

காலைப் பத்திரிகையை அவன் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க, அவள் வேகமாக இட்லிகளை சட்னியுடன் பரிமாறி...காப்பியை கலந்து கொண்டு வந்து அருகில் வைத்து உபசரித்தாள்.

இட்லியைப் புட்டு சட்னியில் தொட்டுக்கொண்டு விழுங்கியபடி அவளை முறைத்தான் அவன்.

''பெரியம்மா! அடுத்தபடி என்ன செய்யணும்... சொல்லித் தொலை. என்னை வேஷம் போட்டுக்க வச்சுட்டே. நடிக்கச் சொல்லிக் கொடு...'' அதட்டினான்.

''நீ என்று ஒருமையில அழைப்பதைவிட்டு, பெரியம்மாவுக்கு உண்டான மரியாதை தந்து நீங்கன்னு அழை... உன் துணிகளைப் போய் வாளியில் போட்டு சோப்பில் ஊற வைச்சு நானே துவைக்கப் போறேன். அந்தப் பெண் வந்து இல்லாத கேள்விகளை கேட்க இடம் கொடுக்கக் கூடாது.''

''எந்தப் பெண்?...'' எரிச்சலோடு கேட்டான் அவன்.

வாயில் அழைப்பு மணி கிணுகிணுத்தது.

''வாசலில் இப்போ வந்து நிற்கிற அந்தப் பெண்... அவள் உன்னைப் பார்க்கறதுக்கு முந்தி நீ ஓடிப்போய் சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு பனியன். வேட்டியோடு படுத்துக்கோ...'' உத்தரவிட்டாள்.

''சனியன்! வசமா வந்து மாட்டிக் கொண்டிருக்கேன்' முணுமுணுத்தபடி அவன் உள்ளே விரைந்தான்.

அழைப்பு மணி மீண்டும் ஒலித்தது,

''சுஜி' சித்த நில்லு, இதோ வந்துட்டேன்'' கூறிக் கொண்டு சோப் நீரில் ஈரமாகி விட்ட கைகளைத் துண்டில் துடைத்துக் கொண்டு விரைந்து சென்று கதவைத் திறந்தாள்.

அதற்குள் அவன் படுக்கையில் போர்வைக்கடியில் சுருண்டு கொண்டிருந்தான்.

26614
434347.

## 6

உள்ளே நுழைந்த சுஜரிதாவுக்கு சட்டென்று ஒரு வித்தியாசம் தெரிந்தது. குளித்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டு காப்பி டிபன் சாப்பிட அவளுக்காக தினமும் தயாராகக் காத்திருக்கும் வழக்கமுடைய சியாமளா, இன்னமும் குளிக்காது இரவு படுத்துறங்கிய சேலையில் அலுங்கிய கூந்தலும், அலுத்துச் சலித்து சோர்ந்த முகமுமாகக் காணப் பட்டாள்.

''மாமி! உங்க உடம்புக்கு என்ன?'' அனுதாபத்துடன் கேட்டபடி, சமையலறைக்குள் நுழைந்த சுஜரிதாவின் கண்களில் அடுப்பு மேடையை ஒட்டியிருந்த சிங்கில்...ஒரு பீங்கான் தட்டும்...ஸ்டீல் டம்ளரும் தெரிந்தன.



''உங்களுக்கு இன்னிக்கு பசிச்சிட்டது போல இருக்கு' சொல்லிக்கொண்டே இட்லி சட்னி பாத்திரங்களை நகர்த்தி வைத்துவிட்டு எச்சில் தட்டைக் கழுவத் தொடங்கினாள்.

மறைப்பதில் பயன் இல்லை; இன்னும் சிறிது பொழுதில் அவளே கண்டுகொள்வாள் என்று உணர்ந்த சியாமளா சட்டென்று சமாளித்தாள்.

''ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு மேல் என் ஒன்று விட்ட தங்கை பிள்ளை ஊரிலிருந்து வந்தான்... அவனுக்கு முதலில் டிபன் காப்பி கொடுத்தேன்...குளிக்கலாம்னு கிளம்பிக் கொண்டிருந்தப்போ, வந்துட்டே. ஒரு காரியம் செய்... நான் வரத்துக்குள்ளே நீ இந்த முட்டைகோசை நறுக்கிக் கறி பண்ணிட்டு, குக்கரை ஏத்தி வை'' என்று வேலை கொடுத்துவிட்டு, பிரிஜ்ஜைத் திறந்து காய்கள் கொண்ட பிளாஸ்டிக் பையைத் தூக்கி வந்து மேடைமீது வைத்தாள்.

'':அப்படியா? அவர் எங்கே? வெளியிலே போயிருக்காரா?'' விடாப்பிடியாக விசாரித்தாள் சுஜி.

''பஸ்ஸில் வந்த சிரமம்— அத்தோட அவனுக்குக் கொஞ்சம் ஜுரம். படுத்துண்டு இருக்கான். ரொம்ப உரக்கப் பேசாதே- அவன் தூக்கம் கெட்டுடும், பாவம் குழந்தை...'' என்று கூறிவிட்டு ஒருக்களித்த நிலையிலிருந்த படுக்கையறைக் கதவை நன்றாக வெளியே இழுத்திச் சாத்திக் கொண்டு குளியலறைக்கு விரைந்தாள்.

சுஜரிதா சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த சமயம், அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு, கொடியில் கிடந்த புடவையைச் சுற்றிக்கொண்டு வாளியுடன் பின் பக்கம் சென்றாள். அவனது ஜீன்ஸ் நீரில் ஊறிக் கனத்துத் தொலைத்தது, எடுத்து அதை அலசிப் பிழிவதற்குள் அவளுக்கு மூச்சு முட்டியது. எத்தனை தடவை நீரில் அலசினாலும் அதிலிருந்து கிலோ கணக்கில் அழுக்கு வந்த

மயமாக இருப்பதைக் காண அலுப்பில் அவள் உடம்பு கூசியது. பாண்ட்டையும் சட்டையையும் கைவலிக்க அழித்திப் பிழிந்து உதறியெடுத்துக் கொண்டு ஓசைப்படாது மாடிக்கு விரைந்தாள். அங்கே திறந்த வெளியில் கட்டப்பட்டிருந்த இரும்புக் கம்பியில் அவைகளை வெய்யிலில் காயப்போட்டு விட்டு படிக்கதவைத் தாளிட்டுக் கொண்டு கீழே வந்தாள். ஏதோ ஒரு திருட்டுக் காரியத்தைச் செய்து விட்டது போல அவள் நெஞ்சு குற்ற உணர்வில் படபடத்தது.

இரவு சரியான உறக்கமில்லாததினால் ஏற்பட்ட சோர்வு, வேண்டாது வந்து தங்கியுள்ள விருந்தாளியினால் ஏற்பட்ட திகில், கனமான அவனது துணிகளைத் தூக்கித் துவைத்துப் பிழிந்தெடுத்ததில் ஏற்பட்ட அசர்ச்சி- எல்லாம் ஒன்று சேர்ந்து கொள்ளவே அவள் தடுமாறிப் போய் விட்டாள்.

சுஜரிதா மேஜையைத் துடைத்து துணி விரிப்பைப் போட்டுக் கொண்டு வந்து தட்டுகளில் பரிமாறிய இட்லியை வழக்கம் போல் உற்சாகத்துடன் சாப்பிட தெம்பில்லாது தொய்ந்து போய் வேண்டா வெறுப்பாக விழுங்கிக் கொண்டிருந்தாள். எந்த நிமிஷமும் அவன் எழுந்துவந்து அவர்கள் இருவரையும் கத்தியைக் காட்டி மிரட்டலாம் என்கிற அச்சம் அவளுள் இருந்தது. உண்மை . ஆனாலும் அனுகிக் கேட்கும்படி சாப்பிட உட்காருமுன் படுக்கையறைக் கதவை லேசாகத் தள்ளி திறந்து வைத்து விட்டு, வேண்டும் என்றே உரத்த குரலில் சுஜரிதா செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி அவனுக்குக் கேட்கும்படி சொல்லிக் கொண்டிருந்தாள். ''நேத்து ராத்திரி சரியான தூக்கமில்லை— அதனாலே நீயே இன்னிக்கு சமையல் பூராவும் கவனிச்சுடு... நான் கொஞ்சம் ஓய்வா இருக்க விரும்பறேன்.'' கூறிவிட்டு கையைக் கழுவிக் கொண்டு சாப்பாட்டறை மீது ஒரு கண்ணும், படுக்கையறை மீது ஒரு கண்ணுமாக ஒரு புத்தகத்துடன் நாற்காலியொன்றில், அமர்ந்து கொண்டாள்.



சமையலறையிலிருந்து பாத்திரங்களின் ஓசையும்— இடையே சன்னமாக எழுந்த இனிய குரலும் அவனது ஆவலைக் கிளப்பின. மெல்ல எழுந்து வந்து கதவைத் திறந்து கொண்டு வந்திருப்பவளைப் பற்றி கணிப்புச் செய்ய விரும்பினான், போர்வையை நீக்கி விட்டு அவன் எழுந்திருக்க முயன்றபோது, வாயில்புறத்தில் கேட்டருகே ஒரு மோட்டார் சைக்கிள் படபடத்துக் கொண்டு நிற்கும் ஓசை கேட்டது.

அவள் சொல்லியிருந்தாள். அவளது பாதுகாப்பில் கவனம் மிகவும் உள்ள நண்பரான ஒரு ரிடையர்டு போலீஸ் அதிகாரி அன்று காலை அவளைப் பார்க்க வழக்கமாக வருவார். முன்னதாகவே எச்சரித்திருந்தான். வெளியே இப்போது தலையை நீட்டினால் அவனுக்குத் தானே ஆபத்து என்ற அச்சத்தில் பற்களைக் கடித்துக் கொண்டு மெல்ல விரலால் அந்த அறையின் கனமான ஜன்னல் திரையை சிறிது விலக்கி விட்டு வெளியே எட்டிப் பார்த்தான்.

வாட்டசாட்டமான ஒரு மனிதன் மோட்டார் சைக்கிளை உள்ளே தள்ளிக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு வராந்தாவை நோக்கி நடப்பதைக் கண்டான்,

பட்டையாக வெளுத்து விட்ட முன் பக்கத்து முடியும், நரை ஓடிய பிரஷ் மீசையும், கனமான பிரேமில் மூக்குக் கண்ணாடி வழியாக, நடந்து வந்து கொண்டிருந்தார். வேலையிலிருந்து ஓய்வடைந்த மனிதர் தான் என்று வயது சொல்லியிருந்தாலும்... அப்பப்பா அவரது நடையில் தெரிந்த போலீஸ் தோரணை அவனை நடு நடுங்கச் செய்து விட்டது.

''அம்மா சௌக்கியந்தானே?'' இடி முழக்கமாக ஒலித்த குரலைக் கேட்டு அவன் பூனையாக போர்வைக்குள் பதுங்கிக் கொண்டான்.

''வாங்கோ!'' வேண்டுமென்றே சியாமளா உரத்த குரலில் அவரை உபசரித்து உள்ளே அழைத்ததைக்

கேட்டு.. அவன் நெஞ்சு பதறியது. வியர்வை ஆறாகக் கொப்பளிக்க போர்வைக்குள் வெந்து போனான்.

"சுஜி! போலீஸ் ஸார் வந்திருக்கார் சூடா ஓவல்டின் கலக்கி எடுத்துண்டு வா..." உத்தரவிட்டு விட்டு அவரை முன் அறையில் அமர்த்தினாள்.

ஷண்முகம் உட்கார்ந்தபடியே கண்களை சுற்றி ஓட விட்டார். "உங்க உடம்புக்கு என்ன? எப்படியோ இருக்கீங்களே?" சட்டென்று கேட்டுவிட்டார்.

சுஜி கொண்டுவந்த ஓவல்பானத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

"உடம்புக்கு ஏதாவதுன்னா உடனடியாகச் சொல்லுங்க நம்ம குடும்ப டாக்டரை உடனே கூப்பிட்டுச் சொல்றேன் தனியா இருக்கிறதினாலே, சிறு காய்ச்சலைக் கூட நீங்க அசட்டை பண்ணக்கூடாது" கூறிக்கொண்டே அவர் டெலிபோனை நெருங்கினார்.

சியாமளா சட்டென்று குறுக்கிட்டாள். "நீங்கள் இங்கே வந்தது ரொம் நல்லதாப் போச்சு. இரண்டு நாளா டெலிபோன் சரியாக இல்லைன்னு கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இன்னிக்கிக் காத்தாலே வெளியே போய்க் கவனிச்சப்போ வெளியிலிருந்து வீட்டுக்குள் வர்ற கம்பி குளியலறை வெண்டிலேட்டர் கண்ணாடி உடைஞ்சிருந்ததை இத்தனை நாளும் கவனிக்காது இருந்திருக்கேன்... இந்த மாதிரியான சமயத்தில் இதையெல்லாம் பழுது பார்க்காது விட்டால் எனக்குத்தானே ஆபத்து..."

ஓவலை ஒரே வாயில் குடித்துவிட்டு ஷண்முகம் விருட்டென்று எழுந்துகொண்டு வீட்டைச் சுற்றி பார்வையிடக் கிளம்பிவிட்டார்.

மாடிப் பக்கம் அவர் போகாமல் இருக்க வேண்டுமே என்று சியாமளா கவலைப்பட்டாள்.



ஜன்னல் அருகே அவரது கனமான செருப்பு சத்தம் கேட்டதும் அவன் போர்வைக்குள் பயத்தில் திணறிப் போனான்.

மெல்ல மெல்ல பேச்சைக் கொடுத்து அந்தக் கிழவி ஒரு சமயம் அவனை அந்த ஓய்வு பெற்ற அதிகாரி கையில் ஒப்படைத்துவிடுவாளோ? உடம்பு, பிடியாக சுருங்கிவிட்ட உணர்வில் அவன் துவண்டு கொண்டிருந்தான்.

மறுபடியும் முன்னறையில் அவர்களது பேச்சுக் குரல் கேட்டது.

"இது யதேச்சையா உடைந்த கண்ணாடி போலத் தோணலையே? யாரோ வீட்டுக்குள்ளே நுழைய முயன்றிருக்காங்க. அருகிலிருந்த மழைக்குழாயைக் கவனிச்சீங்களா? வெள்ளை வெளேரென்று சாயம் பூசப்பட்ட குழாய் மீது இங்குமங்கும் மண் திட்டுத் திட்டாகத்தெரிகிறது. டெலிபோன் கம்பிகளை யாரோ துண்டித்தாற் போலத்தான் தோன்றுகிறது. நீங்க இனி ரொப்ப ஜாக்கிரதையாக இருக்கணும். எதுக்கும் டெலிபோன்காரர்களுக்குத் தெரிவித்து உடனடியாக டெலிபோனைச் சரி செய்ய ஏற்பாடு செய்கிறேன். எனக்குத் தெரிந்த ஒரு கட்டட வேலைக்காரரிடம் பேசி இன்னிக்கே வெண்டிலேட்டருக்கு புது கண்ணாடி போட்டு அத்தோடு கனமான இரும்புத் தடுப்பை உள் பக்கம் வச்சு அடிக்கச் சொல்றேன். முதல் விவகாரமாக நான் இன்னிகரு இந்த வேலையை கவனிக்கப் போறேன்" கூறிவிட்டு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து பின்னர் புறப்பட்டார்.

அதற்குப் பின்னர் கொஞ்ச நேரத்தில் டெலிபோன் ஆட்கள் வந்துவிட்டனர். பேசுவதும் மணியடிப்பதுமாக வேலை நடந்தது...அவனால் வெளியே தலைகாட்ட முடியவில்லை.

அதற்குப் பின் வந்த கட்டட வேலையாள் உதவி யாளுடன் கத்திப் பேசியபடி காரியங்களைக் கவனித்தார். கண்ணாடியைப் பதித்து விட்டு சாப்பாட்டுக்குப் பின் கம்பித் தடுப்புடன் வருவதாகக் கூறிவிட்டுப் போனார்.

சுஜி அதற்குள் சமையலை முடித்து விட்டிருந்தாள்.

ஒரு தட்டில் சோற்றைப் போட்டு, குழம்பு, ரசம் இத்தி யாதிகளைக் கிண்ணங்களில் வைத்து எடுத்துக் கொண்டு சியாமளா அறைக்குள் வந்தாள்.

போர்வையை வழித்தெறிந்து விட்டு கோபத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தான் அவன்.

"என்னை இங்கேயே சிறைப்படுத்தி வச்சுக் கொன்று விட நினைப்போ. இப்ப கூட என்னால் உன்னைத் தீர்த்துக் கட்டிட்டு வெளியேற முடியும்" சீறினான் மெல்லிய குரலில்.

இதுவரை நடந்த அத்தனையும் கேட்டுக் கொண்டு அறைக்குள்ளேயே அடைந்து கிடக்க நேர்ந்ததில் ஆத்திரம் அவனுக்கு.

"அசடுபோல பேத்தாதே. தங்கை பையன் வந்திருக் கான்னு நான் வேலைக்காரியிடமும், வேலைக்கு உதவும் அந்தப் பெண்ணிடமும் சொன்னேன். சண்முகம் ஸார் கிட்ட சொல்லலை, ஏன்னா அவர் சட்டுனு நம்பி ஏமாந்து விட மாட்டார். தமது ஊகத்தால் உன்னை யார்னு தெரிந்து கொண்டு ஆவன செய்ய ஆரம்பித்திருப்பார். உன்னை இப்போ நான் ஓர் ஆபத்திலிருந்து சாப்பாத்தியிருக்கேன். ஞாபகமிருக்கட்டும். உனக்கு ஜுரம்னு அந்தப் பொண்ணு கிட்டே சொல்லியிருக்கேன்—சத்தம் போடாம இதை சாப்பிட்டுட்டு—உள்ளேயிருக்கும் வாஷ் பேசினிலே கையை அலம்பிண்டு சமத்தா படுத்துக்கோ. இந்த ஓய்வு ஓரளவு உனக்கு மிகவும் தேவை..."

"சோத்தைப் போட்டு துரத்தியடிக்க முடிவா?"



"அப்படி முடிவு செய்தா...சோற்றை ஏன் செலவழிக் கணும். ஷண்முகம் சார்கிட்ட பிடிச்சுக் கொடுத்துட்டு நிம்மதியா இருக்கலாமே. முதல்லே சொன்னதையே திருப்பிச் சொல்றேன்—நீ ஒரு நல்ல பையனாக மாற ணும்னு நான் ஆசைப்படறேன்."

"உன் ஆசையில் மண் விழ" பற்களைக் கடித்தபடி அவன் தட்டிலிருந்த சாப்பாட்டை பசி ஆசையுடன் உற்றுப் பார்த்தான். தட்டை அருகில் இழுத்துக் கொண்டான்.

"அதுதானே ஆகிறதில்லை. போய் முதல்லே கையை அலம்பிண்டு வா. ரொம்ப கெட்ட பழக்கமெல்லாம் கத் துண்டு இருக்கே. சாப்பிடு, படுக்கை மேலே சாதத்தை குழந்தையாட்டம் இறைக்காதே— தட்டை எடுத்துண்டு நான் போகணும். அதனாலே சீக்கிரம் ஆகட்டும்" கொஞ்சம் அதட்டலாகச் சொன்னாள்.

"உன் கை இப்போ மேலே இருக்கு. என்னை அதட்டி உருட்டி மிரட்டிப் பார்க்கிறே" முணுமுணுத்தபடி அவன் கைகளைக் கழுவிக் கொண்டு அவசரமாக, குழப்பத்துடன் சாதத்தில் சாம்பாரை விட்டு பிசைந்து வேகமாக திருப்தி யுடன் சாப்பிட்டான்.

"சரி சாப்பிட்டுட்டேன்...அடுத்தபடி மகாராணி என்ன உத்தரவிடப் போறாங்களோ?" ஏளனமாகக் கேட்டான்.

"முதல்லியே என்ன உறவு—எப்படி மரியாதையா பேச ணும்னு சொல்லியிருக்கேன். அதை மறந்தா உனக்குத்தான் ஆபத்து. நாலு மணி அளவிலே காபி கொண்டு வருவேன்—அதுக்குள்ளே இந்த மண்டை வெடிக்கிற வெயிலில் உன் துணி காஞ்சுடும்னு நம்பறேன், பிறகு..."

"பிறகு..." கோபத்துடன் விழித்தான் அவன்.

"பிறகு உன் சட்டையையும் பேண்டையும் போட்டுக் கொண்டு என்னோட வெளியிலே வரே...

அதுக்குள்ளே அந்தப் பெண் சுஜி போயிடுவா. உன் பேர் ராமகிருஷ்ணன். ஆனால் பாபுன்னு வீட்லே கூப்பிடறதுன்னு அவகிட்ட சொல்லியிருக்கேன்.''

ராமகிருஷ்ணன் என்றதுமே, அவன் முகம் சுருங்கிப் போனதை அவள் ஓரக்கண்ணால் கவனித்தாள். அந்தப் பத்திரிகை விளம்பரத்தில் அவள் கவனித்த ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. சித்தார்த் ராமகிருஷ்ணன் என்று போட்டோ அடியில் பெயர் காணப்பட்டது. அவனைக் கண்டவர்கள் சொல்ல வேண்டிய முகவரியில்...முரளி ராமகிருஷ்ணன் என்று இருந்ததை அவள் மறக்கவில்லை... மொத்தத்தில் ராமகிருஷ்ணன் என்று அவனது பாட்டனின் பெயராக, குடும்பப் பெயராக உபயோகத்திலிருக்கிறது என்று தெரிந்து கொண்டாள். அந்தப் பெயரைக் கேட்டதும் பையன் அரண்டு போயிருக்கிறான் என்பதை உணர்ந்ததும் அவளுக்கு உள்ளூர திருப்தி.

''அப்படியே வெளியே அடிச்சுத் துரத்தப் போறேளா...?''

''துரத்தறத்துக்கு உன் அழுக்குத் துணிகளைக் கையோடிய நான் ஏன் போட்டுத் தோய்ச்சு வைக்கணும். தலையெழுத்தா? பாபு! நான் சொல்றதை நன்னா கேட்டுக்கோ. சாயங்காலம் உன் உடைகளைப் போட்டுக்கொண்டு என்னோட நீ வெளியே வரே. கடைத் தெருவிருக்கும் முடி திருத்தும் மகால் என்பதில், முதலில் உன் ஆசைக்குக் கொஞ்சம் மீசையை மட்டும் வச்சுக்கொண்டு மற்றதையெல்லாம் மழிச்சு, முகத்தை சுத்தமாக்கிக் கொண்டு சிங்கப் பிடரியாகத் தொங்கும் உன் தலைமுடியைச் சீராக வெட்டிக் கொண்டு வரே. பிறகு நாம் அருகில் உள்ள ரெடிமேட் ஆடைக் கடைக்குப் போகிறோம். உனக்குத் தேவையான ஒரு ஜோடி உடைகளை வாங்கப் போகிறோம். காலுக்கு நல்லதா ஒரு ஜோடி செருப்பு வாங்குவதாக உத்தேசம். எல்லாம் என் செலவில்தான். கூச்சப்படாதே...''



''பணம் இல்லேன்னு சொன்னீங்க. இப்போ எங்கிருந்து முளைக்குது.''

''கடைக்குப் பக்கத்துலே ஒரு பாங்க் இருக்கு. அது மாலை வேளை இயங்கும் பேங்க். அதிலே எனக்கு ஒரு சிறு கணக்கு இருக்கு...என் வட்டிப் பணம் கொஞ்சம் அதில் விட்டு வச்சிருக்கேன். அதிலிருந்து எடுத்து உடைகளை வாங்கப் போகிறோம். புரிஞ்சுதா? என் மாதாந்திர வீட்டு செலவுக்கு எடுக்க வச்சிருந்த பணத்தில் உனகு துணி வாங்கித் தரப்போகிறேன். வீட்டுச் செலவை இந்த மாதம் கொஞ்சம் இழுத்துப் பிடிக்க நேரும்...''

''பெரிய தியாகி?'' ஏளனமாகச் சிரித்தான்.

''என்ன பேர் வேணும்னாலும் வச்சுக்கோ...பரவாயில்லை.''

''இன்னும் ஏதாவது உண்டா?''

''இந்த வீட்டிலே பயப்படாம உன்னைத் தொடர்ந்து தங்க நான் அனுமதிக்கிறாப்பல... நீ என்னை நம்பி, சொன்னதைக் கேட்டு நடந்தா உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது...''

''பெரியம்மா... நீங்க ரொம்பவே புத்திசாலி...''

''தாங் யூ பாபு!'' அவள் புன்னகைத்தாள்.

''கூப்பிட்டீங்களா மாமி...'' சுஜியின் குரல் கேட்டதும் அவள் தட்டைத் தூக்கிக்கொண்டு, ''வந்துட்டேன்'' என்று எழுந்தாள். ''நான் கூப்பிடற வரை இந்த அறையை விட்டு வெளியே எட்டிக்கூடப் பார்க்கக்கூடாது...'' கிசுகிசுத்து விட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு போய்விட்டாள்.

அவனுக்கு வந்த ஆத்திரத்தில் அறையில் கிடந்த தலையணையை ஓங்கி எட்டி உதைத்தான். அது படுக்கையிலிருந்து நகர்ந்து தரையில் விழுந்ததை வெறித்துப் பார்த்து விட்டு மீண்டும் போர்வைக்குள் சுருண்டு கொண்டான்.

# 7

அன்று மாலை, சுஜரிதா வெளியேறியதும் காய்ந்து போன அவனது உடைகளைக் கொண்டு வந்து சியாமளா அவனிடம் கொடுத்தாள். ''சீக்கிரம். பாங்க் மூடுவதற்குள் போய்ப் பணம் எடுத்து உன் தேவைகளைக் கவனிக்கனும். முகத்தை அலம்பிண்டு தலையை வாரிண்டு கிளம்பு. இல்லாட்டா தெருவில் உன்னோட நடக்க எனக்கு பயமா இருக்கும்'' என்றாள்.

''பரிகாசமா பண்றீங்க'' பற்களைக் கடித்தான் அவன். வேறு வழி ஏதும் புலப்படாததால் அவள் சொற்படியே போர்வையை உதறி விட்டு வெளியே வந்து மூகத்தைக் கழுவிக் கொண்டு, அவள் கொண்டு வந்து கொடுத்த தனது பழைய உடைகளை அணிந்து கொண்டான். படுக்கையறையில் சுவர் ஓரமாக இருந்த அலங்கார மேஜையின் கண்ணாடியில் தன்னைக் காலோடு தலை வரை கவனித்துக் கொண்டான்.

அவனது தோற்றம் இப்போது அத்தனை பயங்கரமாக இருக்கவில்லை. பரீட்சையில் தோல்வியுற்ற மாணவனது முகத்தைப் போல அதிகமாக வளர்ந்து விட்ட மீசை தாடியில் பார்க்க சிறிது பரிதாபமாகவே தெரிந்தான்.

''ஜன்னல் கதவுகளைச் சாத்து. வெளியே கிளம்ப கொஞ்சம் உதவி செய்,'' சியாமளா அதட்டியபோது அவன் திடுக்கிட்டுப் போனான்.

''அதிகாரம் செய்கிறீங்களே, பலே! பேஷ். மாட்டேன்னு மறுத்தால் என்ன செய்வீங்க? இப்போ வீட்டில் நாம் இருவர் மட்டுமே இருக்கோம், தெரிரிமா?'' பயமுறுத்தலாகக் கேட்டான்.



'வாஸ்தவம். ஆனால் நீ இங்கே இருப்பதுபற்றி இப்போ இந்தத் தெருவில் உள்ள முககால்வாசிப் பேருக்குத் தெரிந்திருக்கும். எங்க சின்னம்மாவுக்கு நடமாடும் வானொலி நிலையம்னு ஒரு பேர் நான் வச்சிருக்கேன். நீ இங்கே வந்திருப்பது பற்றி இதற்குள் சுற்றுவட்டத்துப் பங்களா வேலைக்காரர்கள் அத்தனை பேருக்கும் சங்கதி பரவி விட்டிருக்கும். இங்கே எனக்கு உதவி செய்ய வரும் பெண்ணுக்கு காய்ச்சலாகப் படுத்திருக்கும் என் தங்கை பிள்ளையை நான் தாங்குவது நன்றாகவே தெரியும். அவள் இத்தனை நேரம் உன்னைப் பற்றி, பாராமலேயே தன் குடும்பத்தவர்களுக்கு விளக்கிக் கொண்டிருப்பாள். ரிடையர்ட் போலீஸ் அதிகாரி ஷண்முகத்திற்கு மனதில் சமாதானமில்லை. இந்த வீட்டிற்குள் நுழைய யாரோ திருடன் முயன்றிருக்கான்னு அவர் ஊகிக்கிறா'. நாளைக் காலை திடீர்னு நினைச்சுண்டு வந்து நிற்பார்.''

''இப்படிப்பட்ட சூழ்நிலையில நீ புத்திசாலியாகப் பிழைக்கத் தெரிஞ்சவனாக நடந்துக்கனும். வாயைப் பொத்திண்டு, எதிர்த்துப் பேசாம, அனாவசிய கோபங்களை உதறி விட்டு நான் சொல்றபடி நடந்துக்கோ அவ்வளவு தான்.''

''தரித்திரம், பீடை...உங்கிட்ட வந்து நான் மாட்டிண்டு இருக்கேனே. என் புத்தியை ..'' முடிக்காது கோபத்துடன் ஜன்னல் கதவுகளைப் படபட என்று அவளுடன் கூட சாத்தினான்.

''புதுசா நான் வாங்கித் தரப்போற பாதணிகளால் வேணுமானா பலமுறை அடிச்சுக்கோ. உனக்கு ஒண்ணு தெரியுமா பாபு? எப்ப ஒருத்தனுக்கு தான் செய்தது தப்புன்னு உண்மை புரிகிறதோ அப்பவே அவனுக்கு நல்ல காலம் பிறந்துட்டதுன்னு அர்த்தம்.''

''பெரிய தத்துவ ஞானி... சிந்தனை முத்துக்களைச் சிதற விடுகிறீர்களாக்கும்!''

''அனுபவ முத்துக்கள் அறிவாளிகளிடமிருந்து மட்டுமே சிதறுவதில்லை. சாதாரண மனிதர்களிடமிருந்து கூடச் சில

சமயம் நம் புத்திக்கெட்டாத நல்ல விஷயங்கள் கிடைக்கும் அதனால்தான் சிறு துரும்பும் பல் குத்த உதவும்னு பெரியவா சொல்வா...''

''வாத்தியார் வேலையை ஆரம்பிச்சுட்டீங்களா? அடுத்தது என்ன செய்யணும் சொல்லித் தொலையுங்கோ''

''அந்தக் கத்தியை இப்படி என்கிட்டே கொடு. இதைப் பையில் வச்சுண்டு நீ என்கூட வெளியிலே வரக்கூடாது. யாராவது போலீஸ் உன்னைப் பார்த்து சந்தேகப்பட்டு பிடிச்சா... நன்றாகவே அகப்பட்டுக்குவே...?''

''போலீஸ்னு சொல்லி சின்னப் பாப்பாவை பயமுறுத்தராப்பல என்னை மிரட்டுறீங்களா?''

''போலீஸ் கண்களில் அகப்படாம இருக்கத்தானே, இந்த தாடி மீசை வேஷமெல்லாம் போட்டுண்டு இங்குமங்கும் திரிஞ்சுண்டு இருந்தே ''

''வாயை மூடுங்கோ. என் கோபத்தை ரொம்பவே கிளறுகிறீங்க...'' எரிந்து விழுந்தவண்ணம் பாண்ட் பையிலிருந்த மடக்கி வைக்கப்பட்ட அந்தக் கத்தியை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''தொலைச்சுக்கோங்கோ... இது இல்லாமலே ஒரு கொலை செய்ய முடியாதுன்னு நினைக்கிற நீங்க ஒரு முட்டாள்.''

''இதோ பார் பாபு! இந்த 'கொலை' என்கிற வார்த்தையை இப்பவே உதறிவிடு. வெளியே என்னோட வர்றப்போ கடைத்தெருவில் நாம யாரையாவது சந்திக்க நேரும். அங்கே கௌரவமா நடந்துண்டியோ பிழைப்பே''

''சனியன்! தொண தொணத்துண்டு...இன்னும் ஏன் கிளம்பலை!''

''இரு. அவசரப்படாதே. காஸ் அடுப்பு சரியா மூடியிருக்கான்னு பார்த்துட்டு வரேன். நீ வாசல்ல போய் நில்லு'' உத்தரவிட்டாள்.



''இன்னும் என்ன பண்ணிக்கிண்டு இருக்கீங்க பெரியம்மா?...சீக்கிரம் வாங்கோ'' வராந்தாவிலிருந்தபடி அவன் கத்தினான்.

''துண்டை உதறிப் போட்டுக் கொண்டு வெளியே நீ கிளம்பிட முடியும். ஆனால் என் சங்கதி அப்படியில்லே. உன்னைப் போல இன்னும் எத்தனை படிச்ச பசங்க வேலை தேடிக் கொண்டு அலையும் சாக்கில் உன்னை மாதிரி பின் பக்கமாக வீட்டுக்குள் புகும் வேடிக்கையை செய்யறானோ தெரியாது. அதனாலே பின் கதவை நன்னா பூட்டினேனான்னு பார்த்துட்டுத்தானே கிளம்ப முடியும்? நாம திரும்பி வரத்துக்குள்ளே இன்னொரு தாடி மீசை வீட்டுக்குள்ளெ நின்னுண்டு இருந்தா நான் எப்படி சமாளிப்பேன்?''

''நீங்க ஒரு பெரிய ரெஜிமெண்டையே சமாளிச்சிடுவீங்க. படு பொல்லாத ஆசாமியாச்சே?'' பற்களைக் கடித்தான் அவன்.

சிரித்துக் கொண்டே சியாமளா வாயிற் கதவைப் பூட்டினாள். இருவரும் ஜோடியாக நடை பாதை மீது மெல்ல நடந்து சென்றனர். முதலில் பாங்கிற்குள் சென்று தேவையான பணத்தை எடுத்துக் கொண்டு வெளிப்பட்டாள். அருகிலிருந்த முடிதிருத்த மகாலுக்குள் அவனை அனுப்பிவிட்டு, அவள் நடைபாதையில் ஓர் ஓரத்தில் காத்துக் கொண்டு நின்றாள்.

கொஞ்ச நேரத்தில் வெளியே வந்தவனைப் பார்த்து அவளுக்கு ஆச்சர்யமாகி விட்டது.

முகத்திலே கச்சிதமான அரும்பு மீசை. கழுத்தின் மேலேயே நின்றுவிட்ட கிராப்புத் தலையுமாக. பார்க்க அவன் வித்தியாசமாகக் காணப்பட்டான்.

''அப்பாடா, என் தலையிலிருந்து பாரம் இறங்கினாப் போல இருக்கு. முடிதிருத்தக் கடை கண்ணாடியிலேயே பார்த்துண்டிருந்தது உனக்கே தெரியும்.'' சிரித்தபடி

அவனை அருகிலிருந்த ரெடிமேட் கடைப் பக்கம் தள்ளிக் கொண்டு சென்றாள்.

வாக்களித்தபடி... மாற்றி உடுத்திக் கொள்ள இன்னொரு பாண்டும் கொஞ்சம் மலிவான விலையில் இரண்டு ஸ்போர்ட் ஷர்ட்டுகளும் சில உள் ஆடைகளும்...ஒரு லுங்கியும் இரண்டு கைக்குட்டைகளையும் வாங்கித் தந்தாள். அடுத்தபடியாகக் காலணி வாங்குவதை விரைவாக முடித்துக் கொண்டு பலசரக்குக் கடைக்குள் புகுந்தாள்.

வீட்டுக்குத் திடீரென்று ஒரு விருந்தாளியாக அவன் வந்து சேர்ந்து விட்டதால்... அரிசி, பருப்பு இத்யாதி சாமான்கள் கொஞ்சம் அதிகமாகவே தேவைப்பட்டன. வேண்டியவற்றை வேகமாக வாங்கி முடித்துக் கொண்டாள். கடைக்காரர் சாமான் பொட்டலங்களை அடுக்கிக் கொடுத்த அட்டைப் பெட்டி பாறாங்கல்லாக கனத்தது.

''பாபு! துணிபார்சலை என்கிட்ட கொடுத்துட்டு இந்த சாமான் பெட்டியைத் தூக்கிண்டு வா....'' பலர் முன் அவள் உத்தரவிட்டபோது அவனால் பதில் பேச முடியவில்லை.

பெட்டியைத் தோள்மீது சுமந்து கொண்டு அவளுடன் காய்கறிக் கடை வீதியில் மேலும் கீழும் வேதனையுடன் நடந்தான்.

''சட்டுபுட்டுன்னு வாங்காம என்ன பெரியம்மா...மீனமேஷம் பார்த்துண்டு நிக்கறீங்க...?'' எரிச்சலை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் கடுத்துக் கொண்டான்.

''பணத்தை சம்பாதித்தவளுக்குத்தானே அதன் அருமை தெரியும். ஒரு கடைக்கு ரெண்டு கடையா விசாரிச்சுட்டுத்தான் எங்கே சாமான் நன்னா இருந்து விலையும் குறைவா இருக்கோ அங்கேதான் நான் வாங்கற வழக்கம். அத்தோட இப்படி காலார கொஞ்சம் நடக்கிறது என் உடம்புக்கு நல்லது,



''உன் உடம்புக்கு நடை நல்லது. பெரிய சுமையைத் தூக்கிண்டு உங்க பின்னாடி நாயாட்டம் வர என்னால் முடியலையே...'' கத்தவேண்டும் போல ஆத்திரத்தில் துடித்தான். ஆனால் எதுவும் பேசமுடியாது சட்டென்று மூடிக் கொண்டான்.

''ஹலோ! நீங்களும் காய்கறி வாங்க வந்துட்டீங்களா? உங்களை வந்து பார்த்து நாளாச்சுன்னு இன்னிக்குத்தான் என் மனைவிகிட்டே சொல்லிக் கொண்டிருந்தேன். அவளுக்குத் தலைவலி. அதனாலே நான் கடைப்பக்கம் வந்திருக்கேன்'' லேசாக சிரித்தார். சற்று குள்ளமாக மெலிதாக இருந்த நடுத்தர வயதைத் தாண்டிவிட்ட ஒரு மனிதர். யார் இந்தச் கராடி? என்று தனக்குள் முனகியபடி அவரைச் சற்று உற்றுப் பார்த்தான் அவன்.

'மிஸ்டர் தேவநாதன்! நீங்க என்னைப்பத்தி அடிக்கடி கவலைப்பட்டுண்டு டெலிபோன் பண்ணி—நேரில் வந்து சொன்ன ஆலோசனைகளை நான் தீவிரமாகச் சிந்திச்சேன். சரின்னு மனதில் பட்டது. கடுதாசி போட்டு என் தங்கை மகனை வரவழைச்சுண்டுட்டேன்'' கூறிவிட்டு அவன் பக்கம் திருப்பினாள்.

''பாபு! இவர் தான் என் வக்கீல் தேவநாதன். இவரும் திரு. ஷண்முகத்தைப் போலவே நல்லதொரு நண்பர். வாரத்துக்கு ஒரு தடவையாவது வந்து என்னைப் பார்க்காம போகமாட்டார்.''

''அப்படியா! ரொம்ப சந்தோஷம். ஓர் ஆண்பிள்ளை கூட துணைக்கு இருக்கிறது ரொம்பவே நல்லது. என்னா நீங்க இருக்கிற வீடு ஒதுக்குப்புறமா தனியா இருக்கு பாருங்க...அதனால் துணை ரொம்பவே அவசியம்'' என்றார் தேவநாதன். பின்னர் நினைத்துக் கொண்டவர்போல் அவன் பக்கம் திரும்பி ''சாமான்களை வாங்கி முடிச்சதும் என் காரில் கொண்டு வையுங்க. காரை எதிர்ப்பக்கம்

அப்பளக கடை அருகே நிறுத்தி வச்சிருக்கேன், உங்களுக்குத்தான் என் சிவப்பு பியட்டைத் தெரியுமே. நான் ஓர் அஞ்சு நிமிஷத்திலே என் காரியத்தை முடிச்சுண்டு வந்துடறேன. இருட்டிப் போச்சு. நீங்க ஏன் பாவம் நடக்கணும். நான் அந்த பக்கமாத்தானே போறேன். உங்களை இறக்கி விட்டுட்டுப் போறேன். சரிதானே?'' கூறிவிட்டு கூட்டத்தில் அவர் மறைந்து விட்டார்.

''இன்னும அறிமுகம் யாருக்காவது பாக்கி இருக்கா? ரொமப கணக்குப் போட்டு சுலபமான திட்டத்தோட வேலை செய்றீங்க. கெட்டிக்காரிதான் போங்க'' சிடுசிடுத்தான் அவன்.

'இதோ பார் பாபு! இவரை நான் இங்கே சந்திப்பேன்னு நினைக்கலை. இவர் என்னை எங்கேயாவது கடைத் தெருவிலோ, கோயில் கிட்டவோ பார்த்துட்டா அம்போன்னு விட்டுட்டுப் போகிற பழக்கமில்லை. ரொம்ப பொறுப்பா தம் காரில் என்னை ஏத்திண்டு வீட்டுலே கொண்டு விட்டுட்டுப் போவார். பெட்ரோலைப் பத்தி பைசா கணக்கு பார்க்கிற கஞ்சத்தனம் கிடையாது. அதனாலே வேற வழியில்லை. அறிமுகம் செஞ்சுவச்சேன்.'' சொல்லிவிட்டு வேகமாகக் காய்களை வாங்கி துணிப் பையில் நிரப்பிக் கொண்டாள்.

அதற்குள் வக்கீல் தேவநாதன் அருகே ஓடிவந்தார்.

''பாபு பையா! பெரியம்மா கிட்டேயிருந்து பையை வாங்கிக்க. அவங்க பாவம் நடக்கவே கஷ்டப்படறாங்க. இள ரத்தம் நீ சுமைகளைத் தூக்க அஞ்சலாமோ? கமான் கார்கிட்ட எடுத்துண்டு ஓடிவா'' உத்தரவிட்டார்.

''நீங்களும் உங்கள் வக்கிலும் நாசமாப் போக...'' உறுமிக் கொண்டே அவன் ஒரு கைத்தாங்கலில் தோளில் கனமான அட்டைப் பெட்டியையும்—மற்றொரு கையில் காய்கள் கொண்ட துணிப்பையையும் சுமந்து கொண்டு மூச்சுத் திணற காரை நோக்கி நடந்தான்.



வீட்டில் அவர்களை இறக்கிவிட்டு சுவாதீனமாக வந்த தேவநாதன் முன்னறையில் உட்கார்ந்து கொண்டார்.

''பாபு! விளக்குகளை எல்லாம் ஏத்திட்டு சாமான்களைக் கொண்டு உள்ளே வை...'' உத்தரவிட்டாள் சியாமளா.

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு பெட்டியையும்—பையையும் சமையலறைத் தரையில் தொப்பென இறக்கிப் போட்டான் அவன். நடையிலிருந்து வராந்தா வரை எல்லா மின் விளக்குகளையும் தட்டி விட்டான். அலுப்புடன் சாப்பாட்டறை நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டான்.

முன்னறையில் சியாமளாவின் குரல் உற்சாகமாக ஒலித்தது. காதைத் தீட்டிக் கொண்டான்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். நாளைக்கே காலையில் அவளை நீங்க சொல்ற அந்த ஆபீசுக்கு உங்க சிபாரிசு கடிதத்தோட அனுப்பறேன். பாவம் நல்ல பெண். இந்த உதவிக்கு ரொம்ப நன்றி. இருங்கோ எழுத காகிதமும் பேனாவும் எடுத்துக் கொடுக்கறேன்...'' என்றாள்.

கார் தோட்டத்தினின்று வெளியேறி மறைந்ததும் முன்னறை விளக்கை அணைத்து வாயிற் கதவை தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தான் ''யார் அந்த அவள்— அவர் கிட்ட என்ன பேசிக் கொண்டிருந்தீங்க?'' கோபமும் வியப்புமாகக் கேட்டான்.

''அவசியம் தெரியணுமா? சொல்றேன். எனக்கு தினசரி வந்து சமையல் வேலையிலும் மற்ற வீட்டு நிர்வாகத்திலும் உதவி செய்கிறாளே ஒரு பெண். அவளைப் பத்திதான் பேசிண்டு இருந்தேன். இன்னிக்கு கூட அவள் தான் முழுக்க முழுக்க சமைச்சாள்.''

''நன்னாவே சமைச்சிருந்தா... சாம்பார் ஜம்னு இருந்தது.''

''அவள் ஒரு பட்டதாரி... படிச்சுட்டோம்னு கர்வப் படாம நான் கொடுத்த எந்த வேலையையும் ஒழுங்கா செய்திண்டு ஏதோ கொடுத்த சம்பளத்தை வாங்கிண்டு இருந்தா. அதனால் நான் வக்கீல்கிட்டே அவளைப்பத்தி சொல்லி எங்கேயாவது ஆபீஸ் வேலை வாங்கித் தரச் சொல்லியிருந்தேன். அவரும் முயற்சி பண்ணிண்டு இருந் தார். அநேகமா அவர் சொன்ன ஆபீஸ் வேலை அவ ளுக்குக் கிடைக்கும்னு தோணறது...''

''பலே! பெரியம்மா...நீங்க நிசமாகவே கெட்டிக்காரி தான்.''

''ரொம்பப் பாடுபட்டு எனக்கு உழைச்சா. பலனை இப்போ அனுபவிக்கப் போறா. கத்தியும் கையுமா கொலை செய்து பிழைக்கணும்னு திரிஞ்சா... என்ன கிடைக்கும்...?',

''போதும் பிரசங்கம். எனக்குப் பசிக்கிறது'' எரிச்ச லுடன் கத்தினான்.

''கத்திப் பேசறதை விட்டு விட்டு கொஞ்சம் அடக்கமாக இருக்கத் தெரிஞ்சுக்கோ. வாழ்க்கையிலே முன்னேறப் பொறுமை ரொம்ப அவசியம். அந்தப் பெண் சீராக ரசம் வச்சு வடாம் வறுத்து வச்சிட்டுப் போயிருக்கா. ராத்திரி சாப்பாடு உனக்கு ரொம்ப ருசிக்கும்... ஏன்னா அதுக்கு நீ இன்னிக்கு கொஞ்சம் உழைச்சிட்டிருக்கே, கடைச் சாமான் பெட்டியையும் காய்கறிப் பையையும் சுமந்துண்டு வந்தே.'' சிரித்தபடி சியாமளா கைகளைக் கழுவிக்கொண்டு தட்டு களை மேசைமேல் பரப்பினாள். ரசம் உப்பும் காரமுமாக நாக்குக்கு நன்றாகவே இருந்தது. வடாம் வாயில் கரைந்து போனது... இத்தனை ருசியாக சமைக்கத் தெரிந்த அந்தப் பெண்ணை அவன் இன்னமும் பார்க்கவில்லையே?... நாளைக் காலை பயமில்லாமல் எழுந்து போய் அவனே கதவைத் திறக்க வேண்டும்.

சுஜியை அவன் கட்டாயம் பார்த்தாக வேண்டும். பெயர் இனிமையாக இருக்கிறது. குரல்கூட இனிமையாகத்



தொனித்தது...படித்தவள் என்கிறாள் பெரியம்மா. நேரில் பார்க்க அவள் எப்படி இருப்பாள்?...

''என்ன யோசிக்கிறே? சீக்கிரம் எனக்கு தூக்கம் வரது... இன்னிக்கு நான் என் அறையில் படுத்துக்கப் போறேன். நீ முன்னறை சோபாவில் படுத்துக்கோ. எழுந்திரு. சாப்பிட்ட இடத்தில் உட்கார்ந்துண்டு என்ன குருட்டு யோசனை?'' சியாமளா அதட்டினாள்.

அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவள் எடுத்துக் கொடுத்த போர்வையையும் தலையணையையும் தூக்கிக்கொண்டு முன்னறைக்கு விரைந்தான். அவனது நினைவு முழுவதையும்... அவன் பார்க்காத அந்த சுஜிதா ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாள்.

## 8

அவன் நன்றாகத் தூங்கிவிட்டிருந்தான். ''பாபு எழுந்திரு'' சமையலறையிலிருந்து ஓங்கிக் குரல் கொடுத் தாள் சியாமளா.

முன்னறையில் ஒரு பக்கம் விரித்துப் போட்டுக்கொண்டு படுத்திருந்த ஜமுக்காளத்தின் மீது அவன் விருக்கென்று எழுந்து உட்கார்ந்தான்.

இடுப்பில் கைகளை ஊன்றியபடி வேலைக்காரி சின்னம் மாள் கோபத்துடன் அவன் எதிரே நின்று கொண்டிருந் தாள்.

''வேலை தேடிக்கிட்டு பட்டணம் வந்திருக்கிற பிள்ளையா நீ! இப்படித் தூங்கினா கட்டுப்படியாகுமா? எழுந்திரு—அப்படியே ஜமுக்காளத்தையும், தலையணையை யும் சுருட்டி எடுத்து உள்ளாரக் கொண்டு வை... முன்னறை

யைக் கூட்டணும், பாத்திரம் துலக்கணும். எனக்கு எம்மாம் வேலை இருக்கு?'' உரத்த குரலில் உத்தரவிட்டாள்.

வீட்டுக்கார அம்மாள் அதட்டுவது போதாது போல் இப்போது வேலைக்காரிகூட அவனை உருட்டி மிரட்டத் தொடங்கி விட்டாளே?

பொங்கிய கோபத்தை அடக்கிக்கொண்டு அவன் எழுந்தான்.

''சீக்கிரம் பல் விளக்கி குளிச்சிட்டு துணியைப் போடு—தோச்சுட்டு நான் கிளம்ப வேண்டாமா?'' வேலைக்காரி மறுபடியும் அவனை உள்ளே வந்து விரட்டினாள்.

குளித்துவிட்டுப் புதிதாக சியாமளா வாங்கித் தந்த உடையில் அவன் வெளியே வந்தான். பார்க்க இப்போது பளிச்சென்று சுத்தமாகக் காணப்பட்டான். சியாமளா அவனுக்காகச் சாப்பாட்டு அறையில் காத்துக் கொண்டிருந்தாள்.

சூடான தோசைகளைத் தட்டில் பரிமாறிவிட்டு—கிண்ணத்தில் சாம்பாரை நிறைத்து அருகில் வைத்தாள். ''சீஃகிரம் சாப்பிடு. ஏகப்பட்ட வேலை இருக்கு. இது சுஜி நேத்து செய்து வச்சுட்டுப்போன சாம்பாரின் மிச்சம். பிரிட்ஜ்ஜில் வச்சிருந்தேன். வேலைக்காரிக்குக் கொடுத்தது போக உனக்குக் கொஞ்சம் எடுத்து சூடாக்கினேன் ''

அவள் பேசியதை அவன் கவனிக்கவேயில்லை. அவனது நினைவு முழுவதும் வாயிற் பக்கமே இருந்தது.

சிறு பொழுதில் எழுந்து கைகளைக் கழுவிக்கொண்டு அவன் காலைப் பத்திரிகையைப் புரட்டியபடி ஒரு பக்கம் உட்கார்ந்து விட்டான்.

வேலைக்காரி சின்னம்மாள் வேகமாகக் காரியங்களை முடித்துவிட்டு, கையுடன் கொண்டுவந்த அலுமினியக்



கிண்ணத்தில் எஜமானி கொடுத்த மீதமிருந்த சோற்றையும் குழம்பையு நிறைத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள்.

பல தடவை வாயில் பக்கம் திரும்பிப் பார்த்து அவனுக்குக் கழுத்து வலித்தது.

''ஆமாம்! அந்தப் பெண்ணை ஏன் இன்னமும் காணவில்லை?...''

தனக்குள்ளே கேட்டுக்கொண்ட கேள்விக்குப் பதிலளிப்பதுபோல சியாமளா சொன்னாள்.

''விடியற்காலையிலேயே இன்னிக்கி நான் குளிச்சுத் தயாராகிட்டேன்... பகல் சாப்பாட்டைக்கூட செய்து வச்சுட்டேன். இனிமே தினமும் எனக்கு இந்த வேலையும் சேர்ந்து கொண்டுடுத்து, அதனால்...'' முடிக்காது அவனைப் பார்த்தாள்

''உங்களுக்கு உதவி செய்யத்தான் ஓர் உதவியாள் இருக்காளே? அவ வாதுக்குள்ளே அவசரமென்ன?'' ஏளனமாகக் கேட்டான்.

''அவ இனிமேல வரமாட்டா! அதனாலே சமையலை நான்தான் கவனிக்கணும்.''

''வரமாட்டாளா? நேத்துதானே உங்கள் வக்கீல் ஏதோ ஒரு முகவரி எழுதிக் கொடுத்தார். அதை வாங்கிக்கொள்ளவாவது வருவா இல்லையா?''

சியாமளா லேசாக முறுவலித்தாள். ''தூங்கிண்டு இருந்தப்போ என் வக்கீல் தேவநாதன் நேத்து ராத்திரி எனக்குப் போன் பண்ணினார். வீட்டுக்குப் போனதும் அந்த அலுவலக மானேஜருக்கு அவர் போன் செய்தாராம் அவர்கள் ஆபீசிலே இப்போ ஒரு டைப்பிஸ்ட் வேலை காலியாக இருக்காம். சின்னம்மா வேலைக்கு வந்ததும் முதல் காரியமாக வக்கீல் சொன்ன முகவரி இத்யாதிகளை விவரமாக ஒரு கடிதத்தில் எழுதி...அதில் அவளது பாக்கி

சம்பளத்தையும் செலவுக்கு இருக்கட்டும்னு வச்சு அனுப்பிச்சுட்டேன். அதனாலே அவள் இனிஇங்கே வரமாட்டாள்.."

"வீட்டு வேலைகளை நீங்களே செய்துண்டு கிழ வயசிலே திண்டாடணுமாக்கும். அப்படிக் காசைச் சேர்த்துச் சேர்த்து யாருக்கு வெச்சுட்டுப் போகப் போறீங்க!" ஏமாற்றத்தில் ஏற்பட்ட எரிச்சலை அடக்கமாட்டாது கேட்டான்.

"சமையல் வேலை எனக்கு என்னைக்குமே பிடித்தமான காரியம். சுஜிக்கு ஏதாவது வேலை தரணும் என்கிறதுக்காக உதவிக்கு வக்சுக்கொண்டேன். நான் பாடுபட்டு சம்பாதிச்சதை பிறருக்கு நான் ஏன் வாரித் தரணும்? உழைச்சா கொடுத்தேன். மத்த வேலைக்கு இப்போ நீ இருக்கே உதவி செய்ய "

"என்ன சொன்னீங்க பெரியம்மா!" திடுக்கிட்டு வினவினான் அவன்.

"நீ சும்மா எதுவும் செய்யாம என்கிட்டே சாப்பாட்டையும் தங்குமிடத்தையும் எதிர்பார்த்தால் அதுக்கு என்ன பெயர் தெரியுமா?!'

"பிச்சைன்னு சொல்லப் போறீங்க! உங்களோட ஒரு நாள் பழகினாலும் ஓரளவு உங்களைத் தெரிஞ்சு கொண்டேன்."

"பிச்சைபோட நான் அஞ்சமாட்டேன். கஞ்சத்தனம் ஏதும் என்கிட்டே கிடையாது. உன்னைப்போல வாட்டசாட்டமா இருக்கிற ஆரோக்கியமான வாலிபனுக்கு நான் ஏன் தண்டச்சோறு போடணும்!..."

"சுஜி செய்த வேலையை இப்போ என்கிட்டே எதிர்பார்க்கிறீங்களாக்கும்?'.

"ஊகும்! நீ சமைச்சா யார் சாப்பிடறது?...உனக்கு ஒழுங்கா ஒரு கப் காப்பிகூடப் போடத் தெரியாதுன்னு நினைக்கிறேன். நீ எனக்கு தோட்டவேலையில் உதவணும்"



"என்ன !சொன்னீங்க?" ஆத்திரத்துடன் கத்தினான் அவன்.

"தோட்டக்காரன் இரண்டு வாரமா வரலை. இலைகள் உதிர்ந்து மறுபடியும் தோட்டம் முழுதும் ஒரே குப்பை. நானும் உன்னோட உதவறேன். காயஞ்ச இலைகளைப் பெருக்கி நான் குவிச்சு வைக்கிறேன். நீ அதைக் கூடையில் வாரி எடுத்துக் கொண்டு போய், சுவர் ஓரமா வெட்டி வச்சிருக்கிற குழியிலே போட்டு மண்ணால் மூடணும். இலைகள் மக்கினால் பிறகு அதுவே நல்ல உரமாக தோட்டத்துக்கு உபயோகமாகும். போகன் வில்லாக்கள் ரொம்ப உயரமாக வளர்ந்து விட்டிருக்கு. பெரிய கத்திரிக்கோல் எடுத்துத் தரேன். அதுகளை சீராக ஒரே திட்டத்தில் வெட்டிவிடு. மண்வெட்டியால் செடிகளைச் சுற்றி பள்ளம் பண்ணிவிடு. பிறகு ஹோஸ்பைப்பை வச்சுண்டு புல்வெளிக்குத் தண்ணீர் விடு..."

"இன்னும் ஏதாவது பாக்கியிருக்கா?..."

"இங்கு பின் பக்கம் நான் ஒரு சின்ன கிச்சன் கார்டன் வச்சிருக்கேன். இதிலே புதினாவும, கொத்து மல்லியும் நஷனா துளுத்துண்டு வளர்ந்திருக்கு. கொஞ்சம் புதினாவும் • கொத்துமல்லியும் கிள்ளி எடுத்துண்டு வரணும். அப்படியே மிளகாய் செடியிலிருந்து பத்து பச்சை மிளகாயும் பறிச்சிண்டு வா. சாயங்காலம் ரொட்டிக்கு தொட்டுக்க உனக்கு புதினா சட்னி வேண்டாமா...?" அவள் சிரித்தாள்.

"இந்த வேலைகளை நான் செய்ய மறுத்தால்...?' தாடை இறுக அவளை உறுத்துப் பார்த்தான் அவன்.

"பாபு! நீ மறுப்பதில் பயன் இல்லை. இந்த வேலைகளில் எனக்கு நீ உதவினால்தான் உனக்கு சாப்பாடு கிடைக்கும்"

"பெரிய... சாப்பாடு" உறுமினான் அவன்.

"நீ வந்த'ராத்திரி எப்படி அந்த கொஞ்ச சாதத்தையும் தயிரையும் போட்டுண்டு பரக்கப் பரக்க சாப்பிட்டே..."

அதை நினைச்சுப் பார். சுஜியைப் போல நீயும் கௌரவம் பாராட்டாம எனக்கு எல்லா வேலைகளிலும் உதவி செய். பதிலுக்கு உனக்கு தங்க இடமும், சாப்பாடும் கொடுத்து கை செலவுக்குக் கொஞ்சம் பணமும் தரேன். வேலை கிடைக்கலேன்னுதானே திருடத் துணிஞ்சே?''

''இன்னிக்கு தோட்ட வேலை செய்யச் சொல்வீங்க. நாளைக்குக் கழிவறைகளைக் கழுவச் சொல்வீங்க? உங்களை எனக்குத் தெரியாதா?..''

''ஒண்ணும் செய்யாம, சும்மா உன் வீட்டில் நீ தண்டமாக இருந்ததினால்தான் பிரச்னைகள் உருவாகி நீ வீட்டை விட்டுக் கிளம்பி வந்திருக்கேன்னு நினைக்கிறேன்.''

திடுக்கிட்டுத் திரும்பினான் அவன். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அவளுக்கு எப்படித் தெரியும்.''

''ஆச்சரியப்படறியா?..இதெல்லாம் ஓர் ஊகந்தான். என் வீட்டுக்குள்ளே குளியலறை வெண்டிலேட்டர் வழியா குதிச்சாப்பல, நீ ஆகாயத்திலிருந்து குழந்தையா குதிச்சியா?... ஒரு தாயின் பிள்ளையாகப் பிறந்து ஒரு குடும்பத்திலே வளர்ந்து, படிச்சு ஆளாயிருக்க உனக்குன்னு ஒரு குடும்பம் இருக்கும். அதிலே அண்ணன் தம்பி, அப்பா அம்மா எல்லாரும் இருக்கலாம். அவாளையெல்லாம் விட்டுட்டு வெளியேறி ஒரு பைத்தியக்கார வேலை செய்யப் பார்த்தே.''

அவன் பதில் பேசுமுன் சாலையில் சற்றுத் தொலைவில் கேட்ட மோட்டார் சைக்கிளின் ஓசை அருகில் நெருங்குவதை உணர்ந்து மௌனமானான்.

கேட்டைத் திறந்து கொண்டு சைக்கிளை உதைத்து, அதன் மீது ஏறி உள்ளே செலுத்திய ஷண்முகம் நேரே வாயில் வராந்தா எதிரில் அதை நிறுத்திவிட்டு இறங்கினார்.



அழைப்பு மணியை அவர் அழுத்தும் முன் சியாமளா கதவைத் திறந்தாள்.

''வாங்க... உங்களை எதிர்பார்த்துண்டுதான் இருந்தேன். உங்க உதவியாலே டெலிபோன் சீராயிடுத்து. உடைஞ்ச கண்ணாடியை அவர்கள் உடனுக்குடன் மாத்திட்டுப் போயிட்டாங்க. அத்தோட இன்னும் ஒரு முக்கிய செய்தி. என் தங்கை பிள்ளை ஊரிலிருந்து வந்திருக்கான்'' என்று உற்சாகமாகப் பேசியபடி அவரை வரவேற்றாள்.

சாப்பாட்டறைக்குள்ளே நின்றுவிட்ட அவன் மார்பு படபடவென்று துடித்தது. குப்பென்று கொப்பளித்த வியர்வையில் உடம்பு நனைந்தது. தொண்டை காய்ந்து பேச முடியாது என்னவோ ஒன்று அவன் கழுத்தை இறுக்குவதைப் போல் திணறிப் போனான்.

''எங்கே அந்தப் பையன்? கூப்பிடு பார்க்கலாம்'' சிங்கக் குரலில் உற்சாகமாகச் சிரித்தார் சண்முகம்.

''பாபு! அங்கே என்ன பண்ணிண்டு நிக்கறே? வா... இப்படி. உன்னைப் பார்க்க திரு. ஷண்முகம் வந்திருக்கார்...'' இரைந்து கூப்பிட்டாள் சியாமளா.

வேறு வழியின்றி மிகவும் தயக்கமாக அவன் வெளியே வந்து அவர் முன் நின்றான்.

மேலும் கீழும் தன்னை வெறித்துப் பார்த்த சண்முகத்தின் முன், தான் புழுவாகச் சுருங்கிப் போன உணர்வில் தொய்ந்து போய் நின்றான்.

''இவர்தான் எனக்கு உதவி செய்யும் ரிடையர்ட் போலீஸ் அதிகாரி திரு. சண்முகம். வேல் முருகனை நினைச்சா வினையெல்லாம் தீரும் என்பது போல இவரை நினைச்சா போதும். மோட்டார் சைக்களில் வந்து உடனே உதவி செய்வார்'' அறிமுகத்தை முடித்தாள் சியாமளா.

''வணக்கம்'' என்று கை குவித்துவிட்டு அங்கிருந்து தப்பித்துக் கொள்ள விரும்பினான் அவன்.

"நீங்க இன்னும் சித்த பொறுத்து வந்திருந்தால் ஒரு வேடிக்கை பார்த்திருப்பீங்க. நானும் பாபுவும் தோட்டத்தை சுத்தப்படுத்திக் கொண்டிருப்போம்... அடடா... மறந்து போனேனே. இவன் தான் பாபு, பி. ஏ. முடிச்சிட்டு வேலை கெடைக்காம அலைஞ்சு திரியறான். பாவம்!" என்றாள் சியாமளா.

"இப்ப சத்தியா உங்களுக்கு உதவியா இருக்கட்டும். பாபு! உன் பெரியம்மா என்னத்துக்கு இந்த வயசிலே உடம்பை அலட்டிக்கணும். நீயே தோட்டத்தைக் கவனிக்கலாமே... இது ஒரு பெரிய வேலையா?" அட்டகாசமாகச் சிரித்தார் சண்முகம்.

எச்சிலை விழுங்கிக் கொண்டான் அவன். எல்லோரும் சேர்ந்து இதென்ன இப்படி ஒரு சதித் திட்டம்!

"என்ன யோசிக்கிறே? கூடவேணுமானால் நான் உதவி செய்யறேன். எந்த ஒரு வேலைக்கும் இந்த வயசிலும் நான் பயப்பட்டதில்லை. நீ ஓர் இளைஞன். உடல் உழைப்புக்குப் பயப்படலாமா?"

"உங்களைப் பார்த்துதான் நான் ரொம்பப் பயப்படறேன்." சொல்ல முடியாமல் சியாமளா பக்கம் சட்டென்று திரும்பினான்.

"பெரியம்மா... நீங்க பேசிக் கொண்டு இருங்க. நான் தோட்ட வேலைகளைக் கவனிக்கிறேன்... ஹோஸ் பைப் மண் வெட்டி எல்லாம் தோட்டத்தில்தானே இருக்கு?" கேட்டு விட்டு வேகமாகத் தோட்டத்திற்குள் இறங்கினான்.

வராந்தாவில் பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்தபடி, சியாமளாவும் ஷண்முகமும் பேசிக் கொண்டிந்தனர். நடுவே அவன் எழுந்து சென்று அவருக்காக காபி தயார் செய்ய உள்ளே சென்ற போது, ஷண்முகம் வராந்தாவினின்று தோட்டத்திற்குள் வந்து விட்டார்.



"இன்னும் கொஞ்சம் ஆழமா வெட்டு. கற்களை எல்லாம் அள்ளி ஒரு மூலையில் குவிச்சுவை. இந்தக் கிளை ரொம்ப உயரமா இருக்கு. இதைக் கொஞ்சம் டிரிம் பண்ணு." என்று ஆலோசனைகளை வழங்கியபடி அருகில் வந்து நின்று விட்டார். அவனுக்குக் கையும் காலும் பயத்தில் பதறின.

நல்ல வேளை...சியாமளா சூடான காப்பியும், பிஸ்கட்டும் எடுத்து வந்து வராந்தாவில் கிடந்த வட்டமேஜை மீது வைத்தாள்.

"நீங்க வந்து காப்பி சாப்பிடுங்க. அவன் தெரிஞ்ச வேலையைக் கவனிக்கட்டும்" என்று அவரை அழைத்துக் கொண்டாள்.

வேண்டுமென்றே நீண்ட நேரம் அவன் புல்வெளிக்கு ஹோஸ் பைப்பில் நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.

அவரும் சட்டென்று கிளம்பும் ஆசாமியாகத் தோன்றவில்லை. என்னென்னவோ பல பழைய கதைகள் தமது கடந்தகால வீரப் பிரதாபங்கள் என்று ஒன்றன்பின் என்றாக மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்தார்.

மண்வெட்டியைப் பிடித்து ஆழமாகத் தரையை வெட்டி கை ஓய்ந்து போனான், சிவந்துவிட்ட உள்ளங்கைகளை அடிக்கடி தொட்டுப் பார்த்துக்கொண்டு வேதனைப்பட்டான். 'என்ன காரியம் செய்து விட்டோம். தெரியாத்தனமாக...கத்தியும் கையுமாக இந்த வீட்டில்... இந்தம்மாவிடம் அகப்பட்டுக் கொண்டது, எத்தனை பிசகு' எண்ணியபடி போகன் வில்லாலை வெட்டி சரி செய்து கொண்டிருந்தான். அடிக்கடி ஷண்முகம் தன் பக்கம் திரும்பிப் பார்ப்பது போன்ற பிரமையில்... முழு மூச்சாக வேலையில் ஈடுபட்டு மூன்று மணி நேரம் விடாது உழைத்தான். தோட்டம் துப்புரவாகி விட்டிருந்தது.

வியர்வை ஆறாக உடல் முழுவதும் வழிய, புதுச்சட்டை மீதும்...கைகளின் மீதும் மண் கறையுடன், புதினா கொத்த மல்லி இத்யாதிகளைப் பறித்து எடுத்துக்கொண்டு வந்த பொழுதுதான் ஷண்முகம் கிளம்ப எழுந்திருந்தார்.

"ரொம்ப நறுவிசா தோட்டத்தைக் கவனிச்சுட்டே... கையிலே உனக்கு உண்மையான திறமை இருக்கு. மனதைத்தான் அதில் நல்லா செலுத்தணும்...அவ்வளவு தான். பிழைச்சுக்குவே. உனக்கு நல்ல ஒரு வேலை கிடைக்காம திண்டாடிக்கிட்டிருக்கேன்னு உங்க பெரியம்மா என்கிட்டே சொல்லி வருத்தப்பட்டுக்கிட்டாங்க. கவலைப் படாதே. எனக்குத் தெரிஞ்ச இடத்திலே உன்னை இழுத்து விட முயலுகிறேன்...அதுவரை உன் பெரியம்மாவை நல்லா கவனிச்சுக்கோ—கூடமாட உதவி செய். நாளை மறுநாள் அநேகமாக இங்கே வருவேன— அப்போ உன்னைப் பார்க் கிறேன்."

மீண்டும் ஏற இறங்க அவனைப் பார்த்த ஷண்முகம் உற்சாகத்துடன் முதுகை ஓங்கித் தட்டினார். உடலில் உள்ள ஒவ்வோர் எலும்பும் ஆடிவிட்ட உணர்வில் அவன் அதிர்ந்து போனான்.

'சந்தோஷமாகத் தட்டிக் கொடுக்கும்போதே முதுகு இப்படி வலித்தால்—மனிதன் சந்தேகப்பட்டு சாத்த ஆரம் பித்தால் முதுகு அப்பளமாகிவிடும் போலிருக்கே? அது கையா? இரும்பு ஆயுதம் போல என்ன அழுத்தமா முதுகில் விழறது... போயும் போயும் இவர் கிட்டேயும் மாட்டிக் கொள்ளணுமா?...' எண்ணி நடுநடுங்கிப் போனான்.

மோட்டார் சைக்கிள் நெடுஞ்சாலையில் வெகு தூரம் சென்று மறையும் வரை பலவும் சிந்தித்தபடி அவன் வாயிலி லேயே நின்று கொண்டிருந்தான்.

"என்ன யோசிக்கிறே? கைகால்களை அலம்பிண்டு வா. ரொம்பக் களைச்சுப் போயிருக்கே, எலுமிச்சம் பழ



ஷர்பத் பிரிட்ஜில் வச்சிருக்கேன். எடுத்துத் தரேன். ஜில்லுனு இருக்கும். சாப்பிடு." உபசரித்தாள் பெரியம்மா.

"உங்களைஎன்னவோன்னு நினைச்சுத் தப்புக்கணக்குப் போட்டுட்டேன். நீங்க பலே கெட்டிக்காரி...என்னை சுத்தி ஒரு கம்பி வேலி போட்டு இறுக்கிக் கட்டி...என்னைக் கைதி யாக்கப் பார்க்கறீங்க. உங்க கை உசந்திருக்கு." பெரு மூச்சு விட்டான் அவன். இப்போது அவன் வார்த்தைகளில் கோபம் இருக்கவில்லை. முகத்தில் கோபத்திற்குப் பதில் அச்சம் லேசாகத் தெரிந்தது.

## 9

இரண்டு தினங்கள் சென்றன. புரட்சி செய்து எதிர்த்துப் பேசிப் பொழுதை ஓட்டுவதில் லாபம் ஏது மில்லை என்று அடங்கிப்போனான். சியாமளா சொன்ன வேலைகளை மௌனமாகச் செய்து முடித்தான். போட் டதைச் சாப்பிட்டான்...முன்னறையில் அவள் சொல்லுமுன் சென்று சுருண்டுகொண்டு உறங்கினான். ஆனாலும் மனதில் ஓர் அமைதியற்ற பரபரப்பு, சிறையிலிருப்பது போல எத்தனை நாள்கள் இப்படியே இருப்பது?...

மனம் கசந்தவனாக, அன்று மாலை முன்னறையி லிருந்த கண்ணாடி அலமாரியைத் திறந்து வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை ஆராய்ந்தான். அது சமயம் பின்னால் காலடி ஓசை கேட்டது.

"பாபு! காப்பி டிபன் தயார்...சாப்பிட வா..." கூப் பிட்டபடி சியாமளா எட்டிப் பார்த்தாள்.

"உன் தாடி மீசையை ஒழித்துக் கட்டியது போல, உன் பிடிவாதத்தை ஒடுக்கி உன் அகம்பாவத்தைத் தகர்த்து என்

உன் பெயரைக் கூட 'பாபு' என்று மாற்றி வைத்திருக்கேன். இப்போ நீ ஊர் பேர் எல்லாம் மாறிப் போன, மனாணால் ஆன என் கைப்பொம்மை மறந்து விடாதே. நமக்குள் ஏற்பட்ட போராட்டத்திலே ஜெயிச்சவள் நான்தான். தெரிஞ்சுக்கோ...'' என்று விளம்பரப்படுத்துவது போல அவள் முகம் முழுவதும் பரவி நின்ற அந்தப் புன்னகையைக் கண்டு அவனுக்கு வயிறு எரிந்தது.

அந்த அலமாரியில் நீ தேடற புத்தகங்கள் எதுவும் இருக்காது. வீணா வரிசையைக் கலைக்காதே. நான் பாடு பட்டு அடுக்கி வச்சிருக்கேன். அலமாரியை மூடிட்டு... காப்பி சாப்பிட வா.'' உத்தர விட்டாள் அவள்.

''என்சைக்கிளோபீடியா பிரிட்டானிகா முதல் தட்டில் வரிசையா உட்கார்ந்திருக்கு. விவேகானந்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர்...... ஆழ்வார்கள். நாயன்மார்கள் என்று எல்லாரும் அடுத்தடுத்த தட்டுகளில் இருக்கிறார்கள்; பார்த்தேன்!''

''நான் பழைய தலைமுறையைச் சேர்ந்தவள். உன்னைப் போல ஹூயிலாமெரையும், ராபின்ஸ்சையும்... பீட்டர்சைனியையும் விழுந்து விழுந்து படிக்கிற வயசில்லை. கொலை கொள்ளை படிக்க விருப்பம் உண்டு.. பிரபல கொலை வழக்குகள் பற்றிய புத்தகங்களை நூல் நிலையத்திலிருந்து இரவல் எடுத்து வந்து படிக்கிறதுண்டு. 'சன்யாசி கேஸ்' என்பது என் மனதை ரொம்பக் கவர்ந்தது... உண்மையில் யார் அவர் என்பதை நீதி மன்றத்திலே அவர் தம்மைப் பற்றி நிரூபிக்க வேண்டியிருந்தது.

''நான் யார் என்று என்னைப் பற்றி நிரூபித்துக் கொள்ளும் நிலைமை எனக்கும் ஏற்படும் என்று மறைமுகமா சொல்றீங்களா?'' வெறுப்புடன் வினவினான்.

''இப்போ சத்தியா என் வரை பாபு. நீ யார்னு உன் மனசாட்சிக்குத் தெரியும். இது வீடு. கோர்ட் இல்லே.



இங்கே உன் மேல் என்ன வழக்கு நடக்கப் போறது. நீ பயப்படணும்?...சரி— அதை விட்டுத்தள்ளிவிட்டு சாப்பிட வா எனக்கு மத்த வேலைகளை பிறகு கவனிக்கணும்...'' என்றாள் அழுத்தமான குரலில்.

மேஜையில் அவள் எதிரே வேண்டா வெறுப்பாக வந்து உட்கார்ந்தான். அவனுக்குப் பிடிக்காத அரிசி உப்புமா தட்டை நிறைத்துக்கொண்டு புதினா சட்னியுடன் காத்திருந்தது

அவனது வீடாக இருந்து, மன்னி அவன் தட்டில் உப்புமாவைப் பரிமாறியிருந்தால் இத்தனை நேரம் தட்டோடு அது வாயிலுக்கு பறந்து விட்டிருக்கும். அந்த டிபனைக் கண்டால் அத்தனை வெறுப்பு அவனுக்கு...

அண்ணா—மன்னி— அப்பா யாருக்கும் அடங்காது வேலை கிடைக்கவில்லை என்ற முகாந்திரத்லே தன்னுள் உணர்ச்சிவசப்பட்டு கோபமே உருவாக வீட்டில் அவன் செய்த ரகளைகள்?

ஆனால் இங்கே முன்பின் தெரியாத ஒரு கிழவிமுன் ஆட்டுக் குட்டியாக அடங்கிப் போய் போட்டதைச் சாப்பிடும் ஒரு கோழைத்தனம் வந்துவிட்டிருக்கிறதே?

பயலுக்குப் பின் அமைதி என்பார்கள்—அது போல ஆவேசம் பிடித்தவன் போல் மன்னியிடம் அவன் எத்தனை முறைகள் சண்டை போட்டிருக்கிறான்?

''வாரத்துக்கு ஒரு சினிமா பார்க்க நமக்கு முடியுமா? சம்பாதிக்கிறவாளுக்குத்தானே பணத்தின் அருமை தெரியும். உனக்கென்ன தெரியும்? கைச் செலவுக்குப் பணம் வேணும்னா ஏதாவது வேலை...தேடிக்கோ— மூட்டை தூக்கி சம்பாதிக்கும் வேலைன்னாலும் பரவாயில்லைனு துணிவோட ஏத்துக்கோ...அதை விட்டுட்டு வெட்டியா பொழுதைக் கழிச்சா?'' மன்னி அன்றுதான் வெறுப்பின் எல்லைக் கோட்டைத் தாண்டியபோது அவன் எதிர்த்துக் கொண்டு விட்டான்.

''அப்படியா? வீட்டின் எஜமானி என்கிற திமிர்... வழி வைக்கிறேன்'' என்று அவனுள் ஏற்பட்ட பழி உணர்வின் பலன்?

கல்யாணவொன்றிற்கு போய்விட்டுவந்த மன்னி கழற்றி வைத்த சிவப்புக்கல் நெக்லசை ஓசைப்படாது பீரோவைத் திறந்து எடுத்துக்கொண்டு அத்துடன் வீட்டுச் செலவுக்காக அவள் வைத்திருந்த பணத்தில் இருநூறு ரூபாய்களைப் பைக்குள் திணித்துக்கொண்டு ராத்திரி பஸ் பிடித்துப் பட்டணம் வந்து சேர்ந்தான். நெக்லசை ஒரு நகைக் கடையில் தள்ளிவிட்டு கிடைத்த பணத்துடன் ஹைதரா பாத்துக்குக் கம்பியாகி விட்டிருந்தான்.

பணம் வேகமாகக் கரைந்து போனது. பதிலுக்கு முகத்தில் மீசையும் தாடியும்தான் மிஞ்சியது. உடையில் கிலோ கணக்கில் அழுக்கு அப்பிக் கொண்டது.

வேலை தேடி அலைந்தான். புறப்பட்ட அவசரத்தில் பட்டப் படிப்பின் சான்றிதழை வீட்டிலே வைத்து விட்டிருந் தான்.

ஒரு வேளை சோறு மட்டும் தின்றுவிட்டு மிச்சக் காசை பத்திரப்படுத்திக் கொண்டு...சென்னைக்குவந்து சேர்ந்ததும் வேலைக்கு அவன் அலைந்த அலைச்சல். தாடி மீசையை மழிக்க நேரமில்லை. மாற்று உடையில்லை. இந்தக் கோலத்தில் அவனைப் பட்டதாரி என்று எவன் நம்புவான்?... ஒரு ஆபீஸ் பையன் வேலைகூடக்கிடைக்காதநிலையில்தான் வெறுப்பு மேலோங்கி ஒரு கத்தியை வாங்கினான்.

முதலில் தன்னையே அதால் முடித்துக் கொள்ளத் தீர்மானித்தான். ஊஹூகும்! தற்கொலை செய்து கொள்ளக்கூட ஒரு தனிப்பட்ட துணிச்சல் வேண்டியிருந் தது உயிர் அவனுக்கு இன்னமும் வெல்லமாகத்தான் இனித்தது.

அழுத்தமாக அவன் பழங்காலத்தில் பாலைநில மக்கள் செய்த அந்தப் பழைய வேலையைச் செய்யத் தொடங்கிக்



கிளம்பினான். வழிப்பறி கொள்ளை என்பது அப்படி ஒன்றும் சுலபமான காரியம் அல்ல என்பதை அனுபவம் அவனுக்கு முதல் தடவையே பலத்த அதிர்ச்சியுடன் போதித்து விட்டிருந்தது.

இருட்டிய பின்பு பட்டணத்து கடற்கரையோரம். தன்னந்தனியே... விசிலடித்துக் கொண்டு ஈர மணலில் சென்ற மெலிந்த தோற்றமுடைய ஒரு இளைஞனை குறி வைத்துப் பின் பற்றினான். முதல் முயற்சி அது.

சுற்றிலும் பார்த்தால் கண்ணுக் கெட்டியவரை யாரையும் காணவில்லை. கட்டாயம் அந்த வாலிபன் பையில் ஐந்து ரூபாய்க்கு பஞ்சமிருக்காது. ஆங்கிலப் பாட் டொன்றை விசிலடிக்கிறான். பையன் பட்டணத்துக்காரன். கட்டாயம்கையில் கையில்கடிகாரம் கட்டிக் கொண்டிருப்பான், ஒரு சமயம் விரலில் ஒரு தங்க மோதிரமும் கழுத்தில் மைனர் செயினும் இருந்தாலும் இருக்கும். அப்படியிருந் தால் அவன் பாடு யோகந்தான். விநாடியில் பலவும் எண்ணி தொண்டையில் கரகரப்பைப்பரவிவிட்டுக் கொண்டே கடுமையான அடிக் குரலில் ''டேய்! பையிலிருக்கிறதை எடு...'' என்று அதட்டியபடி சினிமா வில்லன் போல கை யில் இருந்த அந்தக் கத்தியை நீட்டிக்கொண்டு ஒரு தாவலில் அவன் முன் போய் நின்றான்.

பையன் வெடவெட வென்று நடுங்கிப்போய் மணிபர்ஸ் மற்றைய பொருள்கள் எல்லாவற்றையும் தந்துவிட்டு தலை தெறிக்க ஓடி விடுவான் என்று எதிர்பார்த்தவனுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சி!

படார் என்று இடுப்பின் மீது கத்தியால் வெட்டியது போன்று...பையன் கராத்தே விளையாட...ஒரே அடியில் சுருண்டு விழுந்தவன் மயங்கிப் போனான்.

வேகமாக கரை மீது மோதிய அலை ஒன்று முகத்தில் அறைய...விடுக்கென்று எழுந்து உட்கார்ந்தான். அதற்குள் அந்த ஒல்லிப் பையன் வெகுதூரம் போய்விட்டிருந்தான்.

இருட்டு மையாகக் கப்பிக் கொண்டிருந்தது. கடல் நீரில் உடை முழுவதும் நனைந்துவிட்டிருந்தது... அடுத்த அலைந்து அவனைக் கடலுக்குள் இழுத்துக் கொள்ளுமுன் தள்ளாடியபடி எழுந்து ..மணலில் கால் புதைய நடந்து... சாலை ஓரத்திற்கு வருவதற்குள் அவனுக்கு மூச்சு முட்டியது. தனிவழிப் பயணம் செய்பவர்களைத் தாக்கினால்... இப்படியும் நடக்கலாம். தனி பங்களா.. வீடுகளில்... புகுந்து விளையாடினால் தாக்குதல் இல்லாது தேவைப்பட்டதை வாரிக்கொண்டு கிளம்பலாம். அடுத்ததாக ஏற்பட்ட பலத்த யோசனையில் கவனமாக...அவன் அப்படிப்பட்டதொரு வீட்டைத் தேடிக்கொண்டு தெருவில் அங்குமிங்கும்... பட்டினியும் பசியுமாக அலைந்துக் கொண்டிருந்தான். கடைசி வயிருப்புக்கு அந்தக் கடையில் ஒரு வாழைப் பழமும், குளிர்பானமும் வாங்கி சாப்பிட்டுவிட்டு காசைக் கொடுத்துவிட்டுக் கிளம்பியபோது அதிர்ஷ்டம் அவன் வழியில் குறுக்கிட்டது.

நாகேஸ்வரன் தெரு மூலையில் ..சாலையைப் பார்த்தபடி இருந்த அந்தக் கடை வாசலில்...அந்தப் பக்கத்து பங்களாக்களில் வேலை செய்துகொண்டிருந்த இரண்டு பேர் பேசிக்கொண்டு நின்றனர்.

''அந்தம்மாளுக்கு வயசாயிட்டாலும் ரொம்பத் துணிச்சல். ஊரு கெட்டுக் கிடக்கு. தன்னந்தனியே ஒரு நாய்கூட துணைக்கு இல்லாம இருக்கிறது நல்லதில்லேன்னு நம்ப சின்னம்மா சொல்லியாச்சு. கேட்டாத்தானே?...'' பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு பேசினான் ஒருத்தன்.

''அந்த வெள்ளை சாய வூட்டுக்கார அம்மாளைப்பத்திதானே சொல்றே! அவுங்க ஆப்பிரிக்காவிலே இருந்தாங்க. காடு— வனாந்தரம்... எல்லாம் பார்த்தவங்க... அந்தத் துணிச்சல். அட! அ... அந்தம்மா அதோ போறாங்களே எங்கே பார்க்கிற...நீலப்புடைவை கட்டிக்கிட்டு பிளாஸ்டிக் கூடையைத் தூக்கிகிட்டு மெதுவா நடந்து போறாங்களே... அந்தம்மாதானே?'. நெருப்புக் குச்சியால் சுவாரஸ்யமாக பற்களைக் குத்திக்கொண்டு வம்பு விசாரித்தான் மற்றவன். ''அவங்களேதான்...இந்த வயசிலே இந்தம்மாளுக்கு இம்மாத்துணிச்சலா?'' முதலில் பேசியவன் பீடிப் புகையைப் பலமாக ஊதினான். சட்டென்று...அந்தக் கிழவியைப் பின் தொடர்ந்தான். அவன்—வீட்டை தோட்டம் பார்த்துக் கொண்டான். சின்ன வயதில் அடுத்த வீட்டு மாடியில் பட்டம் பறக்கவிட அடுத்த வீட்டு மொட்டை மாடியில் விழுந்து விட்டபோது வீட்டுக்கார அம்மா அவனை மாடிக்குப் போகவிட மறுத்தாள். மாங்காய் பறிக்க மாமரத்தில்தான் ஏறிய பழக்கம்—அதை வைத்துக்கொண்டு மழைநீர்க் குழாயைப் பிடித்துக்கொண்டு குரங்கு போல் சரசர வென்று ஏறி பட்டத்தை எடுத்து வந்து விட்டான். அந்த தெம்பில்.



அந்த சியாமளாவின் வீட்டில் ஏறி.. வெண்டிலேட்டர் வழியாக உள்ளே குதிக்கப்போய் வசமாக சிக்கிக் கொண்டதுடன் அவளுக்குக் கொத்தடிமையாகி விட்டிருக்கிறான்.

இப்போது அவனுக்குத் தேவை சோறும்—தங்குமிடமும் அல்ல...விடுதலை...அங்கிருந்து வெளியேறும் பொன்னான வாய்ப்பு.

''என்ன யோசனை...அரிசி உப்புமாவுக்கு நிறைய தேங்காய் துருவி போட்டிருக்கேன். பிடிக்கலையா? தட்டை துழாவிண்டு இருக்கியே?'' கொஞ்சம் அதட்டலாகக் கேட்டாள் சியாமளா.

''எனக்கு அரிசி உப்புமா பிடிக்காது'' முணுமுணுத்தான்.

''பிடிக்காது பிடிக்கும் என்றெல்லாம் தேவைகளைப் பிரிச்சு வச்சுண்டு என்ன பிரயோஜனம்? எந்தச் சூழ்நிலையிலும் எதையும் சாப்பிட்டு வாழ முடியும்னு புரிஞ்சிண்டு இருந்தா வீட்டை விட்டு வெளியே வந்திருக்க வேண்டாம்

இல்லையா? உன் வீட்டவர்களை நீ ரொம்பவே ஆட்டி படைச்சிருக்கேன்னு நினைக்கிறேன்'' சியாமளா கண்டிப்பாகப் பேசினாள். அந்த உண்மை நெஞ்சில் சுரீர் என்றுதைப்பதை உணர்ந்து முகம் சுண்டிப் போனான்.

தன் மகனைப் போல் கவனித்த மன்னியை அவன் எத்தனை பாடு படுத்தியிருக்கிறான்

'உங்கண்ணா வேலையிலிருந்து வரதுக்கு நாழியாகும். தையல் கடையிலிருந்து அவருடைய ஷர்ட்டை வாங்கிண்டு வந்திடுப்பா.''

''எனக்கு வேலை இல்லை—வெட்டியாகத் திரிகிறேன்னு வெளிப்படையாக சொல்லிடறதுதானே? இப்படி சொல்லிக்காட்டத் தேவையில்லை...என்னால தையல் கடைக்குப் போக முடியாது...''

' இந்தச் செக்கைக் கொண்டு பாங்கில் கட்டிட்டு வா. சைக்கிளில் திமிஷமா நீ போயிட்டு வந்துடுவே. நான் நடந்து போய்விட்டு திரும்பறத்துக்கு நாழியாகும். சமையல் வேலை கெட்டுப் போகும் ''

''தண்டச் சோறு திங்கறே இதைச் செய்யுனு பளிச்சுனு சொல்றதுதானே?'?

''இன்னும் சமைக்கலை, இப்பத்தானே பாங்கிலிருந்து திரும்பி வந்தேன்...சாப்பாடு தயாராக இல்லைன்னு சொல்லி விரட்டப் போறீங்க, அவ்வளவுதான்... எனக்கு சாப்பாடு வேண்டாம், நீங்க ஏவற வேலையெல்லாம் செஞ்சுண்டு இருக்க நான் இந்த வீட்டு எடுபிடி ஆள் இல்லை,''

''சீக்கிரம் சாப்பிட்டுட்டு எழுந்திருப்பா'' சியாமளா மறுபடியும் அவன் சித்தனையைக் கலைத்தாள்.

''மேலே சொல்ல வேண்டாம். எனக்குத் தெரியும். ஹோஸ்பைப் வச்சுண்டு தோட்டத்து செடிகளுக்கெல்லாம் தண்ணீர் பாய்ச்சனும். அதுக்குப் பிறகு துணிப்பையைத்



தூக்கிண்டு உங்களோட கடைத் தெருவுக்குக் கிளம்பனும். இன்னிக்கு என்னென்ன வாட்டப் போகிறீர்களோ-எத்தனை மூட்டைதான் நான் சுமக்கனுமோ தெரியாது'' வெறுப்பாகக் கூறிவிட்டு எழுந்து கை கழுவிக் கொண்டான், வேண்டுமென்றே வெகு நேரம் தோட்டத்துச் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டு நின்றான்.

''போரும். ஹோஸ் பைப்பை சுருட்டி காராஜில் வச்சுக் கதவை மூடிப் பூட்டிவிட்டு வா.. இருட்டிக் கொண்டு வரது... நாம் கடைக்குப் போகனும்'' உள்ளேயிருந்தபடி இரைந்து கூப்பிட்டாள் சியாமளா.

சிறிது பொழுதில் உள்ளே வந்தான் அவன். இடுப்பில் கைகளைத் தாங்கிக்கொண்டு அவள் முன் வந்து நின்றான்.

''இரண்டு நாளாக மாடா உழைக்கிறேன். கைச் செலவுக்கு ஏதாவது பணம் தரதில்லையா?'' கேட்டான் மெல்லிய குரலில்...

சியாமளா தனக்குள்ள சிரித்துக் கொண்டாள்.''வேலை உடம்பில் பட்டதுமே கூலி வேணும் என்கிற நினைப்பு வந்துட்டதோ. அது போல பிறத்தியார் பணத்திலே சாப்பாடு உள்ளே இறங்கினதும் அதுக்கு உழைக்கணும்னு யோஜனை தோணலையே? அது தோணியிருந்தா இங்கே நீ ஏன் வந்திருப்பே...? சரி, கவலைப்படாதே, உன் செலவுக்கு ஒரு ஐந்து ரூபாய் தரேன். அதுக்கு மேலே கேக்காதே. இரண்டு நாள் வேலைக்கு சாப்பாடு செலவு போக இதுவே ஜாஸ்தி'' என்றாள். பையைத் திறந்து ஒரு ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டினாள்,

''ஆமாம்! அன்னிக்கு நான் உங்க அலமாரியிலிருந்து என் சட்டை பைக்குள்ளே கொஞ்சம் நோட்டுகளை எடுத்துப் போட்டுக் கொண்டேனே... அவைகள் எங்கே போச்சு?...'' திடீரென்று நினைவுக்கு வந்ததைக் கேட்டான்.

"துணியைக் கழற்றி தோய்க்கப் போட்டப்போ நீ பணத்தைப் பத்தி மறந்துபோனே. நான் எடுத்து திரும்ப என் பீரோவில் வச்சுக்கொண்டு விட்டேன்... பணம் ரூபாய் என்னுடையது. எடுத்துக்கொண்டுட்டேன். இந்த ஐந்து ரூபாய் உன்னுடையது-என்னா இதுக்கு நீ உழைச்சிருக்கே" அவளுடன் தர்க்கிக்க மனமின்றி அவன்... கடைத் தெருவுக்கு கிளம்பினான். காய்கறி கடைகளின் ஓரமாக அவள் வழக்கம் போல சுற்றிக் கொண்டிருந்தாள். தனக்கு சாப்பிட ஆரஞ்சு பழமொன்று வாங்கும் பாவனையில் ஓர் பழக்கடை அருகே அவன் நின்றான். அவள் திரும்பிப் பார்க்காது மேலே நடப்பதைக் கண்டு ஒரே ஓட்டமாக இருளில் மறைந்து பஸ் நிலையத்தில் புறப்பட நகர்ந்துகொண்டிருந்த வண்டியொன்றில் ஏறி அமர்ந்து கொண்டு அப்பாடா என்று பெருமூச்செறிந்தான்.

## 10

அடுத்த நிற்குமிடத்திற்கு வருவதற்குள் பஸ்ஸில் மூச்சுத் திணறும் அளவுக்கு ஒரே கூட்டம்!

"இன்னும் நீங்க டிக்கெட் வாங்கலை?... எங்கே போகணும்?" என்று கண்டக்டர் அதட்டிய போதுதான் அவனுக்கு உலக நினைப்பு வந்தது.

ஆமாம் அவன் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறான்? அருகிலிருந்தவர். "ஸாந்தோம் ஒண்ணு" என்று காசை எடுத்துக் கொடுத்தார்.

அவனும் அந்த நிறுத்தத்திற்கு ஒரு டிக்கெட் வாங்க ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினான்.

"சில்லரை இல்லையா?... எல்லாரும் நோட்டைக் கொடுத்தா?" முணு முணுத்தபடியே டிக்கெட்டையும்—



மீதிப் பணத்தையும் அவனுடைய கையில் அழுத்திவிட்டு கண்டக்டர் நகர்ந்தார்.

ஸாந்தோம் நிறுத்தத்தில் அவன் ஒரு பெரிய கும்பலுடன் வெளியே குதித்தான்—அதற்குள் இருட்டத் தொடங்கி விட்டது.

சாலை விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கி விட்டன.

சிறிது தூரம் பாதை ஓரமாக நடந்து அவன் எதிர் சாரியை அடைந்தான். மாதா கோயிலுக்குப் பக்கத்தில் கடலை நோக்கிச் செல்லும் பாதையில்... சூடான வேர்க் கடலை விற்றுக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். எதையாவது மென்று கொண்டிருந்தால்தான் சிந்தனை செயல்படுமென்றதொரு பரபரப்பு. சிறு பொட்டலம் வேர்க் கடலையை வாங்கிக்கொண்டு கூட்டத்துடன் நகர்ந்து மெல்ல கடற்கரையை நோக்கி நடந்தான்.

கொஞ்ச நேரம் படிகளின் மீது அமர்ந்தபடி சுற்றிலும் வேடிக்கை பார்த்துக்கொண்டு கடலையை ஒவ்வொன்றாகக் கொறித்துக் கொண்டிருந்தான். கடலை விற்றவன் உழக்கால் அளந்து காகிதத்திற்குள் போட்டு சுற்றித் தந்த போது—பெரியதாகத் தெரிந்த பொட்டலத்தைப் பிரி[illegible] பொழுது உள்ளே கைப்பிடி அளவுதான் கடலை அகப்பட்டது. அதுவும் கொஞ்ச நேரத்தில் காலியாகி விடவே அவன் காகிதத்தைக் கசக்கித் தூரப் போட்டுவிட்டு படிகளில் இறங்கி மணல் பகுதிக்குச் சென்றான். கும்பல் கும்பலாக எங்கு பார்த்தாலும்... மனிதர்களின் கூட்டம்... யாரையும் அவனுக்குத் தெரியாது என்ற போதிலும் யாரோ தன்னை அடையாளம் கண்டுகொண்டு விடுவார்கள் போன்றதொரு அச்சத்தில் மணல்மீது கால் செருப்பு புதைய அவன் மெல்ல நடந்து நீர்க்கரையோரம் சென்றான்.

'தாத்தா! கையைப் பிடிச்சுக்கோங்கோ! ஒரு பெரிய அலை வரது" என்று கத்திக்கொண்டு உற்சாகமாகக்

குதித்த ஒரு சிறுவன்... அருகிலிருந்த கிழவரின் கரத்தைப் பற்றிக் கொண்டு சுருண்டு ஓடி வந்த அலையோடு விளையாடிக் கொண்டிருந்தான்.

செருப்புகளை சற்றுத் தொலைவில் கழற்றி வைத்து விட்டு அவனும் சிறுபிள்ளையாக மாறி அலையோடு விளையாட ஈரமான ஓரத்திலே வந்து நின்றான்.

''தாத்தா! இன்னும் கொஞ்ச நேரம் இருங்கோ... இன்னும் ரெண்டு அலைகள் வந்தபிறகு போகலாம்' கெஞ்சிய அந்தச் சிறுவனை உற்றுப் பார்த்தான். பாயாக சுருண்டு ஓடி வந்த பெரிய அலை ஒன்று பளீரென்று அவன் காலில் மோதி பாண்டியன் ஓரத்தை நனைத்தது. அவன் அதைப் பொருட்படுத்தாமல் நின்று கொண்டிருந்தான்.

''வா!... போகலாம்... என் வேட்டி நனைஞ்சு போச்சு ஈரத்தோட மணலில் நடக்க எனக்கு கஷ்டமா இருக்கும்... போரும் விளையாட்டு வா...'' என்று அதட்டியபடி பக்கத்தில் நின்ற கிழவர் தன் கையைப் பிடித்துக் கொண்டிருந்த சிறுவனை அழைத்துக் கொண்டு... காய்ந்த மணலை நோக்கி நடந்தார்.

வெள்ளையாகி விட்டிருந்த அவர் தலைமுடி... நடுவே சிறு வட்டமாகத் தெரிந்த வழுக்கை—அவரது கதர் ஜிப்பா... மெலிந்த தோற்றம் எல்லாம் அவனுக்கு தாத்தாவின் ஞாபகம் வரவே, இத்தனை காலம் வெறுத்து மறந்து விட்டிருந்த வீட்டின் நினைப்பு நெஞ்சிற்குள் துயரப் பந்தாக எழுந்து மார்பை இறுக்குவதை உணர்ந்தான்.

''சே! அவ இன்னும என்ன பையனா?...' கண்ணீர் இமை ஓரங்களைச் சுடுகின்றதே!

மணல் மீது வந்து தனியே உட்கார்ந்தான். வானத்தின் விண்மீன்கள் அவனைப் பார்த்து கண் சிமிட்டின—இருட்டியபோதிலும் கடல்காற்றை விட்டுப் பிரிய மனமில்லாத கூட்டம் இன்னமும் கும்பல் கும்பலாக மணல்மீது பரவிக்



கிடந்தது. தாத்தாவின் ஞாபகம் இன்னும் தீவிரமாகி நெஞ்சை நெருடுவதை உணர்ந்தான்.

அவனது விதவைத் தாய். பிள்ளைகளுடன் தாத்தாவிடம் அடைக்கலமானபோது அவனுக்கு வயது பத்துதான் இருக்கும். மாரடைப்பால் தந்தையை இழந்துவிட்ட சோகத்திலிருந்து கல்லூரி மாணவனான அண்ணா எப்படியோ நிமிர்ந்து கொண்டு விட்டான். ஆனால் அம்மா சில மாதங்களில் அப்பாவைப் பின்பற்றி விட்டாள். காமாலை நோயில் போய்விட்டாள் என்றார்கள்—ஆனால் தாத்தா சொன்னது வேறு 'உங்கம்மா காமாலையில் சாகலை உங்கப்பாவை நினைச்சு உருகி உருகி செத்துப் போய்விட்டாள்.'

ஏற்கனவே மனைவியை இழந்து தன்னந்தனியே ஒரு பெரிய வீட்டில் ஒரு சமையல் ஆளுடன் திண்டாடிக் கொண்டிருந்த தாத்தா—தொடர்ந்து தொல்லைப்பட விரும்பவில்லை. அண்ணா படித்து வேலையொன்று ஒப்புக்கொண்டதும் சட்டென்று அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டார்.

மன்னி மைதிலி வீட்டிற்கு வந்த நாளிலிருந்து அவனை அம்மா போல பரிவுடன்தான் கவனித்துக் கொண்டாள். ஆனால் என்னவோ சமீப காலமாக—பி.ஏ. முடித்த பின்னர் வேலை கிடைக்காது அவன் திண்டாடியபோது அவனுள் ஏற்பட்ட எரிச்சல்—வெறுப்பு... இவைகள் காரணமோ என்னவோ... மன்னி பேசியதெல்லாம் அவனுக்கு விகல்பமாகப் பட்டது. அண்ணாவின் பார்வையில் அநேக அர்த்தங்கள் தெரிந்தன. அண்ணாவின் மகன் சேதுராமனின் பேச்சில் கூட அர்த்தங்களைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தான். தாத்தாவைத் தவிர வீட்டிலிருந்த அனைவரும் அவனுக்கு விரோதியாய்த் தென்பட்டனர்.

சின்ன வயதில் இடியும், மின்னலுமாக மழை கொட்டத் தொடங்கினால் பயந்து—அழுது கொண்டு தாத்தாவின் நாடா கட்டிலில் ஒடுங்கிக்கொள்வானே, நலிந்த தமது

கரத்தால் அவனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, "ஆண்பிள்ளை இதுக்கெல்லாம் பயப்படலாமா? அர்ச்சுனான்னு சொல் பயம் போயிடும்" என்று தேற்றுவார். மழிக்கப்படாத அவரது தாடையிலிருந்த முடி .. கன்னத்தில் குறுகுறுக்கும்போது களீர் என்று சிரிப்பான்

"என்னடா பயலே சிரிக்கிறே?"—தாத்தா செல்லமாக முதுகில் தட்டிக் கொடுத்தபடி கேட்கும்போது "நேத்திக்கு நீங்க சொன்ன நாய்க் கதையை நினைச்சு சிரிக்கிறேன். தாத்தா இன்னிக்கு கதை சொல்லுங்கோ..." கெஞ்சிக் குழைவான். தாத்தாவுக்குத்தான் எத்தனை கதைகள் தெரிந்திருந்தன. ஈஸாப் கதையிலிருந்து பாரதம் சுதந்திரமடைய தேசத் தலைவர்கள் செய்த தியாகம் வரை... வாய் அலுக்காது சுவாரஸ்யம் குன்றாது, தினமும் ஒரு கதை சொல்லி அவனைத் தூங்க வைப்பார். பார்த்த உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர் என்கிற தகுதியில் அவனது பள்ளிக்கூடத்து வீட்டுக் கணக்குகளைச் சரியாகப் போட்டு எடுத்துச் சொல்லி உதவுவார். அவனுக்குப் பிடிக்காத பூகோளத்தைக் கூடப் படிப்பார்... தினமும் மாலை வேளையில் அவனுடன் நெடுஞ்சாலை வரையில் உலாவப் புறப்படுவார்.

சின்னவனாக இருந்தபோது கதை. கல்லூரி மாணவனான போது அரசியல்—பொருளாதாரம்... நாட்டு நடப்பு என்று எத்தனையோ விஷயங்களை தாத்தாவுடன் அவன் அலசுவான். அவருக்கு இருந்த அபார ஞாபக சக்தி...புத்திசாலித்தனம் எல்லாம் கண்டு வியப்படைவான். குருவாகவும்—நண்பனாகவும் தாத்தாவாக அவர்—அவனை எத்தனை பாசத்துடன் நேசித்தார். கொஞ்ச நாட்களாக தாத்தாவுக்கு உடல் நலம் திருப்தியாக இருக்கவில்லை. முன்போல் நீண்ட தூரம் அவனுடன் நடந்து செல்ல முடியாதபடி தெம்பு குறைந்து விட்டிருந்தது. காய்ச்சலும் இருமலுமாக பத்து நாட்கள் படுத்தவர் துரும்பாக இளைத்துப்போனார். அந்த நிலையில் கூட அவனுக்கு எத்தனை ஆறுதல் சொன்னார், "வேலை கிடைக்கலைன்னு உன்னை யாரும் அசட்டை பண்ணலை



நீயே நினைச்சுண்டு வேதனைப் பட்டுக்கிறே-மைதிலி நல்ல பொண்ணுடா அம்மாவுக்கு மேலே உன்னைக் கவனிச்சவ .. அம்மா போல உன்னை கொண்டாடலாம்... ஆனால் கண்டிப்பா ஒரு வார்த்தை சொன்னால கோபம் வந்துடறதே தப்புடா..."

அந்தப் பெரிய மனத்தாங்கலுக்குக் காரணம் அண்ணாவின் பிள்ளை சேதுராமன்தான். மிகத் தவமிருந்து பெற்ற மகன். அதனால்தானோ என்னவோ சேது ரொம்ப துடுக்குத் தனமாகப் பேசுவான். அவன் தங்கை மிருதுளா, பெயருக்கேற்படி மிருதுவான குழந்தை. சித்தப்பா என்று மரியாதையாக அழைப்பாள். பள்ளிக்கூடத்திலிருந்து வந்த சேதுதான் கலகத்தை ஆரம்பித்தான். வேலை தேடி அலுத்துவிட்டு வீட்டுக்கு சோர்வுடன் திரும்பி வந்த அவன் உணர்வுகள் தொய்ந்து போக, உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்தான். தாத்தா வீட்டில் இருக்கவில்லை. தள்ளாடியபடி அருகிலிருந்த கோயிலுக்குப் போயிருந்தார். அண்ணா ஆபீசிலிருந்து வரும் நேரம். மன்னி சமையலறையில் வேலையாக இருந்தாள்.

"என் பேனாவைக் காணோம்...சித்தப்பா எடுத்துண்டு போனவர், திரும்பிக் கொண்டு வந்து வைக்கலை" கூக்குரல் எழுப்பியபடி சேதுராமன் தன் புத்தகப் பையை மேஜை மீது கோபத்துடன் வீசிப் போட்டான்.

"நான் ஏண்டா உன் பேனாவை எடுக்கறேன்?" சீறினான் அவன்.

"வேலைக்கு மனுப்போட எழுந்த அன்னிக்கு என்கிட்டே தானே கடன் வாங்கிண்டு போனேள்? மறந்து போச்சு! இப்ப கேட்காம நீங்க எடுத்துண்டு போயிருக்கேள். எனக்குத் தெரியாதா?"

"என்னடா சொன்னே?"

"உன்னதைச் சொன்னேன். ஒரு பேனா வாங்கக்கூட யோக்கியதை கிடையாது. ஓசியிலேயே காலத்தை ஓட்டறது. எங்கப்பா சம்பாதிச்ச காசிலே எனக்கு வாங்கித் தந்த பேனா... அதை கேட்காம எடுத்துண்டா திருடன்னு அர்த்தம்"

படார் என்று ஓங்கி ஆத்திரத்தில் சேதுவின் கன்னத்தில் அறையப் போக– அவன் வலி பொறுக்காது சுருண்டு மூலையில் விழ, மேஜையின் நுனி அவன் நெற்றியில்பட்டு ரத்தம் சொட்ட சமையலறையிலிருந்து ஓடி வந்த மன்னி பின்னையைப் பார்த்து அலற-ஆபீசிலிருந்து வந்த அண்ணா ஸ்தம்பித்து நிற்க, கோயிலிலிருந்து வந்த தாத்தாதான் துணியோடு சேதுவை தூக்கி நிறுத்தி மேல் துண்டால் நெற்றியை அழுத்திப் பிடித்துக்கொண்டு... அடுத்த வீட்டு பையன் உதவியோடு அவனைத் தூக்கிக் கொண்டு... தெருக் கோடியிலிருக்கும் குடும்ப டாக்டரின் கிளினிக்குக்கு எடுத்துப்போய் இரண்டு தையல் போட்டுக் கட்டி அழைத்து வர அன்று வீடு திமிலோகப்பட்டது. அதற்குப் பின்னர் அண்ணாவின் பேச்சிலும், மன்னியின் பதில்கள் எல்லாம் வித்தியாசமாகத்தான் அவனுக்குத் தென்பட்டன. குற்ற உணர்வினால் அப்படித் தோணியதோ? அது நடந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது அன்றிலிருந்து அவன் வீட்டவர்களை விரோதியாகக் கருதி எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்து... எதிர்த்துப் பேசி எல்லோரையும் பாடாய்ப் படுத்தினான்,

"ஏன்...சின்ன வயதிலிருந்தே தன் மடியில் போட்டுத் தட்டி தூங்கவைத்து கொஞ்சிக் குலாவிய தாத்தாவையே அவன் தூக்கி எறிந்து பேசிவிட்டானே?"

"இந்தக் கிழத்தோட தொண தொணப்பு என்னிக்கு ஒழியுமோ தெரியாது. தானே போய்க் கடையில் வாங்கிக்கிறதுதானே? புஸ்தகம் படிக்காட்டா தலை போய்டும் துரைவாளுக்கு?" என்று ஒருநாள் தாத்தா கேட்ட நூல் நிலையத்திலிருந்து இரவல் புத்தகம் எடுத்து வர மறுத்த போது, அவர் கம்மிய குரலில் பதில் சொன்னது இன்னமும் பளிச்சென்று ஞாபகத்துக்கு வந்தது.



"காலும் கையும் திடமா இருந்தா உன்னை ஏண்டா எடுத்துண்டு வந்து தரச்சொல்றேன். பொழுது போகமாட்டேங்கிறது: எதையாவது படிக்கணும்னு தோணறது... தொண தொணப்பு கிழமாக இன்னும் எத்தனைக் காலம் பகவான் போட்டு வச்சிருக்காரோ தெரியலை... சட்டுன்னு அழைச்சுண்டுட்டா எல்லாருக்கும் பாரம் குறையும்."

சின்ன வயதில் அவன் அழுதபோது.. மிட்டாய் வாங்கித் தந்து கன்னத்தில்வழிந்த கண்ணீரைத் துண்டால் துடைத்து கதைகள் சொல்லி, அவனை சமாதானப்படுத்தி, தந்தை இல்லை என்ற குறை தெரியாது வளர்த்த தாத்தாவை ஒரே வினாடியில் தூக்கி எறிந்து பேசினது எத்தனை தப்பு!

அவருக்கு உடம்பு சுகமில்லை என்று அண்ணா கொடுத்த விளம்பரம் உண்மையா...? ஒரு சமயம் தாத்தாவுக்கு உடம்பு அதிகமாகி... அவர்? மேலே நினைக்க முடியாது அவன் நெஞ்சை மீண்டும் வீட்டின் நினைவு வேதனையால் இழுக்க... கண்களில் நீர் புரண்டு பார்வையை மறைப்பதை உணர்ந்தான்.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு சடுதியில் சமாளித்தபடி தன்னைச் சுற்றிலும் பார்த்தான் கூட்டம் குறைந்து விட்டிருக்கிறது; மணலின் மீது இங்குமங்கும் சில தலைகள் மட்டுமே தெரிந்தன. அவன் செய்த குற்றங்களில் அடுத்தபடியான பெரிய தவறு... மன்னியின் சிகப்புக் கல் நெக்லசை எடுத்துக் கொண்டு சென்னைக்கு ஓடி வந்து அதை அடி விலைக்கு விற்றது... நகைக்கடையில் விற்க அவனுக்கு உதவியவனை அவன் முன்பின் பார்த்ததில்லை.

என்ன ஸார் ஏதாச்சும் என்று அவனே கேட்டான்.

"ஒரு நகையை விக்கணும்—வீட்டிலே அம்மாவுக்கு உடம்பு சுகமில்லை. அவசரம், பணம் தேவை."

பதிலுக்கு அந்த தொங்கு மீசைக்காரன் சிரித்தான். "என் கையிலேயே கதைவுடறியே" என்று கூறிக்கொண்டு அவனைத் தள்ளாத குறையாக அந்த சந்திலிருந்த சிறிய நகைக் கடைக்குள் தள்ளிக் கொண்டு போனான். அவன் கேட்ட விலை கிடைக்கவில்லை. எதி சந்திலிருந்த சிறிய நகைக் கடைக்குள் தள்ளிக்கொண்டு போனான். அவன் கேட்ட விலை கிடைக்கவில்லை. எதிர் சாரியில் தெரிந்த... ஒருபோலீஸ்காரனைக் கண்டதும் நடுங்கிப் போய் கிடைத்த பணத்தில்... தொங்கு மீசைக்கு கமிஷனைத் தொலைத்து விட்டு ஹைதராபாத்துக்கு ஓடி அங்கே பணம் போன நிலையில் மறுபடி சென்னைக்கு வந்து திருடத் துப்பில்லாது கராத்தேகாரனிடம் அடிவாங்கிக்கொண்டு வீட்டுக்குள் தொள்ளையடிக்க இறங்கி கால் சுளுக்கிக்கொண்டு கிழவி சியமளாவிடம் அடிமைப்பட்டதுதான் மிச்சம். அவன் சாதித்த காரியங்களின் சிகரம் அந்த அம்மாளிடம் ஆட்டிப் படைக்க வசமாகச் சிக்கிக் கொண்ட கட்டம்...

எழுந்து திடீரென்று சாலையை நோக்கி நடந்தான். படிகள் ஏறி வந்தவன், ஒரு நிமிஷம் மாதா கோயிலைப் பார்த்தபடி நின்றான். கையிருப்பு மூன்று ரூபாய் சொச்சம். அதை வைத்துக்கொண்டு. வயிறாரச் சாப்பிட முடியுமா?... ஆமாம். இரவு அவன் எங்கே தங்குவான்? ஊர் திரும்ப வேண்டுமானால் பஸ் ரயில் இவைகளுக்கு கட்டணம் கட்டக் கூடக் கையில் ஏதுதுல்லையே ..கடிகாரத்தைக்கூட விற்றுத் தின்றாகி விட்டது... தாத்தா பிறந்த நாளுக்கு வாங்கித் தந்த விலை உயர்ந்த பால் பாயிண்ட் பேனாவைக்கூட இரண்டு ரூபாய்க்கு விற்று, ஒருநாள் பசிக்கு டிபன் வாங்கிச் சாப்பிட்டாகி விட்டது. இனி என்ன செய்வது?

"யார்? பாபுவா? என்னப்பா இப்படி?" முதுகில் யாரோ தட்டுவதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினான்... வக்கீல் தேவநாதன் சாலை விளக்கொளியில் சிரித்துக் கொண்டு நின்றார்.



"பீச்சுக்குக் காத்தாட வந்தேன்" அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

"நல்லதுதான். பட்டணத்தைச் சுற்றிப் பார்த்து சந்து பொந்தையெல்லாம் தெரிஞ்சுக்கோ. வேலை கெடைச்சா எந்தப் பஸ்ஸில் எப்படி போகணும்னு புரியும் நானும் காத்தாட இப்படி இந்த பீச்சுக்கு வந்தது நல்லதாப் போச்சு. வழியிலே உன்னை வீட்டுல விட்டுட்டுப் போறேன் .. ஏறிக்கோ" ஒன்று தமது சிவப்பு பியட்டுக்குள் அவனை அடைத்துக் கொண்டு தேவநாதன் புறப்பட்டார்.

சியாமளா கதவைத் திறந்தாள். வராந்தாவின் வெளிச்சத்திலே, குற்றவாளிபோல் நின்ற அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

"பீச்சிலிருந்து அழைச்சுட்டு வந்து விட்டுட்டேன். பையனுக்குப் பட்டணம் புதுசு பாருங்கோ. எங்கேயாவது வீணாகங் சுத்திக் கொண்டிருப்பான். நீங்க கவலைப்படு வீங்க" என்றார் தேவநாதன்.

"ரொம்ப தாங்க்ஸ். நான்தான் பீச்சுக்கு அனுப்பி வைச்சேன். வீட்டோ கிடந்தா அவனுக்கும் சலிப்பாத் தானே இருக்கும்." என்று கூறி விட்டு—

"பாபு! நீ கைச் செலவுக்கு பத்து ரூபாயாவது எடுத்துண்டு வெளியில் போகணும். பேல்பூரி-பானிபூரி, மினகாய் பஜ்ஜி இதுகள் எதாவது வாங்கிச் சாப்பிடணும்னு ஆசைப் பட்டிருப்பாய். கையில் காசில்லாமல் முழிச்சிண்டு நின்னியா?" சிரித்தாள்.

"கவலைப் படாதீங்க. பாபுவை அடுத்த வாரம் நான் வந்து பீச்சுப் பக்கம் அழைச்சிண்டு போய், ஸங்கீதா கஃபேயில் பேல்பூரி, ரொட்டி எலலாம் வாங்கித் தந்து ஜமாய்ச்சுடறேன்..." என்று கூறிவிட்டு தேவநாதன் வெளியேறினார்.

''செல்லாத காசு போல திரும்பி வந்திருக்கேன்' உங்களை விட்டு, ஓட முடியலை பார்த்தீங்களா!..'' வெறுப்பும் கசப்புமாக பேசியபடி உள்ளே வந்தான் அவன்.

''உன்னை செல்லும் காசாக்க நாணயமான மனித னாக்க நான் முயன்று கொண்டிருக்கேன். அதனால்தான் என் எண்ணம் அப்படித் தூயதாக, உண்மையானதாக இருக்கிறதாலேதான் நீ மறுபடி இங்கே வந்திருக்கே. உனக்கு நல்ல காலம் பிறக்கப் போகுதுன்னு அர்த்தம். புரிஞ்சுக்கோ. சரி, கை கால்களை அலம்பிண்டு சாப்பிட வா. எனக்கு பசிக்கிறது. ரொம்ப நாழியா உனக்காகக் காத்திண்டு இருந்தேன்.'' தாயன்பு நிறைந்த அந்த வார்த்தைகள் நெஞ்சைத் தொட கண்களில் பெருகிய நீரை அவன் பார்த்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடன் குளி யலறைப் பக்கம் விரைந்தாள்.

26614
A345347

## 11

அதற்குப் பின்னர் நாள்கள் வேகமாக நகர்ந்தன. அவளுடன் அங்கே அவன் வசிக்கத் தொடங்கி ஒருமாத காலம் விரைந்து விட்டது. பல யுகங்கள் அங்கே தங்கி விட்டது போன்ற ஒரு பிரமை அவனுக்கு. தன்னிடம் அவள் என்ன வேலைகளை எதிர்பார்க்கிறாள் என்பதை அவனாகப் புரிந்துகொண்டு வீணான எதிர்ப்பு வெறுப்பு களை உதறிவிட்டு செயல்படத் தொடங்கினான்.

என்ன அதிசயம்? இத்தனை நாள்கள் அவனை ஆட்டிப் படைத்த அந்தப் படுசோம்பேறித்தனம் போன இடம் தெரியவில்லையே! எதற்கெடுத்தாலும் எரிந்து விழும் தன்மைஅடங்கிப்போய் எதிராளியின்பேச்சைக் காதில்



வாங்கிக் கொள்ளும் பொறுமை தானே உருவாகிக்கொண்டு வருவதை உணர்ந்தான்.

அவளது வீட்டில்...முன்னறை போன்ற பகுதியில்தான் அவன் உறங்குவது வழக்கம். அண்ணனும் மன்னியும் ஓர் அறையைத் தங்களுடையதாக்கிக் கொண்டு விட்டிருந்தனர். மற்றோர் அறைக்குள் தாத்தாவும் பள்ளிச் சிறுவனான சேதுவும் உறங்குவது வழக்கம். முன்போல அவன் தாத்தா விடம் ஒண்டிக் கொள்ளும் வயதைத் தாண்டிவிட்டதால் முன்னறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தான். ''அண்ணனைப் பார்க்க ஆபீஸிலிருந்து யாராவது காலை வேளையில் வருவா—எழுந்திரு!'' பொழுது விடியுமுன்பே பலதடவை அவனை எழுப்பப் பாடுபடுவாள்.

உம்...என்று கோபத்துடன் முனகிவிட்டு... படுக்கையில் மீண்டும் புழுவாகச் சுருட்டிக் கொள்வான்.

அவன் நிதானமாக எழுந்து பல் துலக்கி...முகம் கழுவி விட்டு காப்பி குடிக்க வருவதற்குள்... சமையலறையில் குக்கர் சீறிக் கொண்டிருக்கும். அண்ணன் குளித்துவிட்டு—தமது அன்றாட பூசையையும் முடித்துக் கொண்டு ஆபீஸ் புறப்படுமுன் காலைச் சாப்பாட்டை முடித்துக் கொள்ள காத்திருப்பார். விடியற்காலையிலேயே புழக்கடை கிணற் றிலிருந்து தண்ணீரை இறைத்து ஸ்நானம் செய்து விட்டு தமது வேட்டியைத் தாமே துவைத்து உலர்த்தி விட்டு நெற்றியில் பட்டையாக விபூதியும் கொடியில் காய்ந்த மடி வேஷ்டியுமாக தாத்தா... அருகிலிருக்கும் கோயிலுக்குப் போய்...ஸ்வாமி தரிசனம் முடித்துக் கொண்டு திரும்பி யிருப்பார். மருமகள் கொடுத்த காப்பியைக் குடித்துவிட்டு மகள் படித்து, மடித்துப் போட்டிருக்கும் காலைப் பத்திரி கையை விரித்து வைத்துக் கொண்டு. வராந்தாவில் சாய்வு நாற்காலியில்...அவனுக்காகத் தாத்தா காத்துக் கொண்டி ருப்பார்.

அண்ணனுக்கு ஆபீஸ் போக வேண்டிய அவசரம். சேதுவுக்குப் பள்ளிக்கூடம் கிளம்ப வேண்டிய நெருக்கடி. சமையலறை எதிரே இருந்த பகுதியில் தரை மீது தட்டுகளை வைத்து அவசரமாக, சாதம் குழம்பு கறி எல்லாவற்றையும் வேகமாக மன்னி பரிமாறுவாள். 'கொஞ்சம் ஆறட்டும் இன்னும் நாழியாகலை...அவசரப் படாதேள்....'' சொல்லிக் கொண்டே தலைக்கு மேலுள்ள மின்விசிறியை மெல்லச் சுழலவிடுவாள்.

அண்ணன் எதிரில் தரையில் உணவுப் பாத்திரங்களுடன் வந்து உட்கார்ந்து விடுவாள். ''உங்களுக்குப் பிடிச்ச பொரிச்சக்கூட்டு...உப்பு உரப்பு எல்லாம் சரியா இருக்கா...? என்ன வெறுமனே பூம்ம மாடுபோல தலையை ஆட்டினா... இன்னும் கொஞ்சம் கூட்டு போட்டுக்கோங்க...டேய் சேது! சாதத்தை இரைக்காதேடே. ஒவ்வொரு பருக்கையையும் சம்பாதிக்க உன் அப்பா.. எப்படிக் கஷ்டப்பட்டு உழைக்கிறார் தெரியுமா?தயிர் இன்னும் கொஞ்சம் போட்டுக் கோங்கோ. எலுமிச்சம் காய் ஊறுகாய் வைக்கட்டுமா...?

பரிவுடன் கணவனையும்-மகனையும் உபசரிப்பாள்.

''செருப்பு வார் அறுந்து போயிருந்ததை நீங்க கவனிக்கலை. நான் பார்த்துட்டேன்— நேத்திக்கு சாயங்காலம் அதைக் கொடுத்து தைச்சு வாங்கி வச்சிருக்கேன்... டிபன் சாப்படறதை மறந்துட்டுப் போயிடாதீங்க... குடையை வச்சிட்டுப் போறேளா...மழைக்காலம் ஆரம்பமாகி விட்டது. சாயந்திரம் ஆனதும தினம் தூத்தல் போடறதே. போன வருஷம் இப்படித்தானே ஒரு சின்ன மழையிலே நனைஞ்சுட்டு வந்து பத்து நாள் ஜுரமா படுத்துண்டு இருந்தேளே மறந்து போச்சா?...''

நேத்துத்தான் கல்யாணமாகி புக்ககம் வந்தவள் போல மன்னி—அன்பாகப் பேசிப் பொறுப்போடு நடந்து கொண்டு கணவனை அலுவலகம் அனுப்ப காட்டும் சிரத்தை பிரயாத



மாக இருக்கும். அந்த வகையில் மன்னிக்கு ஈடு இணை மன்னி மைதிலியேதான்

அதற்குப் பின்னர் மன்னி பல முறை அவனைக் கத்திக் கூப்பிட்ட பின்னர்தான் படித்துக் கொண்டிருக்கும் நாவலைக் கீழே வீசிப் போட்டுவிட்டு வெறுப்புடன் சோம்பல் முறித்துக் கொண்டு அவன் குளிக்க எழுவான்.

ஒரு டப்ளர் காப்பியுடன் ஒட்டிய வயிறோடு— பசியைத் தாங்கிக்கொண்டு பேரனுக்காக தாத்தா வராந்தாவிலேயே உட்கார்ந்திருப்பார். குளியலறையில் அவன் ஒரு ஜலக் கிரீடையே செய்து முடிப்பது வழக்கம்.

''டாங்கிலே தண்ணி ரொம்ப ஏறமாட்டேங்கிறது— எல்லாத்தையும் முடிச்சுடாதே' மன்னி... கத்திக்கொண்டேயிருப்பாள்...

ஷவரைத் திருப்பி விட்டுக்கொண்டு—பூவாக நீர் தலை மீது கொட்ட கற்பனை உலகிலே அவன் ஆழ்ந்துபோய் விடுவான்.

சாப்பிட உட்காரும்போது மணி பகல் பன்னிரண்டாகி

விடும்

''ஆறி அவலாப் போச்சு. குழம்பைக் கொஞ்சம் சூடு பண்ணிக்கொண்டு வரேன்'' என்று மன்னி சொல்வதைத் தாத்தா மறுப்பார்.

''பரவாயில்லை பரிமாறம்மா. சாப்பிடணுங்கிறதுக்கு நாம் வாழலை. வாழணுங்கிறதுக்கு ஏதோ சாப்பிட வேண்டிருக்கு'' வறட்சியாக சிரித்தபடி...காய்ந்துபோய் இலையில் விழும் சாதக்கட்டியை விரல்களால் உடைத்து குழம்போடு கலந்துகொண்டு சாப்பிடத் தொடங்குவார். குற்ற உணர்வுடன் அவனும் மௌனமாக குழம்பு சாதத்தை வாயில் அடைத்துக் கொள்வான்.

தாத்தா சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு குட்டித் தூக்கம் போட தமது அறைக்குள் போய் கட்டிலின் மீது முடக்கிக் கொண்டு விடுவார்...

மன்னி சாப்பிட உட்காருவதற்குள் பகல் மணி ஒன்றாகி விடும் காலையிலிருந்து வெறும காப்பியுடன், ஓயாது நிற்காது, உழைத்துக்கொண்டிருக்கும் அவளுக்கும் கோபம் வரத்தான் செய்யும். சில சமயம் அவள் பேச்சில் அது பளிச் சென்று தெரியும்.

''தாத்தாவுக்குப் பசி தாங்காதுன்னு தெரியுமோல்லியோ? சீக்கிரம் குளிச்சிட்டு வந்தா என்ன? பாவம். அவர் சாப்பிடறது ஒரு பிடிசாதம். அதைக்கூட வேளைக்கு அவர் சாப்பிட விடமாட்டேங்கிற? இப்படி எல்லோரும் ஒருத்தர் ஒருத்தரா வந்து உங்கார்ந்தா மத்த வீட்டு வேலையை யார் கவனிப்பா? நாள் முழுக்க வேலை பண்ண நான் என்ன மிஷினா?'' சிடுசிடுத்தபடி, தட்டில் குழம்பை யும் சாதத்தை யும் வழித்துப் போட்டுக்கொண்டு சாப்பிட உட்காருவாள். அநேகமாக அவள் முறை வரும்போது பாத்திரத்தில் கூட்டோ கறியோ மீதம் இருக்காது.

''பண்ணினவளுக்குப் பானை'' என்று சிரித்துவிட்டு அவள் சாதமும் மோரும் வடுமாங்காயும் போட்டுக்கொண்டு திருப்தியுடன் எழுந்து விடுவாள்.

''அண்ணனைப் போலவோ, அவனைப் போலவோ, மன்னி வயிறு புடைக்க வக்கணையாக எல்லா பக்க பதார்த் தங்களுடன் சாப்பிட்டதை அவன் பார்த்ததேயில்லை. சில சமயம் குக்கரின் அடிபாத்திரத்தில் பற்றும் பற்றாத அளவில் தான் சாதம் மிஞ்சியிருக்கும். பாதி வயிற்றுக்கு சாப்பிட்டு மீதி வயிற்றைத் தன் குடும்பத்தை பராமரித்த திருப்தியில்... நிரப்பிக்கொண்டு அவர்களுக்காகவே வாழ்ந்துகொண்டி டிருக்கும் மன்னி மைதிலியை அவன் ஏன் புரிந்துகொள்ள வில்லை?



மன்னி அந்த வீட்டுக்கு இன்றியமையாதவள். அவள் இல்லாவிட்டால் வீடு காடாகிவிடும் என்கிற உண்மையை யும் அவன் ஒரு சமயம உணர்ந்துகொண்டு விட்டிருந்தான்.

ஒரு சிறிய அறுவை சிகிச்சைக்காக மன்னி மைதிலி, இரண்டு நாள்கள் ஆஸ்பத்திரியில் தங்க நேர்ந்தது.

அவள் இல்லாத வீட்டில்... ஆண்களாக அவர்கள் மூவரும் பள்ளிக்கூடம் போகும் ஒரு சிறுவனுடன் பட்ட பாடு...

தாத்தா நடமாடிக்கொண்டு காலை காப்பியைக் கலந்து எல்லாருக்கும் விநியோகித்தார்.

அண்ணன், சேதுவைக குளிக்க வைத்து,சீருடை மாட்டி பள்ளிக்கூடத்திற்கு தயார் செய்ய பாடுபட்டுக் கொண்டிருந் தார். அருகிலிருந்த ஹோட்டலிலிருந்து எடுப்புச் சாப் பாட்டைத் தூக்கிக் கொண்டுவந்து அவுன் வைக்க பஞ்சத் திலடிபட்டவர்கள் போல, தட்டுடன் அதைச் சுற்றி அவர்கள் உட்கார்ந்துகொண்டு அவசரமாகச் சாப்பிட்டதும் அதற்குப்பின் பாத்திரங்களை எடுத்து வேலைக்காரியிடம் போட்டு தேய்த்து வாங்கி உள்ளே வைக்கும் பொறுப்பை அண்ணன் அவனிடம் கொடுத்துவிட்டுப் போனதும்...

அவரை எதிர்த்துப் பேச முடியாது. அவன் தாத்தா வுடன் கூட சமையலறையைக் கழுவித் துடைத்துச் சுத்தப் படுத்த முயன்றதையெல்லாம் மறக்கவா முடியும்?

மூன்றாவது நாள் மன்னி ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும் உடனடியாக ஸ்நானம் செய்துவிட்டு, வீட்டு நிர்வாகத்தை மேற்கொண்டாள்.

''இன்னும் ஏதாவது பாத்திரம் அலமாரியில் பாக்கி யிருக்கா?... துணிகளை மூட்டையா குவிச்சு இருக்கேளே... இன்னும் ரெண்டு நாள் பொறுத்து வந்திருந்தா இங்கே சிங்கம்—புலி...கரடி எல்லாம் வந்து உட்கார்ந்திருக்கும்...''

சொல்லிவிட்டுச் சிரித்தாள். யாரையும் அவள் தனிப்பட்ட முறையில் கோபித்துக் கொள்ளவேயில்லை...

வெகு தொலைவில் இருந்த வண்ணம்—நடந்ததையெல்லாம் மனதில் அசை போட்டுக்கொண்டு பார்க்கும்போது... மன்னி மைதிலி ரொம்ப அன்பான மன்னிதான்—தாயார் போல அவனை கவனித்துக் கொண்டவள்தான்.

அவள் காட்டிய பரிவுக்குப் பிரதியாக அவன் செய்தது எத்தனை பெரிய துரோகம்? அவளது சிவப்புக்கல் நெக்லசைத் திருடிக்கொண்டு வந்து அடி விலைக்கு விற்று... பணத்தை நாசப்படுத்தி விட்டானே?

அந்த நெக்லசை செய்துகொள்ள மன்னிஎத்தனை பாடு பட்டாள். பல வருஷம்—குருவி சேர்த்தது போல அவன் தன் கணக்கில் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்து அண்ணனுடைய நிர்ப்பந்தத்திற்காக... அதைச் செய்து கொண்டாள்.

அது காணாமற் போய்விட்டதை உணர்ந்ததும் அந்த வீட்டில் என்ன நடந்திருக்கும் என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது.

மன்னி விக்கி விக்கி அழுது கொண்டிருப்பாள்.

இப்படி இவனுக்கு ஒரு புத்தி போச்சே... குலத்திலேயே இல்லாத குணம்—திருடணும்னு ஆசையா வரணும்?... அண்ணா கோபத்துடன் பரபரப்பாக முன்னறையில் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருப்பார்.

'என்னம்மா ஏன் அழறே!... சித்தப்பா எங்கே?... கேட்டபடி பள்ளிக்கூடத்திலிருந்து வரும் சேதுவைத் தன்னோடு அணைத்துக்கொண்டு, தாத்தா வெளியே அழைத்துக்கொண்டு போய்விடுவார்,

தமது அருமைப் பேரன் சித்தார்த் ஒரு திருடனாகி விட்டதை அந்தக் கிழவரால் தாங்கிக்கொள்ள முடியாது.



ஒரு சமயம் அதனால்தான் அவர் உடல் நலமில்லாது படுத்து விட்டாரோ? மன்னி–அண்ணன்—தாத்தா—சேது எல்லாரும் நினைவில் வர... கன்னத்திலே உருண்ட கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டான். சின்னம்மா வந்து மிரட்டும் முன்பே தானாகவே வந்து விட்டான். சியாமளா சொல்லு முன் சாப்பாட்டறை மேஜையைத் துடைத்து துணி விரிப்பைப் போட்டு பீங்கான் தட்டுகளை எடுத்து வைத்துவிட்டு தயாராக காத்திருக்கப் பழகிக்கொண்டான். காலை டிபனுக்கு அடை. வார்த்து தட்டில் அடுக்கி அவள் தூக்கிக்கொண்டு வந்தாள்-பின்னால் ஓடிச் சென்று காப்பி கலந்து வைத்திருந்த பீங்கான் கெட்டிலையும், ஊற்றிச் சாப்பிட இரண்டு கோப்பைகளையும் எடுத்து வந்து மேஜை மீது வைத்தான்.

காலை டிபனுக்குப் பின் தபாலாபீசிற்குப் போய் அவளுக்குத் தேவையான ஸ்டாம்பு... கவர் இத்தியாதிகளை வாங்கி வந்தான். அவள் எழுதி வைத்திருந்த கடிதங்களை தபால் பெட்டியில் சேர்த்தான். எலக்ட்ரிக் பில் கட்ட வேண்டுமா—ரேஷன் கடைக்குப் போய் சர்க்கரைக்கு கியூவில் நிறக வேண்டுமா... அவன் எதற்கும் இப்போது அலுத்துக் கொள்ளவில்லை.

மாலை வேளையில் மறக்காது தோட்டத்தைக் கவனித்தான். களை எடுத்து அவ்வப்போது, மரத்தைச் சுற்றி மண் வெட்டியால் குழி வெட்டி எருப் போட்டு. நீர் பாய்ச்சி கருத்தோடு கவனித்தான். ஆரம்பத்தில் தலை வேதனையாக இருந்த தோட்ட வேலை, இப்போது அவனுக்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. முதல் நாள் மாலை மொட்டாகத் தெரிந்த ரோஜா. மறுநாள் காலை இதழ் விரித்துக்கொண்டு மலர்ந்து காற்றில் மணத்தைப் பரப்பி, அசைந்தாடியதைக் கண்டு மகிழ்ந்து போனான். அவன் வந்த புதிதில் ஒரு மெல்லிய கொடியாகப் படர்ந்திருந்த நித்திய மல்லிகை இப்போது செழிப்பாகப் படர்ந்து. கொத்துக் கொத்தாக

அரும்பு கட்டியிருப்பதைக் கண்டு பூரித்துப் போனான். போகன்வில்லா இலை தெரியாது பூத்துக் குலுங்குவதை அதிசயமாகப் பார்த்து பிரமித்தான். இப்பொழுது தான் அவனுக்குப் புரிந்தது... அவர்கள் வீட்டின் பக்கத்தில் வசித்த ஓய்வடைந்த ஓர் உயர் மட்டத்து அதிகாரி... ஒருவர் சதா தோட்டத்தைச் சுற்றி வந்து கொண்டிருப்பதைக் கண்டு அவன் அனாவசியமாக எரிச்சல் பட்டதுண்டு.

தானே ஒரு சிறுமுள் கரண்டியால் மண்ணைக் கிளறிக் கொண்டிருக்கும் அவரைப் பார்த்தால் அவனுக்கு ஆத்திரம் பொங்கும். காசு செலவழிந்து ஒரு தோட்டக்காரரனை வைத்துக்கொள்ள மனமில்லாத கஞ்சன் என்று தன்னுள் அவரைப்பற்றிக் கடுமையாக எண்ணிக் கொண்டிருந்தான்.

மண்ணுக்குள் புதைக்கப்பட்ட ஒரு விதை செடியாகி பூத்து காய்த்து நிற்கும அற்புதத்தை ஒவ்வொரு நிலையிலும் பார்த்துக் களிக்கும அனுபவத்திலே ஒரு தனியான சுகம் இருக்கிறது. அதுதான் காரணம், அடுத்த வீட்டுக்காரர் தோட்டத்தையே சுற்றி வருகிறார்...

பின் பக்கமிருந்த கிச்சன் கார்டனில் அவன் சில நாள்களுக்குமுன் முளை நட்டு வைத்திருந்தபீன்ஸின்முளை தரை பிளந்து கொண்டு வெளியே தன் முதுகைக் காட்டுவதை வியப்புடன் குனிந்து பார்த்துக் கொண்டு நின்றான். பின்னால் சரசரவென்றதொரு சப்தம்.... கவனத்தை ஈர்க்கவே சட்டென்று திரும்பியவனுக்கு இன்னும் அதிசயக் காட்சி.

ஆரஞ்சுவண்ண மல்மல் புடவையில்... விளம்பரத்திற்காக போகன் வில்லாவின் பின்னால் வந்து நிற்கும் மாடல் அழகியைப்போல யார் அவள்?

''கரண்ட் கட் ஆகி விட்டிருக்கோ? வாசல் அழைப்பு மணியை அடிச்சேன். சத்தமே வரலை. கதவைத் தட்டினேன். மாமி வந்து திறக்கலை. ஒரு சமயம், பின்பக்கத்து தோட்டத்திலே வேலையா இருப்பாளோன்னுட்டு வந்தேன்.''



லேசாக கன்னங்களில் செம்மை படர, கண்கள் பளபளக்க, மெல்லியதொரு புன்னகையுடன் சன்னமான குரலில் பேசி அவனை வைத்த கண் வாங்காது வியப்புடன் பார்த்தாள்.

''மாமி வீட்டில் தானே இருக்கா? சாதாரணமா இந்த வேளையிலே கடைக்குப் போக மாட்டா. வெயில் தாழ்ந்தப்பறத்தான் கிளம்புவா?'' மறுபடியும் அவள் கேட்டதும் விழித்துக் கொண்டான்.

'பெரியம்மா உள்ளேதான் இருக்காங்க, கூப்பிடறேன். நீங்க?'' அவன் கேட்டு முடிக்கு முன்ன...

''என்னம்மா சுஜி...வேலையெல்லாம் எப்படி இருக்கு?''

கேட்டபடி பின்னால் வந்து எட்டிப் பார்த்தாள் சியாமளா...

இந்த அழகிதான் சுஜி என்பவளா? காரசாரமாக நாக்குக்கு ருசியாக முருங்கைக்காய் சாம்பார் வீடு முழுக்க மணக்கிறாப்பல சமைச்சிருந்தாளே அந்தப் பெண் சுஜரிதாவா இவள்?

அழகானதொரு காவியம் போல, ஏன் ஓர் ஓவியம் போல நன்றாக இருக்கிறாளே!

அவர்களிருவரும் கலகலவென்று பேச்சும் சிரிப்புமாக உள்ளே போவதை வியப்பும் திகைப்புமாகப் பார்த்தபடி ஹோஸ் பைப்புடன் அவன் தோட்டத்தில் ஸ்மபித்ததாற் போல நின்று கொண்டிருந்தான்.

# 12

மறுபடியும் அவளை ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற தோர் ஆவல் அவனுக்கு ஏற்பட்டது.

ஹோஸ் பைப்பைப் பிடித்துக்கொண்டு வெகுநேரம் வாயிற்பக்கத்துத் தோட்டத்து செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். செடிகள் மீது ஒரு கண்ணும், வாயிற் படிகள் மீது ஒரு கண்ணுமாக அவன் வெகுநேரம் நின்று சலித்துப் போனான்.

மஞ்சள் வெய்யில் மறைந்து—பொழுது அமிழ்ந்து கொண்டு போவதை உணராதது போல உள்ளே போன அந்தப் பெண் வெளியே வரவேயில்லை.

ஹோஸ் பைப்பைச் சுற்றி கராஜிற்குள் வைத்துப் பூட்டி விட்டு அவன் மெல்ல உள்ளே வந்தான்.

சமையலறையிலிருந்து கம்மென்று நெய் மணமும் கலகலவென்ற சிரிப்பொலியும், வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தன.

தோட்ட வேலைக்காக அவன் போட்டுக் கொண்டிருந்த பழைய பாண்ட் ஈர மண் பட்டு அழுக்காகி விட்டிருந்தது. ஹோஸ் பைப் பீய்ச்சிய தண்ணீர் சட்டை மீது பட்டு, அது முழுவதும் நனைந்து விட்டிருந்தது. இந்தக் கோலத்துடன் சமையலறைக்குள்ளிருக்கும், அவளை எட்டிப் பார்க்க அவனுக்கு வெட்கமாக இருந்தது.

மாற்றுடை, சோப்புப் பெட்டி, துவாலையுடன் அவன் குளியலறைக்குள் விரைந்தான். ஷவரிலிருந்து பூவாக ஜில்லென்று நீர்த்துளிகள் தலை மீது கொட்ட பொங்கிப் புறப்பட்ட உற்சாகத்துடன் அவனையும் மீறி சினிமாப்



பாட்டொன்றை அடிக்குரலில் பாடியபடி அவன் அவசர மாகக் குளித்தான்.

மாற்றுடை அணிந்து கொண்டு, தலையைத் துவட்டிய படி மெல்ல, நடந்து படுக்கை அறைக்குள் ஓசைப்படாது நுழைந்தான்.

அலங்கார மேஜைமேல் பொருத்தப்பட்டிருந்த ஆள் உயரக் கண்ணாடியில் அவனது முழு உருவமும் தெரிந்தது.

பரவாயில்லையே, இந்தக் குறுகிய காலத்திற்குள் அவன் முகத்திலும் தோற்றத்திலும், எத்தனை ஒரு மாறுதல்?

கன்னத்தில் சதைப் பிடிப்பு ஏற்பட்டு, அந்தப் பயங்கர தாடி மீசை போனதும், வெயிலாலும் பசியாலும் வாடி கருத்து விட்டிருந்த முகத்துக்கே பழைய கோதுமை நிறம் வந்து விட்டிருந்தது. அந்த அரும்பு மீசை முகத்திற்கு ரொம்ப அழகாகவே இருந்தது. கழுத்துக்கு மேல் சீராக வெட்டப்பட்டிருந்த கிராப்புச் சிகையலங்காரம் அவனது தோற்றத்திற்கே ஒரு மதிப்பைக் கூட்டி விட்டிருந்தது. எல்லாவற்றையும் விட அவன் அன்று அணிந்து கொண் டிருந்த அந்தப் பழுப்பு வண்ண பாண்டும், குறுக்குக் கோடுகள் போட்ட லேசான மஞ்சள் நிற ஸ்போர்ட்ஸ் ஷர்ட்டும், அவனுக்கு எத்தனை பொருத்தமாக இருந்தன!

சியாமளாவின் அலங்கார மேசைமீது வைக்கப்பட் டிருந்த டால்கம் பவுடரைப் பார்த்தபோது ஓர் அல்ப ஆசை இவன் மனதில் ஏற்பட்டது. சிறிதளவு பவுடரைக் கையில் கொட்டிக்கொண்டு முகம், கழுத்து முதலிய பாகங்களில் பூசித் துடைத்துக் கொண்டால்? கம்மென்று மனத்தில் உற்சாகம் கொப்பளிக்குமே?

அவர்கள் வீட்டில் அவன் அப்படித்தான் செய்வது வழக்கம்.

மன்னி மைதிலியின் டால்கம் பவுடர் டின்னுடன் குளிய லறைக்கு ஓடிவிடுவான்.

குளித்தபின், உடம்பு முழுவதும் பவுடரை அப்பிக் கொண்டு, அதன் வாசனையில் திளைத்தபடி ஜம்மென்று மாற்றுடையில் மாப்பிள்ளைபோல் அலங்காரமாக வெளியே புறப்படுவான். வரவர அவனது அட்டகாசமான அலங்காரச் செலவுகள் அதிகமகிக் கொண்டு வந்தன. ஆனால் மன்னி மைதிலி ஒரு வார்த்தை அதைப் பற்றிப் பேசியவள் அல்ல...

தன் மகன் சேதுராமன் குளித்த பின்னர் பள்ளிக்குப் புறப்படுமுன் சீருடை போட்டுக் கொண்டதும், கால் விரல்கள் மீது பவுடரைத் தூவிக் கொண்டு மேஜோடு அணிந்து கொள்ளும்போது மட்டும் இரைவாள்

"தேவைப்பட்டதைக் கையில் கொஞ்சம் கொட்டிக் கொண்டு உபயோகிக்கறதை விட்டுட்டு டப்பாவையே காலில் கவுத்துகிறாயே நம்பளுக்குக் கட்டுபடியாகுமா?" அதட்டுவாள்.

மறைமுகமாக தன்னை இடித்துச் சொல்வதாக அப்பொழுதெல்லாம் அவனுக்கு மன்னி மீது மனத்தாங்கல் ஏற்பட்டது உண்மைதான்.

அவன்தான் அன்று காலை சியாமளாவுக்கு அந்தப் பவுடர் டின்னைக் கடையிலிருந்து வாங்கி வந்திருந்தான்.

இந்தச் சில மாதங்களில் அதன் விலை திடீரென்று கூடி விட்டிருந்தது.

தன்னந்தனியே வாழும் சியாமளாவோ, அந்த விலையைப் பார்த்து விட்டு அசந்து போனாள்.

'பொருள்களின் விலைவாசி இப்படி உசந்துண்டு போனால் என் வட்டிப் பணத்தில் வருங்காலத்தை நான் எப்படிச் சமாளிக்கப் போறேன்?' என்று அலுத்துக் கொண்டாள்.

அண்ணன் ஒருவரின் சம்பாத்தியத்தில் இரண்டு குழந்தைகள்தான். கணவன், மச்சினன், மாமனார்



எல்லாரையும் பற்றாக்குறையில்லாது வாழ வைக்க வேண்டுமென்றால், மன்னி பாவம் ரொம்ப திண்டாடிப் போயிருப்பாள். அவளது சிரமத்தைப் புரிந்து கொள்ளாது அவள் என்ன சொன்னாலும், அந்த வார்த்தையில் குற்றம் கண்டு பிடித்து, வாழ்க்கையைக் குழப்பிக் கொண்டது எத்தனை பெரிய தவறு?...

எண்ணியபடி பவுடர் டின் மீது கையை வைத்தான். தேள் கொட்டியது போல விலுக்கென்று எடுத்துக் கொண்டான்.

சே! சியாமளா அம்மாள் தன் உபயோகத்திற்குத் தன் பணத்தைப் போட்டு வாங்கி வைத்திருப்பதை, கேட்காமல் எடுத்து உபயோகிப்பது எத்தனை கேவலம். அப்படியெல்லாம் ஓர் அலங்காரம் தேவைதானா? வார முடிவின்போது அவன் செலவுக்கு அவள் தரப்போகும் பணத்தில் தனக்கென்று ஒரு டின் வாங்கி வைத்துக் கொண்டால் போச்சு...

இனி நான் எதையுமே பாடுபட்டு – உழைத்துத்தான் தேடிக் கொள்ளப் போகிறேன். இனாமாகவோ, திருடியோ உபயோகிக்க நினைக்கும் எண்ணத்தைவிட்டு தலை நிமிர்ந்து நாணயமான, ஒழுக்கமான ஒரு நல்ல வாலிபனாக இருக்க வேண்டும்.

சமையலறையில் கேட்ட சிரிப்பொலி அவனது நெஞ்சில் ஒரு பரவச உணர்வை உண்டாக்கவே சட்டென்று தன் உருவத்தை மீண்டும் ஒரு முறை கண்ணாடியில் பார்த்து விட்டு வெளியே வந்தான். படீர் என்று வாசல் கதவு சாத்தப்படும் ஓசை கேட்டது. பூஜை அறையில் மெல்லிய தாக விளக்கு எரிவது தெரிந்தது! அந்த ஊதுவத்தி மணம் முகத்திலே மோதியது

"விளக்கேத்த வீட்டுக்கு ஒருத்தி வேணும்னு இதுக்குத்தான் சொல்வது. வெள்ளிக்கிழமை,ஒருநாள் மட்டும் பூஜையறையை பெருக்கி குத்துவிளக்கை எடுத்துத் தேய்க்க

அலம்பித் துடைச்சு— அறையையும் சுத்தப்படுத்திவிட்டு படங்களுக்குப் பூப்போட்டு...விளக்கேத்தி வைக்கறதுக்குள்ளே எனக்கு மேல் மூச்சு வாங்கிடறது. சுஜி வந்து ஒரு மணிநேரம்கூட ஆகலை. என்னோட சமையலறைக்குள்ளே வந்து நிமிஷமா அடுக்கு பரோட்டாவை செஞ்சு வச்சுட்டு, தொட்டுக்க உருளைக்கிழங்கு கூட்டும் பண்ணி வச்சுட்டா... என்ன மாமி பூஜையறை குத்துவிளக்கு ரொம்ப கருத்துப் போயிடுத்தேன்னுட்டு மடமடவென்று பூஜையறையைத் துடைச்சு கோலம் போட்டு— குத்துவிளக்கு புளி போட்டு பொன்போல பளபளக்கத் தேய்ச்சு— துடைச்சு— எண்ணையும் திரியும் போட்டு ஏத்தி வெச்சுட்டுப் போனா. நான் ஒரு ஊதுவத்தியைக் கொளுத்தி வைச்சிட்டு விழுந்து நமஸ்காரம் பண்ணிட்டு வந்தேன்... வயசாயிட்டா ஒரு விளக்கைத் தேய்ச்சு ஏத்தற வேலைகூட பெரிசா மலைப்பா தெரியறது''சியாமளா பேசிக்கொண்டே போனாள்.

அப்படியானால் இந்தப் பெண் வீட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாளா? தன்னுள் கேட்டுக் கொண்ட அவனுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது.

'சுஜி ரொம்ப சுறுசுறுப்பான பெண். நாள் முழுவதும் ஆபிசிலே வேலை செய்துட்டு வந்திருக்கா. அப்படியிருந்தும் அலுக்காம சளைக்காம எத்தனை வேகமா எனக்கு உதவி செஞ்சா தெரியுமா? வக்கீல் தேவநாதன் பெரிய புண்ணியத்தைக் கட்டிண்டிருந்தார். அவர் சிபாரிசு செய்த வேலை அவளுக்குக் கிடைத்துவிட்டது. ரிஸப்ஷனிஸ்ட் கம் டைபிஸ்ட் வேலை பார்க்கறா மாசம் நானூத்தம்பது ருபாயாம். ஒரு வருஷம் கழிச்சு வேலையில் திருப்தி ஏற்பட்டா சம்பளத்தையும் கொஞ்சம் உயர்த்துவாளாம். நிரந்தரமாக்கி விடுவாளாம். பாவம். வேலையில் சேர்ந்த நாளிலிருந்து தினமும் என்னைப் பார்க்கணும்னுதான் துடிச்சிண்டு இருந்தாளாம். வீட்டிலே அம்மாவுக்கு உடம்பு சரிப்படாதிருந்ததால் வேலையிலிருந்து வந்ததும் வீட்டைக் கவனிக்கிறதுதான் சரியா இருந்ததாம். அவ அம்மாவுக்கு



இப்போ உடம்பு தேவலையாம்... அதனாலே எனக்கு நன்றி தெரிவிக்க பாவம் அகர்வால் கடையிலே கொஞ்சம் ஜாங்கிரி வாங்கிண்டு வந்திருந்தா. நாழியாச்சு இருட்டிண்டு வரது கிளம்புன்னு நான்தான் அனுப்பிச்சேன். நல்லபொண் சுஜிரிதா. அவள் குணத்துக்கு ஏத்தாப்பல.. ஒரு நல்ல கணவன் கிடைச்சுட்டா'' சியாமளா தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள். சித்தார்த்தின் நெஞ்சு ஏனோ இன்பப் பூரிப்பில் தமுக்கடித்தது. மூச்சு முட்டிவிடும் போன்ற ஒரு கவலை உணர்வில் அவன் மௌனமாக நின்றான்.

அவளை இன்னொரு முறை பார்க்க முடியாது போய்விட்டதே என்றதோர் ஏக்கம்.

''இன்னிக்கி நாம கடைத் தெருவுக்குப் போக வேண்டாம். சமைச்சதையெல்லாம் எடுத்து ஃபுட் கண்டெய்னரில் வச்சிருக்கேன். அப்படியே சூடா இருக்கும். கொஞ்ச நாழி கழிச்சு நாம் சாப்பிடுவோம்'' என்றாள் சியாமளா.

அவர்கள் இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

நெய் மணத்த பரோட்டாவையும், சூடான உருளைக் கிழங்கு கூட்டையும் சியாமளா தட்டில் பரிமாறினாள். அவை சாப்பிட மிகவும் சுவையாகத்தான் இருந்தன. முடிவில் சுஜி கொண்டு வந்திருந்த மிட்டாய்ப் பெட்டியைத் திறந்து ஒரு ஜாங்கிரியை எடுத்துஅவன் தட்டில் வைத்தாள். வாய்க்குள் தேனாகக் கரைந்த ஜாங்கிரியை விழுங்கிக் கொண்டே அவன், ஆரஞ்சு வண்ண சேலையில் கொடி போல வந்து நின்ற அவளது எழில் உருவத்தை மறுபடியும் நினைத்துப் பார்த்தான். வாய் இனித்தது போல மனதின் உணர்வுகளும் இனித்தன.

''சே!... வேலை வெட்டி ஒன்றுமில்லாத உனக்கு காதல் ஒரு கேடா?'' மனசாட்சி பலமாக இடித்தது.

"எங்கேயாவது, ஏதாவது ஒரு வேலையை அவன் தேடிக் கொள்ள முடிந்தால்... விரைவில் வேலை கிடைத்து விட்டால்?" அன்று வெகுநேரம் உறக்கமின்றி சிந்தித்துக் கொணடிருந்தான்.

## 13

மறுநாள் காலை வராந்தாவில் கிடந்த பிரப்பு மோடாவில் அமர்ந்தபடி அவன் காலைப் பத்திரிகைக்குள் மூழ்கிவிட்டிருந்தான், அவனுக்கு இப்போது அவசரமாகத் தேவைப்பட்டது ஒரு வேலை. கூடியவரை அந்த வேலை அவன் படிப்பின் தகுதிக்கு ஏற்றதாக, சம்பளமும் ஓரளவுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் உள்ளதாகவும் கிடைக்க வேண்டும். கட்டாயம் அவன் அப்படிப்பட்டதொரு வேலையைச் சீக்கிரம் தேடிக் கொள்ள வேண்டும். அதற்குப் பின்னர்தான் அவன் அவளை நெருங்கி தோழமை கொள்ளத் தகுதியுடையவனாக இருப்பான்.

வேலையில்லாது வேறு வழியின்றி சியாமளா அம்மாளின் வீட்டில் ஒண்டிக் கொண்டு ஒரு எடுபிடி ஆளாக அவன் இயங்கிக் கொண்டிருக்கிறான் என்பதை அந்தப் பெண் புரிந்து கொண்டால், அதற்குப் பின்னர் அவன் பக்கம்கூட திரும்பிப் பார்க்கமாட்டாள்.

சியாமளாவுக்குத் தங்கை மகன் என்கிற எண்ணத்தில் வேலையில்லாத போதிலும் அதைப் பாராட்டாது அவனுடன் நின்று நிதானித்துச் சில வார்த்தைகள் பேசினாள் உண்மை அவளுக்குத் தெரிந்து விட்டால்? டைப்பிஸ்ட் கம் ரிஸப்ஷனிஸ்டாக அவளுக்கு வேலை கிடைத்திருக்கிற



தாமே ஆரம்பத்தில் சம்பளமும் பரவாயில்லை. அந்த அளவிற்காவது அவனுக்கு ஒரு வேலை கிடைக்குமா? அப்பவே அண்ணன் அவனிடம் கரடியாகக் கத்திக் கொண்டிருந்தார். வெறும் பி. ஏ. பட்டம் மட்டும் போதாது. டைப்பிங் அண்ட் ஷார்ட் ஹாண்ட் தெரிந்து வைத்துக் கொள்வது மிகவும் உதவியாக இருக்கும். சும்மா சுற்றித் திரிவதை விட்டு அவன் ஏன் தட்டெழுத்திலும் சுருக்கெழுத்திலும் பயிற்சி பெற்றுக்கொள்ளக் கூடாது? தினமும் அடிக்காத குறையாக அழுத்தமாக வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

தாத்தாவும் ஒத்துப் பாடவே சகிக்க முடியாதுதான் அவன் வீட்டுக்கு அருகிலிருந்த ஒரு டைப்பிங் இன்ஸ்ட்டிடியூட்டில் சேர்ந்தான்.

லோயர், ஹையர் என்ற இரண்டு தேர்வுகள். லோயர் கிரேட் தேர்வுக்கு தகுதியாக நிமிஷத்துக்கு இருபத்தைந்து வார்த்தைகள் அடிக்கும் வேகம் தேவை. குறைந்த பட்சம் ஆறுமாத காலம் பிடிக்கும். பயிற்சியாளர் அவன் உற்சாகத் தீயில் ஒரு செம்பு தண்ணீரைக் கொட்டி விட்டார்.

ஒரு பத்துநாள் தண்டமே என்றுஅங்கு போய் வந்தான். கிளுகிளு என்று பயிற்சி பெற வந்த இளம் பெண்களை வெறித்துப் பார்த்ததுதான் மிச்சம். ஆரம்பப் பயிற்சியே அவனுக்கு ஒழுங்காக அமையவில்லை. சில நாள்களில் அங்கு போவதை ஒரேயடியாக நிறுத்திக் கொண்டு விட்டான்.

"டைப் கத்துக்க போறதில்லையா?" ஒருநாள் அண்ணன் அதட்டினார்.

"எனக்கு அது கத்துக்க வரும்னு தோணலை"

"பேஷ்! ஆயிரக்கணக்கான பேர் கத்துக்கிற நல்லதொரு தொழில் பயிற்சி உனக்கு வரலேன்னா காரணம் என்ன? வெறும் சோம்பேறித்தனந்தான்."

ஆத்திரத்துடன் பதிலுக்கு அவன் அண்ணனின் பலவீனத்தை வீட்டில் உள்ளவர்கள் முன்னால் அள்ளிப் போட்டான்.

"உங்களுக்கு உடம்புக்கு வந்தா டாக்டர் கொடுக்கின்ற ஒரு மாத்திரையாவது முழுங்க முடிகிறதா? மன்னி அது களை அம்மியில் வச்சு பொடிபண்ணி பாலில் கரைச்சுக் குடிக்கக் கொடுக்கணும். அப்படி ஒரு ரகளை பண்றேள். ஏன்?"

அண்ணனுக்கு மாத்திரைகள் மருந்துகள் என்றால் பெருத்த அலர்ஜி. அவை தொண்டைக்குள் சிக்கிக் கொண்டு விடும்போல ஒரு பயத்தில் அவரால் விழுங்கவே முடியாது. சின்ன வயதிலிருந்து அப்படி ஒரு பலவீனம்.

அதை குழந்தை சேதுராமனுக்குக்கூடத் தெரியும்படி தம்பி உரத்த குரலில் போட்டு உடைத்தபோது தாடை இறுக கோபத்துடன் அவனை முறைத்தார்.

"நீ எக்கேடு கெட்டுப் போ. எனக்கென்ன இனி கவலை?" என்றது அவரது விரக்தியான பார்வை.

அன்றிலிருந்து அந்த டைப்பிங் இன்ஸ்டிடியூட்டுக்கு தலைமுழுக்கு போட்டு விட்டிருந்தான்.

ஆனால் பத்திரிகையில் அவன் பார்த்த அத்தனை விளம்பரங்களும் தட்டெழுத்து—குறுக்கெழுத்தில் நல்ல பயிற்சியுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டுமென்று பயமுறுத்தியிருந்தன.

கணக்கர் வேலைக்கு அவனது கணக்கு அறிவு போதாதா? என்ன அக்கிரமம்...?

பலவும் எண்ணியபடி பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். பூனைபோல சப்தமிடாது கிரேப்ஸோல் பூட்சில் மெல்ல நடந்து வந்துஅருகில் நின்றார் ஷண்முகம்.



"என்னப்பா பாபு! ஆள் வந்தது கூட கவனிக்காம அப்படி மும்முரமா என்ன படிச்சிண்டு இருக்கே?" விளையாட்டாக ஓங்கி அவன் முதுகில் தட்டினார்.

'அப்பாடா' என்று கத்த வேண்டும போன்ற ஒரு வலி முதுகிலிருந்து காதுகள் வரை பரவிக்கொண்டு உச்சி முடியைக் குலுக்குவதை உணர்ந்து துள்ளிக்கொண்டு எழுந்தான். பத்திரிகையை டபக்கென்று மடித்து அருகில் கிடந்த முக்காலி மீது போட்டான்.

மோட்டார் சைக்கிளின்சத்தமும் கேட்கலை. அதனால் குழறினான். அவரைப் பார்த்தபோதெல்லாம் அவனுக்கு ஒருவிதமான அச்சம் ஏற்படத்தான் செய்தது. வாட்டசாட்டமான அவரது தோற்றமும், தூண்டித் துருவும் கண்களையும் பார்த்து குற்ற உணர்வில் குடல் புரண்டது

ஊஹூம். திரு. ஷண்முகம் அவனை சியாமளாவின் உறவினன் என்று பூரணமாக நம்பவில்லை அடிக்கொரு தடவை அவரது கண்களில் சந்தேகத்தின் சாயல் தெரிகிறதே? ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் உண்மையைக் கண்டுபிடித்து விட்டதும் அந்தப் பொல்லாத மனிதன் அவனை சும்மா விடப்போவதில்லை. வாலைப் பிடித்து எலிக்குட்டியைக் கொத்தித் தூக்கி விளையாடி வதைக்கும் காக்காய் போல அவனது முடியைப் பிடித்து முரட்டுத் தனமாகக் குலுக்கி ஓங்கி கன்னத்தில் நாலு விட்டு, உண்மையைக் கக்க வைத்து மன்னி நகையைத் திருடிவிற்ற குற்றத்திற்கும் கத்தியைக் காட்டி சியாமளாவைப் பயமுறுத்திய பாவத்திற்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக மண்டகப்படி செய்யப் போகிறார். "வந்து தான் நான்" அச்சத்துடன் உளறிய சித்தார்த் சட்டென்று உட்புறம் திரும்பி 'பெரியம்மா' என்று குரல் கொடுத்தான். ஷண்முகத்தை அவளிடம் ஒப்படைத்து விட்டுப் பின் பக்கத்து தோட்டத்திற்குள் மாயமாகி விடவேண்டுமென்ற தவிப்பு அவனுக்கு

''இன்னிக்கு மோட்டார் சைக்கிளை மகன் எடுத்துகிட்டுப் போயிட்டான். பஸ்ஸில் வந்தேன். பஸ் கிடைக்காட்டா நடந்துகூட வருவேன. போன வருஷம் வரை... தான் நிதமும் ஜாகிங் பண்ற வழக்கம். இந்த டாக்டர் தான் வெறும் நடை போதும். இந்த ஓட்டமெல்லாம் தேவையில்லைன்னு தடுத்து விட்டார். சாப்பாடு—தேகப் பயிற்சி பழக்க வழக்கம் எல்லாத்திலும் கட்டுப்பாடா இருந்தா... என்றும் மார்க்கண்டேயனா இருக்கலாம். ஆமாம்... வேலைக்குத்தானே விளம்பரங்களைப் படிச்சுக்கிட்டிருந்தே? '' தமது மீசையை ஆசையுடன் தடவியபடி அங்கே கிடந்த ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தார்.

'பாவி மனுஷனுக்கு எக்ஸ்ரே கண்களா இருக்கு?... ஓடியது அவன் நினைப்பு.

நல்லவேளை அதற்குள் சியாமளா வெளியே வந்து விட்டாள்.

''வாங்கோ... உள்ளே வந்து எங்களோட கொஞ்சம் காப்பி சாப்பிடுங்கோ.'' உபசரித்தாள்.

சிரித்தான். 'இன்னிக்கு டிபன் வாயில் மண்தான். எதிரே இவரை வச்சுக்கொண்டு தோசையை விண்டு வாயில் போட்டுக் கொண்டால் தொண்டைக்குள் அப்படியே அடைச்சுக்குமே...' கவலைப்பட்டான் சித்தார்த்.

'சாப்பிட்டு விட்டுத்தான் திரும்பினேன். ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருக்க இன்னிக்கு நேரமில்லை. உடனடியாக ஒரு சிநேகிதனை சந்திக்கணும். எதுக்கு வந்தேன்னா'' என்றபடி எழுந்திருந்து ஷண்முகம் தமது பாண்ட் பைக்குள் கையைவிட்டுத் துழாவி ஒரு கடித உறையை எடுத்தார்.

''இந்த முகவரியில் காணப்படும் அலுவலக மானேஜரை உடனடியா இன்னிக்குக் காலையிலே பத்து மணிக்கு மேல்



போய் பார்வைப் பார்க்கச் சொல்லுங்க... அவர் எனக்கு ரொம்ப வேண்டப் பட்டவர் கட்டாயம் பாபுவுக்கு ஒரு வேலை கொடுப்பார்...''

சியாமளா முகம் மலர்ந்து போனாள், ''ரொம்ப தாங்ஸ் மிஸ்டர் ஷண்முகம்... நீங்க கட்டாயம் இவனுக்கு உதவுவீங்கன்னு எனக்குத் தெரியும். அதனால் தவறாமே இன்னிக்கே இவனை அனுப்பி வைக்கிறேன்.'' சொல்லிக் கொண்டு கடித உறையைப் பெற்றுக் கொண்டாள்.

''அப்ப நான் வரேன், காப்பி டிபனுக்குப் பிறகு தாமதம் பண்ணாம அனுப்பி வையுங்க. பிறகு நான் டெலிபோன் செய்து விசாரிச்சுக்கறேன்...'' விடை பெற்றுக் கொண்டு நடந்தார்.

காப்பி டிபன் சாப்பிட்டதும் சியாமளா... அந்தக் கடித உறையுடன் பத்து ரூபாய்த் தாளையும் அவனிடம் தந்து— வெளியே அனுப்பினாள்.

பஸ் பிடித்து பூந்தமல்லி நெடுஞ்சாலையின் ஒரு நிறுத்தத்திலே இறங்கினான் அருகிலிருந்த ரிக்ஷா நிலையத்தில்... விசாரித்துக் கொண்டு அந்த அலுவலகத்தைத் தேடி... மேலும் கீழும் அலைந்து முடிவில் கண்டுபிடித்தான்.

ஒரு பெரிய தோட்டத்திற்குள் அடங்கிக் கிடந்ததொரு பழைய காலத்துப் பங்களா அது. இப்போது அது ஒரு பிரபல புத்தக விற்பனைக் கடையாக மாறிவிட்டிருந்தது.

மானேஜர் அவனை அதிக நேரம் வெளியே பெஞ்சியின் மீது காக்க வைக்கவில்லை. சீக்கிரத்திலேயே உள்ளே வர, கூப்பிட்டனுப்பினார்.

''ஷண்முகம் என் நெருங்கிய நண்பன். அவனுக்காக நான் உனக்கு ஏதாவது ஒரு வேலை போட்டுத்தரச் சம்மதிக்கிறேன். இப்ப சத்தியா டிஸ்பாட்ச்சிங் செக்ஷனில் ஓர் ஆள் தேவைப்படுகிறது... நாளைக்கே நீ வந்து சேர்ந்துடலாம்.

சம்பளம் இருநூறு ரூபாய்க்கு மேல் தர சாத்தியப்படாது '' மேலும் கீழும் அவனை ஆராய்ந்தபடி தலையை ஆட்டினார்.

''டிஸ்பாச்சிங் செக்ஷனில் வேலை என்றால்?'' அவன் மெல்லிய குரலில் கேட்டபடி மேஜையின் ஓரத்தைப் பிடித்தபடி நின்றான்

'கம்பெனிக்கு வருகிற கடிதங்களைப் பிரித்து... அந்தந்தப் பகுதிக்கு அனுப்பி வைக்கணும். அனுப்ப வேண்டிய கடிதங்களை எல்லாம் சேகரித்து தபால் தலை ஒட்டுதல், பார்சல் செய்தல், தபாலாபீசிற்கு சென்று ரிஜிஸ்டர் செய்தல் போன்ற பல வேலைகள். வெளியே போய்வர கம்பெனியின் சைக்கிளை உபயோகிக்கலாம்...''

'அப்படியே உங்கள் அனைவருக்கும் உணவு வேளையின் போது பிளாஸ்கில் காப்பி வாங்கி வரவேண்டும். உங்கள் வீட்டுக்குத் தேவையான சாமான்கள்— மருந்துகள் இத்யாதிகளை இடையே ஓடிச்சென்று வாங்கி வர வேண்டும். இல்லையா?...' கேட்க வேண்டும்போல் ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது

''நன்றி ஐயா!'' என்று வணங்கி விட்டு வெளியே வந்தான்.

ஷண்முகத்தின மேல் அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. நல்ல வேலை வாங்கித் தந்திருக்கிறார் மனுஷன். டிஸ்பாட்சிங் செக்ஷனில் வேலையாம், என் இந்த அலங்காரமான பெயர்... எடுபிடி ஆள் வேலை என்று ஒரே வார்த்தையில் சொல்லியிருக்கலாம். சியாமளா அம்மாவிடம் செய்கிற வேலையே மேல் போலிருக்கு!

இந்த வேலையை அவன் அவசியம் ஏற்றுக்கொள்ள வேணுமா?... 'உதட்டைக் கடித்துக் கொண்டு முகத்தை இறுக்கியபடி... தோட்டத்தைத் தாண்டி வெளியே வந்தான்.



தாகம் நாக்கை வாட்டியது. எதிர்ப்பக்கத்தில் தெரிந்த கடை ஒன்றில் குளிர்பானம் வாங்கிச் சாப்பிட எண்ணியபடி சாலையைக் கடந்து சென்றான்.

'இங்கே எங்கே வந்திருக்கீங்க?'' அந்த இனிய குரல்... குளிர்பானத்தைவிட குளிர்ச்சியாக காதல் விழவே திகைப்புடன் திரும்பினான்.

## 14

சியாமளாவின் தோட்டத்து புத்தம் புது ரோஜா மலர் போல அந்தக் கடையின் அருகே ரோஜா வண்ண வாயில் சேலையில் சிரித்துக்கொண்டு நின்ற சுஜரிதாவின் கொள்ளையழகில் ஒரு கணம் சொக்கிப் போய்விட்டான் அவன்.

'இந்தப் பக்கம் எங்கே வந்தேன்னு கேட்கிறேன் பதிலைக் காணோமே?'' மறுபடியும் அவள் புன்னகையுடன் வினவினாள்.

''அதே கேள்வியைத்தான் நானும் கேட்க விரும்பினேன். ஆமாம், நீங்க இங்கே இவ்வளவு தூரத்துக்கு எதுக்கு வந்தீங்களாம்?'' சமாளித்தான் சித்தார்த்.

வரிசைப் பற்கள் பளிச்சிட அவள் கலுக்கென்று சிரித்தாள்.

''மிஸ்டர் பாபு! இங்குதானே நான் வேலை பார்க்கிறேன். அதோ தெரியுது பாருங்கோ...!'' என்று சிறிது தூரத்தில் அதே வரிசையில் தெரிந்த ஐந்தடுக்கு மாடிக் கட்டடத்தைக் காட்டினாள். அதன் உச்சியில் இரவு நேரத்தில் குழல் விளக்காக எரியும்படி.. ஒரு பெரும் கம்பத்திலே 'வனிதா ஹாஸ்பிடல்' என்ற எழுத்துக்கள் வெகு தொலை தூரம் தெரியும் வண்ணம் பொருத்தப்பட்டிருந்தன.

''அது ஒரு தனியார் மருத்துவமனை—அதில் நான் ஒரு டைப்பிஸ்டாக வேலை பார்க்கிறேன். பரிசோதனை சாலையிலிருந்து வரும் சோதனைக் குறிப்புகள், பில்கள், ஸ்பெஷலிஸ்டுகளின் ரிப்போர்ட்டுகள் என்று டைப்படிக்க நாள் முழுக்க வேலை நிறைய இருக்கு. நாங்க நாலு பெண் டைப்பிஸ்டுகள் வேலை பார்க்கிறோம். எங்களுக்குள் ஷிப்ட் ஸிஸ்டம்... இப்போ என் உணவு நேரம். அதனால் இரண்டு வாழைப்பழமும், ஒரு கூல்டிரிங்கும் வாங்கி சாப்பிட்டுப் போக இந்தக் கடைக்கு வந்தேன்'' படபடவென்று பேசி முடித்தாள்.

''இதை மட்டும் சாப்பிட்டாப் போதுமா! வயத்துக்கு சரியா சாப்பிடாட்டி உடம்பு கெட்டுப் போயிடாதா?.. கையில் ஏதாவது வீட்டு டிபனை எடுத்துண்டு வரக் கூடாதா?'' அனுதாபத்துடன் கேட்டான் அவன்.

''கார்த்தாலே அவசரமா பஸ் பிடிச்சு எட்டு மணிக்குள்ளே டாண்ணு வேலைக்கு வந்துடணும். அந்த வேளையில் அம்மாவாலே டிபன் ஏதும் செய்து தரமுடியறதில்லை. ராத்திரி சமைச்சது மீதி கொஞ்சமிருக்கும். அதிலே மோரை விட்டுண்டு... அவசரமா ஒரு வாய் போட்டுண்டு காப்பியையும் குடிச்சுட்டுக் கிளம்பிடறேன். வேறே என்ன பண்ண முடியும்—அம்மாவும் வேலைக்குக் கிளம்பணுமே!''

''உங்கம்மாகூட வேலை பார்க்கிறாளா?''

''உங்களுக்குத் தெரியாதா மிஸ்டர் பாபு! மாமி சொல்லலையா? நாங்க குடியிருக்கிற அவுட்ஹவுஸின் மெயின் பங்களாவிலே எங்கம்மா சமையல் வேலை செய்யறாங்க.''

''அப்படியா... எனக்குத் தெரியாது'' அவன் நெஞ்சை வேதனை மெல்ல நெருடியது.



''அப்பா, அம்மா, நான் எல்லோரும் வேலை செய்கிறதாலே இப்போ ராத்திரி ஒரு வேளையாவது நாங்க எல்லாரும் நன்னா சாப்பிடறோம். மாத்திக் கட்டிக்க துணிப் பஞ்சமில்லாம இருக்கோம். நம்ப உழைப்பினால் வயிறார சாப்பிட்டு, மானத்தோட வாழ முடியறதே, அதுவே எனக்குப் பரம திருப்தி. நீங்களும் இந்தப் பக்கம் வேலை விஷயமாகத்தானே வந்திருக்கீங்க?''— கேட்டுவிட்டு மோகனமாக அவனைக் காலோடு தலை ஊன்றிப் பார்த்தாள்.

மண்டையைப் பிளந்த வெயிலின் எரிச்சல் எங்கேயோ மாயமாக, சில்லென்ற தென்றல் சுகமாக மேனியைத் தழுவிக் கொள்ளும் ஒரு பரவசத்தில் அவன் மயங்கிப் போனான்.

''மிஸ் சுஜி'... உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா என்னோட வாங்கோ... எதிர்ப்பக்கம் தெரிகிற அந்தக் கஃபேயில் ஏதாவது சாப்பிடலாம். எனக்கும் ரொம்பப் பசியாயிருக்கு...''

நகத்தைக் கடித்தபடி அவள் ஒரு கணம் யோசித்தாள். ''சரி, மிஸ்டர் பாபு! வரேன்... ஆனால் எனக்காக நீங்க அதிகப் பணம் செலவழிச்சு பாஸந்தி, பேல்பூரி ஜாங்கிரி... விஜிடபிள் சூப்புன்னு கண்டதை வாங்கக்கூடாது... ஓகே?'' என்றாள்.

இருவரும் தெருவைச் கடந்து எதிர்ப்பக்கம் சற்று தூரத்திலிருந்த அமிர்தா கஃபேயை அடைந்தனர். வாசலை அடைத்த கனமான கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தபோதுதான் அவனுக்குத் தெரிந்தது. அது ஏ.சி. அமைப்பில் செயல்பட்ட சிற்றுண்டிச்சாலை...

குளிர்சாதனத்தின் செலவை காப்பி தோசை தலையில் கட்டியிருப்பார்களே என்ற நினைவு அவன் அடிவயிற்றைப் பகீரென்று பற்றியது.

சியாமளா அம்மா கொடுத்த பத்து ரூபாயில் பஸ் செலவு போக ஒன்பது சொச்சம் மிச்சமிருந்தது. அத்துடன்

முதல் வாரச் செலவிற்குக் கொடுத்த ஐந்து ரூபாயில் மீதி மூன்று பத்திரமாக பாண்ட் பைக்குள் கிடந்தன.

'எப்படியாவது டிபன் செலவை, இந்தப் பணத்திற்குள் சமாளிக்க வேண்டும்'' எண்ணிக்கொண்டான்.

மங்கலாக எரிந்த விளக்கொளியில் உள்ளே கிடந்த மேஜைகள் பூதங்கள் போல புலப்பட மெல்ல ஓர் ஓரமாக இடத்தைப் பிடித்து அவனை உட்காரச் சொல்லி உபசரித்தான். எதிரில் கிடந்த நாற்காலியில் அமர்ந்து கொஞ்ச நேரம் சென்ற பிறகுதான் அவன் கண்களுக்கு அந்த மங்கல் வெளிச்சத்தில் நிதானம் ஏற்பட்டது. அந்த வேளையில் அந்த கஃபேயில் ஓர் இடம்கூட பாக்கியில்லாது, அத்தனை ஓர் கூட்டம்!—

வேலையில்லை. செலவழிக்கக் காசில்லை—ஒரு வேளை சோறு சாப்பிட்டாலே சொர்க்கம்... என்றெல்லாம் ஒரு பக்கம் அங்கலாய்த்து வருந்தும் மனிதர்கள் கூட்டம்... அதன் நடுவிலே, பாஸந்தியையும், பேல் பூரியையும் வயிறு புடைக்கத் தின்று ஏப்பம்விட ஏ.சி, அமைப்புக்குள் திணறும் இப்படி ஓர் கூட்டம்

''தண்டோரி ரொட்டி, ஜாங்கிரி, விஜிடபிள் கட்லெட், பாதாம்கீர் எல்லாம் நாலு கொண்டுவாப்பா...'' என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த லக்னோ குர்த்தா கஃபே பையனிடம் உத்தரவிடுவதைக் கேட்டு அவனுக்குப் பொறாமையாகத்தானிருந்தது...

பிளாஸ்டிக் உறைக்குள் குத்திட்ட வாக்கில் நின்ற மெனு சார்ட்டை எடுத்துக் கண்களை இடுக்கிக்கொண்டு படித்தான்.

வெஜிடபிள் கட்லெட், இரண்டு ரூபாய் ஐம்பது பைசா, இட்லி சாம்பார் பிளேட், இரண்டு ரூபாய். காப்பி ஒரு கப் ஒரு ரூபாய் எழுபத்தைந்து பைசா...



அம்மாடியோவ்...தலை சுற்றியது விலை...

இரண்டு பிளேட் இட்லி சாம்பார். இரண்டு காப்பி என்று கூறிவிட்டு நிதானமாக மூச்சுவிட்டான்.

அவனிடமிருந்த பணத்தில் அந்த டிபன் வரைதான் கட்டுப்படியாகும்.

உள்ளங்கை அளவில் இரண்டு இட்லிகளும், சிறு கிண்ணங்களில சாம்பாரும் சட்னியும, சாப்பிட ஒரு ஸ்பூனும் எடுத்து வந்து வைத்தான் பையன்.

இதற்கு இத்தனை ரூபாயா? கடைவாய்க்குக் கூட காணாது போலிருக்கே?... மன்னி மைதிலி சாப்பாடு விஷயத்தில் அவனுக்கு வஞ்சனை செய்ததே இல்லை.

தோட்டத்திலே பறித்து வந்த வாழை இலையைத் துண்டமிட்டு நீர் தெளித்து துடைத்துப் போட்டு அதன் மீது சுடச்சுட ஆறு இட்லிகளை வைத்து நெய்வார்த்து வீடு முழுவதும் மணக்கும் வெங்காய சாம்பாரைப் போதும் என்கிறவரை அவற்றின் மீது அபிஷேகம் பண்ணி நாள் முழுவதும் நாக்கைச் சுழற்றும் காப்பியை நுரை பொங்க டம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து கொடுப்பாள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் காலை வேளையில் அவர்கள் வீட்டில் காப்பி டிபன். பகல் சம்பிரதாயமான சாப்பாடு.

காலை டிபனே ஜீரணமாகாது. ஊரைச் சுற்றிவிட்டு அவன் திரும்புவதற்குள் மைதிலி மன்னி பகல் சாப்பாட்டுக்கு இலை போடத் தொடங்கி விடுவாள்.

அண்ணனுக்குப் பிடிச்ச பொரிச்சகூட்டு, தாத்தாவிற்குப் பிரியமான மைசூர் ரசம், அவனுக்குப் பிடித்தமான உருளைக் கிழங்கு மசாலா கறி, எல்லாருக்கும் பிடித்த முருங்கைக்காய் சாம்பார்.. என்று ஜமாய்த்து விட்டிருப்பாள்.

சில ஞாயிற்றுக் கிழமைகளில், அண்ணன் சம்பளம் வாங்கிய முதல் வாரமாக இருந்து விட்டால், பகல் மூன்று மணிக்கு ரவா சொஜ்ஜி, வடை என்று ஏதாவது ஸ்பெஷல் அயிட்டங்கள் வேறு தயார் செய்து விடுவாள்.

''இன்னொரு தயிர்வடை போட்டுக்கோ... இந்த வயசிலே சாப்பிடாமே தாத்தாவோட வயசிலியா சாப்பிட முடியும்? உனக்குத் தெரியுமா சித்தார்த்! பெண் பிறக்கிறதுக்குள்ளே பூட்டிக்கோ. நாட்டுப்பெண் வரத்துக்குள்ளே சாப்பிட்டுக்கோன்னு எங்க பக்கத்திலே ஒரு பழமொழி சொல்வா... அதனாலே நான் சேதுவுக்கு கல்யாணமாறத்துக்குள்ளே, ஏன், உனக்குக் கல்யாணமாகி நம்ம வீட்டுக்கு ஒரு நாட்டுப்பெண் வர்றத்துக்குள்ளே என் வயிற்றுக்கு வஞ்சனை பண்ணாம சாப்பிடறேன்...'' சிரிப்பாள். சாதாரணமாக மன்னி மைதிலிக்குப் பொறுமை மிகவும் அதிகம். எப்பொழுதாவது அவளால் தாங்க முடியாதபோதுதான் கோபத்திலே வெடிப்பாள்...தாயில்லாப் பிள்ளை என்று அவனிடம் அவள் எத்தனையோ அன்பாகத்தானிருக்க முயன்றாள். வேலை கிடைக்கவில்லை என்ற கோபத்தை அவன் அவள் மீது விதவிதமாகக் காட்டி ரகளை செய்தது ரொம்பத் தவறுதான். ஆமாம், அவன் அவர்களையெல்லாம் அடிக்கடி நினைத்துக் கொள்வதுபோல அவர்கள் அவனைப் பற்றி நினைத்து வருந்துகிறார்களா? சியாமளா அம்மாளும் அவனிடம் நன்றாக வேலை வாங்கினாலும் சாப்பாட்டுக்குக் குறைச்சல் வைக்கவில்லை.

காலை டிபன் காப்பி—பகல் வயிறார சாப்பாடு—சாயங்காலம் தேநீர் பிஸ்கட்—இரவு சப்பாத்தி சப்ஜி என்று விதவிதமாக வயிறு நிறையுமளவு போட்டாள். இடையே தாகத்திற்கு ஐஸ்மோர்—குளிர் பானம்.. ஓவல் என்று ஏதாவது குடிக்கக் கொடுத்தாள். சாப்பாடு நிறைந்த, பற்றாக் குறையே தெரியாத ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவள். விருந்தோம்பலில் சளைக்கவில்லை. அலுத்துக் கொள்ளவில்லை...கத்தியைக் காட்டி மிரட்டியவன் என்று அவனைப்



பற்றி அச்சப்படவுமில்லை—வேலையற்ற தடியன் என்று துச்சமாகத் கருதவில்லை. மனிதாபிமானத்துடன் அவனது உள்ளத்து ஆற்றாமையைப் புரிந்து கொண்டு பெற்ற தாயைப் போல...

''என்ன யோசிக்கிறேள்?... இந்தப் பொண் கூப்பிட்டதும் சட்டுனு சாப்பிட ஹோட்டலுக்கு நம்மோட வந்துட்டாளேன்னுதானே கேவலமா என்னைப்பத்தி நினைக்கிறேளா?''

திடுக்கிட்டு சிந்தனைகளினின்று விடுபட்டு நிமிர்ந்தான். இமை ஓரத்தைச் சுட்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டான்.

வீட்டைப் பற்றி நினைக்கும்போது அவனுக்கு இப்போதெல்லாம் கண் கலங்கிப் போகின்றனவே, நெஞ்சு, மெழுகுவர்த்தியாக உருகிப் போகிறதே... என்ன இருந்தாலும் ரத்த பாசத்திற்கு ஒரு தனி ஈர்ப்பு இருக்கத்தானிருக்கிறது.

''என்ன யோசனை?'' மீண்டும் அந்த இனிய குரல் மெல்ல அதட்டவே அவன் விழித்துக் கொண்டான்.

''சே! சே! அப்படி எல்லாம் நினைக்கலை. நமக்குத் தெரிஞ்ச பெண் என்கிற உரிமையிலே நான் காப்பி சாப்பிடக் கூப்பிட்டேன். தப்பா இருந்தா மன்னிச்சுக்குங்க...''

''இதுவரை நான் இப்படி ஒரு காரியம் செய்ததே இல்லை. நீங்க சியாமளா மாமிக்கு ஒரு வகையில் பிள்ளைக்கு ஒப்பான உறவினர். மாமி மேலே எனக்கு ரொம்ப மதிப்பு உண்டு.. அதே மதிப்பையும் மரியாதையையும் அவர் மகன் போன்ற உங்களுக்கும் காட்ட விரும்பினேன். அதனால் நீங்க கூப்பிட்டதும் உடனே உங்களோட வந்துட்டேன். ஒண்ணு தெரியுமா?.. முந்தா நேத்திலிருந்து ஒரு ரவுடிப் பையன் என்னைப் பின் தொடர்ந்து கொண்டிருக்கான் கடையிலே கூல் டிரிங்க் வாங்கிக் குடிச்சுண்டு நின்னேன்—என்னைப் பார்த்து கண்ணடிச்சான். 'சின்னப் பொண்ணு எங்கேயிருந்து வராப்பல' அப்படினு கிட்டக்க

வந்து அடிக்குரலில் கேட்டான். முறைச்சுப் பார்த்துட்டு நான வேலைக்குத் திரும்பப் போயிட்டேன். இன்னிக்கு கொஞ்ச தூரத்திலே அவன் வருவதைப் பார்த்தேன்—பக்குன்னு இருந்தது. ஆனா சாமி போல நீங்க வந்துட்டேன். அப்பாடான்னு மனசுக்கு ரொம்ப தெம்பாயிட்டது. இனி என்ன பயம்னு சந்தோஷப்பட்டேன்.''

''அப்படியா ?'' என்று சொல்லிக் கொண்டு தட்டை அவன் அருகே நகர்த்தி வைத்தாள்

''சாப்பிடுங்கோ மிஸ் சுஜி... உங்களைத் திரும்ப பத்திரமா ஆஸ்பத்திரியிலே கொண்டு சேர்த்துட்டுப் போறது என் பொறுப்பு—கவலைப்படாதீங்க. நாளையிலிருந்து நான் இங்கே ஒரு புத்தகக் கடையிலே விற்பனைப் பகுதியில் வேலைக்குச் சேரப் போறேன்—அநேகமா வீட்டிலிருந்து புறப்படும் போதும், திருப்பும்போதும் உங்களுக்குத் துணையாக வருவேன். அந்த ரவுடியைப்பத்திக் கவலையே வேண்டாம்'' என்றான்.

''தாங்யூ...'' தேனாக அவளது வார்த்தைகள் ஒலித்தன. அந்த மங்கிய விளக்கொளியில், நிலவினிலே கண்டதொரு கதைக் கன்னிபோல் அவள் எத்தனை அழகாக இருந்தாள்.

அவளுக்கு வாழ்க்கை முழுக்க... துணையாக பாதுகாவலாக ரட்சிக்க வேண்டும் போன்றதோர் ஆசை... அதை அடைய ஒரு தகுதி வேண்டும் போன்ற ஓர் ஆவேசம் அவனது அடிமனதிலே, தோன்றுவதை உணர்ந்தான்.

ஆசையிருக்கு தாசில் பண்ண—அதிர்ஷ்டம்? தாத்தா சொல்லும் போதெல்லாம் மன்னி மைதிலி குறுக்கிடுவது வழக்கம்.

''அதிர்ஷ்டத்து மேலே ஏன் பழியைப் போடணும்? தகுதிகளை நாமே முயற்சியால் தேடிக்கணும். இந்தக்



காலத்துப் பசங்களுக்கு இந்த பழமொழி பொருந்தாது.'' சிரிப்பாள்.

உண்மைதான்! சுஜியின் துணைவனாக ஆனது ஆயுள் வரை பாதுகாவலாக அவன் அமைய வேண்டுமென்றால் அந்தத் தகுதியை முயற்சியால் தேடிக்கொள்ள வேண்டும். முதலில் நாளைக்கே அந்த வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்குப்பின் படிப்படியாக, உழைப்பால் அவன் கட்டாயம் உயரப் போகிறான். இது நிச்சயம். எதிரிலே உட்கார்ந்திருக்கும் அந்த அழகு தேவதைக்காகவாவது அவன் கட்டாயம் முயல வேண்டும். முயற்சி செய்யப் போகிறான்... வெற்றி பெறப் போகிறான். பில்லைக் கொடுத்துவிட்டு... பையன் கொண்டு வந்து வைத்த சோம்பை, துளி அள்ளி வாயில்போட்டு மென்றபடி உற்சாகமாக அவளுடன் வெளியே வந்தான். அவனது வருங்காலம் வெளிச்சமாக இருக்கப் போகிறது என்பது போல... அரை இருட்டுக் குளிரிலிருந்து வெளியே வந்தவன் கண்களில் நெடுஞ்சாலை பளிச்சென்று வெளிச்சமாகத் தெரிந்தது.

## 15

மறுநாள் காலை அவன் அவசரமாகக் குளித்துவிட்டு உடுத்திக்கொண்டு வெளியே கிளம்ப ஆயத்தமாகி விட்டான்.

அத்த வேலையைப் பத்தி ஒண்ணுமே சொல்லலையே. குறைப்பட்டுக் கொண்ட வண்ணம் சியாமளா உப்புமாவைப் பரிமாறி காப்பியை அருகில் கொண்டு வந்து வைத்தாள்.

சுவற்றிலே தொங்கிய கடிகாரத்தின் முள் ஏழு மணியை நெருங்குவதைக் கண்டு அவனுள் ஒரு பரபரப்பு.

முதல் நாள் பகல் உணவுக்குப் பின் சுஜரிதாவை அவன் அந்த மருத்துவமனை வாசலில் விட்டு விடைபெற்றுக் கொண்டபோது அவள் சொன்னாள். ''தினம் காலை ஏழு மணிக்கு சரியாக வீட்டை விட்டுக் கிளம்பினால்தான் என்னால் ஏழு பத்துக்கு வரும் பஸ்ஸைப் பிடிக்க முடியும். இங்கே நேரத்துக்கு வந்து சேர முடியும். தவறவிட்டால் போச்சு... அதனால் காலை வேளையில் எங்க வீட்டில் நான் கிளம்பறதுக்குள் ஒரே அமளி'' சிரித்தாள்.

பஸ் நிலையத்தில் அவளை எப்படியாவது சந்தித்துவிட வேண்டும். இருவரும் சேர்ந்தாற் போல ஒரே பஸ்ஸில் வேலைக்குப் போகும்படி அமைந்துவிட்டால்... எத்தனை சுவாரஸ்யமாக இருக்கும்?

''என்ன நான் கேட்கிறேன் நீ ஏதோ யோசனையில் மூழ்கிக் கிடக்கிறியே!'' சியாமளா அதட்டினாள்

''இன்னிக்கு காலைல வந்து வேலைய ஒப்புக்கொள்ளச் சொன்னார். டாண்ணு எட்டு மணிக்கு அங்கே போய் நிக்கணுமாம்,'' உப்புமாவை அவசரமாக அள்ளி வாயில் திணித்துக் கொண்டான்.

''புத்தகக் கடைன்னு சொன்னே. அத்தனை சீக்கிரமாவா திறக்கிறா? இந்தப் பக்கமெல்லாம் கடைகளை ஒன்பது மணிக்கு மேலதானே திறக்கறதாகச் சொல்லுவா?''

'என்னவோ சீக்கிரம் வரச் சொன்னார். இந்த வேலையை வேறு ஒருத்தனுக்கு கொடுத்துட்டா என்ன பண்றதுன்னு என்க்குக் கவலையா இருக்கு...'' சொல்லிக் கொண்டே காப்பியை வேகமாகப் பருகி முடித்தான். கையைக் கழுவிக்கொண்டு—அலைந்து புரண்ட முடியை சீப்பால் ஒதுக்கி விட்டுக்கொண்டு அவன் கிளம்பி விட்டான்.

''அப்போ நான் வரட்டுமா...''



விடைபெற்றுக் கொண்டு வாயிற் பக்கம் அவசரமாகத் திரும்பினான்.

''இந்தா கை செலவுக்கு..'' என்று ஐந்து ஒற்றை நோட்டுகளை அவனிடம் நீட்டினாள்.

''இன்னிலிருந்து நீ வேலைக்குப் போறே, ஞாபகமிருக்கட்டும், மாதம் ஏதோ சம்பளம் கிடைக்கும்... அதனால் பஸ் செலவுக்கும்—பகல் சாப்பாட்டு செலவுக்கும் நான் அவ்வப்போது- தர்ற பணத்துக்கு ஒரு கணக்கு வச்சுக்கோ. நானும் கணக்கெழுதி வச்சுக்கிறேன். சம்பளம் வாங்கினதும் நீ என்கிட்டே வாங்கியிருக்கிற கடனை அடைச்சிடணும் ஓ.கே'' என்றாள் ஆயாசத்துடன்...

'நீ இங்கே தங்கறத்துக்கும் சாப்பிடறத்துக்கும் பதிலாக வார விடுமுறையின்போது தோட்டத்தைக் கவனித்து வீட்டை ஒட்டடையடித்து—கடைக்குப் போய் எனக்கு உதவி செய்யணும்.''

'சரி...அப்படியே செய்கிறேன்... நான் மறுக்க மாட்டேன்'' என்றான் பணிவுடன். கடிகார முள் ஏழு மணியை நெருங்கி விட்டதைக் காண அவனது பொறுமை குறைந்தது.

''இதெல்லாம் எதுக்குச் சொல்றேன்னா—நீ உண்மையாக உழைத்து ஒவ்வொரு சௌகர்யத்தையும் உன் பணத்தினாலேயே அடையணும். அப்பத்தான் உன்னால் சுய மதிப்போடு தலை நிமிர்ந்து நடக்க முடியும். போய்வா—பணத்தை ஜாக்கிரதையா சட்டைப்பையில் யார் கண்ணுக்கும் படாம வச்சுக்கோ... ஆல் தி...பெஸ்ட்'' என்று வழி அனுப்பி வைத்தாள்.

ஓட்டமும் நடையுமாக மூச்சிரைக்க தெருவைத் தாண்டி அவன் பஸ் நிலையத்திற்கு வந்தபோது...எதிர்ப் பக்கமாக சுஜரிதாவும் நிலையததை நோக்கி வருவதைக் கண்டான்.

''ஹாய், மிஸ் சுஜி...'! என்றான் மகிழ்ச்சியுடன்.

முகமலர்ந்து போனாள் அவள். ''மிஸ்டர்' பாபு! நீங்களும் இதே பஸ்ஸில் வரது எனக்கு ரொம்ப தெம்பாக இருக்கு. நேத்திக்கு சாயங்காலம் அந்த ரவுடிப் பையன் என்னை ஆஸ்பத்திரியிலிருந்து பஸ் ஸ்டாண்டு வரை பின் தொடர்ந்தான். ரொம்ப பயந்து போயிட்டேன்'' என்றாள்.

''இனி நீங்க பயப்படத் தேவையில்லை. தினமும் நான் உங்களோட இதே பஸ்ஸில்தான் வரப்போறேன். ஏன்னா நானும் உங்கள் ஆஸ்பத்திரியின் அருகில்தானே வேலை பார்க்கப் போகிறேன். கொஞ்ச நேரம் முன்னே பின்னே என்றாலும் காத்திருந்து அழைச்சுக் கொண்டு பத்திரமா உங்களை வீட்டில் கொண்டு சேர்ப்பேன். கவலையை விடுங்கோ.' என்றான்.

''தாங்க்யூ'' என்று அவள் கண்கள் பளபளக்க அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

சுவர்க்கத்தின் ஒரு பாகத்தைப் பிட்டு யாரோ அவன் கையில் கொடுத்துவிட்டது போன்ற பரவசத்தில் திளைத்துப் போனாள். நீண்ட நேரம் அவர்கள் பேசிக் கொண்டிருக்க முடியாமல் பஸ் வந்துவிட்டது. அவள் உள்ளே ஏறிக்கொண்டதும் பின்னால் பாய்ந்து அவன் தொத்திக் கொண்டான்.

பெண்கள் பகுதியில் அவள் ஓர் ஆசனத்தில் நெருக்கியடித்துக்கொண்டு உட்கார்ந்தாள். கம்பியில் தொங்கிய வாரைப் பிடித்துக்கொண்டு அவள் அருகே காவல் தெய்வமாக அவன் நின்றான். பஸ் நெளிந்து, வளைந்து, குலுங்கியபோதெல்லாம் அவனது உடம்பில் உள்ள எலும்புகள் அனைத்தும் நொறுங்கிவிடும் போல இவனும் கூடக் குலுங்கினான். அந்த வேதனையை அவன் சிறிதும் பாராட்டவேயில்லை. அவள் பொருட்டு எத்தனை காத தூரம் வேண்டுமானாலும் வாரைப் பிடித்துத் தொங்கி குலுங்கியபடி அவன்



பயணப்படத் தயாராகத்தானிருந்தான். அப்படி அவள் மீது அவனுக்கு ஓர் ஈர்ப்பு.

டிக்கெட் டிக்கெட்...என்று கண்டக்டர் நகர்ந்து கொணடே வந்து சுஜரிதாவிடம் கையை நீட்டினார். அவசரமாக அவள் தோல் பையைத் திறந்து துழாவினாள். ''ஐயோ இதென்ன? ஓர் ஓட்டை? பர்ஸைக் காணலையே...'' பதறிப் போய்விட்டாள்.

''மிஸ்டர் பாபு ..பையில் போட்டுக்கொண்டு வந்த பர்சைக் காணலையே, என்ன செய்வேன்?'' அழமாட்டாத குறையில் மெல்லச் சொன்னாள்.

''நல்லாப் பாருங்க... சீக்கிரம் பணத்தை எடுங்க .. எத்தனை நேரம் ஒரு ஸீட்டுகிட்டயே நிக்கறது?'' கண்டக்டர் கடுத்துக் கொண்டார்.

சித்தார்த் சட்டென்று அவள் உதவிக்கு வந்தான். சியாமளா அம்மாள் உண்மையிலேயே மகா புத்திசாலி. அவன் கிளம்பும்போதே எச்சரித்து விட்டிருந்தாள். பணத்தை பத்திரமாக வைத்துக்கொள் என்று. ஆபீஸ் நேரத்தில் பஸ்ஸில் கூட்டம் அதிகமிருக்கும். பிக்பாக்கெட் சர்வ சாதாரணம் என்றது உண்மையாகி விட்டது.

சுஜரிதாவின் பர்சை யாரோ அபேஸ் செய்துகொண்டு போய் விட்டிருக்கிறான், அட பாவமே!

தன்னிடமிருந்த ரூபாய் நோட்டுகளில் இரண்டை எடுத்து அவன் கண்டக்டரிடம் நீட்டினான்.

''கோல்டன் லோடஸ் ஸ்டாப்பிங்குக்கு இரண்டு டிக்கெட் கொடுங்க'' என்றான் அதிகாரமாக.

மீதி சில்லரையையும், இரண்டு டிக்கெட்டுகளையும் அவன் கையில் வைத்து அழுத்திவிட்டு, கண்டக்டர் அப்பால் நகர்ந்தார்.

தன்னை அவள் மிகவும் நன்றியுடன்பார்ப்பதைக் கண்டு சித்தார்த் மகிழ்ச்சியில் பொங்கிப் போனான்.

இறங்க வேண்டிய நிறுத்தத்தில் இருவரும் இறங்கி நடந்தனர். காலை வேளையில் அவளுடன் ஜோடியாக நடந்து செல்வது அவன் மனதிற்கு உல்லாசமாகத் தானிருந்தது.

"நீங்க மட்டும் இன்னிக்கு பஸ்ஸில் என்னோட வராதிருந்தால் நான் என்ன செய்திருப்பேனோ தெரியாது. போன வாரந்தான் இந்தப் பையனை பதினெட்டு ருபாய்க்கு வாங்கினேன். யாரோ திருடன் பிளேடால் கிழிச்சு உள்ளேயிருந்த பர்ஸை எடுத்துக்கொண்டிருக்கானே. எப்படி கிழிச்சிருக்கான் பார்த்தேளா" ஆதங்கமும் வருத்தமுமாக பையை அவனிடம் காட்டினாள்.

"பை போகட்டும் விடுங்கோ. பர்ஸில் ரொம்பப் பணம் வச்சிருந்தேளா?"

சுஜரிதா மெல்லச் சிரித்தாள. "பஸ் போக்குவரத்துக்கும், பகல் சாப்பாட்டுக்கும் சேர்த்து அம்மா தினசரி மூணு ரூபாய்தான் தரது வழக்கம். எடுத்தவன் ரொம்பவே ஏமாந்திருப்பான். ஆனால் நான் இன்னிக்கி .." அதற்கு மேல் பேசத் தோன்றாதவளாக, துயரத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'மிஸ் சுஜி! இன்னிக்கி நீங்க எதுக்குமே கவலைப்பட வேண்டாம். முதல்லே உங்களை உங்க ஆஸ்பத்திரி வாசல்ல கொண்டு பத்திரமா விட்டுட்டு நான் என் வேலைக்குப் போகப போறேன். சரியா பனிரண்டரை மணிக்கு ஆஸ்பத்திரி கேட் வெளியே காத்திருப்பேன். ரெண்டு பேரும் நேத்திக்கி போன அதே கஃபேக்கு போய் பூரியும் காப்பியும் சாப்பிடுவோம். அது என் செலவு. சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பும்போது பஸ் டிக்கெட்டை நான் வாங்கிடறேன்."



சுஜரிதா நெற்றியைச் சுருக்கிக்கொண்டு யோசனையுடன் ஒரு கணம் நின்றாள்.

"ஒத்துக்கறேன. ஆனால் ஒரு நிபந்தனை. நான் இந்த மாசம சம்பளம் வாங்கினதும் இன்னிக்கு சாப்பிடும் டிபன் பஸ் டிக்கட் இதுகளுக்கு ஏற்பட்ட செலவை கணக்குப் போட்டு தந்துடுவேன், நீங்க வாங்கிக்கணும்."

"சரி வாங்கிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்க தினமும் நான் வர பஸ்ஸில் வந்து, நான் சாப்பிடற கஃபேயில் சாப்பிட்டு, என்னோட மாலையில் அதே பஸ்ஸில் வீடு திரும்பணும். ஏன்னா உங்களுக்கு யாரோ ஓர் ஆண் துணையாகக்கூட இருக்கான்னு அந்த ரவுடிப் பயலுக்குத் தெரிஞ்சா உங்களைப் பின் தொடர்ந்து வம்பு செய்ய மாட்டான்... சரிதானே?"

"ஒ,கே. மிஸ்டர் பாபு! ஒத்துக்கறேன்" மகிழ்ச்சியுடன் அவன் அவளிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு அந்த நர்ஸிங் ஹோமிற்குள் நுழைந்து மறைந்து போனாள்.

அமரேசன் பதிப்பகத்தின் அதிபர் முன் அவன் பவ்யமாகப் போய் நின்றான்.

"நீ வரமாட்டேன்னு நினைச்சேன். என் நண்பன் ஷண்முகம் இன்னிக்கி காலையில் ரெண்டு தடவை போன் பண்ணித் தொலைச்சுட்டான், பேர் என்ன சொன்னே?" அவர் அதட்டிக் கேட்டார்.

"எஸ். ராமகிருஷ்ணன். ஆனால் வீட்டில் பாபுன்னு கூப்பிடற பழக்கம். நீங்களும் அப்படியே கூபபிடலாம்!" என்று கூறினான்.

"சரி, ஹாலில் உள்ள முதல் மேஜையருகே உட்கார்ந்திருக்கிற கதர் சட்டைக்காரர்தான் பதிப்பகத்தின் மேற்பார்வையாளர். அவர்கிட்ட நேத்தே சொல்லி வைச்சிருக்கேன். போய் வேலை விவரத்தைக கேட்டுக்கோ.

ஷண்முகத்தின் தொந்தரவு பொறுக்க முடியாம உனக்கு இருநூற்றைம்பது ரூபா போட்டுத் தர ஒப்புக்கொண்டிருக்கேன் சரிதானே?''

தலையை ஆட்டினான் அவன்.

''சரி, மசமசன்னு நிக்காதே. போய் வேலையைக் கவனி'' வெளியே துரத்தினார் பதிப்பகத்தின் முதலாளி.

அன்று பகல் உணவிற்கு அவன் சுஜரிதாவுடன் ஆனந்தன் கஃபேயுக்குள் புகுந்து ஒரு மேஜையைப் பிடித்துக் கொண்டான்.

''நீங்க டைப் அடிக்கத் தெரிஞ்சு கொண்டிருந்தீங்கன்னா இன்னுய் ஒரு நல்ல வேலை கிடைச்சிருக்கும். என் கத்துக்கலை?'' கேட்டபடி சுஜரிதா பூரியை விண்டு சப்ஜியில் தோய்த்து மென்றாள்.

''கிடைத்திருக்கும். ஆனால் ஏனோ எனக்குப் டைப்பிங் வரமாட்டேன்னுட்டுது'' என்றான் அவன்.

''எல்லா எழுத்துகளையும் சேர்த்து ஒரு ஸ்லோகம் போல சொல்லி அதை அடிக்கும்படி பயிற்சி கொடுப்பாளே, அதையே தட்டிக்கொண்டிருந்தா சுலபமா டைப் அடிக்கக் கத்துக்கலாமே....''

''அதைச் சொல்றேளா? தி குவிக் ஸ்லை பாக்ஸ் ஜம்ப்டு ஓவர் தி லேஸி பிரவுன் டாக்ஸ்... என்று அடிக்கச் சொன்னாங்க''

''இந்த குள்ள நரி ஏன் அந்த பழுப்பு வர்ண சோம்பேறி நாய்கள் மேலே தாண்டிக் குதிக்கணும். நாய்கள் ?கோவிச்சுக் கொண்டா பாஞ்சு குதறிடுமே...நரியும் நாய்களும் சண்டை போட்டால். ஒரே ரத்தக்களறியாயிடுமேன்னு கற்பனை பண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். டைப் அடிக்கத் தோணலை!''



களுக்கென்று சுஜரிதா சிரித்தாள். அந்த மங்கிய விளக்கொளியில் முத்துப்போன்ற வரிசைப் பற்கள் தெரிய லேசாக கன்னங்குழிய கன்கள் ஒளியிட அவள் சிரிப்பதைப் பார்த்துக்கொண்டே இருக்க, ஏதாவது கதைகள் திரித்துக் கொண்டு யுகத்தின் முடிவு வரை அங்கேயே உட்கார்ந்திருக்க வேண்டும் போன்ற ஒரு தீவிர ஆவல் அவனுள் பொங்கிப் புரண்டது

# 16

மறுநாள் காலை, அவசரமாக அவன் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது சியாமளா சமையலறையிலிருந்து ஒரு டிபன் சம்புடமும், தோளில் தொங்கவிட்டுக் கொள்ள வார் கட்டிய பிளாஸ்குமாக வெளிப்பட்டாள்.

''தினமும் பகல் உணவுக்கு ஹோட்டலைத் தேடிண்டு போனால் கட்டுப்படியாகாது. அதனால் கொஞ்சம் சிரமத்தைப் பார்க்காம டிபன கட்டி வச்சு, பிளாஸ்கிலே சூடான டீயை ரொப்பி வைச்சிருக்கேன். எடுத்துண்டு போ'' என்று கூறியபடி அவற்றைச் சாப்பாட்டறை மேஜை மேல் வைத்தாள்.

ஒன்றன் மேல் ஒன்று அடுக்கியதுபோல் செய்யப்பட்ட இரண்டடுக்கு டிபன் டப்பாவும்.. கொஞ்சம் பெரியதான பிளாஸ்கும் தயாராக இருப்பதைக் கண்டு வியப்படைந்தான்.

''அதிகம் டிபன் கட்டிக் கொடுத்திருக்கேளே, ஒருசின்ன சம்புடத்தில் கொடுத்திருந்தாலே போதுமே டீ கூட ரொப்ப அதிகம்'' என்றான் தடுமாற்றமும் மகிழ்ச்சியுமான குரலில்.

''ரெண்டு பேருக்குச் சாப்பிட இந்த டிபனாவது வேண்டாமா...?'' தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு... சியாமளா அம்மாள் என்ன சொல்கிறாள்? ஒரே வியப்பு.

''என்ன அப்படி முழிக்கிறே?'' எனக்கு எல்லாம் தெரியும் நேத்திக்கு நீ வேலையிலிருந்து திரும்பி வந்ததும் உன்னை காய்கறி வாங்கிண்டுவர கடைத் தெருவுக்கு அனுப்பினேன் இல்லையா? நீ போன சித்த நாழிக்கெல்லாம் சுஜி இங்கே ஓடி வந்தா. அவ என்கிட்ட எதையுமே மறைக்கமாட்டா. எல்லாத்தையும் சொல்லிடணும்கிற ஒரு துடிப்பு...நீ வேலை செய்ய ஆரம்பிச்சிருக்கிறபுஸ்தகக்கடை, அவள் வேலை செய்யற நர்ஸிங்ஹோமுக்கு கிட்டதான் இருக்காம். ரெண்டு நாளா நீதான் அவளுக்கு பகல் சாப்பாட்டுநேரத்தில் டிபன் வாங்கிக் கொடுத்தியாம். நேத்திக்கு அவள் பர்சை யாரோ பிக்பாக்கெட் அடிச்சுண்டு போயிட்டானாம். நீதான் போக வர பஸ் டிக்கெட் வாங்கி உதவி செஞ்சியாம். உன்னை அவள் ரொம்பப் புகழ்ந்தாள்...''

காதுமடல் ஜிவ்வென்று சிவக்க திருதிருவென்று விழித்தான் சித்தார்த்.

''அவகிட்டே நீ நல்ல முறையில் கௌரவமா, அன்போடு நடந்துக்கிறதைப் பத்தி நான் ரொம்ப மகிழ்ச்சியடைகிறேன்... அவள் ஏழைப் பெண்தான். ஆனால் குணத்தில் பத்தரை மாத்துத் தங்கம். அழகில் மட்டும் குறைச்சலா என்ன?... முகமெல்லாம் சிவந்து... உஷ்ணம் கழுத்திலும் முதுகிலும் பரவுவதையும்... நெஞ்சு வேகமாக அடித்துக் கொள்வதையும் அவன் உணர்ந்தான். ஆனாலும் வாய் பேச முடியாது மௌனமாக நின்றான்.

'நம்ப மாமியின் உறவுக்கார பிள்ளைதானே, தப்பில்லைன்னுதான் அவரோட அந்த கஃபேக்கு டிபன் சாப்பிட போனேன் மாமி... கண்டவாளோட நான் போவேனோ? அப்படின்னா... நானும் விட்டுக்கொடுக்கலை. சித்தார்த் நல்லா பிள்ளை. நல்ல குடும்பத்து பின்னணியில் வளர்ந்து



ஆளானவன், படிச்சவன், பண்பான பையன், உனக்கு அவன் பாதுகாப்பாகக்கூட பஸ்ஸில் துணையாக வரது ஒரு விதத்தில் நல்லது. ஏன்னோ இப்போ காலம் ரொம்ப கெட்டுக் கிடக்கு. ரெண்டு பேரும் தினமும் ஹோட்டலில் சாப்பிடக் கட்டுப்படியாகாது. அதனாலே சித்தார்த் கிட்டே உனக்கும் சேர்த்து டிபனும்—டீயும் கொடுத்தனுப்பறேன். பகல் சாப்பாட்டு நேரத்தின்போது அவன் வேலை செய்கிற புஸ்தகக் கடை தோட்டத்திற்குள்ளோ, அல்லதுஉன் நர்ஸிங் ஹோம் தோட்டத்துக்குள்ளேயோ ஒரு பக்கம் உட்கார்ந்து ரெண்டு பேரும் பசியாற சாப்பிடுங்கோன்னேன். இனி முன்னிருட்டுக் காலம். நீ தனியா பஸ்ஸில் ரொம்ப தூரம் வரது நல்லதில்லைன்னேன்.''

நன்றி உணர்வு நெஞ்சை இறுக்கமாக அமுக்கிக் கொள்வதை அவன் உணர்ந்தான்.

''கருமிக்கிழவி, தரித்திரம், சனியன்'' என்றெல்லாம் கூசாமல் அவளை அழைத்து, சொற்களால் இழிவுபடுத்த முயன்றவன் அவன்.

ஆனால் சியாமளாவோ...அதற்குப் பதிலாக அவனைப் பற்றி சுஜரிதாவிடம் எப்படிப் புகழ்ந்து மெச்சிப் பேசியிருக்கிறாள். அந்தப் பெண்ணுக்கு அவன் மீது மதிப்பு ஏற்படும் வகையில் உயர்த்திப் பேசியிருக்கிறாளே? இந்தம்மாளுக்குத் தான் எத்தனை ஒரு தாராள சிந்தனை?

திடீரென்று அவளது கால்களில் விழுந்து அம்மா என்று அலறி அழுது கண்ணீரால் அவளது கால்களை நனைத்து, அவளுக்குத் தான் இழைத்த தவறுகளையெல்லாம் கழுவிவிட வேண்டும் என்ற ஒரு ஆக்ரோஷமான உணர்வு அவனது அடிவயிற்றினின்று எழுந்து நெஞ்சைப் பிளந்துவிடும் போல அடைக்க கண்களில் ஈரம் கசிவதை மறைக்க அவன் சிரமப்பட்டு...சமாளித்தபடி...

''பெரியம்மா எனக்கு என்ன பதில் சொல்வதுன்னு தெரியலை'' என்று மெல்லிய குரலில் முனகினான்

''ஒண்ணும் சொல்லத் தேவையில்லை. இவற்றை எடுத்துண்டு கிளம்பு. சுஜி ரொம்ப நல்ல பெண். டிபன், டீ, ரெண்டும் தினமும் அவனுக்கும் நான் உன்கிட்ட கொடுத்தனுப்பப் போறேன்னப்போ அவள் என்ன சொன்னா தெரியுமா? ''ஞாயிற்றுக்கிழமைகளில், இங்கே வந்து வீட்டு வேலைகள் செய்ய அனுமதி தரணும். அப்பத்தான் அதை நான் ஏத்துக்க முடியும்னு ஒரு நிபந்தனை போட்டாள். நான் சரின்னு ஒத்துக்கிறேன். ஆனால் இங்கே நீ வந்து எனக்கு வீட்டு வேலைகளில் உதவ ஆசைப்படுகிறதுக்கு இது ஒண்ணுதான் காரணமா... வேற ஏதாவது உண்டான்னு?' வேடிக்கையா கேட்டபோது, அந்தப் பெண் மூஞ்சி அப்படியே குப்புனு சிவந்து போச்சு. 'போங்கோ மாமின்னு' சிரிச்சுண்டு ஒரே ஓட்டமா ஓடிப்போயிட்டா. சுஜி ஒரு தடவை இங்சே வந்துட்டுப் போனாலும் போறும். எனக்கு ஏதோ டானிக் சாப்பிட்டது... போல இல்லை.. காயகல்பம் சாப்பிட்டது போல ஒரு தெம்பு வந்துடறது... அவளது அருகாமைக்கு அப்படி ஒரு சக்தி இருக்கு. அடடா நான் பாட்லே பேசிண்டு இருககேன். நீ சட்னு கிளம்பு. அந்த முதல பஸ்ஸைத் தவற விட்டுட்டா ரொம்ப சங்கடமாயிடும்.''

டிபன் டப்பாவை ஒரு நாளேட்டு பக்கத்தில் சுற்றி கையில் எடுத்துக்கொண்டு—பிளாஸ்கின் வாரை இழுத்து சரி செய்து தோளில் மாட்டிக் கொண்டான் அவன்.

'ரொம்ப நன்றி பெரியம்மா...வரேன்'' மேலே பேச முடியாது வார்த்தைகளை விழுங்கிக்கொண்டு வெளியே விரைந்தான்.

பஸ் நிலயத்தை நோக்கி நடந்த அவன் மனதிலே உணர்ச்சிகள் அலைமோதின. சியாமளாவையும் | மன்னி மைதிலியையும் மாறி மாறி மனம் நினைத்துக்கொண்டது.



முரட்டுத்தனமாக வீட்டிற்குள் புகுந்து கத்தியைக் காட்டி மிரட்டி இழி சொற்களால் ஏசியும்—பயமுறுத்தியும்... அன்னாக்கீடானதொரு அன்பை அவனிடம் காட்டிய சியாமளாவின் பெருந்தன்மையை எண்ணி எண்ணி வியந்தான்.

இப்படிப்பட்டதோர் நல்ல பெண்மணியை அவமதித்து அநாகரிகமாக நடந்து கொண்டது எத்தனை பெரிய பாவம்? அதை எப்படி நிவர்த்திப்பது? மன்னி மைதிலி அண்ணாவின் மனைவி—அவனது அன்புத் தாய்க்கு ஒப்பானவள்—ஒரு தலைவலி என்று அவன் கட்டிலில் சுருண்டு கொண்டாலும் கவலையால் தத்தளித்துப் போய்விடுவாள்.

''சித்தார்த்! உடம்பை என்ன பண்றது அப்பா! வெயிலில் வீணா ஏன் அலையறே? வெறும் வயத்தில் தலைவலி மருந்து சாப்பிடாதே. கொஞ்சம் சூடா ஹார்லிக்ஸ் கொண்டு வரேன்—அதை சாப்பிட்டுட்டு மாத்திரையைப் போட்டுக்கோ. அண்ணன் கத்தினா அதை நீ மனசிலே எடுத்துக்காதே. நமக்கு வேண்டியவா அழ அழத்தான் சொல்லுவா... சேது வேறே நீ வேறயா எனக்கு...எழுந்திரு.''

எப்படிக் கெஞ்சுவாள்—உபசரிப்பாள்?

அந்த மன்னியை மனம் கலங்கி தவித்து அழும்படி விட்டுவிட்டு அவள் நகையைத் திருடிக்கொண்டு...சே! எத்தனை பெரிய பாவம்? கொடூரமான செய்கை? இதற்கு விமோசனம்?

எப்படியாவது வேலை செய்து அதில் கொஞ்சம் பணத்தை மிச்சப்படுத்தி மன்னியின் நகைக்கு உண்டான பணத்தை அவளிடம் திருப்பித் தந்துவிட வேண்டும். ஆனால் மன்னி அந்த அளவுக்கு அவனைப் போக விடமாட்டாளே...' நகை போனால் போகட்டும். நீ பத்திரமா சமத்தா... உனக்குன்னு ஒரு வேலையைத் தேடிண்டு ஒழுங்

காக இருக்கப் பழகிண்டு இருக்கியே, அது எனக்குப் போதும் சித்தார்த்!' என்று கண் கலங்குவாளே. எத்தனை பெரிய மனம் உங்களுக்கு மன்னி! இந்த சமுத்திரத்தைப் போல, இல்லை இல்லை என் தலைக்கு மேலே எங்கேயும் விரிந்து தெரியும் ஆகாயத்தைப் போல, மன்னி உங்களுக்கு ஈடு இணை யாராவது இந்த உலகத்திலே உண்டா...?

சியாமளா அம்மா...மன்னி, உங்க ரெண்டு பேரையும் நான் செய்த கொடுமைகளுக்காக கன்னத்தில் பலதடவை போட்டுக்கறேன். மானசீகமாக மன்னிப்பு கேட்கிறேன். அதுக்கு ஈடு செய்யறாப்பல .. இந்த நல்ல பெண் சுஜாிதாவை உம் கண்களுக்கும் இனியவளாகப் போற்றிப் பாதுகாப்பேன் சத்தியம். உங்கள் எதிர்பார்ப்புகளை உண்மையாக்குகிறேன்.

சே! இதென்ன அவனையும் மீறி கண்களில் கண்ணீர் பெருகி கன்னங்களில் துளிகளாக .. வெட்கத்துடன் சட்டென்று கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு துரிதமாக பஸ் நிலையத்தை அடைந்தான்

பச்சை வண்ண நைலக்ஸில் கண்களுக்குக் குளிர்ச்சியாக பளிச்சென்று—அவன் வருகையை எதிர்நோக்கி நிலையத்தில் அவனுக்கு முன்னரே சென்று காத்துக் கோண்டிருந்தாள் சுஜாிதா.

அவனைக் கண்டதும் கையை நீட்டி டிபன் சம்புடத்தை வாங்கி தனக்குள் வைத்துக் கொண்டாள்.

"இடம் கிடைக்காட்டா, வாரைப் பிடிச்சிண்டு தொங்கும்போது இது கையில் இடைஞ்சலா இருக்கும். அதனாலே வாங்கிண்டேன்'! என்று அவள் சிரித்த போது, அவள் பேச்சும்—சிரிப்பும்— தோற்றமும் துயரத்திலும் அவமானத்திலும் புழுங்கிப் போன அவன் மனதிற்கு எத்தனை இதமாக இருந்தன!

அமரேசன் பதிப்பகம் ஆங்கிலேயர் காலத்தில் ஆரம்பித்து பூதாகரமாக விருத்தியாகி செயல்பட்டுக் கொண்



டிருந்த பழங்காலத்து புத்தக வியாபாரக்கடை. இப்போது இடம் மாறியிருக்கிறது. ஆங்கிலம் தமிழ இரண்டிலும் உள்ள எல்லாவிதமான புத்தகங்களையும் அந்தக் கடையில் பார்க்க முடியும். சிலவற்றைத் தமது பதிப்பகத்திலேயே அதன் அதிபர் அச்சடித்து விற்பனைப் பகுதியில் மேஜைகளிலும், அலமாரிகளிலும் அலங்காரமாக, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் தனித் தனிப் பகுதிகளாகப் பிரித்து வைத்திருந்தார்

சாப்பாட்டுக்குத்தான் ஹோட்டல்களில் கூட்டம் என்றால், இபபடிப்பட்ட அந்தஸ்து மிக்க புத்தகக் கடைகளிலும் கூட்டம், நாள் முழுவதும் திமுதிமுத்துக் கொண்டிருந்தது அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது

காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்து, மாலை ஐந்து மணிக்கு மூடிவிடும் அந்தக் காலத்துப் பழக்கத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தது அந்தக் கடை. சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கடையை மூடி விடும் பழக்கத்தையும் மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் ஊழியர்களுக்கு நிற்க நேரமில்லாது தொடர்ந்து சங்கிலி போல் வேலைகள் இருந்து கொண்டே இருந்தன. அப்படிப் பட்டதோர் அமைப்பு அது. டிஸ்ப்பாச்சிங் செக்ஷனில் குனிந்த தலையை நிமிர முடியாதபடி அவனைச் சக்கையாகப் பிழிந்தெடுத்தார்கள், ஆனால் உணவு நேரத்தின் போது, அரைமணி காலம் அவனுடையதாக இருந்தது. அந்த வேளையில் யாரும் அவனைத் தங்கள் வேலையைச் செய்ய ஏவவில்லை.

முன்னதாகவே பேசி வைத்துக்கொண்டு அவர்கள் இருவரும் தங்கள் பகல் உணவு நேரத்தை ஒரே சமயத்தில் அமையும்படி, அவாவர் வேலை பார்த்த இடத்தில் உத்தரவு வாங்கிக் கொண்டு விட்டிருந்தனர்.

நர்ஸிங் ஹோமின் முன்பக்கத்து தோட்டத்தில் ஒரு பெரிய வேப்பமரத்தின் நிழலில் கையோடு கொண்டுவரும் பழைய நாளேட்டு பக்கங்களை அவன் பிரித்துப்போடுவான். கழுவி சுத்தப்படுத்தி கையோடு எடுத்துவரும் பிளாஸ்டிக் டம்ளர்களை அவள் அதன் மீது வைத்துவிட்டு டிபன் டப்பாவை எடுத்து, காகித விரிப்பின் நடுவில் வைப்பாள். இருவரும உடை அழுக்காகாது காகிதத்தின் மீது எதிர் எதிராக உட்கார்ந்ததும் அவன் பிளாஸ்கைத் திறந்து, சூடான தேநீரை டம்ளரில் பகிர்ந்து ஊற்றுவான்,

அவள் டிபன் டப்பாக்களைத் திறந்து வைப்பாள்.

'அடடா! இன்னிக்கு மாமி சப்பாத்தியும் — உருளைக் கிழங்கு கறியும் வச்சுருக்கா...''

''பேஷ்! இன்னிக்கி எலுமிச்சம் பழ சாதம்... கருவடாம்...''

இன்னிக்கு டிபன் என்ன தெரியுமா... வெஜிடபிள் ஸாண்ட்விச்... பொடாடோ சிப்ஸ்...''

'பலே? எனக்குப் பிடிச்ச... இட்லி. எண்ணெய்விட்ட மிளகாய்ப் பொடி...என்று ஆர்ப்பரித்தபடி அவனுக்கு ஒரு டப்பாவை எடுத்துக் கொடுத்து உபசரிப்பாள். அந்த அரை மணி நேரம்இந்திர லோகத்திலிருக்கும் சுகத்தில் ஒரு பெரிய விருந்தை சுவைத்து அனுபவித்து உண்கிற இனிமையிலே, இருவருக்கும் பொழுது வேகமாக ஓடி விட்டதைப் போன்றதொரு பிரமிப்பு ஏற்படும்.

''சரி, சாயங்காலம் பார்க்கலாம்...'' சொல்லிக்கொண்டு பிளாஸ்க்கை மூடி, தோளில் மாட்டிக்கொண்டு அவன் எழுந்து...அருகிலிருக்கும் ஒரு குழாயில் கையைக் கழுவிக் கொள்வான்

டப்பாக்களைக் கழுவி — துடைத்து தன் பையில் போட்டுக்கொண்டு...மரத்தடியில் பரப்பின காகித ஏடுகளை எடுத்து மடித்து அருகில் இருக்கும் குப்பைக்கூடையில்



போட்டுவிட்டு—கைகளை கழுவிக்கொண்டு அவள் பிரியா விடைபெற்றுக்கொண்டு வேலையைத் தொடர ஆஸ்பத்திரியின் உள்ளே மறைந்து விடுவாள். நாட்கள் இப்படி இதமாக இன்பமாக, வேகமாக ஓடின.

ஒருநாள் பகல் உணவு முடிந்ததும் விடைபெற்றுக் கொண்டு அவன் கிளம்பினான்.

''அதோ பாருங்க! ஆஸ்பத்திரி வாசலில் வந்து முறைச்சுண்டு நிக்கிறானே அந்த தடியன்தான் என்னை ஆரம்பத்தில் ரொம்ப பின் தொடர்ந்து தொல்லை கொடுத்தான்—இப்போ உங்களை பார்த்துட்டு பயந்துண்டு திரும்பிப்போக பார்க்கிறான்... சட்டுனு நீங்க திரும்பி கவனியுங்கோ ஒரு தடவை அடையாளம் கண்டு வச்சுண்டா...'' என்று அடிக் குரலில் அவனிடம் சுஜி ரகசியமாகச் சொன்னாள்.

கோபத்துடன் விருக்கென்று திரும்பினான் சித்தார்த். அடிவயிற்றில் பகீர் என்ற உணர்ச்சி. உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்ட திகிலில் அவன் தள்ளாட, மூச்சுவிட முடியாது போன்று அச்சத்தில் அவன் ஒருகணம் ஆடிப் போனரன்.

## 17

அன்று மாதத்தின் கடைசி நாள். பகல் வேளைக்குப் பின்னர் ஊழியர்கள் கிளம்புமுன் அமரேசன் பதிப்பகத்துத் தலைமைக் கணக்கர் அவர்களின் சம்பளத்தை விநியோகம் செய்யத் தொடங்கினார். ஆரம்பத்திலேயே அவன் சொல்லிவிட்டிருந்தான். காசோலைக்குப் பதில் தன் சம்பளத்தை அவர்கள் ரூபாய் நோட்டுகளாகத் தந்து விட்டால் உடனடி செலவிற்கு உதவியாக இருக்கும் என்று

அவனிடம் கணக்கர் ஒரு பழுப்பு வண்ண காகித உறையைத் தந்தார். மாதம் ஆரம்பித்த பின்னர் அவன் வேலைக்கு அமர்ந்ததால் அந்தக் கணக்குப்படி அவனுக்குச் சம்பளம் தரப்பட்டிருந்தது. இருநூறு ருபாய் சொச்சம் என்றிருந்த பணத்தை எண்ணிப் பார்த்து மறுபடி காகித உறைக்குள் போட்டு பத்திரமாக சட்டைப் பையில்வைத்துக்கொண்டான். முதல் முதலாக ஒரு வேலையை ஏற்று ஒழுங்காகச் செய்து முடித்ததற்கு கிடைத்த சம்பளம் அது. ஆஸ்பத்திரியின் வாயிலில் அவன் சுஜரிதாவின் வரவிற்காக காத்துக் கொண்டு பாதையோரத்தில் நின்று கொண்டிருந்தான். மனதில் கற்பனைகள் சிறகு விரித்தன.

'அண்ணா! மன்னி! தாத்தா எல்லாரும் கேட்டுக் கோங்கோ, நான் வேலை செய்து சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டேன்...' ஓங்கிக் கத்த வேண்டும் போன்ற உற்சாகம் அவனை உலுக்கியது.

தோள் பை ஆட புடவைத் தலைப்பு காற்றில் பறக்க நெற்றி மீது தவழ்ந்து புரண்ட கூந்தலை இடக்கையால் ஒதுக்கிவிட்டுக் கொண்டு சுஜிரிதா வேகமாக வெளியே வந்தாள். உதட்டின்மீது அரும்பிய வியர்வையை புடைவைத் தலைப்பால் ஒத்திக் கொண்டபடி அவனைப் பார்த்துக் கேட்டாள்.

' உங்களுக்கு சம்பளம் கிடைச்சுதா? இங்கே இன்னிக்கு மத்தியானமே எங்களுக்கெல்லாம் சம்பளம் கொடுத்துட் டாங்க'' தோள் பையைத் திறந்து உப்பியிருந்த தனது மணிபர்சை அவன் முன் நீட்டினாள்.

''எனக்குந்தான் கிடைச்சிருக்கு?'' என்று மகிழ்ச்சி யுடன் கூறியபடி அவன் தன் சட்டைப் பையிலிருந்த பழுப்பு வண்ணக் காகித உறையையெடுத்துஅவளுக்குக் காட்டினான்.

''அப்படின்னா இன்னிக்கு நாம் ஒரு காரியம் செய்யணும். சியாமளா மாமி உதவியால் பெற்ற வேலையி



லிருந்து முதல் முதலா நாம் இருவரும் சம்பளம் வாங்கி யிருக்கோம். அந்த மாமிக்கு அதன நினைவா ஏதாவது ஒரு சிறு பரிசு வாங்கிக்கொண்டு கொடுத்தால்?''...

சித்தார்த்தின் மனதிலும் அதே எண்ணந்தான் ஏற்பட் டிருந்தது.

அவள் சொல்லியதைக் கேட்க அவனுக்கு மிக்க ஆச்சரியமாக இருந்தது.

'இந்தப் பெண் எண்ணங்களில் கூட என்னுடன் ஒத்துப் போகிறாளே?' பெருமிதமும் வியப்புமாக அவளை அப் பொழுதுதான் பார்ப்பது போல அதிசயமாக ஆர்வமாகப் பார்த்தான்.

என்ன வாங்குவது என்று விவாதித்த வண்ணம் மகிழ்ச்சி யுடன் இருவரும் நடைபாதை மீது மெல்ல நடந்தனர்.

'சியாமளா அம்மாவைப் பொறுத்தவரை, தேவைகளில் சிரமம் இன்றி, போதுமென்ற மனத்தோடு சுகமாக வாழ் கிறார். நாம் பரிசு வாங்கிக் கொடுத்து அவர்களது வாழ்வை நிறைத்து விடப் போவதில்லை. ஏதோ நம் மனத் திருப்திக்கு ஒரு சின்னமாக ஏதாவது வாங்கித்தர ஆசைப் படறோம். எனக்கு ஒரு யோசனை தோணுது. ஒரு நல்ல ரவிக்கைத் துண்டு வாங்கித் தந்தால்...'' சித்தார்த் ஆவ லுடன் கேட்டான்

''நல்ல ஐடியாதான். அதைத்தச்சு போட்டுக்கொள்ளும் போதெல்லாம் மாமியின் நெஞ்சருகே நமது நினைவும் கூடவே இருக்கும். ரூபைடு வில் ரோஜா நிறத்தில் ஒரு மீட்டர் துணி வாங்கி விடுவோம். விலை இப்போதெல்லாம் ரொம்ப அதிகமாகி விட்டிருக்கு...தெரியுமா?''

''இதுவரை எனக்குப் பெண்களது துணிமணிகளைப் பற்றிய விவரம் எதுவுமே தெரியாதிருந்தது. இனிமேல்

தெரிஞ்சு வச்சுக்கிறது நல்லது இல்லையா?'' பரிகாசமாக கேட்டபடி அவன் அவளைக் கனிவுடன் பார்த்தான்.

அந்தி வானத்தின் செம்மை முழுவதும் அவளதுகன்னங்களில் பிரதிபலிப்பதைக் கண்டு பரவசமாகிப் போனான்.

பஸ்ஸில் பயணப்பட்டபோது அவனது மணிபர்சை தான் வாங்கி பத்திரமாகத் தன் பையில் வைத்துக் கொண்டாள்.

அன்று நடந்தது போல்—வாங்கின சம்பளத்தை எவனாவது பிக்பாக்கெட் அடிச்சுண்டு போயிடப் போறானேன்னு கவலையா இருந்தது. ''இந்தாங்கோ'' என்று சியாமளாவின் வீட்டு வாசலை நெருங்கியபோதுதான் சட்டைப் பையிலிருந்து பர்சை எடுத்து சுஜரிதாவிடம் கொடுத்தான்.

''எனக்கும் பயமாகத்தானிருந்தது. நீங்க வாங்கி வச்சுண்டதும் கவலையில்லாமல் நிம்மதியா வந்தேன். நீங்ககூடவே தினம் இப்படி என்னோட துணையாக வந்தது எனக்கு எத்தனை தெம்பா இருக்கு தெரியுமா?'' அவள் கேட்டபோது சித்தார்த் மெய்சிலிர்த்துப் போனான். 'காலம் முழுவதும் உன்னோடு ஜோடியாக துணைவர ஆசைப்படுகிறேன். அது உனக்கு புரிகிறதா சுஜி' மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

சியாமளாவுக்கு பெத்த வியப்பு இருவரும் ஒரே மனதாக தீர்மானித்து அவளுக்கு பிடித்தமானமெல்லிய ரோஜா வண்ணத்தில் ஒரு ரவிக்கைத் துண்டை தங்களது அன்பளிப்பாக வாங்கிக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு... மனம் நெகிழ்ந்து போனாள்

'நான் சித்த பருமனாக இருக்கிறதை புரிஞ்சுண்டு, சுஜி ஒரு மீட்டர் வாங்கியிருக்கா டூ பை டூ. ரொம்ப விலையாச்சே...'' என்று கையில் துணியை எடுத்து மெல்லத் தடவி ரசித்தாள்.



''நீங்க எங்ககிட்ட காட்டற அன்புக்கு இந்தச் சிறு பரிசு ஈடாகாது. ஆனாலும் எங்கள் நன்றியை இந்த துளியூண்டு சங்கதி மூலம் வெளியிட்டுக்க விரும்பறோம்'' என்றாள் சுஜரிதா.

''ஆமாம் பெரியம்மா'' என்றான் சித்தார்த்.

''தாங்க்யூ? அடிக்கடி இது மாதிரி செலவுகளை இழுத்து விட்டு கொள்ளக் கூடாது. முதல் தடவை என்பதால் மகிழ்ச்சியோட ஏத்துக்கிறேன்'' என்று சிரித்தாள் சியாமளா.

அதற்குப் பின்னர் ஒரு நாள் பகல் உணவின்போது சுஜரிதா அவனிடம் சொன்னாள்.

''எங்க நர்ஸிங்ஹோமின் டைரக்டர், அதாவது இதன் தலைமை நிர்வாகியான டாக்டர் ரகுநந்தனை நான் ஒரு முக்கியமான ஃபைலுடன் இன்று காலை பார்க்க நேர்ந்தது. எனது வேலைத் திறமையை அவர் வெகுவாகப் புகழ்ந்தார். இதுதான் சமயம்னு நான் அவரிடம் உங்களைப் பத்திப் பேசினேன்.''

திடுக்கிட்டுப்போனான் சித்தார்த். ''என்னபேசினீங்க?''

ஆவலுடன் கேட்டான்.

''எங்க நர்ஸிங்ஹோம் ரொம்ப பெரிசா விரிவடைஞ்சுண்டு போறது. அடுத்த மாசம் திறக்கப்போற புதிய பிளாக்குக்கு சில புதிய ஊழியர்கள் தேவைன்னு... பேசிக் கொண்டிருந்தது காதில் பட்டது. அதனாலே டைரக்டர் கிட்ட சட்டுனு உங்களைப் பத்தி ஒரு வார்த்தை சொல்லி வச்சேன்.

''உங்க நண்பர் தேவநாதனுக்கு தெரிஞ்சவங்களோட தங்கை மகன் சித்தார்த் என்கிற பட்டதாரி இளைஞன். ரொம்ப சுறுசுறுப்பா நாணயமா [illegible] நல்ல வேலை தேடிண்டு அலைஞ்சிண்டு இருக்கார் இப்

26614
4345347

சத்தியா அமரேசன் பதிப்பகத்தில் டிஸ்பாட்ச் செக்ஷனில் குறைந்த சம்பளத்துக்கு வேலை பார்க்கிறார். இந்த ஆஸ்பத்திரியில் அவருக்கு ஒரு கணக்கர் வேலை கிடைச்சா கூட ரொம்ப சந்தோஷப்படுவார்ன்னு சொன்னேன்.

எப்படி உனக்கு மிஸ்டர் தேவநாதனைத் தெரியும்னு அதிசயமா அவர் என்னைக் கேட்டார்.

எங்க குடும்பத்துக்கு ரொம்ப வேண்டியவங்க சியாமளா அம்மா. அவங்களுக்கு குடும்ப வக்கீல் தேவநாதன், நெருங்கிய நண்பர்கூட. அவர் சிபாரிசின் பேரில்தான் எனக்கே இங்கே வேலை கிடைச்சது. சியாமளா அம்மா ரொம்ப நல்லவங்க.

தமது தங்கை மகனுக்கு பிறகுவேலை கேட்டுக்கலாம்னு எனக்குத்தான் முதலில் சிபாரிசு செய்தாங்க. என்னா எங்க குடும்பம் சிரமப்படறதுன்னு அவங்களுக்கு ரொம்ப இரக்கம்.

"அதுக்கு ஈடு செய்யறாப்பல அந்த பையனுக்கு ஒரு வேலை தரச்சொல்லி நீ இப்போ சிபாரிசு பண்ணுகறயா. வெரிகுட், எங்கே நாளை எட்டரை மணிக்கு அவனை இங்கே வந்து முதலில் என்னைப் பார்க்கச் சொல், அப்படின்னார். அதனால் மிஸ்டர் சித்தார்த், நாளை நாம் வீட்டைவிட்டு கொஞ்சம் சீக்கிரம் கிளம்பியாகணும்'' என்றாள்.

சுஜரிதாவிடம் காணப்பட்ட துணிவும் முயற்சியும் அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தன.

வேலை எங்கேயோ வானத்திலிருந்து கைமேல் விழும் என்பது போல அவன் எண்ணிக்கொண்டு, அது கிடைக்க வில்லை என்று ஆத்திரப்பட்டு, வெட்டியாகப் பொழுதை ஓட்டி, தன்னைத் தானே சீர்குலைத்துக் கொள்ள முற்பட்டிருந்தான். ஆனால் அவளோ?



கண்ணியமான வேலை. அது எதுவானாலும் சரி அதை முயன்று தேடிக்கொள்வது என்ற துணிச்சலுடன் இருந்தாள். அவளது அயராத முயற்சியைப்பற்றி எண்ணி பெருமையில் பூரித்துப் போனான் அவன்.

அடுத்த நாள் காலை குறிப்பிட்ட நேரத்தில் அவன் டாக்டர் ரகுநந்தனை சந்திக்கச் சென்றான்.

முதல் நாள் இரவு சாப்பிடும்போது அந்த புதிய வேலை வாய்ப்பைப்பற்றி அவன் சியாமளாவிடம் சொல்லியிருந்தான். ஒரு சமயம் அவள தன் வக்கீலுக்கு போன் செய்து, அவரைவிட்டு டாக்டருக்கு சிபாரிசு செய்ய முயன்றாளோ என்னவோ அவனுக்குத் தெரியாது. அல்லது அவனது முகராசியோ? டாக்டர் அவனது பெயரைக் கேட்டார். படிப்பைப்பற்றி விசாரித்தார். மேலும் கீழும் அவனை ஒருமுறை பார்த்துவிட்டு தமக்குள்ளே புன்னகை செய்து கொண்டார்.

"சரி நீ தற்சமயம் செய்துகொண்டிருக்கும் வேலைக்கு உரிய கால அறிக்கை விடுத்துவிட்டு, இங்கே வந்து கணக்கு வழக்குப் பகுதியில் ஒரு கணக்கராக சேர்ந்து விடு. ஆர்டரை டைப் பண்ணி இன்றே உன் கையில் கொடுத்துவிடச் சொல்கிறேன். ஆரம்பத்தில் முன்னூறு ரூபாய் சம்பளம். ஆறு மாத காலம் உன் வேலைத் திறமையை கவனித்த பின்னர் திருப்தி ஏற்பட்டால் அடுத்ததாக நாங்கள் தேர்ந்தெடுக்கப் போகும் ஹாஸ்ப்பிடல் அட்மினிஸ்ட்ரேஷன் ஸ்டாஃப் என்னும் குழுவில் உன்னை ஒரு ஊழியனாக எடுத்து, அதற்கு வேண்டிய பயிற்சியை எங்கள் செலவில் உனக்குத் தர ஏற்பாடு செய்வேன் சம்மதமா?''

கரும்பு தின்னக் கூலியா வேண்டும்...? மகிழ்ச்சியுடன் தலையசைத்தான்

அன்று மாலை அவனுக்காக அந்த நர்ஸிங்ஹோம் வாசலில் காத்திருந்த அவன், சுஜரிதாவைக் கண்டதும் "ஒரு நிமிஷம் நில்லுங்க'' என்று உத்தரவிட்டான்.

தன் பையிலிருந்த சாக்லெட் துண்டமொன்றை எடுத்து அதன் மீது போர்த்தியிருந்த சரிகைக் காகிதத்தை உரித்து அதை இரு துண்டமாக ஒடித்தான். "எனக்கு டாக்டர் ரகுநந்தன் வேலை கொடுக்க ஒப்புக்கொண்டு விட்டார். வேலையில் சேரச் சொல்லி, ஒப்புதல் காகிதமும் கொடுத்து விட்டார். இந்த இனிய சங்கதியைக் கொண்டாட வேண்டாமா? இந்தத் துண்டுச் சாக்லெட்டை வாயில் போட்டுக்குங்க"

"எனக்கு பெரிய துண்டத்தை கொடுத்திட்டேள் போலிருக்கே..." கேலியாகக் கேட்டபடி அதை வாங்கி வாயில் போட்டுச் சுவைத்தாள் அவள்

"இனிப்பும், கசப்பும் எதுவானாலும் இருவருக்கும் சரிபாதி. சரிபாதி இனி என்கிற நினைவுடன்தான் சரியா அளவு பார்த்து சாக்லெட்டை இரு பாதியாக ஒடிச்சிருக்கேன் தெரியுமா?" கூறியபடி அவன் மறுபாதியை வாயில் போட்டு மென்றான். "அப்படியா?" என்பது போல் நிமிர்ந்து அவனை அவள் பார்த்தபோது அந்தக் கண்களுக்குள்ளே அவன் கண்டதொரு புதுமை?

அழகானதொரு மணமேடையில் கழுத்து நிறைந்த மாலைகளுடன் அவளருகே அவன் அமர்ந்திருக்க, யாரோ கெட்டி மேளம் என்று உரத்த குரல் கொடுக்க, மங்கள ஒலி வேகமாக எழுந்து எங்கும் நிறைக்க, மங்கல நாணை அவள் கழுத்தில் அவன் பூட்ட, தொடர்ந்துகொண்டே சென்றது ஒரு இனிய கற்பனைக் காவியம்.

"என்ன நீங்களே சிரிச்சுக்கிறேள்? எனக்கு அதைச் சொல்லக் கூடாதா?" சிணுங்கினாள் சுஜரிதா.

சொல்லப் போறேன், இன்னிக்கி இல்லை. ஒரு நாள் கட்டாயம் இன்னிக்கி நான் கண்ட அந்த இனிய சங்கதியை பற்றி சொல்லத்தான் போறேன். அதுரை "சஸ்பென்ஸ்" என்று சிரித்தான்.



"என்ன பெரிய தொடர்கதையா?" என்று சிரித்தாள். சுஜரிதா.

"ஆமாம்! இனி நமது வாழ்க்கை, நீண்ட இனிய அதிசயங்கள் நிறைந்த ஒரு தொடர் கதைதான்" தனக்குள்ளே நினைத்தபடி அவளுடன் ஜோடியாக பஸ் நிலையத்தை நோக்கிப் பரவசமான உள்ளத்துடன் மெல்ல நடந்தான்.

## 18

அமரேசன் பதிப்பகத்தின் அதிபர் தன் முன் கை கட்டிக் கொண்டு வந்து நின்ற சித்தார்த்தை நிமிர்ந்து பார்த்தார். அப்பாடா என்று அவருக்கு ஒரு நிம்மதி. சில நாள்களாக அவர் மனைவி தன் தங்கையின் உதவாக்கரை பேரன் ஒருவனுக்குப் பதிப்பகத்தில் ஒரு வேலை போட்டுத் தரச் சொல்லி அவரை தினமும் ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"இதைவிட நல்ல வேலை கிடைக்கிறதுன்னா கிளம்ப வேண்டியதுதானே. இது தற்காலிகமான வேலை. இருபத்து நாலுமணி நேர முன் அறிக்கை போதும். இப்போ என்கிட்டே சொல்லிட்டே மேற்பார்வையாளரிடம் உடனடியா ஒரு ராஜினாமா கடிதத்தை எழுதி இப்பவே கொடுத்துடு. நாளையிலிருந்து நீ அந்த வேலையில் போய் சேர்ந்துக்கலாம். உனக்குச் சேரவேண்டிய ஒரு நாள் சம்பளத்தை மறக்காமே சாயங்காலமே கேட்டு வாங்கிட்டு போயிடலாம்" உத்திரவு கொடுத்தார்.

அந்த டெஸ்பாச்சிங் செக்ஷனுக்கு ஏதோ சாபம் போலும். வந்து தொத்திக் கொள்கிற எவனும் ஆறு மாதத்துக்கு மேல் தாக்குப் பிடித்ததில்லை. இவன் ஒரு

மாதத்திற்குள்ளே கிளம்புகிறேன் என்கிறான். போகட்டும். தமக்குள் அதிசயப்பட்டவராக தொண்டையைச் செருமிக் கொண்டார்.

நீ போகலாம் என்பதின் குறிப்பு அது. புரிந்துகொண்ட சித்தார்த் மகிழ்ச்சியுடன் வெளியே வந்தான்.

அடுத்த நாள் காலை அவன் நர்ஸிங்ஹோமின் கணக்கு வழக்குப் பகுதியின் தலைவர் வேதநாயகத்தின் முன் போய், பேசாமல் செக்ஷனில் கொடுத்திருந்த கடிதத்துடன் நின்றான். முதல் நாள் மாலையிலேயே அவருக்கும் அதே ரீதியில் டைரக்டரிடமிருந்து கடிதம் வந்திருந்ததால், பணிவுடன் தன் முன் வைத்த அந்தக் கடிதத்தை பிரித்து மேலெழுந்தவாரியாகப் பார்த்த அவர் தலையை ஆட்டிவிட்டு அவன் அமர்ந்து வேலை பார்க்க வேண்டிய பகுதியை கையால் சுட்டிக் காட்டினார். "உன பக்கத்து ஆசனத்திலிருக்கும் சாமிநாதன் நீ செய்யவேணடிய வேலைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி இரணடு நாள் பயிற்சி அளிப்பார். போய் அங்கே உட்கார்" உத்திரவிட்டார்.

சுஜரிதா ஆஸ்பத்திரியின் முன் பகுதியில் வரவேற்பறையை ஒட்டிய ஒரு கண்ணாடித் தடுப்புக்குள் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். கணக்கு வழக்குப்பகுதி கீழ் தளத்திலிருந்த கடைசி அறையில் இருந்தது. ஏ.சி.யால் குளிர்ந்து கொண்டிருந்த அந்த பெரிய அறையையும்—அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த வேலையையும்விட சுஜரிதாவுடன் அதே கட்டிடத்தில், ஒரு பகுதியில் தானும் வேலை பார்க்க இப்படி பொன்னான ஒரு வாய்ப்புக் கிட்டியதே என்ற மகிழ்ச்சி அவனுக்குக் கட்டுக் கொள்ளவில்லை.

"என்னப்பா பாபு! உன் சொந்தப் பெயர் என்ன?" பின்புறம் கைகளைச் சேர்த்துக்கொண்டு மேஜை முன் நின்ற வேதநாயகம் கேட்டபோது அவன் திடுக்கிட்டுப் போனான் இனி யாரிடமும், எப்பொழுதும் உண்மையையே பேசுவது



உண்மையாக உழைத்து வாழ்வது என்ற மன உறுதியுடன் வேலைக்கு வந்திருந்தானாகையால் "பாபுன்னு பெரியம்மா கூப்பிடுவாங்க. சித்தார்த் என்பது என் பெயர்" என்றான்.

'நல்ல பெயர். எனக்கு பிடிச்சிருக்கு. சித்தார்த்தன் உலகை உய்விக்க வந்த அன்பு தெய்வமான புத்தபகவானின் பூர்வாசிரமப் பெயர். உனக்கு டைப்பிங் ஷார்ட் ஹாண்ட் தெரியுமா?' மண்டையிலடித்தாற் போன்ற கேள்வி.

"தெரியாது ஸார். ஆனால் சீக்கிரம் கத்துக்குறதாக உத்தேசம்" என்றான்.

"பக்கத்திலே ஒரு டைப்பிங் இன்ஸ்டியூட் இருக்கு. அதில் போய் சேர்ந்துக்கோ வேலை பார்க்கிற நேரம் முடிஞ்சதும் ஒரு மணி நேரம் அங்கே போய் அவைகளை கத்துக்கலாம். வேலை பார்க்கிறவனின் நேரத்தை உத்தேசித்து அந்தி நேர வகுப்புகள் நடத்துறாங்க. அதுக்குப் பக்கத்திலே ஒரு கராத்தே பயிற்சிக்கூடம் செயல்பட்டிருக்கு. அதுலேயும் சேர்ந்து கராத்தே, குங்ஃபூ எல்லாம்கத்துக்கோ. எல்லாமே எப்பவாவது உபயோகமாக இருக்கும். இதுக்குத்தான் சொல்லுவாங்க களவும் கத்து மற" என்றார்.

சித்தார்த்தின் உடல் ஒரு கணம் வெட்கத்தில் கூனிக் குறுகிப் போனது.

'அதையும் கத்துக்கப் பார்த்தேன். இப்போ மறந்துட்டேன் ஸார்' ஓங்கி கத்தவேண்டும் போன்றதொரு ஆவல்—மௌனமாகத் தன் ஆசனத்தில் போய் உட்கார்ந்து, எப்படி வேலை செய்ய வேண்டுமென்று சாமிநாதன் சொல்லிக் கொடுப்பதை கவனமாகப் பயில முயன்றான்.

அன்று மாலை உணவிற்குப் பின் சுஜரிதா தன் தம்பிக்குக் கொடுக்க ஒரு சிறிய பிஸ்கட் பாக்கெட் வாங்க அருகிலிருந்த கடைக்குப் புறப்பட்டாள்.

''என்னக்கா வாங்கிண்டு வந்தேன்னு குழந்தை பாவம் கேட்பான்'' என்று அவள் கூறியபடி, விரைந்தபோது சித்தார்த்தும் கூடவே பின்னால் நடந்து ஆஸ்பத்திரி வாசலில் வந்தான். அதற்குள் அவள் சிறிது முன்னால் நடைபாதையில் விரைந்து விட்டாள். சுவர் ஓரமாக நின்ற ஒரு இளவட்டம் அவளைக் கண்டதும், விசில் அடித்து...

''என் அத்தை மகள் ரத்தினமே எங்கே போறாப்பல?'' என்று கேட்டு விட்டு பற்களைக் காட்டினான்.

பின்னால் விரைவாக வந்த சித்தார்த்தின் முகம் சிவந்து போனது. உடல் முழுவதும் ஆத்திரத்தில் நெருப்பாக எரிந்தது.

''யாருடா உன் அத்தை மகள் ரத்தினம் எங்கே இன்னொரு தடவை சொல் பார்க்கலாம்...'' திடீரென்று ஏற்பட்ட துணிச்சலில் கையை மடக்கிக் கொண்டு ஓங்கி, அவன் அருகே நெருங்கினான், அவ்வளவுதான். சீட்டியடித்த அந்த சிங்கம் மாயமாகியது. பிஸ்கட் பொட்டலத்துடன் திரும்பிய சுஜரிதா குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

'அடேயப்பா! நீங்க சினிமாவிலே வர கதாநாயகன் போல டிஷூம் டிஷூம் செய்ய கையை ஓங்கினதும் அவன் காத்தாய் பறந்துட்டானே' சிரித்தபடியே வேப்பமரத்து நிழலில் வந்து உட்கார்ந்தாள்.

பகல் வேலை ஆரம்பிக்க இருவருக்கும் இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தது.

'நீங்க அந்தச் சினிமா கதாநாயகியாக இருக்கத் தயாரானால் நான் அந்தக் கதாநாயகனாக எவ்வளவு பேரோடு வேணுமானாலும் சண்டை போடத் தயார்...' சித்தார்த் பதிலுக்கு லேசாகச் சிரித்தபடி அவளைக் கனிவுடன் பார்த்தான்.

குங்குமமாக முகம் சிவக்க, மகிழ்ச்சி கண்களில் பளபளக்க, சுஜரிதா அவனை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.



''மலைக்கும்—மடுவுக்கும் உள்ள அந்தஸ்து வேற்றுமை நடுவிலே இருக்கே. அதை நினைத்தால் பயமாக இருக்கு, உங்க பெரியம்மாவுக்கு மட்டும் உண்மை தெரிஞ்சால், நம்ப வீட்டில் சமையல் வேலையில் உதவி செஞ்சு கொண்டிருந்த பெண், எந்த நேரத்தில் நம் சகோதரியின் பிள்ளைக்கு ஈடாவான்னு நினைப்பா'' சொல்லிக்கொண்டே சட்டென்று எழுந்த கண்ணீரை அடக்க முயன்றவளாக புல் தரையை விரல்களால் வருடினாள்.

''சுஜி... அப்படி ஏக வசனமாக உரிமையோடு உன்னை நான் அழைக்க விரும்பறேன். தப்புன்னா இப்பவே சொல்லிடு...''

மெல்லத் திரும்பி அவனைப் பார்த்து ஈரத்தில் பளபளத்த கண்களால் மோகனமாகச் சிரித்தாள். ''அப்படி நீங்க என்னைக் கூப்பிடணும்னு ரொம்ப ஆசைப்படறேன்.''

சித்தார்த்தின் இதயம் இன்பப் பரவசத்திலே படபடத்தது. ''சுஜி! உன்கிட்டே எதுவுமே ஒளிக்க விரும்பலை. உண்மையைச் சொல்லப் போறேன். அதைக் கேட்ட பிறகு நீ எப்படி முடிவு எடுத்தாலும் சரி. பிடிக்கல்லைன்னு சொன்னா நான் ஒதுங்கிப்போயிடுவேன், அது மட்டும் உண்மை''

''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு ஒருஎண்ணம் ஏற்பட்டதால் என் மனதிலும் உங்க மேலே பிரியத்தை வளர்த்துண்டு இருக்கேன். அது உண்மையில்லேன்னு சொல்லப் போறேளா...''

தயக்கமாகக் கேட்டாள்.

''அது உண்மை. உன்னை எனக்குரொம்பப்பிடிக்கிறது. உன்னைக் கல்யாணம் செஞ்சுண்டு என் கண்களைப் போல பாதுகாக்கணும்னு ஆசைப்படறேன். அதுக்கு வேண்டிய தகுதிகளையெல்லாம் தேடிக்கொண்ட பின்தான் வாய்

திறந்து மனதில் குவிந்து கொண்டிருக்கும் ஆசையை வெளியே கொட்டணும்னு இருந்தேன்.''

''என்ன தகுதிகள் குறைச்சலாம்?'' சுஜரிதா சிணுங்கினாள்.

''என்கிட்ட வம்பு செய்ய முயன்ற அந்தப் பையனை கையைத் தூக்கிக்காட்டி கண்களாலேயே முறைச்சு வெட்டிட்டேன். துணிச்சலுக்குத்தான் உங்ககிட்ட என்ன குறைச்சல்?''

''அவன் என்னைவிட கோழை ஓடிவிட்டான். ஒரு சோனிப்பையன் ஒரே காரத்தே அடியில் என்னை மண்ணைக் கவ்வ வெச்ச கதையைக் கேட்டா நீ என்னைப்பத்தின உண்மையை தெரிஞ்சுக்குவே. சரி, ஒருத்தனை சமாளிச்சுட்டேன் நாலு ரவுடிகள் வந்து உன்னை வழிமடக்கினால், நான் நடுங்கிண்டு உன்னைவிட்டு ஓடும் கோழையாக இருக்கக் கூடாது பார். அதுக்காக காரத்தே, குங்ஃபூ எல்லாம் கத்துக்கப் போறேன். உண்மையில், துணிச்சலுடையவனாக இருக்கப் போறேன்.

இந்தத் தகுதிகளையெல்லாம் தேடிக் கொண்ட பிறகு தானே உன்னை வச்சுக்கப் பாத்த எனக்கு ஒரு அந்தஸ்து ஏற்படும்.

''இதெல்லாம் விட நீ ஒரு உண்மையைத் தெரிஞ்சு கொண்டா என்கிட்ட உட்கார்ந்து பேசப் பிடிக்காது எழுந்து போனாலும் வியப்பில்லை. ஆனால், அந்த உண்மையை நான் உன்கிட்ட சொல்லித்தான் ஆகணும்''

''என்னை ரொம்பக் குழப்பாதீங்க. புதிர்போடறேளே?'

''சியாமளா அம்மா உனக்கு மாமி என்கிற உறவு எவ்வளவு உண்மையோ அது போல் எனக்கு அவங்க பெரியம்மா...''



''மரியாதைக்காக நான் அவங்களை மாமின்னு கூப்பிடறேன். அவ்வளவுதான்...''

'அதைப்போல மரியாதைக்காக, என் உண்மை சொரூபம் உனக்கு தெரியாதிருக்க சியாமளா அம்மா தான் தன்னை நான் பெரியம்மான்னு கூப்பிடணும்னு வற்புறுத்தினாங்க. என் பெயர் பாபு இல்லை, சித்தார்த் ராம கிருஷ்ணன். எனக்கும் சியாமளா அம்மாவுக்கும் ஸ்நானப் பிராப்தி கூட உறவில்லை''

''அப்போ எப்படி இந்த வீட்டுக்குள்ளே...'' என்று அவள் முடிக்குமுன், ஊரிலிருந்து ஓடி வந்ததிலிருந்து மன்னி மைதலியின் நகையைத் திருடி விற்றதிலிருந்து, சியாமளாவை கத்தி காட்டி மிரட்டி உள்ளே புகுந்துகொண்டு உறவுக்காரனாக மாறினவரை-அன்றுவரை நடந்ததையெல்லாம் விஸ்தாரமாகச் சொல்லி முடித்தான்.

''இப்போ சொல்லு சுஜி. இந்தத் திருடனை, கோழையை, சோம்பேறியை உனக்குப் பிடிச்சிருக்கா?''

கண் இமைகளைச் சுட்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு, சுஜரிதா புன்னகைத்தாள்.

''ஒண்ணையும் ஒளிக்காம அத்தனையும் வெளிப்படையாச் சொன்னதற்காகவும், தப்புகளை உணர்ந்து திருந்தி நல்ல ஒரு மனிதனாக மாற நீங்க தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதையும் அறிந்த பிறகு, உங்களை எனக்கு ரொம்பவே பிடிக்கிறது...'' சிரித்தாள். ''ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்திலிருந்து வருகின்றவள் நான். ஆனால் என் மனதில் நிறைய துணிவும்—உறுதியும் இருக்கு. உங்களுடைய முயற்சியில் பங்கு கொண்டு ஒத்துழைத்து—கால முச்சூடும் ஒரு நல்ல துணைவியாக உங்களோட வாழ ஆசைப் படறேன். அந்த பாக்யம்?''

''கட்டாயம் உனக்கு கிடைக்கும். அதுக்கு முன்னாடி கொஞ்சம் வேலைகள் இருக்கு. நீ பொறுமையா காத்துண்டு இருக்கணும்...''

''கால முழுவதும் வேண்டுமானாலும் உங்களுக்காக காத்திண்டு இருப்பேன்.'' நெஞ்சம் நெகிழ்ந்து அவள் சொன்னபோது மனம் கனிந்து போனான் அவன்.

பகல் நேர வேலை துவங்கும் நேரம் ஆகிவிட்டதை அறிவிக்கும் மணி கிரீச்சென்று ஒலித்ததும் திடுக்கிட்டு எழுந்தான்.

''நானும் உனக்காக கால முழுவதும் காத்திருப்பேன் சுஜி..'' என்று மகிழ்ச்சியுடன்—துணிவுடன் அவளது கையைப் பற்றி அவளைத் தூக்கி நிறுத்தினான்.

சில்லென்று தென்றல் எங்கிருந்தோ வீச, வேப்பமரத்து கிளைகள் குலுங்க சின்னச் சின்ன வெள்ளைப் பூக்கள் அவர்கள் தலையில் உதிர, முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆசி கூறிவிட்டது போன்ற உணர்வில் மனம் ஆனந்தத்தில் திளைக்க வேலையைக் கவனிக்க இருவரும் உள்ளே சென்றனர்.

## 19

அன்று அவன் வீடு திரும்பும் போது நன்றாகவே இருட்டி விட்டிருந்தது. கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே அவன் வருவதை சியாமளா பார்த்து விட்டாள்.

வராந்தா விளக்கை ஏற்றி விட்டு வேகமாக வந்து கதவைத் திறந்தாள்.

''புது வேலை ரொம்ப சிரமமா இருக்கா? நாழியாச்சே. இன்னும் காணலையேன்னு எட்டிப் பார்த்துண்டே இருந்தேன்'' பெற்ற தாயைப் போல் பரிவுடன் வரவேற்ற படி மகிழ்ச்சியுடன் அவள் பேசிக் கொண்டே உள்ளே திரும்பினாள்-



இத்தக் குறுகிய காலத்திற்குள் அவனுக்குள் எத்தனை விதமானதொரு மன மாறுதல்?

சியாமளா அம்மா மீது மதிப்பும் அன்பும் அவனையு மறியாது மனதில் பெருகி வளர்ந்து கொண்டு போவதை உணர்ந்தான்.

தங்க இடமளித்த அந்த வீட்டின் மேல் பொறுப்பு உணர்வு தானாகவே ஏற்பட்டு விட்டிருப்பதையும் அறிந்தான்.

சட்டென்று வாயிற் கதவை அடைத்துத் தாளிட்டான். நடை விளக்கு வீணாக எரிவதை அணைத்தான்.

''பெரியம்மா, பத்து நிமிஷத்தில் வந்துடறேன். நீங்களே எல்லாம் செய்ய வேண்டாம். நான் கூட உதவ விரும்பறேன்'' கூறிவிட்டு வேகமாக குளியலறைக்குள் ஓடினான். ஷவரிலிருந்து தெளித்த குளிர்ந்த நீரில் சட்டென்று குளித்து முடித்து, பனியனும், லுங்கியுமாக வெளியே வந்தான்.

சியாமளா அடுப்பருகில் உணவுப்பதார்த்தங்களை ஆக்கிக் கொண்டிருந்தாள். சாப்பாட்டறை மேஜையைத் துடைத்து விரிப்பை போட்டு தட்டுகளை வைத்து தண்ணீர் தம்ளரில் ஐஸ் துண்டங்களை மிதக்க விட்டுக்கொண்டு வந்து வைத்தான். சமையல் மேடை மீது அவள் எடுத்து வைத்திருந்த உணவுப் பாத்திரங்களை இடுக்கியால் பிடித்துக் கொண்டுவந்து மேஜை மீது வைத்தான்.

''பெரியம்மா நீங்க உட்காருங்க. நான் பரிமாறுகிறேன். நீங்கள் நாள் முழுதும் வீட்டு வேலை செய்து களைச்சுப் போயிருக்கீங்க'' பரிவாகப் பேசியபடி... கரண்டியால் வாழைக்காய் பொடிமாசை அள்ளி அவளது தட்டில் வைத்தான். சாதத்தை பரிமாறி, சாம்பாரை வார்த்தான். அலுமினிய சம்புடத்திலிருந்து தயாராக பொரித்து

வைத்திருந்த பப்படங்களை எடுத்து தட்டின் அருகே வைத்தான்.

"காரட், வெள்ளரிக்காயைப் பொடல் பண்ணியிருக்கீங்க. அதையும் எடுத்து வரேன்'' ஓடிச்சென்று குளிர்சாதனப் பெட்டியிலிருந்து அதை எடுத்து வந்து பரிமாறினான்.

பரவாயில்லை. இப்போ நீ நன்னாகவே பரிமாறவும் உபசரிக்கவும் கத்துக்கொண்டு விட்டிருக்கே. இன்னும் கொஞ்ச நாளிலே சமைக்கக்கூட கத்துக்கொண்டு விடுவே போலிருக்கே'' சிரித்தபடியே சியாமளா எதிரே நாற்காலியில் உட்கார்ந்தாள்.

தன் தட்டிலும் உணவு வகைககளைப் பரிமாறிக் கொண்டு சித்தார்த் அருகே அமர்ந்தான்.

சுஜரிதா அவனது மனைவியாகி விட்டது போலவும், சமையலறையில் அவளுக்கு உதவியாக ஓயவு நாட்களில் அவள் கூட உதவி செய்வது போலவும் தன்னுள் எழுந்த கற்பனையில் பரவசமடைந்தவனாக... வாழைக்காய் பொடி மாசை அள்ளி வாயில் போட்டுக் கொண்டான். சட்டென வீட்டின் நினைப்பு நெஞ்சைப் பிடித்தது.

சியாமளா அம்மாள், சமையலில் மைதிலி மன்னிபோல மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். எந்த ஒரு உணவு வகையும் இவள் தயாரிப்பில் சாப்பிட ருசியாகவே இருந்தது.

''பச்சை மிளகாய்க் கடிச்சுட்டியா? கண்ணில் ஜலம் வந்து விட்டதே!'' சிரித்தபடி சியாமளா தண்ணீர் டம்ளரை அவன் அருகில் நகர்த்தினாள்.

என்னவோ சில நாள்களாக வேலைகிடைத்து அவனும் ஒரு மனிதன் என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டு விட்டதாலா, அல்லது சுஜரிதாவிடம் மனதைப் பறிகொடுத்து காதல் வசப்பட்டு, நெஞ்சுருகிப் போனதாலோ அவனுக்குத் தன்



வீட்டு மனிதர்களை உடனடியாகப் பார்க்க வேண்டுமென்றதொரு நினைப்பு அடிக்கடி ஏற்பட்டு மனதை வருத்திக் கொண்டிருந்தது.

மைதிலி மன்னி, சியாமளா அம்மாவைப் போலத்தான் பச்சை மிளகாய், இஞ்சி, வெங்காயம் போட்டு தாளித்து பொடிமாஸ் தயாரிப்பது வழக்கம். அண்ணாவும் அவனும் இலையில் உட்கார்ந்ததும் அத்தனையையும் ஒரே மூச்சில் தின்று முடித்து விடுவார்கள்.

"இதென்ன அநியாயம், பொடிமாசை இப்படி அண்ணனும் தம்பியும். சாம்பார் சாதத்துககு முன்னாடியே பக்ஷணம் பண்ணிட்டா ரசத்துக்கு நான் அப்பளத்தை காய்ச்சித்தான் போட முடியும்?'' சிரித்துக் கொண்டே உள்ளே போவாள் மைதிலி மன்னி...

''சுஜிதான எனக்கு இப்படி இதை செய்யக் கத்துக் கொடுத்தான்னா நீ ஆச்சர்யப்படுவே, அந்த பொண்ணு சமையல் வேலையில் படுசுட்டி. அவ அம்மாகிட்டேயிருந்து எல்லா தினுசு சமையலும் கத்துண்டு இருக்கா. பார சுறுசுறுப்பு. அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவன் ரொம்ப கொடுத்து வச்சவன். வாய்க்கு ருசியா சமைச்சுப் போட்டு, வீட்டையும் கணவனையும் பொறுப்பாக கவனிச்சுப்பா...'' திடுக்கிட்டு நிமிர்ந்தான் சித்தார்த். காது மடல்கள் சூடாகி நெஞ்சு படபடப்பதை உணர்ந்தான்.

உண்மையில் அவன் கொடுத்து வைத்தவன்தான் சுஜி அழகி மட்டுமல்ல. ரொம்ப பொறுப்பான பெண், பொறுமைசாலி, திறமைசாலி. அவனை உண்மையாகவே நேசிக்கிறாள். சமையலிலும் வீட்டு நிர்வாகத்திலும் கெட்டிக்காரி. அண்ணனுக்கு மைதிலி மன்னி கிடைத்திருப்பதுபோல அவனுக்கு சுஜி மனைவியாக அமைந்து விட்டால்... அதற்கு மேல் அவன் வாழ்க்கையில் திகம் எதையும் எதிர்பார்க்க மாட்டான்—ஏமாற்றத்தில் எரிச்சல் படமாட்டான். இது அதிக ஆசையா?... அவசரப்

படுகிறானா? இல்லை... இனி நீடித்து அவன் மௌனமாக இருப்பது தவறு. சியாமளா அம்மாவிடம் எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லி விட்டால்?...

'ரொம்ப யோசனையா இருக்கியே!... தேவநாதன் எனக்கு போன் பண்ணினார். வனிதா ஆஸ்பத்திரியில் நீ தொடர்ந்து வேலை செய்தால், உனக்கு நல்லதொரு வருங்காலம் நிச்சயம் இருக்குன்னார். இந்த வருஷக் கடைசியிலே ஆஸ்பத்திரி தலைவர் இரண்டுபேரை கணக்கு வழக்குப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து ஹாஸ்பிடல் அட்மினிஸ்ட்ரேஷன் என்கிற பயிற்சிக்கு அனுப்பப் போறாராம். அதில் தேர்ந்து வந்ததும் எடுத்ததுமே ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலை போட்டுத் தருவாராம். படிப்படியாக வேலையில் உயர்வும் சலுகைகளும் கிடைக்குமாம் அந்த டாக்டருக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சுன்னா. இன்னும் மேல் படிப்புக்கு இங்கிலாந்துக்கோ, அமெரிக்காவுக்கோ தன் செலவிலேயே அனுப்புவாராம். இதெல்லாம் கேட்டப்போ எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. சித்தார்த் உனக்கு வருங்காலம் ரொம்பவே பிரமாதமாக இருக்கப் போறது''

பல்வேறு உணர்ச்சிப் போராட்டத்திலே பேச முடியாது அவன் சியாமளாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நோயாளிகளின் உணவு ஆஸ்பத்திரி சூழ்நிலையின் சுத்தமான பராமரிப்பு. நோயாளிகளைப் பற்றிய விவரம் கொண்ட ஃபைல்களைப் பாதுகாக்கும் முறை. இதையெல்லாம் சொல்லிக் கொடுப்பதுதான் அந்தப் பயிற்சியின் அடிப்படை நோக்கமாம். இப்போதெல்லாம் பல புதுவிதப் படிப்புகள் பயிற்சிகள் எல்லாம் இளைஞர்களுக்கு ஏற்படுத்தியிருக்கா. அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு முன்னுக்கு வர நாம்தான் முயலவேணும் எதையும் யாரும் இந்தான்னு கையில் தூக்கிக் கொடுத்துவிட மாட்டாங்க.''



''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை பெரியம்மா. இந்தத் தகுதிகள் எல்லாம் உங்க மூலம் எனக்குக் கிடைக்கப் போகின்றன. ஆனால் நான் உங்களுக்கு இழைத்திருக்கும் கொடுமைகளை தவறுகளை எண்ணி'' தழதழத்தான்.

''பாபு! அதையெல்லாம் நாம் மறந்துடுவோம். பல முறை சொல்லியிருக்கேன் சங்கடப்படாமல் சாப்பிடு. பிறகு கொஞ்ச நேரம் டெலிவிஷன் பார்ப்போம்'' என்றாள் அன்புடன்.

சாப்பாட்டுக்குப் பின்னர் உணவுப் பாத்திரங்களையும் தட்டுகளையும் அப்புறப் படுத்துவதில் அவளுக்கு உதவி செய்தான். பின்னர் இருவரும் முன்னறைக்கு வந்தனர். டெலிவிஷனை இயக்கிவிட்டு அவள் களைப்புடன் சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டாள். தனது படுக்கையான ஜமக்காளம் போர்வை தலையணை இத்தியாதிகளைக் கொண்டு வந்து சுவர் ஓரமாக வைத்துவிட்டுக் கம்பளத்தின் மீது உட்கார்ந்து கொண்டான் அவன்.

காணாமற்போன சிறுவனைப் பற்றிய விவரங்களை இனிய பெண் குரல் டெலிவிஷனில் சொல்லிக் கொண்டிருந்தது. வீட்டைவிட்டு மறைந்துபோன அந்தச் சிறுவனைக் கண்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியை அந்த இனிய குரல் தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறிக் கொண்டிருப்பதைக் கேட்டு சித்தார்த் குற்ற உணர்வில் புழுங்கிப் போனான்.

''சின்னப் பசங்கள் காணாமல் போகிறதுக்கு பல காரணங்கள் சொல்ல முடியும். அடுத்த ஊரைப் பார்க்க ஆசைப்பட்டு சொல்லாமல் கொள்ளாமல் பஸ்ஸில் புறப்பட்டுப் போய் கையில் காசில்லாமல் எங்கேயாவது முழிச்சிண்டு நிக்கலாம். யாராவது கடத்திக் கொண்டு போயிருக்கலாம். எத்தனையோ முகாந்திரங்கள். ஆனால் சில சமயம்

படிச்ச இளைஞர்கள் காணாமல் போய் விடுவதாக செய்தி களை படிக்கிறோம். கேட்கிறோம், இதற்கு காரணம் என்னவாக இருக்கும்?'' சியாமளா தனக்குள்ளேயே முணுமுணுத்தது அவனுக்கு நன்றாகவே கேட்டது.

சடார் என்று யாரோ சாட்டையால் முதுகில் பலமாக அடித்து விட்ட வேதனை, அவன் ஒரு கணம் துவண்டு போனான்.

எத்தனையோ நாட்கள் அவன் எண்ணியது உண்மை தான். சியாமளா அம்மாளிடம் தன் குடும்பத்தைப் பற்றி சொல்லி தான் ஏன் வீட்டை விட்டு ஓடி வந்தான் என்பதையும் சொல்லி விடவேண்டும். கட்டாயம் அந்த நெக்லஸ் விஷயத்தை அவளிடம் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் இனி அமைதியாக அவனால் இருக்கவே முடியாது... என்று எண்ணியதுண்டு.

இன்று கூட அப்படித்தான் அவன் மனதில் ஒரு எண்ணத்துடன் முன்னறையில் வந்து உட்கார்ந்தான்.

அந்த வார விடுமுறை நாளின் போது வாக்குக் கொடுத்தபடி விடியற் காலையிலேயே சுஜரிதா சியாமளாவுக்கு வீட்டு வேலைகளிலும் சமையலிலும் உதவி செய்ய வந்து விட்டிருந்தாள்.

சுஜரிதாவுடன் சேர்ந்து மேஜையில் அமர்ந்து ஒரே குடும்பத்தவர்கள் போன்ற நெருங்கிய உணர்வில் காப்பி, டிபன் சாப்பிட்டபோது அவனுக்கு மிக்க மகிழ்ச்சியாகத் தானிருந்தது. சில நாள்களாக கவனிக்கப்படாத தோட்டத்தை தன் பங்குக்கு சீர் செய்வதில் தீவிரமாக முனைந்து விட்டான்.

பூனைபோல வந்து நின்ற ஷண்முகம் ''பலே! பலே ரொம்ப சுறுசுறுப்பான பையனாகி விட்டே, வேறே ஒரு நல்ல வேலை கூட கிடைச்சிருக்குனனு கேள்விப்பட்டேன்'' என்றார். பேசிக்கொண்டே வராந்தாவில கிடந்த மூங்கில்



நாற்காலி ஒன்றில் அவர் உட்கார்ந்து கொண்டார். அருகே தூணைப் பிடித்துக்கொண்டு நின்ற சித்தார்த்திற்கு திடீரென்று ஒரு எண்ணம் மின்னலடித்தது. சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது எத்தனையோ மேல். நடந்ததையெல்லாம் உள்ளபடி ஒன்று விடாமல் சொல்லி இவரிடமே யோசனை கேட்டால்?

துணிவையெல்லாம் திரட்டிக்கொண்டு தொண்டையை செருமினான்.

''ஸார்...உங்ககிட்ட நான் ஒண்ணு சொல்ல விரும்பறேன்.''

புன்னகை பூத்த முகத்தை நிமிர்த்தினார் ஷண்முகம். தடிமனான கண்ணாடி வழியே அவனை உற்றுப் பார்த்தார்.

என்ன? என்று அதட்டின அவரது பெரிய விழிகள்.

''இந்த சியாமளா அம்மாவுக்கு நான் உறவுக்காரன் இல்லை. உண்மையைச் சொல்லப்போனால்...இந்த வீட்டுக்குள்ளே நான் ஒரு திருடனா நுழைஞ்சு... கத்தியைக் காட்டி...''

''எனக்குத் தெரியும். குளியலறை வெண்டிலேட்டர் கண்ணாடியை உடைத்து விட்டு உள்ளே வந்தாய். மதுரையிலிருந்து ஓடி வந்த சித்தார்த்தை தேடி அவன் அண்ணன் கொடுத்த விளம்பரத்தையும் படத்தையும் சில மாதங்களுக்கு முன் பத்திரிகையில் பார்த்த நினைவு நன்றாக இருக்கிறது.''

திடுக்கிட்டுப் போனான் சித்தார்த். வாயும் தொண்டையும் காய்ந்து போயின. கீழே விழுந்து விடாவண்ணம் வராந்தா தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

இத்தனையும் தெரிந்திருக்கும் இவருக்கு நெக்லஸ் விஷயமும் தெரியுமோ?... அவன் உடல் பயத்தில் கிடுகிடுவென்று நடுங்கியது.

# 20

ஷண்முகத்தின் பெரிய விழிகள் மீண்டும் அவனைக் காலோடு தலைவரை ஆராய்ந்தன

'அப்படி உட்கார் சாவகாசமாகப் பேசலாம்'' என்று கூறி விட்டு தமது காலை மாற்றி மடக்கிப் போட்டுக் கொண்டு அவனை மீண்டும் உற்றுப் பார்த்தார்.

''அப்பப்பா! என்ன பார்வையது? மூக்கும் விழிகளும் உதடுகளும் 'உட்காரடா மடப் பயலே' என அதட்டுவது போல மௌன மொழியில் பேசின.

எச்சிலை விழுங்கிக் கொண்டு எதிரே கிடந்த நாற்காலி யில் உட்கார அஞ்சி தூண்புறமாக வராந்தா தரையில் காலை வெளியே தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந் தான் சித்தார்த்.

'ஆமாம்? வீட்டை விட்டு வெளியே ஓடி விடணும் என்கிற எண்ணம் உனக்கு ஏன் ஏற்பட்டது? யாராவது தூண்டிவிட்டார்களா?''

''யாருடைய தூண்டுதலும் இல்லை. யாருடைய பேச்சைக் கேட்டும் மயங்கி நான் வெளியேறவில்லை. பி ஏ. முடிச்சிட்டு வேலை தேடிக் கொண்டிருந்தேன். சுலபமாக அதுவும் கிடைக்கவில்லை. இண்டர்வியூக்களுக்கு போய் தோலவிக்குமேல் தோல்வி கண்டதில் மனம் ஒடிஞ்சு போனது. என் வருங்காலம் ஒரே இருளாகத் தெரிந்தது' தோல்விகளைச் சமாளிக்க துணிவிருக்கவில்லை. பட்டதாரி, அதனால் எனக்கு வெள்ளைச்சட்டை வேலைதான் வேண்டும் என்ற வீம்பு. கீழே இறங்கி எந்த வேலையானா லும் சரி உடல் உழைப்பால் உயரவேணும் என்கிற மனோ திடம் இருக்கவில்லை. வீட்டின் பொருளாதாரம் திருப்தி யாக இருக்கவில்லை. பற்றாக்குறையுடன் அவதிப்பட்ட என்



அண்ணன் மனைவி ஒரு நாள் சொன்னது என் மனதில் சுருக்கென்றுபட்டு விட்டது

'காலை வேளையில் ஏன் இரண்டுதரம் காபபி கேட்கி றீங்க? கட்டுப்படியாகலையே? இப்போ ஒன்பது மணிக்குத் தான் இலை போட்டுவிடுகிறேனே. இரண்டாவது டோஸ் காப்பி எதுக்காக என்று அண்ணனிடம் முணு முணுத்ததை நான் எனக்காக சொன்னதாக எடுத்துக்கொண்டு வெகுண்டு போனேன். வேலையில்லாத பட்டதாரி என்று மன்னி நேரிடையாகத் திட்டாது அண்ணனைச் சொல்வது போல இடித்துப் பேசுவதாகக் கோபமடைந்தேன். அதற்குப்பின் அவர்கள் எது பேசினாலும் எனக்குக் குத்தமாகப்பட்டது. மனது வேதனை அடைந்தது. வீட்டில் உள்ளவர்களை வெறுத்தேன். வெளி உலகத்தின் மீது கசப்பு அதிகரித்தது. எல்லாமே உறவு சமூகம் எல்லாத்தின் மீதும் விரோதம் வளர்ந்துகொண்டு போயிற்று.''

'இப்போது நிதானமாக அந்த சூழ்நிலையிலிருந்து வெளி வந்து யோசிக்கும்போது எல்லாம் எனது கறபனை நீண்டு விடும்—என் தாழ்வு மனப்பான்மையும் தோல்விகளும் தந்து விட்ட கலவரம், குழப்பம் என்று புரிகிறது. மன்னி மெதுவாகச் சொன்ன எதையும் வீணாக கற்பனை செய்து கொண்டு. தப்பாகப் புரிந்துகொண்டு அவர்களை வெறுத்தது தவறு என்று உணர்கிறேன். என் வீட்டார்களை நினைத்து மனம் சங்கடப்படுகிறது. அவர்களைச் சந்தித்து காலில் விழுந்து மன்னிப்புப் பெற மிகவும் ஆவல்படுகிறேன்'' மூச்சு விடாது பேசினான்.

ஷண்முகம் தொண்டையைச் செருமினார். அதெல்லாம் சரி, வீட்டை விட்டு ஓடி விடணும என்கிற வெறுப்பிலே வெளியே கிளம்பினே? கையில ஒண்ணும் இல்லாது ரயிலுக்கு டிக்கட் வாங்காது பயணப் பட்டியா? திடுக்கிட்டு நிமிர்ந் தான் சித்தார்த். அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அவன் வாயாலே விஷயத்தை கக்க வைக்க

எத்தனை நாசூக்காக கேட்கிறார் மனிதர். சும்மாவா? போலீஸ் இலாகாவில் பல ஆண்டு வேலை செய்து ஓய்வடைந்துவிட்டிருக்கும் ஓர் உயர் மட்டத்து அதிகாரி யாச்சே? அவரது அனுபவங்கள் எத்தனை எத்தனை இருக்கும்? அந்த சாமர்த்தியம். அந்தத் திறமை...இவை கள் எல்லாம் எங்கே போய்விடும்? கிழட்டுச் சிங்கம் என்றா லும் சிங்கம் என்றால் பயப்படத்தானே வேண்டும்? பலவாறு எண்ணியபடி வறட்சியாக முறுவலித்தான்

"வீட்டுச் செலவுக்கு மன்னி வைத்திருந்த பணத்திலி ருந்து இருநூறு ரூபாயை எடுத்துக்கொண்டு..." மேலே பேச முடியாது மென்று விழுங்கினான்.

"இரு நூறு ரூபாயுடன் வெளியில் இத்தனை காலம் இருக்க முடிந்ததா?" புருவங்களை உயர்த்தினார் அவர்.

"மன்னியின் நகைகளில் ஒன்றை அதாவது, சிவப்புக்கல் பதித்த ஒரு நெக்லசை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். இங்கே வந்ததும் முதல் வேலையா அதை விற்றேன்."

"முன்பின் தெரியாத பட்டணத்தில் எப்படிச் சமாளிச்சே...?"

"நானும் கவலைப்பட்டுக் கொண்டு வந்தேன். ரயில் வண்டி நிலையத்தில் இறங்கியதும் சொல்லி வைத்தாற் போல ஒரு ஆள் டெர்லீன் சட்டையும் சுத்தமான வெள்ளை பாண்டுமான அலங்காரத்தில் என்னை அணுகினான். வேலைக்கு இண்டர்வியூவுக்கு வந்திருக்கீங்களா. தங்க குறைந்த கட்டணத்திலே லாட்ஜ் ஏற்பாடு பண்ணித் தர முடியும். ஒரு சிறு கமிஷன் கொடுத்தால் போதும் என்றான். என் தோல் பையை எனது தோழன் போல வாங்கித் தன் தோளில் மாட்டிக் கொண்டு வழி காட்டியபடி முன்னால நடந்தான்."

"அத்தனை சீக்கிரம் ஒருத்தன் வலையில் குபீரென்று குப்புற விழுந்துட்டியா?..." ஷண்முகம் கடகட வென்று சிரித்தார்.



வெட்கத்தில் குன்றிப் போனான் சித்தார்த். "ஊர் புதிது. பிப்பு செய்து விட்டு வந்திருக்கிற குற்ற உணர்வு.. அந்தக் கலவரத்தில் அவனது பேச்சும் உதவியும் ஆறுதலா கப்பட்டன. ஆனால் அடுத்த நாளே நானே புரிந்துகொண்டு விட்டேன். அவனுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு ஹைதரா பாத்துக்கு ஓடி அங்கே சில அனுபவங்களைப்பட்டு பட்டினி பசி எல்லாவற்றிலும் அடிபட்ட பிறகு நான் ஒரு வகையில் தேர்ந்து விட்டிருந்தேன்னு சொல்லணும்...!"

"உன் வயசுப்பெண்கள் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு வந்தாலும் இப்படித்தான் ஒரு வரவேற்பு கிடைக்கும். சில சமயம் அன்பொழுகப் பேசி அன்னை போல சில அம்மாக்கள்கூட தயாராக அவர்களை அழைத்துச் செல்ல, வந்து நிற்பார்கள். எங்க பங்கஜும் இந்த வண்டியில் வரதாக இருந்தது. காணலை. வண்டி தவறிட்டாப்போல இருக்கு ஆமாம் நீ தனியாவாம்மா வந்திருக்கே? வேலை தேடிக்கிட்டு வந்திருக்கியா. ஊர் புதிசு. கண்ட இடத்திலே போய் தங்கினால் கஷ்டப்படுவே உனக்கு ஆட்சேபனை இல்லாட்டா என் கூட வந்தா என் வீட்டிலே தங்கியிருந்து கொண்டு வேலை தேடிக்காலம். பிறகு உன் உறவு மனிதர் களைக கடிதம் போட்டு வரவழைச்சுக்கலாம். வெல்லமாக இனிக்கப் பேசி டாக்சியில் ஏற்றி. போருமிடம் வெகு தூரம் இல்லை என்று பசப்பி ஒரு படுகுழியில் தள்ளிடுவாங்க...

"நல்ல வேளை... ஆண் பிள்ளை... அந்த வகையில் பிழைச்சேன்..."

"இல்லேப்பா பாபு, உன் போல உலக விவகாரம் தெரியாம வெளியூரிலிருந்து பத்தாம் பசலியாகப் புறப்பட்டு வரும் இளைஞர்களுக்கும் ஆபத்து பல உருவில் காத்திருக்க லாம். நீ ஏதோ கருப்புப் பணத்தைக் கொடுக்கக் கிளம்பி தூக்கிகிட்டு மெட்ராஸில் யாரிடமோ கொடுக்கக் கிளம்பி யிருப்பதாக ஒருத்தன் சந்தேகப்பட்டு உன்னை நிழலாத் தொடரத் தொடங்குவான். யார் அது, என்ன மூட்டை

இப்படி ஆட்டோவில் ஏறு. போலீசில் விசாரிக்கணும்; நாங்கள் ஸி.ஐ.டி. என்பார்கள். இரண்டு பேர் எங்கேயோ கண்காணாத இடத்திற்குக் கூட்டிச் சென்று இறங்கு என்பார்கள். ஆட்டோவை அனுப்பிவிட்டு அழைத்துச் சென்று... அடி அடி என்று நொறுக்கி கையில் உள்ளதைப் பிடுங்கிக் கொண்டு குற்றுயிராக தள்ளிவிட்டுப் போய்விடும் கேஸ்கள் எத்தனையோ பார்த்திருக்கிறேன்.''

''நல்ல வேளை அப்படியெல்லாம் நடக்கவில்லை என்னிடம் இருநூறு ரூபாயும் மாற்றுடையும்தான் இருந்தன. வந்தவன் படித்தவன் போல இருந்தான்.''

''படித்தவன் போல இருப்பவன் எல்லாம் பண்பானவனென்று நீ நினைக்க முடியாது. பட்டிக்காட்டான் போல தெரிகிறவன் எல்லாம் வில்லன்கள் என்றும் கணிப்பு செய்துவிட முடியாது. பிறகு...?'' அதட்டினார் ஷண்முகம்.

''நகரத்திலே ஏதோ ஒரு சந்துக்குள் ஆட்டோவை நிறுத்தச் சொல்லி ஒரு லாட்ஜில் எனக்கு அறை எடுத்துக் கொடுத்தான். அருமையாகப் பேசினான். விற்க ஏதாவது நான் வச்சிருக்கேனான்னு மெல்ல விசாரித்தான். அவன் பழகின விதத்தில் சர்க்கரையா பேசின பேச்சில் மயங்க நான் என்னையுமறியாமல் நெக்லஸ் விஷயத்தைச் சொல்லி விட்டேன்.''

''உன்னை மறுநாளே ஒரு கடைக்குக் கூட்டிப் போயிருப்பானே!''

''கூட்டிக் கொண்டு போனான். ஒரு வழுக்கைத் தலை ஆசாமியிடம் அழைத்துச் சென்றான், அந்தக் கடையும் சந்தில்தான் இருந்தது.''

''நீ தங்கின லாட்ஜுன் பெயர் தெரியுமா?''

''காஷ்மீர் லாட்ஜினு பலகை தொங்கியது. ஏதோ சுமாராக இருக்கும்னு நினைச்சேன். மாடிப் படிகளின் கீழே



கழிவறைகள். படியேறி மேலே போகுமுன் நாற்றம் மூக்கைத் துளைத்தது. குறுகிய வராந்தா, சாயம் கண்டு பல யுகங்கள் ஆகிவிட்ட சிறிய அறைகள். பழைய மரக் கட்டில் முடிச்சு விழுந்த மெத்தை... கறைகள் பட்டு சாயம் தெரியாத நைந்துபோன விரிப்புகள். பழைய மண்கூஜா, பத்து நாள் கழுவாத அலுமினிய டம்ளர். சுவர் முழுவதும் மூட்டைப் பூச்சியின் ரத்தக்கறைகள் எனக்கு வயிற்றைக் குமட்டியது. காரியம் ஆகணுமேன்னு பொறுத்துக் கொண்டிருந்தேன்...

''அந்த டெர்லீன் சட்டைக்காரன் மறுநாள் அழைத்துப் போன கடை ஞாபகம் இருக்கா?''

''தெருதான் ஞாபகத்துக்கு வருகிறது. தங்கராசன் தெருன்னு பார்த்த நினைவு; அதுவும் ஒரு சிறு சந்து. ஒரு சிறு பெட்டிக்கடை போல, இருந்த ஒரு இடத்திற்கு. அவன் என்னைக் கூட்டிக்கொண்டு போனான், அந்த வழுக்கைத் தலை ஆசாமியை என்னால் அடையாளம் காட்ட முடியும். அவர் முகத்தில் வலது பக்கத்து தாடையின் ஓரத்தில் கன்னத்தை ஒட்டி சுண்டைக்காய் பருமனில் ஒரு பெரிய கருப்பு மரு தொங்கியது. இரண்டு காதுகளிலும் எலி மீசையைப் போல முடி நீட்டிக் கொண்டிருந்தது. மனிதன் சிரித்தபோது பார்த்தேன். முன் பற்கள் இரண்டு காலி...''

''பலே! இத்தனை ஞாபகம் வச்சிருக்கியே... உன்னை இன்னும் இரண்டு தினங்களில் அங்கே கூட்டிச் சென்றால்... நகையை விற்க உதவிய அவனை அடையாளம் காட்டுவியா?''

'உம், காட்டுவேன். அவனை சமீபத்தில் ஒருநாள் வனிதா ஹாஸ்பிடல் அருகே ஒரு குளிர்பானக் கடைக்குப் பக்கத்தில் பார்த்துப் பயந்து போனேன். ஆனால் அவன் என்னைக் கண்டுகொள்ளவில்லை.''

''இந்த மாதிரி பசங்க ஊர் முழுவதும். ஏமாந்தவனை பிடிக்க அலைஞ்சு கொண்டிருப்பான்கள். ஆனால், அந்தக்

கடைக்காரனை கேட்கிறபடி கேட்டால் டெர்லீன் சட்டையின் இருப்பிடத்தைக் கக்கிவிடுவான்.

சித்தார்த் மௌனமாக தரையைப் பார்த்தான். இவரிடம் வசமாக மாட்டிக்கொண்டு விட்டோமே... மனிதர் திருட்டுக் குற்றத்திற்கு நடவடிக்கை எடுக்க போலீஸ் வசம் ஒப்படைத்துவிட்டால்...? ஏன் இனி பின் வாங்கணும்? செய்த குற்றத்துக்குத் தண்டனை அனுபவிக்க தயங்கக் கூடாது இனி...

'என்ன பலமான யோசனை, அந்த நகை இன்னும் உருப்படியா இருந்தா அடையாளம் காட்ட முடியுமா?''

''முடியும்'' என்று தலையை அசைத்தான் சித்தார்த். மன்னி அந்த நகையை வீட்டுக்குக் கொண்டு வந்தபோது பெருமையாகச் சொன்னது அவன் நினைவில் நன்றாகவே பதிந்து விட்டிருந்தது.

விஷ்ணுராம் கேசவலால் கடை நகைகள் பின்னால் முகப்பிலோ பதக்கத்திலோ அவர்களது கடை பெயர் வி.கே.ன்னு சீல் குத்தியிருப்பார்கள். எப்போ கொண்டு நகையை திருப்பி போட்டாலும் தள்ளுபடி அது இதுன்னு பேசாம அன்றைய தங்கவிலைக்கு அழும்பில்லாம பணத்தை எண்ணிக்கொடுத்து விடுவார்கள். நாணயத்துக்கு பேர் போன கடை'' பேசிக் கொண்டே மன்னி நகைப் பெட்டியைத் திறந்து அந்த நெக்லசைப் பூட்டிக் கொண்டாள். பட்டுப்புடவை சரசரக்க கோயிலுக்கு கணவனுடன் அவள் அன்று கிளம்பிக் கொண்டிருந்தாள். இப்போ நீ எப்படி இருக்கே தெரியுமா? கொஞ்சலகப் பேசிக் கொண்டு அண்ணன் அவளை அணுகியபோது அவள் அடிக் குரலில் அதட்டினாள்.

'அசடு வழியாதீங்க... உங்க தம்பி வாசற்படிகிட்டே நிக்கறான்.'



அண்ணன் அசடு வழிய நகர்ந்து கொண்டதும் மன்னி பிரசாதத் தட்டுடன் கோயிலுக்குக் கிளம்பிய போது பார்த்தான்...

அவளது கழுத்தில் நெருப்பாக ஜொலித்த அந்த நெக்லஸ் உண்மையில் மன்னிக்கு அழகாகத் தானிருந்தது- அதைக் கொண்டுபோய் ஆயிரத்து ஐநூறுக்கு விற்று அந்த டெர்லின்காரனுக்கு கமிஷன் இரு நூறு கொடுத்துத் தொலைத்து உடனடியாக அவனுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு ஹைதராபாத்துக்கு ரயில் ஏறி என்னென்ன காரியங்கள் செய்திருக்கிறான்? வயிற்றில் பகீர் என்று நெருப்பாகத் துயர உணர்வு தகித்தது.

''கமிஷன் கொடுத்தியா...? அது திருட்டுப் பொருள்னு அவங்களுக்கு தெரியும். உன்ன மிரட்டிப் பார்த்திருப்பானே?''

''கொடுத்தேன் அவன் மேலும் மிரட்ட பின் ஊரை விட்டு ஹைதராபாத் புறப்பட்டேன். ஸார் நான் தெரியாம பல தப்புகள் செய்திருக்கிறேன் ஒப்புக்கிறேன். இதற்கு தண்டனைகள் எதுவானாலும் ஏற்கத் தயார் அந்த டெர்லீன் சட்டையையும் அந்த வழுக்கைத் தலையையும் காவல் துறை அதிகாரிகள் பிடித்து தக்க தண்டனை வாங்கித் தர வேண்டும். இதற்குப் பிறகாவது என்னைப்போன்ற ஏமாளிகள் அவர்கள் வலையில் சிக்காது தப்புவார்கள்.''

''அவர்களைப் போன்றவர்களை அடிக்கடி பிடித்து தண்டித்துக் கொண்டிருக்கிறார்கள் காவல்துறை அதிகாரிகள். உன்னைப்போல படிச்ச பையன்கள் பொறுப்புணர்வோடு நடந்து கொண்டால் இந்த மாதிரியான குற்றங்கள் நடக்க வாய்ப்பு இருக்காது. குறைந்து போகும்.''

''ஏன் இப்படி ஒரு பிசகை செய்தேன். தெரியலை—என் இயலாமைக்காக நான் என் குடும்பத்தின் மீதும் சமூகத்தின் மீதும் எனக்கு உதவ முன்வந்த சியாமளா அம்மா மீதும்

கோபப்பட்டது மகா மூடத்தனம். மன்னிக்க முடியாத குற்றம். தண்டனை வழங்கினா ஏற்க கடமைப்பட்டிருக்கேன் ஸார்'' தழுதழுத்தான்.

''கவலைப்படாதே. எல்லாத்துக்கும் ஒரு முடிவெடுக்க நான் இருக்கேனே?'' அவர் சிரித்தார்.

அது சமயம் சியாமளா வாயிற் பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள்.

''அடடா? நீங்க வந்திருப்பது தெரியாதே—பாபு! நீ வந்து சொல்லியிருக்கலாம்,காப்பி தயார் பண்ணி கொண்டுக் வந்திருப்பேனே'' என்றாள்.

''காப்பி வேண்டாம். இப்போ சில்லுனு எலுமிச்சம் பழ ஷர்பத் இரண்டு டம்ளர் கிடைச்சா எங்களுக்கு போதும். ஏம்பா பாபு? இந்த உஷ்ணத்துக்கு. சில்லுன்னு தாதுதானே ஏதாவது?'' சிரித்தார். திருதிருவென்று விழித்த சித்தார்த் பெருமாள் மாடு மாதிரி தலையை அசைத்தான்.

## 21

சில நாட்கள் சென்றன. அன்று இரவு ஷண்முகம் அவனை டெலிபோனில் அழைத்தார். ''நாளை காலை உன் ஆபீசுக்கு லீவு எழுதி சுஜியிடம் கொடுத்துட்டு நீ என்னோட புறப்படறே தயாரா இரு.''

'என்னத்திற்கு எதற்கு?' கேட்க அவனுக்குத் துணி விருக்கவில்லை':

''சரி ஸார்'' என்று முனகினான்.

காலை ஒன்பது மணி அளவில் அவர் தமது மோட்டார் சைக்கிளில் வந்துவிட்டார். ''ஏறிக்கோ...'' என்று உத்தர விட்டதும் பூனைக் குட்டி போல அவர் பின்னால் தொத்திக் கொண்டான்.

எங்கே போகிறோம். என்ன செய்யப் போறீங்க என்று எதுவும் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாது... அச்சத்தில்



அரண்டு போனவனாக... பட்டும் படாமலும் இருபக்கத்து கம்பியை இறுகப் பிடித்தபடி, உட்கார்ந்திருந்தான்.

கடற்கரை சாலைவழியே வண்டியை செலுத்திய ஷண்முகம் பின்னர், நகரத்திற்குள் புகுந்து காவல் துறையினர் கட்டிடமொன்றின் முன் நிறுத்தினார்.

வண்டியை ஒதுக்குப்புறமாக நிறுத்திவிட்டு, 'இறங்கு' என்ற போது அவனுக்கு வாய் உலர்ந்து போயிற்று.

நெக்லசைத் திருடி விற்ற குற்றத்திற்காக அவன் இப்போது, முறைப்படி விசாரிக்கப்படப் போகிறான் போலிருக்கிறது.

முட்டிகள் நடுங்க அவர் பின்னால் மெல்ல நடந்துகாவல் துறை கட்டிடத்திற்குள் நுழைந்தான்.

''ஹலோ! ஸார் வாங்க...'' என்று அன்போடு வரவேற்றார் அதன் முக்கிய அதிகாரி.

சுவர் ஓரமாக இருந்த தெருப்பணைக்கும சிவப்பு வாளிகள் அருகே நின்றதொரு போலீஸ்காரர் ஷண்முகத்திற்கு சலாம் போட்டார். ''நலமா இருக்கிறீங்களா...? ஐயாவைப் பார்த்து நாளாச்சு'' பல்லைக் காட்டினார்.

காக்கி சட்டையில் கம்பீரமாகத் தெரிந்த நறுக்கு மீசைக்காரர்தான் அந்தக் காவல் துறை அலுவலகத்தின் தலைவர் என்று புரிந்து கொண்டான் சித்தார்த்.

என்ன வயதில்...தாத்தா அவனை மிரட்டியதின் பாதிப்போ என்னவோ?

''சீக்கிரம் சாப்பிடு. இல்லாட்டா போலீஸ்காரர்கிட்ட புடிச்சு கொடுத்துவேன்'' என்று பயமுறுத்தியதன் விளைவு.

அவனுக்குப் போலீஸ், வம்பு, வழக்கு இவற்றின் மீது எப்பொழுதுமே ஒரு மிரட்சி.

நன்றாக வசமாக ஓர் அதிகாரி முன் தன்னைக்கொண்டு வந்து நிறுத்திவிட்ட ஷண்முகத்தை ஓரக் கண்ணால் பார்த்தான்.

"உள்ளே வாங்க, நாம் பேசலாம்" என்று அந்த அதிகாரி கூறியதும் ஷண்முகம் அவரை அழைத்துக் கொண்டு அலுவலக அறைக்குள் சென்றார்.

"உட்கார் அப்பா" பற்கள் தெரிய அந்த அதிகாரி மெதுவாகச் சிரித்தார். ஷண்முகத்தின் அருகில் அவனும் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

மேஜை மேலிருந்த மணியை அடித்தார்... உள்ளே எட்டிப் பார்த்தார் ஒரு போலீஸ்காரர்.

"நேத்து ராத்திரி அரஸ்ட் பண்ணின, அந்த ஆளை அழைச்சிட்டு வா. பிறகு வானில் கோர்ட்டுக்கு கொண்டு போகலாம்..." என்றார்.

சிறிது பொழுதில் இரு போலீஸ்காரர்கள் இடையே தலையை சிலும்பிக் கொண்டு வந்து நின்றவனை நிமிர்ந்து பார்த்தான் சித்தார்த். ரத்தம் உறைந்துவிட்டது போன்றதோர் அச்சம்.

"இவரைத் தெரிகிறதா?" என்று அந்த அதிகாரி சித்தார்த்தைப் பார்த்து முறுவலித்தார்.

வார்த்தைகள் நெஞ்சை அடைத்தன. டீக்காக உடுத்தியிருந்த டெரிலீன சட்டைக்காரன்தான் அவன். முதன் முதலாக அவனை ரயிலடியில் சந்தித்து நட்பு கொண்டாடியவன்...லாட்ஜ் பேசிக்கொடுத்தவன் — நெக்லசை விற்று உதவியவன் - அவர்கள் வேலை பார்க்கும் நர்ஸிங்ஹோம் அருகே குளிர்பானக் கடையின் பக்கத்திலே நின்றுகொண்டு சுஜரிதாவைப் பார்த்து கண்ணடித்து பயமுறுத்திய ரௌடி. அவளைப் பின் தொடர்ந்து அச்சமூட்டிய அவனுக்குப் பயத்தை உண்டாக்கிய படுபாவி, அவனேதான்.

"பெயர் தெரியுமா?" இன்ஸ்பெக்டர் கேட்டபொழுது சித்தார்த் விழித்தான்.

ஷண்முகம் அந்த அதிகாரியும் ஒருவரை ஒருவர் அர்த்த பாவத்துடன் பார்த்தபடி சிரித்தனர். "பாவம் இவருக்குத் தெரிய நியாயமில்லை. தெரிந்தாலும் இவரது ஆயிரத்



தெட்டு நாமங்களில் ஒன்றாக இருக்கக்கூடும். ஊருக்கு தெருவுக்கு சந்திக்கும் மனிதருக்கு ஒரு புதுப்பேர் சொல்லும் ஆசாமி இவர்" என்றார் இன்ஸ்பெக்டர். "ஏம்பா செல்லதுரை! அதாவது உன் உண்மைப்பேரா? உன்னை எங்கள் டிபார்ட்மெண்டுக்குத் தெரியும். ஆனால் உண்மைப் பேர்தான் இன்னமும் பிடிப்படலே. கிடக்கட்டும். பெயரில என்ன இருக்கு? இந்தப் பையனை நீ பார்த்திருக்கியா?" கேட்டார்.

டெரிலீன் ஷர்ட்டுக்கு பதில் அவன் ஒரு முண்டா பனியனும் இடையில் கசங்கிப் போன லுங்கியும் அலட்சிய முடியுமாக இருந்தான் அப்போது. 'தெரியாது' என்றான் அழுத்தலாக.

"தெரியாதா? உண்மையைச் சொன்னால் உனக்கு லாபம். ஒரு சில மாதங்களுக்கு முன் இவரை நீ ரயில் நிலையத்தில் சந்திச்சு லாட்ஜ் பேசி அமர்த்தினதாவது ஞாபகம் இருக்கா?" உதட்டைக் கவ்விக் கடித்துக்கொண்டு பிடிவாதம் முகத்தில் பொங்க குரோதமாக விழித்தபடி நின்றான் செல்லதுரை.

"காஷ்மீர் லாட்ஜில் தங்கவச்சு நெக்லசை விக்க கூட்டிக்கிட்டு போனியே. முகுந்தன் கடைக்குத்தானே?" ஜோசியம் பார்த்து சொல்வது போல அவர் கேட்டதும் செல்லதுரை அவரை வெறுப்புடன் வெறித்தான். "நான் கேட்கிறேன். முழிச்சிகிட்டு நின்னா என்ன அர்த்தம்? உண்டு இல்லைன்னு சொல்ல வாயில் என்ன கொழுக்கட்டையா?" குபீரென்று ஓங்கிய குரலில் கத்தியபடி இன்ஸ்பெக்டர் எழுந்ததும் செல்லதுரை தலையைப் பின்னால் இழுத்துக் கொண்டான். பட்டென்று ஓர் அறை கன்னத்தில் விழுந்துவிடும் போன்றதொரு பயத்தில் அவன் ஆடிப்போய் விட்டான்.

"என்னப்பா. உண்மையைச் சொல்லிட்டா உனக்கு லாபம்ன்னு நான் சொல்வது புரியலையா?" சற்று முன்

ஓங்கி கோபத்துடன் கத்தியவர் பற்கள் அனைத்தும் தெரிய புன்னகைத்தபடி செல்லதுரை அருகில் சென்றார்.

சாம, தான, பேத, தண்டம் என்ற சதுர் உபாயங்களை காவல் துறையினது பயனுக்காகத்தான் நம் முன்னோர்கள் வகுத்து வச்சாங்களா? அதிசயத்துடன் தலைமை அதிகாரியைப் பார்த்தான் சித்தார்த்.

''முகுந்தன் கடையிலேதானே நெக்லசை வித்துக் கொடுத்தே. நீ சொல்லாட்டாலும் எங்களுக்குத் தெரியாதா உன்னுடைய வாடிக்கைக்காரர்கள் யார் யார்னுநாங்க புள்ளி விவரம் வச்சிருக்கமே, சொல்லுப்பா'' நயமான குரலில் ஒரு குழந்தையிடம் கேட்பது போல விசாரித்தார் அதிகாரி.

செல்லதுரை கோபமாக அவரை உறுத்துப் பார்த்தான். பின்னர் தலையை சிலுப்பிக்கொண்டு ''ஆமாம் அங்கே தான்'' என்றான் விரக்தியாக.

''போதும், இவரை அழைச்சிட்டு போங்கோ ' போலீஸ் காரர்களுக்கு விடை கொடுத்தார் அதிகாரி. ஷண்முகத்தின் பக்கம் திரும்பினார். நேற்று ஒரு கடத்தல் விவகாரத்திலே ஆசாமியை ராத்திரி பத்து மணிக்குக் கொண்டு வந்தாங்க. இப்போ கோர்ட்டுக்கு அழச்சிட்டு போகணும். செல்லதுரை மேலே ஏகப்பட்ட கேஸ்கள் இருக்கு. இந்த முறை கட்டாயம் இரண்டு வருஷமாவது கம்பி எண்ணப் போயிடுவான். என்ன செய்வது? சிலர் குற்றங்களை செய்தே ஊறி அடிமையாகப் போயிருக்காங்க. அவங்களைத் திருத்துவது ரொம்பக் கஷ்டமாக இருக்கு'' என்றார்.

' முகுந்தனை எனக்குத் தெரியும். மெல்ல தனிப்பட்ட முறையிலே விசாரிக்கிறேன். சிக்கலான விஷயம். பார்க்கலாம் உன் உதவிக்கு நன்றி.'' என்று கூறிவிட்டு ஷண்முகம் சித்தார்த்துடன் கிளம்பினார்.

அடுத்தபடியாக ஷண்முகம் அவனுடன் தங்கராஜன் தெருவுக்குள் வண்டியை ஒட்டி அந்தக் கடைமுன் நிறுத்தினார்



சாய்வான மேஜை மீது தொந்தியை வைத்துக்கொண்டு திண்டின் மூது சாய்ந்து கிடந்த முகுந்தன் ஒரு நெருப்புக் குச்சியின் பின்பக்கத்தால் பற்களை சுவாரஸ்யமாகக் குத்திக் கொண்டிருந்தார்.

''மிஸ்டர் முகுந்தன்!'' ஷண்முகத்தின் அதிகாரகுரல் ஆசாமியைத் திடுக்கிடவைத்தது.

''ஐயாவா... பார்த்து வெகு நாளாச்சு...ரிடயர்ட் ஆகி விட்டதாகச் சொன்னாங்க. வாங்க ஏது இந்தப் பக்கம்? பையா! ஐயாவுக்கு ஒரு செவன் செவன் வாங்கிட்டு ஓடியா'' காவிப் பற்கள் அனைத்தும தெரிய முகத்தில் இருக்கும் பரு உதிர்ந்து விடும் போல ஆட, கூழைக் கும்பிடு போட்டு உபசரித்தார். பின்னால் வந்து நின்ற சித்தார்த்தை அவருக்கு அடையாளம் தெரியவில்லை.

''குளிர்பானம் சாப்பிட இங்கே வரலை. ஓர் உதவி. நாம் ஒருத்தரை ஒருத்தர் நல்லாவே அறிவோம். ரிடையர்ட் ஆன பிறகு நான் தனிப்பட்ட முறையில் ஒரு செக்யூரிட்டி சர்வீஸ் வச்சு நடத்தறேன், அதனாலே...'' முறைத்தார் ஷண்முகம்

' ஒண்ணும் விளங்கலையே?'' முகுந்தன் முறுவலித்தார்.

''தப்பு பையன் மேலேயும் இருக்கு. முள்மேலே போட்ட சேலை போல. இரண்டு பக்கத்துக்கும் சிரமம் வேண்டாம். அதனாலே தவறிப் போய் நீங்க இவன் கிட்ட வாங்கிட்ட அந்த சிவப்புக்கல் நெக்லசை, என்ன செய்தீங்கன்னு சொல்ல முடியுமா? செல்லதுரை சில மாசங்களுக்கு முன், இந்தப் பையனை உங்ககிட்ட அழைச்சிக்கிட்டு வந்த ஞாபகம் இருக்கா...?'' மிரட்டலாகக் கேட்டார்.

''யாருங்க இந்தப் பையன்? பார்த்தாப்பல நினைப்பில்லையே''தமது வழுக்கைத்தலையைத் தடவினார்முகுந்தன்.

''உங்களை இவனுக்கு நினைப்பிருக்கே'' அப்போ இவன் கொண்டு வந்து கொடுத்த அந்த சிவப்புக்கல்

நெகலசை நீங்க அழிச்சிருக்க மாட்டீங்க. கைவசம் இருக்கான்னு தேடிப் பார்த்துச் சொன்னா...''

மென்று விழுங்கினார் முகுந்தன். இந்த மாதிரி வியாபாரங்கள் எப்பொழுதுமே ஆபத்தான சங்கதி என்று பல அனுபவங்கள் போதித்திருந்த போதிலும் எக்கச்சக்கமான லாபத்தை எண்ணித் துணிவுடன் தொடர்ந்து கொண்டிருப்பவர் அவர். சில சமயங்களில் இப்படி நிலைமை மோசமாகும்போது ஒப்புக்கொண்டு... காதும் காதும் வைத்தாற் போல விட்டுக்கொடுத்து தப்பித்கொள்வதும் அவரது சாமர்த்தியங்களில் ஒன்று.

''எனக்கு விஷயமே தெரியாது. அவசரம்னான் பையன். பரீட்சைக்குப் பணம்கட்டக் கேட்கிறானாக்கும் வீட்டுக்கு தெரிஞ்சுதான் கொண்டு வந்திருக்கான்னு நினைச்சேன்.''

''கதை வேணடாம். ஐயாயிரம் பெறும் சாமானுக்கு ஆயிரத்து நூறு கொடுத்தீங்க இல்லையா''

''பட்டமான பொன்னு, கல் நகைக்கு மதிப்பேது? நான் ஒண்ணும் மோசம் செய்யலை.'' என்று முனு முனுத்தவர், தமது முட்டாள்தனத்தை நொந்து கொண்டார். மனைவி ஆசைப்பட்டாள் என்று அதை அழிக்காது வைத்துக் கொண்டது தவறாகி விட்டது. பண்டம் கையில் இல்லை என்றால் ஷண்முகம் லேசில் ஒப்புக்கொள்ளமாட்டார். வேறு முறையில் அவரது வீட்டையே சோதனை போட ஏற்பாடு செய்து விடுவார். எமகாதகர். முன்பு ஒரு தடவை இவரிடம் மாட்டிக் கொண்டு பட்டபாடு போதும்.

உள்ளே சென்று இரும்புப் பெட்டியைத் திறந்து நெக்லசை எடுத்து வந்தார்.

''ஒருசமயம் பணத்தை குடுத்துவிட்டு, திரும்ப நகையை வந்து பையன் வாங்கிப்பான். வட்டி கொடுத்துடுவான்னு சொன்னான் செல்லதுரை. அதனாலேதான் அப்படியே வச்சிருந்தேன்.'' முகுந்தன் கதையளந்தபடி பற்களைக் காட்டிக் கொண்டு பணிவுடன் நகையை நீட்டினார்.



சட்டைப் பையில் தயாராக வைத்திருந்த ஆயிரத்து ஐநூறு ரூபாய்களை எண்ணி ஷண்முகம் முகுந்தன் முன் வைத்தார். 'கடன் கொடுத்து இந்தப் பையனுககு உதவினதுக்கு நன்றி. வட்டியைத் தள்ளிடுங்க. என்னு கேட்காதீங்க. இரண்டு பக்கமும் நஷ்டப்படாம, இப்படியே சங்கதியை முடிச்சுப்போம்' கடுமையாக விழித்தார்.

''ஐயா சொன்னா சரி. படிக்கிற பிள்ளைகிட்டே நான் வட்டிகிட்டி போட்டு வாங்கி மாடி வீடா கட்டப்போறேன்? ஹி...ஹி...'' சிரிக்க முயன்றார் முகுந்தன். ''அப்பாடா... நிலைமை சுளுவாய்ப் போனது நல்லது. பணமும் பறி போகாது, குற்றச்சாட்டுகளில் அகப்படாது, அப்பா... போதும்...'' என்று பெருமூச்செறிந்தார்

சியாமளா அம்மாள் முன்னிலையில் நெக்லசை சித்தார்த்திடம் கொடுத்தார் ஷண்முகம்.

''நீங்க சாட்சியாக இருக்கீங்க. இந்த நெக்லஸ் உங்ககிட்ட இருக்கும். சித்தார்த் இதுக்கு உண்டான பணத்தை சிறுகச் சிறுக கட்டிவிட்டு, பிறகு வாங்கிக் கொள்ளட்டும். வரட்டுமா...? ஒரு காரியம் முடிந்தது. அடுத்தபடி?'' என்ற கேள்வியுடன் சண்முகம் அவனை விரைத்துப் பார்த்தார். ''ஜென்மத்துக்கும் இனி நான் எந்த விதமான தவறும் செய்யமாட்டேன். ரொம்ப நன்றி ஸார்'' தழுதழுத்தான் சித்தார்த்.

''ஓகே!''... அன்போடு ஷண்முகம் அவன் முதுகைத் தட்டிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

## 22

இத்தனை நாள் மனதை உறுத்தி அவனைத் திக்குமுக்காடச்செய்த அந்த குற்ற உணர்வு மாயமாகி விட்டதை உணர்ந்தான். மனம் லேசாகி அவன் எந்தவித அச்சமுமின்றி தலை நிமிர்ந்து மனிதனாக நடக்கும் யோக்கியதையைப் பெற்று விட்டிருந்ததையும் புரிந்துகொண்டு விட்டிருந்தான்.

அவன் செய்த தவறுகள் பல சட்டத்தின் பிடியில் அகப்பட்டிருந்தாலும் அவனது வாழ்வின் திசையே மாறி விட்டிருக்கும்.

ஷண்முகத்திற்குத்தான் எத்தனை ஒரு பரந்த மனம்?

அவனது படிப்பு, இளமை, வருங்காலம் வீட்டுச் சூழ்நிலை இவற்றைக் கணிப்பு செய்து அவன் திருந்தி நல்லவனாக வாழ எப்பேர்ப்பட்டதொரு வாய்ப்பை அமைத்துக் கொடுத்தார்?

தனிப்பட்ட முறையில் முகுந்தனை சந்தித்து சாமர்த்தியமாகப் பேசி அந்த நெக்லசை மீட்டுக் கொடுத்ததுடன் அவனது மானத்தையும் மனிதத் தன்மையையும் மீட்டுக் கொடுத்து விட்டிருக்கிறாரே.

வேலை நடுவே பலமுறை அவரைப்பற்றி நினைத்து நன்றி உணர்வில் மனம் கரைந்து போனான் சித்தார்த்.

அவர் செய்திருக்கும் உதவிக்கு ஈடாக என்ன செய்ய இயலும்? ஒரு காரியம் செய்ய முடியும். இனி தன் வாழ்க்கையில் இந்த மாதிரியான குற்றங்களைக் கனவிலும் நினைக்காது நாட்டின் ஒரு நல்ல மகனாக வீட்டுக்கு ஒரு நல்ல பிள்ளையாக அவன் வாழ முயல வேண்டும்.

அப்படிச் செய்தால் அவர் செய்த உதவிக்கு ஓரளவு ஈடு செய்ததாகி விடும் பற்பல சிந்தித்தான்.

அன்று பகல் உணவு நேரத்தின் போது அவன் சுஜரிதாவிடம் முதல் நாள் நடந்த எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான்

"சுஜி! உன்னைப் பின் தொடர்ந்து பயமுறுத்திய அந்த ரௌடியும் என் மன்னி நகையை விற்கக் காரணமான அந்த ரயிலடி டெர்லின் ஷர்ட் நபன் செல்லதுரையும் ஒரே ஆசாமிதான் என்றால் எனக்கு ரொம்பவே அதிசயமாக இருக்கு. இனி நாம் கவலைப்படத் தேவையில்லை. அவன் ஏற்கெனவே பல குற்றங்களுக்காகப் போலீசாரால் தேடப்பட்டவன். இப்போது பலமாக ஒரு பெரும் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். இந்த முறை சட்டத்தின் பிடியில் அவன் கட்டாயம் தகக தண்டனையை அனுபவிக்கப் போகிறான்!"



"நல்ல வேளை அந்தத் தடியன் பின் தொடர்ந்து வருவான் என்கிற பயமின்றி இனி நான் நிம்மதியாக இருப்பேன்."

"இந்தத் தடியன் வாழ்நாள் முழுவதும் பின்தொடரப் போகிறானே? அதை மறந்துட்டியா?"

சுஜி மனம் விட்டு கலுக்கென்று சிரித்தாள். சிரித்த சிரிப்பில் சாப்பிட்ட தயிர் சாதம் புரையேறிக் கொண்டு விட்டது.

"யாரோ உன்னை நினைக்கிறா?" சிரித்துக் கொண்டு தண்ணீர் டம்ளரை அவளிடம் நீட்டினான் சித்தார்த்.

"என்னை எப்பவும் நினைக்கறவர் யார்னு தெரியும். எதிரிலேயே உட்கார்ந்துண்டு என்னதுக்கு நினைக்கணும்? அடிக்கடி புரையேறி நான் அவஸ்தைப் படவா?" செல்லமாக அவள் சிணுங்கியபோது எத்தனை அழகாக இருந்தாள்?

அவளது பேச்சு முன்னைவிட அவனுக்கு இப்போது இனித்தது அவளது தோற்றம் முன்னைவிட இன்னும் அதிக அழகோடு கண்களைக் கவர்ந்தது. தோட்டத்தில் வீசிய காற்று கூட முன்னைவிட சில்லென்று வெயிலுக்கு எவ்வளவு இதமாக இருந்தது.

எல்லாவற்றிலும் இப்படி ஒரு புதிய இனிய மாறுதலா?...

அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

இனி அடுத்தபடி?... ஷண்முகம் அன்று அடுத்தபடி என்னவோ கவனிக்க இருக்கு என்று, அவனை ஒரு மாதிரி பார்த்தாரே?... அந்த அடுத்த படியான சங்கதி அவர்களது கல்யாணமா?

"கடனை அடைக்காது கல்யாணம் எப்படிச் செய்து கொள்ள முடியும்? என்ன யோஜனை" என்று சுஜி தூண்டிக் கேட்டபோது விழிப்புற்றான்.

"உன்னை நான் இன்னும் கொஞ்ச காலம் எனக்காக காத்திருக்கும்படி வேண்டிக்கப் போறேன். என்னா நெக்லசை மீட்ட பணத்திற்கு கடன் பட்டிருக்கிறேனே?"

''அதைப் பத்தி இப்ப ஏன் கவலைப்படணும்? நமது பொருளாதாரம் கொஞ்சம் முன்னேறின பிறகுதானே... கல்யாணம்னு தீர்மானம்'' சுஜரிதா மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

அவனது எண்ணங்களுடன் அவள் எப்படி ஒன்றிப் போகிறாள். இவளை மனைவியாக அடைய கட்டாயம் அவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பெருமையால் பூரித்துப் போனான்.

முதல் நாள் மாலை. தோட்டத்தைக் கொத்தி, சீராக்கி தீர்பாய்ச்சிய உடல் அயர்ச்சியினால அந்த ஞாயிற்றுக் கிழமை காலை அவன் எழுந்திருக்க சிறிது தாமதமாகி விட்டது.

குளித்து மாற்றுடையுடன் அவன் வெளியே வருமுன் வாசலில் கார் நிற்கும் சப்தமும், மனிதக் குரல்களும் கேட்டன.

ஆவலுடன் வெளியே ஓடி வந்தவன் வியப்புடன் நடையிலேயே நின்று விட்டான்.

டாக்ஸிலிருந்து அண்ணன், மன்னி. குழந்தைகள், தாத்தா என்று எல்லாரும் இறங்கினர். சாமான்கள் வராந்தாவிலே அடுக்கி வைத்து எண்ணிவிட்டுத் திருப்தியுடன அண்ணன் டாக்சிக்காரருக்குப் பணத்தைக் கொடுப்பதைக் கண்டான். இவர்களுக்கு அவன் இருக்கும் இடம் எப்படித் தெரிந்தது? எதற்காகப் புறப்பட்டு குடும்பத்துடன் கும்பலாக வந்திருக்கிறார்கள்?... அவனுக்குத்தாங்கமுடியாத வியப்பு.

''சௌக்கியமா அம்மா?... உங்க வீட்டைக் கண்டுபிடிக்க கொஞ்சம் சுத்தி அலைஞ்சுட்டோம். அதான் இத்தனை நாழி. இல்லாட்டா எப்பவோ வந்திருப்போம்...'' என்று சியாமளா அம்மாவை ரொம்பத் தெரிந்தவர் போல தாத்தா பேசியதைக் கேட்டு, அவனுக்கு மேலும் வியப்பு.

''என்ன அப்படி ஸ்தம்பிச்சுப் போய் நிக்கறே? சாமான்களைக் கொண்டு போய் ஸ்டோர் ரூமில் வை. அண்ணன், மன்னி, தாத்தாவுக்குக் குளியலறையைக் காட்டி விட்டு வந்து எனக்கு உதவி பண்ணு. சுஜி இன்னிக்கு வர கொஞ்சம் நாழி பிடிக்கும். அதுக்குள்ளே நாம் எல்லாரும்



காப்பி டிபன் சாப்பிட்டு முடிக்கலாம்....'' உத்திரவிட்டாள் சியாமளா.

'பரவாயில்லையே! உங்ககிட்ட இவன் தங்கியிருந்த இத்தனை நாளில் ரொம்பவே மாறிப் போயிருக்கான். கூட மாட வீட்டு வேலைகளில் உதவுகிறான் என்று எழுதியிருந்தீங்க. நான் நம்பலை...'

சிரித்தபடி மன்னி மைதிலி உள்ளே வந்தாள்.

'சித்தப்பா... கைகளை நீட்டிக்கொண்டு பாவாடை குலுங்க கால் தண்டை கிணுகிணுக்க அருகே ஓடி வந்து அணைத்துக் கொண்ட குழந்தை மிருதுளாவைத் தூக்கி மார்புடன் சேர்த்துக் கொண்டான். தொண்டையை ஏதோ அடைத்து விட்ட உணர்வு.

''தாத்தா... மன்னிச்சுக்கோங்கோ. உங்களையெல்லாம் ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன். அண்ணா... அயாம் வெரி ஸாரி... ஃபார் எவெரிதிங்'' என்று தழுதழுத்தபடி. குழந்தையை இறக்கி விட்டுட்டு தாத்தாவின் காலில் விழுந்து நமஸ்கரித்தபடி விம்மினான். ''மகராஜனா இரு. எழுந்திருப்பா குழந்தை இப்ப என்ன நடந்து விட்டது? வருத்தப்படறே! எல்லாம் நல்லபடியா முடிஞ்சிருக்கு. நீ இங்கே வந்து சியாமளா அம்மாவோட தங்கியிருக்கேன்னு அவங்க கடிதம் போட்டதும் மனம் நிம்மதியடைஞ்சோம்.

''நீ எப்படி மாறிப்போயிட்டே! வேலை கிடைச்சுட்டது. நெக்லசை திரும்ப வாங்கியாச்சுன்னு எல்லா சேதிகளையும் அவ்வப்போது எழுதினாங்க சியாமளா அம்மா. முன்பின் நமக்கு எந்தவித பாத்யதையும் கிடையாது. அப்பக் கூட மனிதாபிமானத்தோட அந்த அம்மா செய்திருக்கிற உதவிக்கு நம் குடும்பம் ரொம்பக் கடமைப்பட்டிருக்கு'' தாத்தா பேரனைத் தூக்கி நிறுத்தி மார்புடன் அணைத்துக் கொண்டார். அவர் கண்களும் ஈரமாகி விட்டிருந்தன.

குளித்து விட்டு மாற்றுடை அணிந்து வந்து மைதிலியிடம் கொடுக்கச் சொல்லி நெக்லசை சியாமளா அவனிடம் தந்தபோது அவன் குழப்பத்துடன் விழித்தான்.

''ஷண்முகம் ஸாரிடம் நான்தான் பணம் கொடுத்து அதை மீட்க ஏற்பாடு செய்தேன். விவரத்தை உன் தாத்தாவுக்கு கடிதமெழுதிப் போட்டு எல்லாரும் புறப்பட்டு வரணும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். முந்தா

தான் தபாலில் தாத்தா நெல்லைக்குண்டான தொகைக்கு ஒரு செக் என் பெயருக்கு அனுப்பிவிட்டார். இன்று எல்லாரும் நேரிலேயே வந்து விட்டார்கள்'' சியாமளா மெல்லச் சிரித்தாள்.

''என்னடா முழிக்கிறே? பாங்கியில் என் கணக்கில் உள்ள பணம் எனக்குப் பிறகு உன் அண்ணனுக்கும் உனக்கும் சமமாகப் பிரிஞ்சுடப் போறது. அதைக் கொஞ்சம் முன்னதாக உனக்கு இப்போ கடன் அடைக்கக் கொடுத்து உதவியிருக்கேன். அவ்வளவுதான், கவலைப்படாதே'' தாத்தா விளக்கம் தந்தார்.

நன்றி உணர்வில் அவன் நெஞ்சு நெகிழ்ந்து போனான்.

இத்தனை கஷ்டங்களை நான் கொடுத்தும் எனக்கு நீங்க எல்லாரும் உதவி செய்திருப்பதை நினைக்கும்போது, தழுதழுத்தான்

''குடும்பம் என்கிற அமைப்பு சமுதாயத்திலே பின் எதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கு? மிருகங்கள் போல விட்டேத்தியா நாம இருக்க முடியுமா? அண்ணனுக்கு கஷ்டமா ஏற்பட்டா தம்பி முன் வந்து உதவணும். தம்பிக்கு ஏதாகிலும் தேவைப்பட்டால் அண்ணன் அனுசரிக்கணும் இல்லையா?'' தாத்தா புன்முறுவலுடன் கேட்டார்.

''சியாமளா அம்மா... நமக்கு எந்த வகையிலும் உறவு இல்லை. அப்படியிருந்தும்'' சித்தார்த் முடிக்குமுன் அண்ணன் குறுக்கிட்டுப் பேசினார்

''அதுக்குத்தான் மனிதாபிமானம்னு சொல்வது முன்பின் தெரியாத உன்னை கெட்ட சிந்தனையோடு வீட்டுக்குள் நுழைந்த உன்னை, மனம் மாறச் செய்து ஒரு அற்புதத்தை சாதித்து விட்டிருக்கிறாங்க சியாமளா அம்மா அவங்க மனதில் அப்படி ஒரு கருணை சமுத்திரமா பொங்கிக் கொண்டிருக்கு. உன்னை நிமிஷத்தில் போலீசில் பிடித்துக் கொடுத்து தண்டனை அடையச் செய்து உன் வருங் காலத்தையே நாசமாக்கியிருக்கலாம். ஆனால் அவங்க சிந்தனையே வேறு நன்றாக படித்த வாலிபன். இவனை சமூகத்துக்கு பயனுள்ள வகையில் திசை திருப்ப கொஞ்சம் பாடுபடுவோம் என்று இரக்கத்தோட முன்வந்திருக்காங்க. அவங்களுக்கு நமது குடும்பம் ரொம்ப கடமைப்பட்டிருக்கு'' என்றார் உணர்ச்சி வசப்பட்டு...



''இப்போ எல்லாரும் காப்பி டிபன் சாப்பிட வந்தால் நான் மிகவும் உங்களுக்கு கடமைப்பட்டிருப்பேன்'' சிரித்தாள் சியாமளா

சிறிது நேரத்தில் அந்த வீட்டிற்குள் ஒரே கூட்டம். தேவநாதனும் ஷண்முகமும் பத்தரைமணி அளவில் வந்து சேர்ந்து விட்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து சுஜரிதாவின் பெற்றோரும் சுத்தமாக உடுத்திக்கொண்டு குழந்தைகளுடன் வந்துவிட்டனர்.

''அதோ பார் யார் வந்திருக்கான்னு'' என்று சியாமளா சித்தார்த்தின் முதுகில் தட்டினாள்.

நீல டெரிகோசாவில் நீல மலர்போல உயரமாக கொடி போல வாயிற்படியருகே மூக்கும் முகமும் சிவக்க சுஜரிதா நின்று கொண்டிருந்தாள்

''இந்தப் பெண்ணைப் பத்திதானே எழுதியிருந்தேன். எனக்குப் பிடிச்சுப்போச்சு'' மன்னி மைதிலி ஆர்ப்பரிக்க அண்ணனும் தாத்தாவும் ''ஆமாம் எங்கள் வீட்டில் மைதிலிக்கு பிடிச்சா எங்கள் எல்லாருக்கும் பிடிச்சதுன்னு அர்த்தம்'' என்று சிரித்தார்கள்.

''அப்போ கல்யாணத்தை சீக்கிரமே வச்சுக்கலாம்னு சொல்றீங்க இல்லையா?'' ஷண்முகம் இடைபுகுந்தார்.

''சீர் வரதட்சணை ஏதும் கிடையாது. பெண்ணும் சம்பாதிக்கிறாள். பையனும் சம்பாதிக்கிறான். ஆணுக்கு பெண் சரிநிகர் சமானமாக வாழவேண்டிய பாரதி யுகம் இது. வடபழனி கோயிலில் எளிய முறையில் இரண்டு பக்கத்தாரும் செலவைப் பகிர்ந்து கொண்டு கல்யாணத்தை சீக்கிரம் முடிச்சுடுவோம்'' என்றார்.

''ஆமாம், சுபகாரியங்களைத் தள்ளிப்போடுவதில் அர்த்தமில்லை'' என்று மைதிலி மன்னி ஆமோதித்தாள்.

''இந்த தோட்டத்திலே கராஜ் கிட்டே ஒரு சின்ன அவுட் ஹவுஸ் இருக்கு. அதைச் சரிப்படுத்தி கொஞ்சம் விஸ்தரிக்கப் போறேன். கல்யாணத்துக்குப் பின் பெண்ணும் பிள்ளையும் வீடு தேடும் படலம் இருக்காது. எனக்கும் தனியா இருக்கோமே என்கிற பயம் இருக்காது. ஒகே?'' என்றாள் சியாமளா.

"யாதும் ஊரே யாவரும் கேளிர் என்கிற ஓர் உணர்வை நமக்குள்ளே கொஞ்சம் கொஞ்சமாக நாம் கையாண்டால் தான் நம் நாட்டில் ஒரு தேசிய ஒருமைப்பாடு ஏற்பட அனுகூலமா இருக்கும். இந்தப் பகுதிக்கு சியாமளா அம்மா தான் அதற்கு அஸ்திவாரம் அமைக்கிறார்கள் என்று நாமெல்லாரும் பாராட்டுவோம். சியாமளா அம்மாதான் இவங்க வாழ்க்கைல ஜொலிக்கிற ஓர் ஒற்றை நட்சத்திரம் மாதிரி இருந்து தொடர்ந்து வழிகாட்டி இருக்காங்க" தேவநாதன் பேச எல்லாரும் கைதட்டினர்.

"இந்தாம்மா எங்க வீட்டுக்கு வரப்போறவளுக்கு நாங்க தரும் முதல் பரிசு" என்று வெற்றிலைபாக்கு புஷ்பத்துடன் தட்டில் ஒரு பிரிண்டெட் சில்க் புடவையும் ரவிக்கை துணியும் வைத்து சுஜரிதாவிடம் மைதிலி நீட்ட குங்கும முகம் சிவக்க அதை அவள் பெற்றுக்கொண்டு பெருமையுடன் சித்தார்த்தைப் பார்த்தாள்.

"எங்களுக்கெல்லாம் எதும் கிடையாதா?" தமாஷ் செய்தார் ஷண்முகம்.

"உண்டு. ஊரிலிருந்து நெய்யில் பண்ணின முறுக்கும் லட்டும் கொண்டு வந்திருக்கேன்" மைதிலி சிரித்தாள்.

"அதற்குப் பிறகு இன்று பகல் எல்லாருக்கும் இங்கே சாப்பாடு மெனுவைக் கேட்கிறீர்களா? முருங்கைக்காய் சாம்பார், அவியல், உருளைக்கிழங்கு வறுவல், தயிர், அப்பளம், வடை, பால் பாயசம், சுஜரிதாவின் தயாரிப்பு. அதனாலே எல்லாரும் இருந்து சாப்பிட்டுட்டு இருவரையும் வாழ்த்திட்டு மெதுவா போகலாம்" என்றாள் சியாமளா.

"அப்போ கட்டாயம் இருந்து சாப்பிட்டுத்தான் போகப் போறோம். எங்க வீட்டுக்கு வரப்போகிற மருமகள் எப்படி சமைக்கிறான்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?" ஷண்முகம் சிரித்தார்.

"ஷண்முகம் சார்! இத்தனை நாள் என்னோட பெண் வீட்டுக்காரரா இருந்துட்டு... திடீர்னு இப்போ இப்படி மாறிட்டேனே நியாயமா?" சியாமளா கேட்க சிரிப்பொலியோடு அங்கு [illegible] தொடங்கிவிட்டது.

2661*4
434534